தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண் : 450

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## இருபத்திமூன்றாவது தொகுப்பு

**(இலக்கியப் பகுதி)**

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2002

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீடு எண் 450

# தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## இருபத்திமூன்றாவது தொகுப்பு

(இலக்கியப் பகுதி)

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்:

**புலவர் வீ. சொக்கலிங்கம்**

தமிழ்ப் பண்டிதர் (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

2002 ரூ. விலை 80

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற் பெயர் | : | தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் - தொகுதி 23 |
| பதிப்பாசிரியர் | : | புலவர் வீ. சொக்கலிங்கம் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண். | : | 450 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | அக்டோபர், 2002 |
| தாள் | : | 11.2 கி. கி. தமிழ்நாடு |
| நூல் அளவு | : | 34 × 48 செ. மீ. |
| பக்கங்கள் | : | 324 |
| படிகள் | : | 250 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| அச்சிட்டோர் | : | **ஸ்ரீ வேலன் பிரஸ்,**<br>132, S. P. கோயில் தெரு, சிதம்பரம்.<br>☎ 220118 |
| புத்தகக் கட்டு | : | அட்டைக் கட்டு |
| பொருள் | : | இலக்கியச் சுவடிகளின் விளக்க அட்டவணை |
| விலை | : | ரூபாய் 80—00. |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் அரும் பணிகளில் பழஞ் சுவடிகளை வரிசையிட்டு தொகுத்து வெளியிடுவதும் ஒன்றாகும். இந் நூலகத்தில் தமிழ், வடமொழி, மராட்டி, தெலுங்கு ஆகிய மொழிகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளும், காகிதச் சுவடிகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலகத்தின் தமிழ்த்துறையில் இடம் பெற்றுள்ள ஓலைச் சுவடிகளுக்கு இதுகாறும் 22 விளக்க அட்டவணைத் தொகுதிகள் உருவாக்கி வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 5 நூல்கள் இலக்கிய சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகள், 17 நூல்கள் மருத்துவச் சுவடிகளுக்கான அட்டவணைத் தொகுதிகள், இலக்கியச் சுவடிகளுக்கான விளக்க அட்டவணைத் தொகுதியாக இந்த இருபத்திமூன்றாவது தொகுதி தற்பொழுது அச்சுப்பணி நிறைவு பெற்று நூலாக மலருகின்றது.

தற்பொழுது வெளிவரும் "தமிழ்ச் சுவடிகளின் விளக்கம் 23-ஆம் தொகுப்பு இலக்கியப் பகுதி" என்னும் இதனை இந்நூலகத்தின் முன்னாள் தமிழ்ப் பண்டிதர் வீ. சொக்கலிங்கம் அவர்கள் உருவாக்கி அளித்து உள்ளார்கள். அவர்களுக்கு என் பாராட்டுகள்.

இந்நூல் நன்முறையில் வெளிவர தேவையான நிதியுதவி நல்கிய மத்திய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் நன்முறையில் வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் திரு சாமி. சிவஞானம் அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டளித்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இத்தொகுதி சுவடியியல் ஆய்வாளர்களுக்கு நன்கு பயன்படும் என நம்புகின்றேன்.

சி. கோசலராமன், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
16—10—2002

# முன்னுரை

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று!" —என்ற

வள்ளுவப் பேராசானின் கூற்றுக் கேற்ப, தஞ்சாவூர் சரசுவதி மகாலில், எண்ணற்ற ஓலைச் சுவடிகளையும், கணக்கற்ற காகிதச் சுவடிகளையும், அளவிலா அச்சு நூல்களையும் சேகரித்துப் போற்றிப் பாதுகாத்துப் புகழ்பெற்ற பெருமை, எமது **மாமன்னர் சரபோஜி** சத்ரபதி அவர்களையே சாரும். அதனாலேயே, தஞ்சை சரசுவதி மகால், **தஞ்சாவூர் மாமன்னர் சரபோஜியின் சரசுவதிமகால்** எனப் பெயர் பெற்றது.

அத்தகைய சேகரிப்பில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு முதலான மொழிச் சுவடிகள் ஏராளம் உள்ளன. அவற்றுள், தமிழ்ப் பகுதியில் உள்ள சுவடிகள்: இலக்கியம், மருத்துவம் என இரு பிரிவினைக் கொண்டவை.

இவற்றிற்கு விவர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கும் உரித்தாக உள்ளன. மருத்துவச் சுவடிகள்: 3,4,5,6,8,9,11,12,13,14,15, 17,18,19,20,21,22 ஆகிய தொகுதிகளாக அச்சாகியுள்ளன. இலக்கியச் சுவடிகள் 1,2,7,10,1,6 ஆகிய தொகுதிகளாக அச்சாகியுள்ளன. தற்போது இத்தொகுதி, சுவடி எண்கள் 1601 முதல் 1787-k வரை விவர அட்டவணை தயாரிக்கப்பட்டு 23-வது தொகுதியாக வெளிவருகின்றது.

இந் தொகுதியினைப் பதிப்பிக்க அனுமதியளித்த, தஞ்சை சரசுவதி மகால் நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான உயர் திருவாளர் சி. கோசலராமன், இ.ஆ.ப. அவர்கட்கும், நூலக நிருவாக

அலுவலர் உயர்திருவாளர் சாமி. சிவஞானம், எம். ஏ., அவர்கட்கும், நூலக பதிப்பு மேலாளர் உயர்திருவாளர் அ. பஞ்சநாதன் எம்.ஏ., எம்.எல்.ஐ.எஸ்., அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகிறது.

இதனை வெளியிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த சிதம்பரம் ஸ்ரீ வேலன் அச்சகத்தாருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல்களைச் சேகரித்துப் புகழ்பெற்ற எமது மாமன்னர் சரபோஜி அவர்களைப்போல, பேராளர்கள் தங்களிடமுள்ள ஓலைச்சுவடிகளையும், நூல்களையும் எமது மகாலுக்குத் தந்து, தம் புகழை நிலைநாட்ட வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தொகுதியில் காணும் குற்றம் களைந்து குணம் கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

இங்ஙனம்,

புலவர் வீ. சொக்கலிங்கம்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சரசுவதி மகால்

25—10—2002
தஞ்சாவூர்

# எமது சரசுவதி மகாலுக்குத்

## தங்களிடமிருந்த சுவடிகளை மனமுவந்து அன்பளிப்பாகத் தந்த பெருந்தகையாளர்களின் பட்டியல்

திருவாளர் G. சேதுராமன் அவர்கள்
3. கிருஷ்ணன் கோயில் தெரு, அம்மாப்பேட்டை

திரு சரவணமுத்து ஆசாரி அவர்கள்
84. தனக்கோடியாபுரம் புதுத்தெரு, கோவில் பட்டி

திரு N. ஏகநாதன் அவர்கள்
மாவட்ட மைய நூலகம், தஞ்சாவூர்

திரு வெ.த. மணிவண்ணன் அவர்கள்
வையம்பாளையம், கோயம்புத்தூர்

திரு R. விசுவேசுவரன் அவர்கள், த/பெ. இராமச்சந்திர வாத்தியார், அக்ரகாரம், சின்னமனூர்

திரு R. இராதாகிருஷ்ணன் அவர்கள், சோதிடர்
வளையல்காரன் புதூர், மாயனூர்வழி, குளித்தலை

திரு கே.ஏ. மீனாட்சிசுந்தர சுவாமிகள் அவர்கள்
மாரிமுத்துசாமி மடம், திருக்கோகர்ணம் அஞ்சல்,
புதுக்கோட்டை வட்டம்

திரு வை. பாவலர் கவுண்டர் அவர்கள் தாளியாப்பட்டி
வெள்ளியணை அஞ்சல், கரூர் வட்டம்

திரு அ. முருகேசன் அவர்கள் H.M., ஊ.ஒ.தொ. பள்ளி,
பெரிய ஒட்டர் பாளையம், பு தா.குளம் அவினாசி

திரு K. சங்கரலிங்கம் அவர்கள் முத்து இருளப்பபிள்ளை தெரு,
நடுவீர் பட்டி, எட்டயபுரம்.

திரு வீ. வேலுசாமி அவர்கள், H.M.ஊ.ஒ. துவக்கப்பள்ளி,
மயிலேறியா பாளையம் அஞ்சல்
ஒத்தக்கல் மண்டபம், கோவை

திரு டி. முருகன் அவர்கள், சோதிடர்
வள்ளுவர் தெரு, கீரனூர், பழனி வட்டம்

திரு P. இராமநாதய்யர் அவர்கள்,
No.1 பெரிய ஹாஜியார் தெரு, சிதம்பரம்,

திரு S. முத்துசாமி அவர்கள், ஆதிமூலநாடார் தெரு
இராசபாளையம்

திரு M. வெங்கடசுப்ரமணியன் அவர்கள்
11, அரண்மனை அக்ரஹாரம், போட்டி, மதுரை

திரு V.S. வெங்கடாசலம் அவர்கள்,
த/பெ. சுப்பிரமணியக் கவுண்டர், புதூர் அஞ்சல்.
ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்

திரு க. மலையப்பன் நாடார் அவர்கள்,
மே.பா கருப்பண்ணன் நாடார், மணப்பாறை, திருச்சி

திரு ஜி. வேலம்மாள் அவர்கள், 4, பத்மநாபத்தேவர் வீதி,
வெள்ளாம் பாளையம், வெள்ளலூர்,
போத்தனூர், கோவை

திரு V. துரைராஜ் அவர்கள், ஆசிரியர்,
வ.உ.சி. உதவி பெறும் நடுநிலைப்பள்ளி,
கூடலூர், வேடசந்தூர வட்டம், திண்டுக்கல்

திரு வீ தருமராசன் அவர்கள், சைவமடத்துத்தெரு
போலீஸ் ஸ்டேஷன் ரோடு, ஒரத்தநாடு, தஞ்சைமாவட்டம்

# பொருளடக்கம்


**நிகண்டு**

| | |
|---|---|
| அகராதி நிகண்டு | —107 |
| சூடாமணி நிகண்டு | —73,92,95 |
| சேந்தன் திவாகரம் | —69,79,91,106 |

**இலக்கணம்**

| | |
|---|---|
| அகப்பொருள் விளக்கம் | —53 |
| இலக்கண தீபம் | —61 |
| சிதம்பரப் பாட்டியல் | —4 |
| தண்டி அலங்காரம் | —55 |
| நன்னூல் – உரையுடன் | —102 |
| நன்னூல் - காண்டிகையுரை | —33 |
| நன்னூல் - மூலம் | —51 |
| பன்னிரு பாட்டியல் - மூலம் | —67 |
| பிரயோக விவேகவுரை | —29 |
| யாப்பருங்கலக் காரிகை | —54 |
| ,, ,, - உரையுடன் | —2,81 |
| ,, ,, - விருத்தியுரை | —80 |
| வெண்பாப் பாட்டியல் | —83 |
| ,, ,, - மூலம் | —56 |

**கணிதம்**

| | |
|---|---|
| அரிச்சுவடி | —264 |
| எண்சுவடி | —190 |
| கிரக சார கணிதம் | - 239 |

### நீதிநூல்


ஆத்தி சூடி —177

ஔவையார் முதலானோர் வெண்பாக்கள் —196

கல்வி யொழுக்கம் —224

தரும நெறி நீதி —230

திருக்குறள் —16,22

,, - உரையுடன் —78,219

,, - பரிமேலழகர் உரை —260

,, - பொருட்பால் பரிமேலழகர் உரையுடன் —261

,, - மூலம் —25,70

திருவள்ளுவ மாலை —23,58

,, - உரையுடன் —62

திருவள்ளுவருரை - திருக்குறள் பரிமேலழகர் உரை - அறத்துப்பால் —64

திருவள்ளுவருரைப் பாயிரம் —63

நாலடியார் வாக்கியம் —137

நீதிக் கதைகள் —76

நீதி சாரம் - உரையுடன் —103

மதி வெண்பா —104

மூதுரை — 84,189

மூதுரை வெண்பா —24


### பிரசித்த காவியங்கள்


நளவெண்பா —265

நைடதம் - மூலம் —26

பெருங்கதை —50


### பிரபந்தங்கள்

#### அகப்பொருட்கோவை


அம்பிகாபதிக் கோவை —26

திரட்டுக் கோவை —262

திருக்கோவையார் - பேராசிரியருரை —58
திருச்சிற்றம்பலக் கோவை —108,282
திருச்சிற்றம்பலக் கோவையார் —16
நெல்லைக் கோவை —88

**மும்மணிக் கோவை**

சிதம்பர மும்மணிக் கோவை —7,32
மும்மணிக் கோவை —7

**அந்தாதி**

அபிராமி அந்தாதி —131
அரங்கனந்தாதி - மூலம் —57
ஆழிவண்ணப் பெருமாளந்தாதி —60
கருவையந்தாதி —87,128,291
கலைசை யந்தாதி —131
திருக்கருவை வெண்பாவந்தாதி —129
திருவரங்கத்தந்தாதி - உரையுடன் —263
பொன்வண்ணத் தந்தாதி —284

**பதிற்றுப்பத் தந்தாதி**

சொக்கர் பதிற்றுப்பத் தந்தாதி —299
திருக்கருவை பதிற்றுப்பத் தந்தாதி —86,130,291

**அம்மானை**

அரிச்சந்திரன் அம்மானை —160,245
மகாவிந்தம் என்னும் வைகுந்த அம்மானை —246
வீரையன் அம்மானை —161
வைகுந்த அம்மானை —163

**ஆற்றுப்படை**

அணி முருகாற்றுப்படை —296
ஒருமுருகாற்றுப்படை —298

திருமுருகாற்றுப்படை —12
மந்திரமுரு ,, —297
வருமுரு ,, —298

**கும்மி**

கும்மிப் பாடல் —144
சரவண முத்தேந்திரன் கும்மி —144

**ஏசல்**

தாய்மகளேசல் — 159,160
பூலீசர் பேரில் தாய்மகளேசல் —154

**கலம்பகம்**

திருவாமாத்தூர் கலம்பகம் —34
மதுரைக் கலம்பகம் —272

**சதகம்**

அறப்பளீசுர சதகம் —103
குமரேச சதகம் —116,157,187
திண்டியம்பதி அங்கம்மன் சமூகநீதி சதகம் —188
நாராயண சதகம் —158
வைராக்கிய சதகம்-உரையுடன் —289

**தூது**

விறலி விடு தூது —89

**பரணி**

அஞ்ஞான வதைப் பரணி —267

**மாலை**

அம்பிகை மாலை —185
இராசகோபாலர் மாலை —182,183
கதிர்காம மாலை —179,181

சுப்பிரமணியர் மாலை —202
,, பூசை மாலை —198
,, பேரில் சிவசோதி மாலை —186
தானுப்பிள்ளையவர்கள் பேரில் பஞ்சரெத்தின மாலை —74
திரிபுரை மாலை —206
திருவேங்கடமாலை —85
பஞ்சாக்கர தேசிகர் மாலை —59
பரமாரசிய மாலை —228
புலந்திரன் களவு மாலை —174
மனோன்மணி மாலை —206
வச்சணந்தி மாலை - உரையுடன் —3
வராகி மாலை —198,207
வேங்கடமாலை —35

## இரட்டைமணி மாலை

சிவகாமியம்மை இரட்டை மணிமலை —28
மீனாட்சியம்மன் இரட்டைமணிமாலை ...27
விநாயகர் பேரில் இரட்டை மணி மாலை —44

## நான்மணி மாலை

திருவாரூர் நான்மணி மாலை ...31

## வண்ணம்

பரந்தாமன் வண்ணம் ...155
மூவரையன் பேரில் வண்ணம் —156

## இதிகாசம்

இராமாயணம் - உரைநடை —238
வீடணன் புத்தி —94
பாரதம்-உரையுடன் —152,162
,, - ஸ்ரீகிருஷ்ணன் தூது-உரையுடன் —234
ஸ்ரீ கிருஷ்ணன் தூது —184

### தலபுராணம் — புராணம்


| | |
|---|---|
| அருணகிரிப்புராணம்-உரையுடன் | —65 |
| அருணாசல புராணம் | —170 |
| அருணாசல புராணம்—உரையுடன் | —235,237 |
| உலகநீதிப் புராணம் | —175 |
| கோயிற் புராணம்—வியாக்கிரபாதச்சருக்கம் | —8 |
| செவ்வந்திப் புராணம் | —268 |
| திருச்செந்தூர்ப் புராணம் | —269 |
| திருவிளையாடற் புராணம் | —99 |
| தென்குமரித் தலபுராணம் | —5 |
| நாசிகேது புராணம் | —214 |
| பரத கண்டத்தில் பதினெட்டுத் தலத்துக்கும் விபரம் | —270 |
| பார்கவத புராணம் | —258 |
| பாகவதம்-மூலம் | —256 |
| பிரமோத்தர காண்டம் | —120,262 |
| மார்கபுராணம் | —252 |
| விருத்தகிரிப் புராணம் | —10 |
| ஸ்ரீமத் பாகவதம் | —257 |


### கதை


| | |
|---|---|
| சித்திர புத்திரன் கதை | —68,231 |
| நளன் கதை | —14 |
| பொன்னர் சங்கர் கதை | 173 |


### சரித்திரம்


| | |
|---|---|
| இராமதாசர் சரித்திரம் | —70 |
| பிரகலாதர் சரித்திரம் | —259 |
| மன்னாருசெட்டி அட்டவணை முறிச்சீட்டு | —92 |
| ஸ்ரீ வீரபோக வசந்தராயர் அவதரித்த பத்திரிக்கை விரலாறு | —233 |


### நாடகம்


| | |
|---|---|
| அறவான் நாடகம் | —122 |

கஞ்சன் (கம்சன்) நாடகம் —172
குசல நாடகம் —232
தருமர் நாடகம் 171,247

**வேதாந்தம்**

அகத்தியர் ஞான காவியம் —169
அகத்தியர் வேதாந்த சூத்திரம் —229
அத்துவிதானுபவம் —285
அவிரோத வுந்தியார்—உரையுடன் —282
உத்தரகீதை —6
உபநிடதம் —110
கைவல்ய நவனீதம் —100
கைவல்ய நவனீதம் உபநிடதம், கீதாசாரம்
இம்மூன்றின் அட்டவணை —37
சசிவர்ண போதம் —66
சந்தரந் தீபிகை —168
சிவயோக தீபிகை —266
ஞானக் கலித்துறை —292
தேசோமய வெண்பா —254
நிராலம்ப தீபிகை —253
பகவத் கீதை —101
பஞ்சதசப் பிரகரணம் —98,274
பாகவதம் புராணம் —38
பரம ஞானம் —287
பிரமானந்த தீபம் —109

**சைவத் திருமுறை**

திருமந்திரம் —273
திருவெம்பாவை —11
தோத்திரத் திரட்டு —34
மூவர் தேவராம் —30

## சைவத் தோத்திரம்


| | |
|---|---|
| அடைக்கலப் பத்து | —227 |
| அவிநாசிப் பத்து | —180 |
| ஆறுமுக சுவாமி பேரில் ஆசிரிய விருத்தம் | —181 |
| ஆனந்த லகரி | —199,209 |
| கடம்பன் கவசம் | —195 |
| கந்தரலங்காரம் | —83 |
| கந்தரனுபூதி | —200,204,210 |
| கந்தர் கலிவெண்பா | —294 |
| கந்தர் சஷ்டி கவசம் | —249 |
| கருடப் பத்து | —216 |
| கல்லாடம் | —72,271 |
| கேதாரநாதர் விரதம் | —266 |
| சரசுவதி தோத்திரம் - சகலகலா வல்லி மாலை | —52 |
| சனி பகவான் தோத்திரம் | —63 |
| சிங்கை வெண்பா | —75 |
| சிவகவசம் | —301 |
| சிவகாம வல்லி தோத்திரம் | —158 |
| சிவபூசை விதி | —133 |
| சுப்பிரமணியர் அகவல் | —194,213 |
| சைவத் தோத்திரம் | —23 |
| சௌந்தர்ய லகரி - உரையுடன் | —15 |
| திருநீற்று மந்திரம் | —132 |
| திருப்புகழ் | —117,178 |
| தில்லை அகவல் | —300 |
| நவக்கிரக தோத்திரம் | —219 |
| நாமாவளி | —153 |
| பிள்ளையார் சிந்து | —176 |
| புண்ணிய பட்சாட்சர விளக்கம் | —294 |
| மீனாட்சியம்மன் அகவல் | —142 |

மீனாட்சியம்மை கலிவெண்பா —302
விநாயகர் அகவல் —212
வேல் விருத்தம் —295
ஸ்ரீ ராமர் துதி —215

### சைவ சித்தாந்தம்

சிவஞான சித்தியார் - சுபக்கம் - மூலம் —119
,, - பரபக்கம் - மூலம் —118
தச காரியம் —39
போற்றிப் பஃறொடை ...19

### சைவ சாத்திரம்

அனுட்டானத்தியானம் ...40
உடற்கூறு தத்துவம் –96-கருவிபரம் ...279
கொங்ணர் ஆறு சூட்ச தெரிசனம் ...285
சமாதி அட்டணை ...43
சிவத்தியானம் ...41
சிவார்ச்சானபோதம் ...49
தத்துவக்குறிப்பு அட்டணை ...278
தெரிசினை மூன்று-முப்பது ...45
நெல்லேசர் பைங்கிளிக் கண்ணி ...90
பஞ்ச கவ்விய விதி ...42
பதினொன்றாவது பரிகாரவியல் ...47
பனிரெண்டாவது-சிவகவசம் ...48
புண்ணியகாலவிதி ...42
போஜன விதி ...39

### கட்டளை/நூல்கள்

தத்துவக்கட்டளை —49
திருவாலவாய்க் கட்டளை ...9,18

### சிற்றம்பல நாடிகள் சாத்திரம்

அறிவானந்த சித்தியார் —255

**தத்துவம்**

ஆத்மபாவனை ... 77
நந்திதேவர் திருமூல தேவருக்கு அருளிச்செய்த தத்துவம் ...290
நெஞ்சறி விளக்கம் ...141

**சித்தர் பாடல்**

சிவவாக்கியர் பாடல் ...45
தாயுமான சுவாமி பாடல்கள் ...276,277
தாயுமானவர் தோத்திரம் ...275
பட்டினத்துப்பிள்ளை பாடல் ...46
பரசிவ வணக்கம் ...115
பராபரக் கண்ணி ...293

**காம நூல்**

கொக்கோகம் உரையுடன் ...146
மதன சாரம் ...147

**தனிப் பாடல்**

சதுரங்க பந்தம் ...13

**கவிதை**

ஏரெழுபது ...123
நெல்லையப்பர் காந்திமதி ஆனித்திருவிழா
ஐப்பசித் திருநாள் வாகனக்கவிதை ...93
வாள் இருபது ...124

**இசை**

அரிகீர்த்தனை ...223
இராமதாசர் கீர்த்தனைகள் .. 71
இராமநாடகக் கீர்த்தனை .. 96,116
இராமயணப்பதம் ...126
" பாடல்கள் .. 225
கசேந்திர மோட்சக் கீர்த்தனைகள் ...217

கட்டியம் ...224
சிட்டாஸ்வரங்கள் ...125
பாரதப் பாடல்கள் ...226

**வைணவம்**

திருவாய் மொழி ... 122

**மந்திரம்**

அகத்தியர் ஞானம் ...151
இலவன பஞ்சரம் ...205
ஓல்லியம் —152
காளி மந்திரம் —213
கொங்கணர் ஞானம் —208
சண்முக பூசாவிதி —221
சர்வசங்கார விஞ்சைத் திறவுகோல் —197
திசைக்கட்டு மந்திரம் —209
மந்திர சாத்திரம் —105,114,150,192,221
மந்திரத்திரட்டு —7
மந்திர வைத்தியக் கோர்வை —203
மாந்திரீகம் —149
மீனாட்சி மந்திரம் —77
விஞ்சை மந்திரம்—சக்கரம்—திறவுகோல் —222

**மருத்துவம்**

அகத்தியர் —205 —279
அகத்தியர் குழம்பு —280
கடைச் சரக்கின் பாகம் —167
கோரக்கர் வைத்தியம் —21
சர்பத்து முதலியன —275
சர்வ பட்சணி —211
வைத்தியக்கும்மி —229
வைத்தியக் கோர்வை —203
வைத்தியத் திரட்டு —20,281
வைத்தியம் —21

**சோதிடம்**

இடைக்காட்டார் பஞ்சாங்கம் —140

இராசி உரிச்சொல் அறிவது —136
இராசி பலன் ...243
இராமதேவர் சோசியம் —164
உள்ள முடையான் —192
உள்ள முடையான் வாக்கியம் —135
ஒட்டியம் —149
கயிறு போட்டுப் பார்க்கும் சுவடி —248
கிரக நோக்கு —139
கிழமை பலன் —201
கௌளி நூல் —244
சகாதேவ நூல் சந்தனக் கயறு —193
சப்தமுனி சோதிடம் —240
சர நூல் —143
சல்லிய நூல் —148
சாதகம் —121
சிரோமணி தினபலன் —165
சோசிய நட்டாமுட்டி சத்திரம் —135
சோதிட சாத்திரம் —166
சோதிட நூல் —241,242
சோதிடம் —1,36,111,127,145
சோதிட ரேகைச் சுருக்கம் —169
தமிழ் சோதிடம் —109
தும்மல் பலன் ... 250
தொடுகுறி சாத்திரம் ... 112
நட்சத்திர சோதிடம் ...288
நட்டாமுட்டி சாத்திரம் ....135
நட்டாமுட்டி சிந்தனை ... 113
நவக்கிரக பலன் —244
பட்சி சாத்திரம் —251
பிறைக்குறி .. 134
பூமி சல்லியம் —112
மனையடி சாத்திரம் ...249
மாசத்துருவம் . 165
மாத பலன் _ 97
லெக்கின பாவம் ... 138

# தஞ்சை சரசுவதி மகால் நூலகத்

## தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்

## 23-வது தொகுப்பு

## இலக்கியப் பகுதி

வரிசை எண் : 3512 சுவடி எண் : 1601

## சோதிடம்

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 900 அளவு : 34 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

(இராசி சக்கரம் ; அமுசா சக்கரம் ஆகியவை உள்ளன)
ஸ்ரீசனநி ஜென்ம சௌக்கியானா வர்த்தநீ
குலசம்பதாம் பதவி பூர்வ புண்ணியானா
லிங்கத்தே ஜென்ம பத்திரிகா

முடிவு:

சுகதுக்களைப் பற்றி குறிக்கப்படாதிருக்கும்
ஷ்த்தானங்களில் வந்தால் மத்திம பலன்களென்று
கோசர பலன்

முற்றிற்று

காலம் :

சுபஸ்ரீமன் சாலியவாகன சகாப்தம் 1793-க்கு கலியப்தம் 4972-க்கு பிரமோதூத வருஷம் தை மாதம் 26-ந் தேதி சோமவாரம்.

குறிப்பு :

இது, ஸ்ரீரங்கம், சிவந்திலிங்கம் பிள்ளைகுமாரர் ரெங்கசாமி பிள்ளை குமாரன் செவந்திலிங்கம் பிள்ளை அவர்களின் சாதகமும் அதன் கோசார பலனுமாகும்.

இரட்டை ஏடுகளாக உள்ளன.

வரிசை எண் : 3513

சுவடி எண் : 1602-a

# யாப்பருங்கலக் காரிகை — உரையுடன்

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 42 × 3½ செ.மீ
பக்கத்திற்கு : 11—12 வரிகள் ஆசிரியர் : அமிதசாகரர் பொருள் : இலக்கணம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

காரிகை

முதலாவ துறுப்பியல் - உரை
நன்றாக
கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்
கண்ணார் நிழற்கீ
ழெந்த மடிக ளிணையடி யேத்தி
யெழுத் தசைசீர்
பந்த மடிதொடை பாவினம் கூறுவன்
பல்ல வத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய
தாழ் குழலே !

முடிவு :

செஞ்சுடர் நெடுவேள் தேவுலுந் கொடியேயுஞ் துப்புவேம வைகலெய் தின்றாலுலகே என வரும்.

ஒழிபிய லோத்து முற்றும்

காரிகை சூத்திரம் 44 மதனுரையு மொழதி முடிந்தது முற்றும். அஞ்சு முந் தோன்றிலாறு முகந் தோன்றும் ........ முருகா வெஞ்சேறாதுவார் முன் அத்திமுகத் துத்தமனை நித்தநினை சித்தமே.

சாலிவாபீசுரர் காந்திமதியம்மன் திருவடி சரணம். குமரன் துணை.

காலம் :

962-ம் வருஷம் அற்பிசி மாதம் 21-ந் தேதி எழுதி முடிந்தது. திருமலைக் கொழுந்த வினாயகன் பாதாரவிந்தமே கெதி (பின்னர் சில தனிப்பாடல்கள் உள்ளன).

குறிப்பு :

இது. எமது சுவடி எண் 145/D 1550 போன்றது. இந்நூல் அச்சாகியுள்ளது, முன்னதாகச் சில சில்லரை ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3514 சுவடி எண் : 1602-b

# வச்சணந்தி மாலை — உரையுடன்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 42×3½ செ.ம்.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : வச்சணந்தி தேவர் பொருள்: இலக்கணம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெண்பாப் பாட்டியலுரை

முதன் மொழியியல்

மதிகொன்ட முக்குடைக்கீழ் வாமன மலர்த்தா
டுதிகொண்டு நாளுந் தொழுது—துதிகொண்ட
பல்கதிர்வே லுண்கணாய்ப் பாட்டியலைக் கட்டுரைப்பன்
றொல்லுலகின் மீதே தொகுத்து.

முடிவு :

நன்குணர்ந்தோ ராய்ந்த தமிழ்நூலி னன்னெறியை
முன்புணர்ந்து பாட்டியனூன் முற்றுணர்ந்து—பின்புணரு
நல்லார்மு னல்லாய் நலமார் கவியுரைக்க
வல்லார தன்றோ மதி. —30

சொல்லியன் முடிந்தது.

என்களங்கம் யாவையு நீக்கி யினிதருளி
தன்களந்த நூலொடு நாட்டுவரர்ற்—றென்களந்தை
மன்பெயரா வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
நன்பெயரா னாட்டுந் தமிழ். —என்பதவையடக்கம்

வச்சணந்திமாலை முற்றும்

திருமலைக்கொழுந்த வினாயகன் பாதார விந்தமே கெதி.

குறிப்பு :

செய்யுளும் உரையுமாகக் கூறப்பட்டுளது. குணவீர பண்டிதர் இயற்றியது என்ற தொடரும் காணப்படுகிறது.

வரிசை எண் : 3515 சுவடி எண் : 1602-c

# சிதம்பரப் பாட்டியல்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 42×3½ செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : பரஞ்சோதியார் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

(தொடக்க ஏடு இல்லை)

............ கொன்றைக் கண்ணியான்

பொன்மன் நிறைஞ்சிடுக வாங்கொன்றைக் கண்ணியவா

இது சீர் முழுது மெதுகை யொன்றத் தொடுத்தமையாற்
றலையா கெதுகை

முடிவு :

வாழ்த்துமின் றில்லை நினைமின் மணிமன்றந்
தாழ்த்துமின் சென்னி தலைவர்க்கு—வீழ்த்த
புறநெறியாற் ....... ......... .......... ... ...
தார்க்குச் சூழ் கடனிது வே.

இது செவியறிவுறூஉ மருட்பா மருட்பா. முற்றும். —84

சிதம்பரஞ் செய்யுட்கோவை முற்றும். குமரன் துணை.

முத்துக் குமர சுவாமி தேசிகன் பாதாரவிந்தமே கெதி.

குறிப்பு :

இந்நூல் அச்சிடப்பட்டுளது. இச்சுவடியில் தொடக்க ஏடுகள் இல்லை. பிற்பகுதி ஒடிந்தும் முறிந்தும் உள்ளது.

கடைசியில் உதிரி ஏடுகள் 10 உள்ளன.

வரிசை எண் : 3516 சுவடிஎண் . 1603

# தென்குமரித் தல புராணம்

ஏடுகள் : 74 கி. எண்ணிக்கை : 4500 அளவு : 39×3 செ மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் :
தலபுராணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

......15. கிளியொடு பூவை யெங்குங் கிளர்ந்........
மளிகள் வீழ் மதங்கள் சிந்து மானையு மடங்கி நிற்குந்
துளிநற வொழுகும் பூவு சுவைதருங் கனியுங் காயுங்
களிகொள் வண்டுறை பூங்கொடிகள்.........காட்டும் —16

முடிவு :

சுருளுலவு குழல் போற்றி நிலவுலவு
மதிவதனச் சோதி போற்றி
யருளுலவு மிருநயன வ............
..................... போற்றி
மருளுலவு மனத்தெனைப் பவக்கடல் வீழ்ந்
தலையா மனமலர்த் தாளேத்து
தெருளுலவ வருள்புரிந்த கன்னி நா
......... ...... ...... ......... —114

தென்குமரித் தலபுராண முற்றும்
சிவமயம், தேவி சகாயம்.

குறிப்பு :

இதன் முற்பகுதி இல்லை. இதில், சூதரொடு குமரித்தல மகிமை வினாவிடைச் சருக்கம், திருநாட்டுச் சிறப்புச் சருக்கம், திருவகரச் சிறப்பு, குமரியெனும் பெயர் வரலாற்றுச் சருக்கம், தேவி சகாயம் சேது மூலத்தலமென்ப வரலாறு, குகனாண்டேசுரச் சருக்கம், இந்திரன் றவம்புரிச் சருக்கம், அகத்தியேசுரச் சருக்கம், மூர்த்தி விசேடந் தேவி தோற்றச் சருக்கம், சாவித்திரி காயத்திரி சரசோதி, வாணாசுரச் சங்காரச் சருக்கம், கன்னி நாயகி பூஞ்சோலை புகு சருக்கம் முதலான சருக்கங்கள் உள்ளன. சுவடி மிகச் சிதிலமாக உள்ளது.

வரிசை எண் : 3517 சுவடி எண் 1604.

# உத்தர கீதை

ஏடுகள் : 89 கி. எண்ணிக்கை : 1300 அளவு: 24½ × 3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பகவான் கிருஷ்ணர் பொருள் : வேதாந்த.

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக ஸ்ரீ கிருஷ்ணன் மூர்த்தி
அர்ச்சுனனுக்கு உபதேசம் செய்தது
ஸ்ரீ லெஷ்சிமி நாராயணன் மூர்த்தியே சகாயம்.
அல்லல்போம் × × × × கைதொழுதக்கால்.
ஸ்ரீ மகாபாரதத்தில் தற்ம சேத்திரமான குரு சேத்திரத்தில்
அற்சுனன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய கருணையினாலே
பகவந்கீதை பதினெட்டு அத்தியாயம் உபதேசிக்கப்பட்டு

முடிவு:

அவனுக்குப் பொன்னும் ஓடும் சரியென்று சிரையும்
கரியும் உண்டான அன்னமும் சரி. யோக வஸ்த்துக்கள்
வந்ததினாலே சந்தோஷமில்லை யென்று விசாரமுமில்லை
இப்படிக் கொத்த யோகீஷ்பரனே சீவன் முத்தன்.

அத்தியாயம் 3-க்கு கிரந்தம் 109. உத்தரகீதை
எழுதிமுகிந்தது. சம்பூரணம். ஸ்ரீ வேங்கடேச ஆசாரி
திருப்பாதமே கெதி. ஸ்ரீ பரப்பிரம்மனே நம.
ஸ்ரீரங்கநாதர் குருவே துணை.

காலம் :

விரோதி வருஷம் தை மாதம் 5-ந் தேதி.

குறிப்பு:

இறைவன் கண்ணபிரான் அருச்சுனனுக்கு உபதேசித்த பகவத்கீதை 18 அத்தியாயத்தையும். பார்த்தன் தன் யோகத்தினாலே மறந்ததனால், மீண்டும் அதனை உபதேசிக்கும்படி கண்ணபிரனைக் கேட்க, அவர் 3 அத்தியாயங்களிலே இதனை உபதேசித்ருளினார்.

வரிசை எண் : 3518 சுவடிஎண் : 1605

## மந்திரத் திரட்டு

ஏடுகள் : 70 கி. எண்ணிக்கை : 1000 அளவு : $14 \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரங்கள்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

………… ஸ்ரீ … யா……… ங்கை ……யான்
மொடு கோரோசி ………… நன்றாய் விட்டு

முடிவு:

கூரிக்கொள்ளப் பட்டி விஷங்களெல்லாம்
பாதை சுவாக்க அ ………… அரி அரிசிவசிவ
யென்று யிந்த மந்திரஞ் சொல்லி விஷ ……………
வும் விஷ மீளும்.

குறிப்பு :

இதில், பலவகையான மந்திரங்களும், அதற்கான சக்கரங்களும் உள்ளன. சிறப்பாக விஷம் இறங்க மந்திரங்கள்அதிகமாகக் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3519 சுவடி எண் : 1606-a

## மும்மணிக் கோவை

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 800 அளவு : $18\frac{1}{2} \times 4$ செ.மீ.

பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : பட்டினத்தார் பொருள் : கோவை

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக
பட்டணத்தார் பாடல்
தெய்வத் தாமரை ………………
……………… த் தோடெனச் சிவந்து சிலம் ……………
…………… ற்றினாற் றனமாற்றிப்
போற்றாது வவம்பு………………

முடிவு :

கரத்தினின் மாலயன் தண்கொண்டு நின்கழல் காட்டவல்ல
வரத்தினை யீயும் முதல்வ பாமதி யொன்றுமிலேன்
சிரத்திலுமா யென்றன் சிந்தைய தாகிவெண் காடனென்றுந்
தரத்தினு மாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே! — 30

பட்டணத்தார் பாடல் மும்மணிக்கோவை முடிந்தது
முற்றும்

சிவாயநம குருவே துணை திருச்சிற்றம்பலம்.
முத்துக்குமார சுவாமி தேசிகன் திருவடித் தாமரையே கெதி.

குறிப்பு :

இது, மூன்று வகைச் செய்யுட்களாலானது 'திருவளர் தாமரை' என்று தொடங்கி 'திருவளர் தாமரையே' என்று முடிக்கிறார். எழுத்துக்கள் மிக மிகச் சிறியனவாக உள்ளன. படிப்பதற்கே அரிதாக உள்ளன. ஏடுகள் ஒடிந்தும், பொடிந்தும் உள்ளன.

கூந்தற்பனை ஓலையில் எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 3520 சுவடி எண் : 1606-b

# கோயிற் புராணம் - வியாக்கிர பாதச் சருக்கம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 3000 அளவு : $18\frac{1}{2} \times 4$ செ.மீ
பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : கொற்றவன்குடி உமாபதி-சிவாச்சாரியார்
பொருள் : தலபுராணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொற்பதப் பொதுவார் புலியூர் புகழ்
சொற்பதப் பொருளாகுவர் தூயவ
ரற்பகற் றொழ வாழணி கோபுரக்
கற்பகத் தனியானை கழல்களே ! — 1

முடிவு :

மழை வழங்குக மன்னவ னோங்குக
பிழையில் பல்வள மெல்லாம் பிறங்குக
தழைகவஞ் செழுத்தோசை தரையெலாம்
பழையன வதிக சைவம் பரிக்கவே. — 53

திருவிழாச் சருக்கம் முற்றும். கோயிற்புராணம் முற்றும்.
ஆக சருக்கம் 5-க்குத் திருவிருத்தம் 415. திருச்சிற்றம்பலம்.
சாலிய வாபீசர காந்திமதியம்மன் பாதாரவிந்தமே கெதி
அம்பலவாணதேசிகன் பாதார விந்தமே கெதி
முத்துக் குமாரசுவாமி தேசிகன் பாதார விந்தமே கெதி

காலம் :

965-ஆம் வருஷம் கார்த்திகை மாதம் 14-ந் தேதி
முடிந்தது. திருமலைக் கொழுந்து விநாயகன் பாதார விந்தமே கெதி
சொக்கலிங்க மீனாட்சி திருவடித் தாமரையே கெதி
குமரன் திருவடித்தாமரையே கெதி

குறிப்பு

இது, சிதம்பரத்தின் வரலாறு கூறுவது. வியாக்கிர பாதச் சருக்கம் முதலாக திருவிழாச் சருக்கம் ஈறாக 5 சருக்கங்களையுடையது.

இது, எமது சுவடி எண் 313/D.502 போன்றது. அச்சிடப்பட்டுள்ளது. கூந்தற் பனை ஏட்டில் மிக மிகச் சிறு எழுத்துக்களால் எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 3521 சுவடி எண் : 1606-c

# திருவாலவாய்க் கட்டளை

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 18½ × 4 செ.மீ.
பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

கைக்குலவு ஞானக் களிற்றொரு முக்கட் கடத்து
மிக்குலவு சித்தி விநாயகர் - பொய்க்குலவா

மட்டள வில்லாத சிவம்வாய்த்த திருவாலவாய்க்
கட்டளைக்குன் பாதமே காப்பு.
திருச்சிற்றம் பலம்

நூல்
பதியிலக்கணம்

பதிபசு பாசமுன்று மனாதி நித்திய மிவைகளிற்
பதியாவது பரிபூரணமா யொன்றாய் அறிவுக்கறிவாய்
நின்மலமா யுயிர்க்குயிராய்க் குறியுங் குணமுமில்லாததா
யருவு முருவு

முடிவு :

தானும் அருளும் நிற்கிற முறமை அறிந்து
அறிவினாலே முத்தி பஞ்சாக்கரத்தைச்
செவியாமலச் செவிப்பதே. அதுவுங் கூடாதாகில்
ஞானநூலோதிச் சிந்தித்தும் அந்தரியாகம் பண்ணவும்
இப்படிச் செய்ய உண்மை வந்து கூடும் இப்படி........
முந்தலமுதலாக வந்த............

குறிப்பு :

இது, கூந்தற் பனையில் எழுதப்பட்டுளது. சைவசித்தாந்தக் கட்டளையாகக் கூறப்பட்டுளது. ஏடுகள் ஒடிந்துள்ளன.

இதன் பின்னர் தொடக்கம் முடிவு இல்லாத சித்தாந்த ஏடுகள் 5 உள்ளன.

வரிசை எண் : 3522 சுவடி எண் : 1607-a

# விருத்தகிரிப் புராணம்

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 16 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7-9 வரிகள் ஆசிரியர் : ஞானக்கூத்த சிவப்பிரகாசதேசிகர்
பொருள் : தலபுராணம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுள்ளது
எழுத்து : தமிழ்.
தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்க
× × × ×
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் போற்றுவாம்.

நூல் பாயிரம்

திருமாலு நான்முகனுந் தேவர் கோவும்
தேவர்களு யாவர்களுஞ் சிந்தையாலு
மருவாய மறையாலு மளவை யாலு
மளப்பரிதா யகண்டிதமாய் நின்ற மூர்த்தி

முடிவு :

திங்கள் மும்மழை பெய்யச் செழும்புவி
பொங்கி வாழ்க புரவல னோங்குக.
நங்கள் சங்கரன் பூசை நலம்பெற
சங்கர னடியார்கள் தழைக்கவே. —28

சசிவன்னச் சருக்கம் முற்றும். ஆகச்சருக்கம் பதினேழுக்குந் திருவிருத்தம்— — — திருமுது குன்றப் புராணம் முற்றும்; திருச்சிற்றம்பலம். ஊத்துமலை வீராணம் — — — மனாயகம். முது கிரிப்புராணம் எழுதி முகித்தேன். முதுகுன்றீசர் துணை. சிவமயம்.

காலம் :

984-ஆம் வருஷம் கார்த்திகை மாதம் 23-ஆம் தேதி முகிந்தது

குறிப்பு :

இதன் கடைசிப் பக்கத்தில் சருக்க அட்டவணை உள்ளது. ஏடுகள் சல்லடைக்கண், ணாக உள்ளன. 18 சருக்கங்களையுடையது.

இது, எமது சுவடி எண் 268/D-473. போன்றது.

வரிசை எண் : 3523 சுவடி எண் : 1607-b

# திருவெம்பாவை

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 200 அளவு : 16 × 3 செ மீ·
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : திருமுறை
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியுமந்தமு மில்லா வரும் பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்
வாட்டடங்கன் மாதே வளரு தியோ
வன்செவியோ நின்செவி தான்

முடிவு:

வெங்கை யுனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
விங்கிப்பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய் —19

குறிப்பு :

இதில், கடைசிப் பாட்டு இல்லை. ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளன. இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது.

வரிசை எண் :352 சுவடி எண் : 1607-c

# திருமுருகாற்றுப் படை

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 300 அளவு : 16 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : நக்கீரர் பொருள் : திருமுறை

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குமரன் துணை

ஒருமுருகா வென்றனுளங்குளிர வுவந்துடனே
+ + + + +
திருமுருகாற்றுப் படையுட னெழுந்தருள் சேவகனே;
சிவனே தெய்வம்.

திருப்பரங்குன்றம்

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
புலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி...

முடிவு :

நிழும்மென விழிதரு மருவிப் பழமுதிர்சோலை
மலைகிழ வோனே!
குன்றமெறிந்தாய் குரைகடலீற் சூர்தடிந்தாய் ———
... ... ... ...
குன்றமெறிந்தமை — ... ... ... வீரன்கைவேல்

நக்கீர தேவராருளிச் செய்த
திருமுருகாற்றுப்படை முற்றும்.

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளன.

இது, எமது சுவடி வண் 639/D-541 போன்றது. இது, சங்க இலக்கியம் பத்துப் பாட்டில் முதற்பாட்டாக வுளது.

வரிசை எண் : 3525 சுவடி எண் : 1607-d

# (சதுரங்க பந்தம்)

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 16×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தனிப்பாடல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஒன்றுபன் னொன்று பின் ........வதியா
யிருப னெட்டு வென்றியுள முப்பானாலு

முடிவு :

யிருபன்னெழு பகர்ந்த முப்பத்தி மூன்றும்
கொண்ட சொற்ப புராண மாக
கு .....முனி பாதம் போற்றி க ....... ணடவர்
தால் தானைக் கணக்கிற்குங் கலை வல்லோரே !

முற்றும்
சிவமயம்

குறிப்பு :

தலைப்பு அறியக்கூடவில்லை. பூச்சயரித்துள்ளதால் எழுத்துக்கள் முழுமையாகத் தெரியவில்லை. ஏடுகள் சல்லடைக் கண்ணாக உள்ளன.

எண்களாலேயே பாடல்கள் புனையப்பட்டுள்ளன.

—★—★—

வரிசை எண் : 3526 சுவடி எண் : 1608

# நளன் கதை

ஏடுகள் : 29 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : புகழேந்தி பொருள்: பிரசித்த காவியம்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

புகளேந்தி பாடல்

கலாப மயிலிருந்த பாகத்தர் கங்கை
யுலாவுஞ் சடைமே லுறையு—நிலாவை
வழிவார்த் தாலன்ன மாநீற்றர் நாகங்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

முடிவு :

ஏவரிர் சிலைக்கை யிராம சரம்போலத்
தாவா மொழிச்சத் திரன்சுவர்க்கிப்—பாவாணர்
முத்துரைக்க நின்றார் முகமலர்ந்து மங்கலச்சொல்
வந்துரைப்ப வீற்றிருந்தான் வாழ்ந்து —434

நளன்கதை முற்றும்
காந்திமதியம்மன் துணை.

காலம் :

943-ஆம் வருஷம் தை மாதம் 16-ந் தேதி எழுதி முகிந்தது. முத்துகுமாரசாமி ஓதுவாமூர்த்தி ஏடு. ராசப்பன் கையெழுத்து நன்றாக.

குறிப்பு :

இது, புகழேந்திப் புலவர் எழுதிய நளவெண்பாவின் வேறுபட்டதுபோல் காணப்படுகிறது. ஆனால் புகழேந்திப் புலவரும், சந்திரன் சுவர்கியாரும் காணப்படுகின்றனர். உட்பிரிவுத் தலைப்புகள் ஏதும் இல்லை. வெண்பாக்கள் நன்றாக உள்ளன.

ஏடுகள் சல்லடைக் கண்ணாக உள்ளன. முதலில் 2 ஏடுகள் தெலுங்கு எழுத்துக்களைக் கொண்டுள்ளன. பின்னர் ஒரு ஏட்டில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிரண்டு பாடல்கள் உள்ளன.

வரிசை எண் : 3527 சுவடி எண் ; 1609

# சௌந்தரிய லகரி — உரையுடன்

ஏடுகள் : 116 கி. எண்ணிக்கை : 3060 அளவு : 29×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் :

சைவத்தோத்திரங்கள் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுள்து

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

காப்பு

பிறைதவழு மெயிறொன்ற ............ தொழுவாம்

சவுந்தரியலகரி, ஆனந்தலகரி, பரமானந்தலகரி-இவையென்னு மலங்காரங் காண்க.

பாயிரம்

மொழிந்த மறை நூலியற்று முகபடா மணிந்து முதுஞான தானம்
பொழிந்துதன திணைமணியென் றிருசுடரும் புனைகளிற்றைப் போற்றல் செய்வாம்.

முடிவு :

வேதநுண்பொருளாதி சுந்தரி வீரடங்கலு மோதவே
யீதயர்ந்து விடர் சொலுங் கவிராச பண்டிதன் வீரையான்
நாதரஞ்சசிதாள் பெருந்திரு நாம மொன்பது நூறுமே
யோதிநன் பல போகமுஞ் சிவலோகமும் பெறுவார்களே! —104

காலம் :

சருவசித்து வருஷம் சித்திரை மாதம் 19-ந்தேதி சோமவாரனாள் ஆத்தியமான கரந் தெற்குசூரிலிருக்கும் கெணபதியா பிள்ளை சுயவாகன புத்திரன் அய்யாச்சாமி சவுந்தரியலகரி யுரை பாடலெழுதி நிறைந்தது. முற்றும்.

மேற்படியான் மாதுரியமான சவுந்தரியலகரி வடமொழியான மதுரம் பொருந்திய வாக்கியமான செவடியை எடுத்து வாசித்திடு வோர்கள் திரும்பக்குடுக்கும்படி தயவு செய்யவும்

வால சரசுவதி துணை செய்ய வேண்டியது.

குறிப்பு :

இது, எமது சுவடி 465/D-930 போன்றது. சுவடி சில்லடைக்கண்ணாக உள்ளது.

××××××

வரிசை எண் : 3528

சுவடி எண் : 1610

## திருக்குறள்

ஏடுகள் : 70 கி. எண்ணிக்கை : 800 அளவு : 25×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : இலக்கியம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

......... ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா லுண்டிவ் வுலகு

முடிவு :

... ... ... ... த்துக் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப்பெறின்
காமத்துப்பால் முற்றும்

குறிப்பு :

இதில், முதல் 57 ஏடுகள் இல்லை. எழுத்துக்கள் தெரிவாக உள்ளன. செல் லரித்தும், மடிந்தும் ஒடிந்தும் உள்ளன

❀❀❀

வரிசை எண் : 3529

சுவடி எண் : 1611-a

## திருச்சிற்றம்பலக் கோவை (திருக்கோவையார்)

ஏடுகள் : 66 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 22×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : திருமுறை
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

எண்ணிறைந்த தில்லை யெழுகோ புரந்திகழக்
கண்ணிறைந்து நின்றருளுங் கற்பகம்- நண்ணியசீர்த்
தேனூறு செஞ்சொற் றிருக்கோவை யென்கின்ற
நானூறு மென்மனத்தே நல்கு.

நூல்

திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீ சர்தில்லை
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தற்கொண் டோங்குதெய்வ
... ... ... ... ... ...

முடிவு :

காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் றக்கோர் தஞ்சங்க நிதிவிதிசே
ருருணி யுற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கு மூதியமே!
இரும்பரிசி லேற்றவர்க் கருளி
விரும்பினர் மகிழ மேவுது வுரைத்தது.
பரத்தை பிரிக முற்றும்,
திருச்சிற்றம்பலம் — 400

திருச்சிற்றம் பலக்கோவை முற்றும்·
திருவாத வூராணி திருவடிவாழ்க
தெய்வசிகாமணி தேசிகன் றுணை.

இதன் பின்னர்: தொடக்கம்.

''கோதி லியிற்கை பதினெட்டுப் பாங்கற் கூட்ட முப்பான்
றீதில காந்துறை பத்தொன்று பாங்கி தெளிவிலைய்ய
மோது பொ ... ... ழினொடு நாண் நாட்டமைந் தொண்ணுதல்சேர்
மாதுண் மதிந் நடுங்க நாட்டமொன்று மடலே —1.

முடிவு.

திருவளர் காரணி யென நானூறு
மருவிய விருபத் தெட்டென வகுத்து —29

முன்னோன் சொன்ன முதநூற் பொருளை
நன்னூற் (பிரி)வா நவின்றிசி னோரே! —30

திருச்சிற்றம்பலம்
குருமுருகன் றுணை. அம்பல வாணனே துணை.

காலம் :

971-ஆம் வருஷம் இராட்சத வருஷம் தை மாதம் 27-ஆம் தேதி மந்தவாரமும் உத்திராட நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் திருச்சிற்றம்பலக் கோவை யெழுதினது முற்றும்.

விளங்குளம் பாளையமங்கை வளகாட்டில் ஸ்ரீ திரிபுராந்தக வீசுரர் ஆவுடைம்மன் பாதராவிந்தமே துணை.

நயினார் துணை. இராசகோபாலசுவாமி துணை.

குறிப்பு :

மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் திருப்பாற்கடல் திருமடத்தில் எழுந்தருளியிருந்தபோது, ஒருநாளிரவு அம்பலவன் அந்தனர் உருவொடு வந்து, ''நீர் இதுவரை பாடிய பாடல்களை எல்லாம் சொல்லுங்கள் எழுதிக் கொள்கிறேன்'' என்று சொல்ல, அதன்படி, அவர் சொல்ல இறைவன் எழுதினார். அத்திருவாசகத்தில் மிகச் சுவையாக இருந்த திருவெம்பாவையை எழுதி மகிழ்ந்த பிற்றை, ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக'' எனக் கேட்டலும் மாணிக்கவாசகர் 'திருச்சிற்றம்பலக் கோவை' என்னும் திருக்கோவையாரைப் பாட் அதனையும் ஏட்டில் எழுதி பின்; ''மாணிக்க வாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையான் கையெழுத்து'' எனக் கைச்சாத்திட்டு மறைந் தருளினார். அதுவே இக்கோவையாகும்.

இது, எமது சவடி எண் 1469/D-2022 போன்றது. ஏடுகள் ஒடிந்தும், மடிந்தும், செல்லரித்தும் உள்ளன. சில பகுதிகள் படிப்பதற்கே அருமையாக உள்ளன.

வரிசை எண் : 3530 சுவடி எண் : 1611-b

## திருவாலவாய்க் கட்டளை

ஏடுகள் : 12 கி எண்ணிக்கை : 300 அளவு : 22×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்த சாத்திரம் நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

திருச்சிற்றம்பலம்

கைக்குலவு ஞானக் களிறேமுக் கட்கடத்து
மெய்க்குலவுஞ் சித்தி விநாயகர்—பொய்க்குலவா
மட்டளவி லாதசிவன் வாய்த்ததிரு வாலவாய்க்
கட்டளைக்குன் பாதமே காப்பு.

பதிபசு பாசமூன்று மனாதி நித்திய மிவைகளிற்
பதியாவது ஒன்றாய் பரிபூரணமா யறிவுக் கறிவாய்
நின்மலமா யுயிர்க் குயிராய்க் குறியுங் குணமு மில்லாததாய்

முடிவு :

வுண்மை வந்து கூடு மிந்தப்படியே நெலத்தழுந்தல் முதலாக
யெந்த நிலையிலே நின்றா.........பூசா சிவனையுந்
திருக்கோயிலையுந் திருவேடத்தையும் வழிபட வென்றது.

திருவாலவாய்க் கட்டளை முற்றும்

திருச்சிற்றம்பலம்

திருவம்பலம்—திருச்சிற்றம்பலம்.

குறிப்பு :

இது, சைவ சித்நாந்தத்தின் நெறி முறைகளைக் கட்டளையிட்டுச் சொல்வது, இதன் இறுதிப்பகுதி சிவஞான போதத்தின் கடைசிப் பாடலை நினைவூட்டுகின்றது.

ஏடுகள் ஒடிந்தும், மடிந்தும், பூச்சியரித்தும் உள்ளன.

வரிசை எண் : 3531 சுவடி எண் : 1611-c

# போற்றிப் பஃறொடை

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : உமாபதி சிவாச்சாரியார் பொருள்:
சைவ சித்தாந்த சாத்திரம் நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பூமன்னு நான்முகத்தோன் புத்தேளி ராங்கவர்கோன்
மாமன்னு சோதி மணிமார்பன்—நாமன்னு
வேதம்வே தாந்தம் விளக்குஞ்செய் விந்துவுட
னாதநா தாந்த நடுவேதம்

முடிவு :

மானந்த மாக்கடலில்.........தெளித்துத்
தானறிந்து செய்யுந் தகுதியினா—லூனுயிர்தான்
முன்கண்ட காலத்து நீங்காத முன்னோனை
யென்னென்று போற்றிசைப்பேன் யான்.

போற்றிப் பஃறொடை முற்றும்

குறிப்பு :

இது, சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்று. இது எமது சுவடி எண் 553-a/D-714 போன்றது. மேலும் எண் 298-k/D-835 போன்றது.

ஏடுகள் மிக மிகப் பழுது. ஒடிந்து, முறிந்தும், பூச்சியரித்தும் உள்ளன.

வரிசை எண் : 3532 சுவடி எண் : 1611-d

# (வைத்தியத்) திரட்டுச் சூத்திரம்

ஏடுகள்: 22 கி. எண்ணிக்கை : 300 அளவு: 22 × 4 செ. மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: மருத்துவம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

கற்மாந்திர மாகவென்றால் கருவைக் கேளு
கண்ணாடி வட்டத்து ளொளியைப் பாரு
கற்மாந்திர மாகவென்றால் கற்பங் கொள்ளு
கருவான பூரணத்தின் அமுர்த முண்ணு
கற்மாந்திர மாகவென்ற காலைக் கூட
கன்னியர்மே லாசைவிட்டுக் குகையைக் காரு

முடிவு :

............ரிந்துபாரு மெய்யான குருபதத்தைப் போற்றி
............திரட்டு சூத்திரந்தான் முற்றே ! —102

குருபாதமே கெதி.
பா............செய்யவும்
இச் சாத்திர மெழுதி முகிர்த்தேன் சித்திர புத்திரன்.

குறிப்பு :

இதற்குத் தலைப்பு காணப்படவில்லை. திரட்டுச் சாத்திர மென்றுளது. முன்னர் பூச்சியரித்துளது.

ஏடுகள் ஒடிந்தும், முறிந்தும் செல்லரித்தும் உள்ளன.

வரிசை எண் : 3533 சுவடி எண் : 1611-e

# கோரக்கர் வைத்தியம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 22×4 செ.மீ.

பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : கோரக்கர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கோரக்கர் மூலி ... ... ... ...
நேரொக்கக் கொண்டு நேரறிவா ரில்லை
நேரொக்கக் கொண்டு நேரறி வாளர்க்கு
... ... ரொக்கப் பாயுஞ் சிவபதந் தானே —1

முடிவு :

சோதிக்க நின்றதெல்லாந் தரும்
பத்தி செய்யாமல் பளிக் ......... வெத்தன
நாளு மிடைவார் நாசிலே. —29

குறிப்பு :

ஏடுகள் ஒடிந்தும், பொடிந்தும், பூச்சியரித்தும் உள்ளன.

வரிசை எண்: 3534 சுவடி எண்: 1611-f

# வைத்தியம்

ஏடுகள்: 4 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செ.மீ.

பக்கத்திற்கு: 13 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

செய்யவென்றால் வன் கருவுங் கூட்டே —5

கூட்டுவது திலத்ததுக் காதி யென்ன
கோரோசினை புழுகு ... ... ... கருவுங் கூட்டு

முடிவு :

குருவறியச் சத்தியமாக் குறிப்பைச் சொன்னேன்
மனங்கமழுஞ் சீஷன்வந்தால் மையை மட்டும்
மறைத்து நீ மற்றதெல்லாஞ் சொல்லு சொல்லே —26

குறிப்பு :

இதன், ஏடுகள் ஒடிந்தும், மடிந்தும், பூச்சியரித்தும் உள்ளன. முதல் ஏடு இல்லாததால் தலைப்புகாண இயலவில்லை. 2-வது ஏட்டிலிருந்தும் 5-வது ஏடுவரை உள்ளன.

வரிசை எண் : 3535 சுவடி எண் : 1612-a

# திருக்குறள் (மூலம்)

ஏடுகள் : 62 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 19×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்.
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

(பெ) றுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
ம(க்கட்பே) றல்ல பிற.

முடிவு :

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

காமத்துப் பால் முற்றும்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 70/D-132, போன்றது. ஏடுகள் ஒடிந்தும், சிதைந்தும், பூச்சியரித்தும் உள்ளன. முதல் 3 ஏடுகள் இல்லை, 4,5,6 வது ஏடுகள் தலைப்பு முறிந்துள்ளன.

வரிசை எண் : 3536 சுவடி எண் : 1612-b

# திருவள்ளுவ மாலை

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை: 100 அளவு : 19×4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள்: நீதிநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருத்தி
யுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
னெருக்கவோ வென்றதோர் சொல்

முடிவு :

அறமுரைத்தா னும்புலவ னாழிசூழ் முப்பாற்
றிற முரைத்தா னும்புலவன் றேரிற்—குறுமுனிவன்
றானும் புலவன்றரணி பொறுக்குமோ
யானும் புலவனென்றக் கால். —56

குறிப்பு :

இது. எமது சுவடி எண் 69-b/D-131 போன்றது. அதில் 50 செய்யுட்களே உள்ளன. இதில் 56 செய்யுட்கள் உள்ளன.

இதில், திருக்குறளின் பெருமையையும், திருவள்ளுவரின் பெருமையையும், 56 புலவர்கள் சிறப்புப் பாயிரமாகக் கூறியுள்ளனர். இந்நூல் நூலாசிரியர் திருவள்ளுவர் காலத்திலேயே இயற்றப்பட்டதென்று பலரும் கூறுவர்.

வரிசை எண் : 3537 சுவடி எண் : 1612-c

# சைவத் தோத்திரம்

ஏடுகள் : ½ கி. எண்ணிக்கை : 25 அளவு : 19×4 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அண்ணா லருளா லருளுஞ் சிவாகம
மெண்ணிலி கோடி தொகுத்திடு மாயினு
மண்ணா ........ ந்தவ ....... யாவிடி
மெண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே. —1

முடிவு :

(தக்கன்)றன் வேழ்வி தகாத தநல்வீரர்பாற்
றக்கன்றன் வேழ்வியிற் றாமோதரன் றானுஞ்
சக்கரந் தன்னைச் சசிமுடிமேல்விட
வக்கியு மிழந்தது வாயுக் காத்திலே. —5

குறிப்பு :

தலைப்பு இன்மையால் இன்ன நூலென்றறிவதற்கில்லை. இதன் பின்னர் வெற்றேடுகள் உள்ளன.

வரிசை எண் : 3538 சுவடி எண் ; 1613

# மூதுரை வெண்பா

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 42×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : நீதிநூல்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்றி யொருவர்க்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் லெனவேண்டாம் —நின்று
தளரா வளர்தெங்குந் தானுண்ட நீரைத்
தலையாலே தாந்தருத லால். —1

முடிவு :

நஞ்சுடைமை தானறிந்து நாகங் கருந்துரையில்
அஞ்சாமலத் தனிக்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சங்
கரவுடையார் தம்மைக் காற்பர் தாள்வில்லா
நெஞ்சத் தவர்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 718-b/D-168 போன்றது. இதனை, வாக்குண்டாம் எனவும் கூறுவர். "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" எனத் தொடங்கும் செய்யுள் இதில் இல்லை.

வரிசை எண் : 3039 சுவடி எண் : 1614

## திருக்குறள் — மூலம்

ஏடுகள் : 60 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 26×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

(இல்வாழ்வா னென்பா) னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற (துணை).

முடிவு :

ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின். —1330

குமரன் துணை.

காலம் :

961-ஆம் வருடம் புரட்டாசி மாதம் ......... வெள்ளிக்கிழமையு மனுட நட்சேத்திரமுங் கூடின சுபதினத்தி னன்று எழுதி முகிந்தேன்............... ...............விராசா பொன் அகழப்பன்.

திருமலைக் கொழுந்த வினாயகன் துணை ........... குமரன் துணை வேலு மயிலுந் துணை. வீரவாகு மூர்த்தி பாதரா விந்தமே கெதி.

குறிப்பு :

ஏடுகள் ஒடிந்தும், முறிந்தும் பூச்சியரித்தும் உள்ளன. முதல் 4 ஏடுகள் இல்லை. இது, எமது சுவடி எண் 70/D-132 போன்றது.

வரிசை எண் : 3510 சுவடிஎண் . 1615

## நைடதம் - மூலம்

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 32 × 4 செ. மீ.
பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : அதிவீரராமபாண்டியன் பொருள்: பிரசித்த காவியம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குளிர்பளிக்கு ............ ............ அகள்வான்
வெளிமுகட் டுயர்வெண் மிக ............ வொளி கொளும்
வெங் கதிர்......... தென்...... ............
.............. .............. ...... ......

முடிவு :

வளர்க்குஞ் சிறைதூவி வண்டறுகா றும்பி
யளக்குங் (குலவு) ஞிமிறி னார்ப்பு—களிக்குஞ்
சுரும்பு மதுகரஞ் சூழ்விளரி பாட்டு
முருந்தெயிற்று மாதர்க்கு முன் — 30

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 184/D-184 போன்றது. முன் ஏடுகள் இல்லை. ஏடுகள் மடிந்தும், பொடிந்தும், பூச்சியரித்தும் உள்ளன.

வரிசை எண் : 3541 சுவடி எண் : 1616

## அம்பிகாபதிக் கோவை

ஏடுகள் : 73 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 32 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அம்பிகாபதி பொருள் : சிற்றிலக்கியம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ ............ ............... ............ .........தரும்பி
மேவுங் கமலமலர்ந் தல்லிவாய் விம்மு தேன்பொதிந்து
தரவுஞ் சிறைவரி வண்டினங் கொண்டு தழையவிழ்பூங்
காவின் புறம்படர் வல்லிகண் டேகண் களிகொண்டதே. — 1

முடிவு :

பொருள் கொண்டழிய
முறத் தென்று ஞாலம் புகலுகென்றே
பொருள் .............. யிற் பிரிவுரைத்தல் — 477

வேலுங் கயலு மனையகண் ணாள்சதங்கைக் கா.........

குறிப்பு :

ஏடுகள் முறிந்தும், ஒடிந்தும் பூச்சியரித்தும் உள்ளன. முதலேடு முன்பகுதி ஒடிந்துளது. கோவை 400 செய்யுட்களே உடையதாதல் வேண்டும். இக்கோவை 477-க்கு மேலும் உளது.

வரிசை எண் : 3542 சுவடி எண் : 1617-a

## மீனாட்சியம்மன் இரட்டைமணி மாலை

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 80 அளவு : 26×4 செ.மீ.

பக்கத்திறகு : 12 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள் : சிற்றிலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கார்பூத்த கண்டத்தெம் கண்ணுதலார்க் கீரேழு
பார்பூத்த பச்சைப் பசுங்கொம்பே — சீர்கொள்
கடம்பவனத் தாயேநின் கண்ணருள்பெற் றாரே
யிடம்பவனத் தாயே யிரார்.

முடிவு :

பொருவால வாயெட்டுப் போர்க்களிறே ........... கொண்ட
திருவால வாய்மருந் தேதென்னர் கோன்பெற்ற தெள்ளமுதே 12

தென்மலை .......... திருநாடும் வெள்ளிமலை
............ ............ .............

குறிப்பு :

ஏடுகள் ஒடிந்தும், பூச்சியரித்தும் உளது. பின் ஏடுகள் இல்லை. தலைப்பு ஏடு முன் பகுதி முறிந்துளது.

வரிசை எண் : 3543 சுவடி எண் : 1617-b

# சிவகாமியம்மை இரட்டைமணி மாலை

ஏடுகள் : 1½ கி. எண்ணிக்கை : 200 அளவு : 26×4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரத்தம்பிரான் பொருள்: சிற்றிலக்கியம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

……. லி யல்லிக் கமலத் …………
திருவல்லி தில்லைச் சிவகாம

முடிவு :

தெருவற வோடித் திருரீ தருமால்
மறறுன் சீ…த்தி கொண்டே. —20

குமரகுருபரத் தம்பிரான் பாடின-சிதம்பரஞ்
சிவகாமியம்மை யிரட்டைமணி மாலை
முற்றும்.

குறிப்பு :

இதுவும், மிகச் சிதிலமாயுள்ளதால் செய்யுட்கள் தெளிவில்லை. தொடக்க ஏடு இல்லை. 5-வது பாடலிலிருந்து தொடங்குகிறது. 2-வது ஏடும், 3-வது ஏடும் பாதியாக முறிந்துள்ளன.

வரிசை எண் : 3544 சுவடி எண் : 1617-c

# சிதம்பர மும்மணிக் கோவை

ஏடுகள் : 8½ கி. எண்ணிக்கை : 600 அளவு : 26×4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள் : சிற்றிலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவர்
மும்மணிக்கோ வைக்குவந்து முன்நிற்கு—மெம்மணிக்கோ
வஞ்சக்க ரக்கற்ப கத்தா னிறைஞ்சு.........
கஞ்சக் காக்கற்ப கம்.[1]

முடிவு :

2. நடிக்கச் சிவந்தது மன்றெம் பிராட்டி நறுந்தளிர்க்கை
பிடிக்கச் சிவந்தன போலுங்கேட் டேன்புர மூன்றுமன்று
பொடிக்கச் சிவந்த நகைத்தில்லை யான்மலர்ப் பூங்கழலே —30.

சிதம்பர மும்மணிக் கோவை
முற்றியது.

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளதால் எழுத்துக்கள் உருவறிய முடியவில்லை. அச்சாகியுள்ளது இந்நூல்.

1. பூச்சியரித்துள்ளதால் எழுத்துக்கள் சரியாகக் காணப்படவில்லை
2. 3 வரிகளே உள்ளன.

வரிசை எண் : 3545 சுவடிஎண் : 1617-d

# பிரயோக விவேக வுரை

ஏடுகள் : 80 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 26×4 செ.மீ.

பக்கத்திற்கு : 10-14 வரிகள் ஆசிரியர் : சுப்பிரமணியக்கவிராயர் பொருள் : இலக்கணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நீர்கொண்ட செ........ னினி நீழ்கடல்சூழ
பார் கொண்ட ..................... .. அங்கி
யேர் கொண்ட சொற் பிரயோக விவேகம் விளம்புவனே 1.

.........த்தச் சாத்திரத்தை யான் கூறுகின்றேனெற்றவாறு
வடமொழிப் பிரயோக விவேகத்தினுஞ் சொல்லிலக் .......
.. ...ங் கூறாமையிற் சொற் பிரயோக விவேக மென்றாம்
......... மயேசுரன் பிரணினிக் காசாரிய .........
......... பாணினீயமும் இந்திர வியாகரணமும் என்க.
அயிந்திர நிறைந்த தொல்காப்பிய ...............

முடிவு :

... ... தெனாக்கவேன உம்பர்க்குரிய பிரயோக
விபேகத் தையே . . ... ... யலுரைத்தான்
செம்பொற்சீர் மன்னுமதிற் குருகூர்வாழ ... ... ...
சுப்பிரமண்ணிய ... ....... .....

குறிப்பு :

இது, வடமொழி இலக்கணத்தைத் தமிழில் செய்யுளும் உரையுமாகக் கூறுகின்றது. ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளதால் படிந்தறிதல் கடினம்.

இதில், தொகைச்சமரச படலம், தத்திதப் படலம், திங்கப்படலம் முதலியன உள்ளன.

வரிசை எண் : 3546 சுவடி எண் : 1617-e

# மூவர் தேவாரம்

ஏடுகள் : 4½ கி. எண்ணிக்கை : 300 அளவு : 26 × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர்

பொருள் : திருமுறை நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........ ய் கருமங் கைகூட்டும் கூப்புவர்தங் கை
(தோடுடையசெ) வியன் விடை யேறியோர்
தூவெண் மதிசூடிக்
காடுடைய (சுடலைப்பொடி பூசியென்) னுள்ளங்கவர் கள்வன்.

முடிவு :

ஆற்ற லடல்விடை யேறு
ஆலவாயான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவு
பூசுரன் ஞான சம்பந்தன்
றேற்றித் தென்னனுட லுற்ற
தீப்பிணி யாயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும்
வல்லவர் நல்லவர் தாமே —11.

திருச்சிற்றம்பலம்

குறிப்பு :

இதில், ஞானசம்பந்தர் பாடிய முதற்பாட்டு 'தோடுடைய செவிய......'னும், திருநாவுக்கரசர் பாடிய முதற்பாட்டு 'கூற்றாயினவாறு......'வும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முதற்பாட்டு "பித்தா பிறைசூடி ....."யும், ஞானசம்பந்தர், மதுரையில் கூன்பாண்டியன் வெப்பு நோய் தீரப்பாடிய 'மந்திரமாவது நீறு' எனும் திருநீற்றுப் பதிகமும் உள்ளன. ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளன.

××××××

வரிசை எண் : 3547 சுவடி எண் : 1617-f

## திருவாரூர் நான்மணிமாலை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 150 அளவு : 26×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள்: சிற்றிலக்கியம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நாடுங் கமலேசர் நான்மணி மாலைக்குமிகப்
பாடுங் கவிதை ந .............. ............
முப்போ தகத்தின் ............ முன்னிற்குங்
கைப்போ தகத்தின் கழல்.

முடிவு :

வாளிக் கெணிப் புயத் ............
மினலை கதனன் பிடிப்ப வவை வளி பித்தெண
வன்மத்துவை ................ ............

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளதால் செய்யுட்கள் படித்தறிய இயலவில்லை.

வரிசை எண் : 3548 சுவடி எண் : 1618-a

# சிதம்பர முன்மணிக் கோவை

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 600 அளவு : 28×4 செ.மீ.
பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள்: சிற்றிலக்கியம்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

செம்மணிக்கோ வைக்கதிர்சூழ் தில்லைச்சிற் றம்பலவன்
மும்மணிக்கோ வைகவு நேந்து முன்னிற்கு மெம்மணிக்கோ
வஞ்சக்க ரக்கற்பக கத்தா ரிறைஞ்சு
மஞ்சுகஞ்சக் கரக்கற்ப கம்.

முடிவு :

நடிக்கச் சிவந்தது மன்றெம் பிராட்டி நறுந்தளிர்க்கை
பிடிக்கச் சிவந்தது மன்றுகொலா மெம்பிரா னென்றும்பர்
முடிக்கச் சிவந்தன போலுங்கேட் டேன்புர மூன்று மன்று
பொடிக்கச் சிவந்த நகைத்தில்லை யான்மலர்ப் பூங்கழலே! —31

சபாநடேசன் பாதாரவிந்தமே கெதி
சிதம்பர மும்மணிக் கோவை முற்றும்

குறிப்பு :

இது, சுவடி எண் 1617-c போன்றது. இச்சுவடியும் சல்லடைக்கண்ணாக உள்ளது.

❀ ❀

வரிசை எண் : 3549 சுவடி எண் : 1618-b

# நன்னூற் காண்டிகையுரை

ஏடுகள் : 98 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 28×4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : பவணந்தி முனிவர் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மலர்தலை யுலகின் மல்கிரு ளகல
விலகொளி பரப்பி யாவையும் விளக்கும்
பகுதியி னொருதா னாகி முதரி
ளெப்பள வாசை முனிவிகந்து யர்ந்த

முடிவு:

நிலைபொலி யென்னீ ரைந்தெழுத்து மிருபதம்
படுபுணர் மூன்று மியல்பும் விகாரமுஞ்
சாரியையு முடனுணர் வாரை
யெழுத்தாவா ரென்ப ருத்தமரே.

எழுத்ததிகார முற்றிற்று.
சிவமயம்.

குறிப்பு:

இந்நூல் அச்சாகியுளது. ஆசிரியர் வரலாறு முதலானவற்றை சுவடி எண் 632/-D-64-ல் காண்க. ஏடுகள் சல்லடைக் கண்களாக உள்ளன.

—+ + +—

வரிசை எண் : 3550

சுவடி எண் : 1619

# தோத்திரத் திரட்டு

ஏடுகள் : 80 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 39 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : தோத்திரம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதியந்த ............லரியா ஞானம்
அஞ்செழுத்தி னுட்பொருளை அயன்மால் தேடும்
சோதியே செம்பொன் ............
...... ...... ...... .. தோஷத்தாலே
பாதிமதி சடைக் கணிந்து அரவம் பூண்டு
பதியிழந்தன விதிதலைப்படி அடிச்ச
சாதிதவால் கடவென யெச்சி தின்னாச்
சனியனே காகமேறுந் தம்பிரானே ! — 1

முடிவு :

அவனிதனி கடவுளே செங்கழனீர்
மலையணி யமராபதித் தலைவனே. — 2

ஏறுமயிலேறிவிளை யாடுமுக மொன்றே
யிசனு .........

குறிப்பு :

ஏடுகள் பாதிபாதியாகவும், மடிந்தும், பூச்சியரித்தும் உள்ளன. ஏடுகள் தலை தடுமாற்றம் பல தோத்திரங்கள் உள்ளன.

—★—★—

வரிசை எண் : 3551

சுவடி எண் : 1620-a

# திருவாமாத்தூர் கலம்பகம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 700 அளவு : 29 × 4 செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : இரட்டைப் புலவர்கள்
பொருள் : சிற்றிலக்கியம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

... ........யினை தெம...... ....தினை தீயாற்றூர்
... ..... ...ரத்தூர் மாந்தனையாளு .........
......... ...

முடிவு :

வெண்பா

மேகாரஞ் சூழ்ந்துறையு மெய்ஞ்ஞானப் பம்பைநதிப்
பூகா விபுதப் புலவீர்காள் - பாகான
தீஞ்சுவையால் நஞ்சுண்ட சீர்மாதை வாழழகர்
பூஞ்சான யாஞ்சூடும் பூ. —100

திருவாமாத்தூர் கலம்பகம் முற்றும்
குருபாத முன்னிற்க. ஞானப்பிரகாச தேசிகன்
திருவடித் தாமரை சரணம்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 176/D-276 போன்றது. அதற்கும் இதற்கும் வேறுபாடுளது. தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நூலாக இருக்கலாம் என எண்ணப்படுகிறது.

வரிசை எண் : 3552 சுவடி எண் 1620-b

# வேங்கட மாலை

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 500 அளவு: 29×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை (வேங்கடத்தாழ்வார்)
பொருள் : சிற்றிலக்கியம் நிலைமை :மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது
எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பொன்னு மணியும் பொலிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே-மன்னும்
பரமபத நாட்டினான் பையாவின் சூட்டினாற்
சிரமபத நாட்டினான் ... சா... —1

முடிவு :

மாவிற் குயிலு மயிறுமொழி செய்ய
மேவிப் புயல் தவழும் வேங்கடமே-யாவிக்கு
ளாருடந் தகுந்தா ...... ரைக்காய்க் குன்றேந்தின
வருடந்ததார் வாழ்வு. —100

வேங்கடமாலை முற்றும்
மாலயனறியா மணி முடியோன் பதஞ் சரணம்.

குறிப்பு :

பிள்ளைப் பெருமாளையங்கார் இயற்றியது ''திருவேங்கடமாலை''

இது, திருவேங்கடமலையில் எழுந்தருளியுள்ள திருமால் மீது பாடப்பட்ட 100 பாடல்களைக் கொண்ட மாலையாகுமிது ஏடுகள் செல்லரித்துள்ளன.

இதன் பின்னர் ஒரு ஏட்டில் 'மூலமே' எனத்தொடங்கும் பாடலில் 'செந்தமிழை யாதரித்த வெங்கடமென்றாழ்வான் புன் சொல்லு தாங்குமா' என்று காணப்படுவதால், இதன் ஆசிரியர் வேங்கடத்தாழ்வார் எனலாம். இதன் பின்னர் இலக்கணம் எழுதிய 2 ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3553

சுவடி எண் 1621

## சோதிடம்

ஏடுகள் : 52 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 40 × 3 செ.மீ.

பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: சோதிடம் கிரந்தம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குஜன்-2-லிருந்தால் — 10 நவுயமும்
வோராபதியையும் உண்டாகும்

முடிவு :

அதைக்கூட்ட ஜன்ம நக்ஷத்திரத்துக்கு
அந்தந்த நாழிகையாம்
ஜாதகன் பிறந்தநாளில் 3 நட்சத்திரம்
சங்கரித்திருந்து அதின் ............

குறிப்பு :

இதில், பல உதிரி ஏடுகள் உள்ளன. ஒரு தமிழ் இலக்கண ஏடும், ஆந்தை பல்லி சோதிடம் முதலான பலவகை ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3554 சுவடி எண் : 1622

# கைவல்லிய நவனீதம் உபநிடதம், கீதாசாரம் இம்மூன்றின் அட்டவணை

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 14 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொன்னில் மதனாசை —1
புத்தமும் நடுவுமன்றி —2
யின்றளித் தளித்து செய்கை —3
எவருடை யருளாய் —4

முடிவு :

பிறம மென்று யீச னென —73
எகந்தானான மாவேனு —74
பல கடத்திற் சலத்துக்குபா —75
ஆதித்தன் போலான —76.

குறிப்பு :

இதில், கைவல்லிய நவனீதம், உபநிடதம், கீதாசாரத் தாலாட்டு ஆகியவற்றின் பாட்டு முதற்குறிப்பகாரதி உள்ளன. 12-வது ஏடு இல்லை.

வரிசை எண் : 3555 சுவடி எண் : 1623

# பாகவதம்

ஏடுகள் : 29(230 – 258) கி. எண்ணிக்கை 3000 அளவு : 30 × 4 செ.மீ

பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : சூதமுனிவர் பொருள் : புராணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

புவிமாதா ......யினுகு...... தோன்றிய.. குமிறு
செங்கமலமான விருகையால் — 6

ஏந்தியவண் வைத்திடலு மெத மகன்
மைந்தனீந்து கடலாடை புனை நேரிழையை

முடிவு :

இவ்வகைப் பெயர மற்று யியம்பியே
துவ்வருட்கடைக் கண்ணருட வெ...... தியார்
நவ்விமொண் கண்ணிபாக னவின்ற சொற்
செவ்விகேட் டயற் சீறி வயிர்வன் — 5

நிற்றலும் பின்போர் பெர நோதலுங் கெ.

குறிப்பு :

இதில், தொடக்கம் முடிவு இல்லை. நடுப்பகுதியே உள்ளது. இதில், 13 – வது விட்டுணுதெரிசன வத்தியாயம்

14—வது நரசிங்கோற் ............ அத்தியாயம்
15—வது சங்கால யுத்த வத்தியாயம்
16—வது சேனாவத வத்தியாயம்
17—வது துற்சகுன தெரிசன வத்தியாயம்
18—வது இரணிய கசிபு வத்தியாயம்
19 . வது பிரகலாதன் பட்டாபிஷேக வத்தியாயம்
20—வது சிவசுரூப கதன முரைத்த வத்தியாயம்
21—வது யோக சாத்திரத்தின் வண்மையுரைத்த வத்தியாயம்
22—வது யோக விக்கின முரைத்த வத்தியாயம்
23 - வது பத்தி மான்மிய வத்தியாயம்
24- வது பிரமா விட்டுணு சங்வாத வத்தியாயம்
25—வது வ..... ாவ வுரைத்த வத்தியாயம்

ஆகிய அத்தியாயங்கள் உள்ளன. ஏடுகள் முறிந்தும், ஒடிந்தும், சல்லடைக் கண்ணாகவும் உள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 3556 சுவடி எண்: 1624

# தச காரியம்

ஏடுகள் : 29 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 28×4½ செ.மீ.
பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : அம்பலாண தேசிகர் பொருள் : சைவசாத்திரம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பாயிரம்

உழிதர வியைந்த காய வோங்கலிற் காம மாதி
கழிபெருங் கதிரொரிப்பக் கனன்றுளம் வருந்து வேனை
வழியது வொழுகுந் ......... ரையடி நீழல் சேர்க்கும்
பொழிமதக் கலுழி நால்வாய்ப் பொருப்பினை விருப்பஞ்
செய்வாம் —1.

முடிவு :

புரையறு வேடவீசன் பொருந்து மாலையங்க ணெல்லா
முரைபுணர் விறந்த மெல்லா மொருவன் துருவமென்னின்றே
கரையிறந்த கன்ற ஞானக் கடகமுதருந்தி னாரே! —10

சிவபோக முற்றும்.
ஆக விருத்தம் 301. தெசகாரிய முற்தும்
திருச்சிற்றம் பலம்

குறிப்பு :

ஏடுகள் செல்லரித்துள்ளன. இது, பண்டார சாத்திரமாகும். தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சித்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவ ரூபம் சிவதரிசனம், சிவ யோகம், சிவ போகம் என்றும் பத்து காரியங்களின் தன்மையைக் கூறுகின்றது.

××××

வரிசை எண் : 3557 சுவடி எண் : 1625-a

# போஜன விதி முதலான விதி முறைகள்

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 450 அளவு : 13×3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.........தற்கு ஆகாதன இவை .........
செய்தாற் சுதிதியுந் தான்செய்த தவமும்
புன்கு நொச்சில் பெருவாகை.

முடிவு :

புனித முறவாக்குப் பொசிக்க தாம்பூலம்
யினிமையுறத் தின்கை யிழுக்குத் தாம்பூலமும்
உதவாதிருந்தால் ஏலஞ்சுக்குக் கிராம்பு
முதலானது கொள்ளவும்,

போசன விதிமுற்றும்
திருவடியில் தேசிகன் பாதார விந்தமே கெதி

குறிப்பு :

இதில், தான (ஸ்நான) விதி, சிவாகம விதி, போசன விதி ஆகியவை உள்ளன

வரிசை எண் : 3558

சுவடி எண் : 1625-b

## அனுட்டானத் தியானம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 25 அளவு : 13 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சரசுவதி தியானம்

முகநான்கு கர நான்கு கண் எட்டு
வலக்கையில் செபமாலையும் சுருக்கு
முத்திரையு மிடக்கையில்க் கமண்டலமுந்
தெண்டுஞ் சடைமுடி பூணநூல்

முடிவு :

இந்த முறை நிர்வாண தீட்சை........
விசேஷ தீட்சைக் காதர காலத்தாலேயும்

சாயுங்காலத்திலும் சரசுவதியை
இருதயத்திலேயும் லெட்சம் உரு.

குறிப்பு :

இதில், சிவ தீட்சை; விசேட தீட்சை, நிருவாண தீட்சை பெற்றவர்கள் அவசியம் சரசுவதியை தியானிக்க வேண்டும் என்று கூறப்பட்டுளது.

வரிசை எண் : 3559 சுவடி எண் : 1625-c

# சிவத்தியானம்—அட்டவணை

ஏடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 80 அளவு : 13×3 செ.மீ

பக்கத்திற்கு: 10 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: சைவ சாத்திரம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

அஞ்சு முகத்துடனும் பத்துக்கையுடனும்
பவழநிற ......... தத்துவ மென்னு மாசனத்தில்
கிழக்கே முகமாகவும் இருப்பர். இது சுருக்கம்

முடிவு :

அனந்தாய நம தன்மாயகமை ஞானாய
வைராக்கியாய நம...... சோகயாய நம
பறமாசனாய நம என்று ஆசனம் கற்பிக்க

குறிப்பு :

இதில், தீட்சை பெற்றவர்கள் சிவனை தியானிக்கும் முறை கூறப்பட்டுளது:
இதன் பின்னர் பாதி ஏட்டில் 'நமஸ்கார விதி' கூறப்பட்டுளது.

வரிசை எண் : 3560 சுவடி எண் : 1625-d

# பஞ்சகெவ்விய விதி

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 50 அளவு : 13×3 செ.மீ

பக்கத்திற்கு :10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து தமிழ்

தொடக்கம் :

பஞ்ச கவ்விய விதிக்கு ஆகாத பசுக்கள்
விபரம் : பிணிப்பசு, கிழப்பசு, கன்று செத்துப்-
போன பசு, விளங்கன்று பசு சினை முதிர்ந்த பசு
சினை நூதனப் பசு மலட்டுப் பசு

முடிவு :

திக்குபெந்தனம் அவகுண்டனம்
தேனுமுத்திரை சுத்தியே வவு ஷட்டு என்ற
மந்திரத்தினாலு மூலத்தினாலே மகா முத்திரையும்
கொடுக்கப் பஞ்சகவ்விய விதி முற்றும்

குறிப்பு :

இதில், சிவபெருமானுக்குகந்த ஆனைந்து எனப்படும் பஞ்ச கவ்வியம் எனப்படும், பால், தயிர் நெய், சாணப், கோமயம் எனப்படும் ஐந்து பொருட்களின் விதி முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3561 சுவடி எண் : 1625-e

# புண்ணிய காலவிதி

ஏடுகள்: 1 கி. எண்ணிக்கை : 25 அளவு : 13×3 செ.மீ

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சதுர்த்தெசி - 2 அஷ்ட்டமி—2
அமாவாசை—2 தைச்சங்கிரமம்-
சித்திரை விஷீ ஆடிமாதப்பிறப்பு
அற்பிசிமாதப் பிறப்பு

முடிவு :

விதித்த நாளில் கூடாதிருந்தால்க்
குழந்தையைக் கொன்ற தோஷமுண்டு
விலக்கின நாளிற் கூடினாலும்
திவதவில்க் கூடினாலும் மூலத்திலே பதினாயிரம்
உருச்செவிக்க. குருபாதந்துணை.

குறிப்பு :

இதில், புண்ணிய காலங்களில், ஆறு, குளம் முதலானவைகளில் நீராடுதலும், மந்திரங்கள் செபித்தலும் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3562 சுவடி எண்: 1625-

# சமாதி அட்டவணை

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 75 அளவு : 13×3 செ.மீ. பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம் நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருமடத்திலே திருமேனியைக் கிழக்கே
முகமாக எழுந்தருளப் பண்ணி அர்க்கியங்கள்
தாபித்துப் பஞ்ச கெவ்வியம் பஞ்சா மிருதம்
கும்பங்கள் தாபித்து எண்ணெய்க்காப்பு முதல்

முடிவு

இண்டை துடர் மாலிகை மணிமுதலான
வாத்தியங்கள் செங்கல்ப் பொடி மஞ்சள் பொடி
திருநீறு, உப்பு, நவரத்தினம், மணல், வில்வம்
தெர்ப்பைப் புல்லு.

சமாதி அட்டவணை முற்றும்
குருவே துணை.

மடாதிபதிகள் முதலான மேலோர்களைச் சமாதி வைக்கும் முறை இதில் கூறப்பட்டுள்ளது.

இதன்பின் அமாவாசை தற்பணம் எழுதிய 2 பக்கங்கள் உள்ளன.

இதன்பின் வைத்தியம் எழுதிய ஒரு ஏடு உள்ளது.

வரிசை எண் : 3563 சுவடி எண் : 1625

## விநாயகர் பேரில் இரட்டை மணி மாலை

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 13×3 செ.மீ

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சிற்றிலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவாக்கும் ......... கூப்புவர் தம்மை
கயக்கும் பிணியொடு காலன் றலைப்படுமேல் துயினாலே
லயக்குங் கவலைக் கிடைந்தடைந் தேதிணை நாவளைத்துப்
பைக்கு மாவரையான் றந்த் பாய்மத்துத்
திக்கும் பணிறுத்ற கட்டிரு வாள்ன் றிருவடியே

முடிவு :

நல்லூர் பழிப்பி னெழிதற் செம்பவளந் நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதகமே புரமுன்றெரித்த
வில்லா னளித்த விநாயகனே யென்று மெய்மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டா ளிருக்க மலர்த்திருவே, —20

இரட்டை மணிமாலை முற்றும்
குருபாதமே கெதி

குறிப்பு :

இது, பிள்ளையார் ரிரட்டை மணி மாலை என்று பேசப்படும். இதில் பிழைகள் மலிந்துள்ளன. இது, எமது சுவடி எண் 976-a/ D-1162 போன்றது.

வரிசை எண் : 3564 சுவடி எண் : 1625-h

# தெரிசினை மூன்று முப்பது

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 13 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மனம் விரிந்தது மாதவ
மனம் விரிந்து குவிந்தது வாயுவும்
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்துரை மாண்டிட முத்தியே

முடிவு :

போதந் தருமெங்கள் ............ புண்ணிய நந்தியைப்
போதந் தனில் வைத்துப் பண்ணியருள்
நாத னடன நயனங்களி ........... .. கூர்
வேதந் துதிக்கப் போய் விண்ணடைந் தாரே! —30

குறிப்பு :

தலைப்பு அரித்துள்ளதால் விளங்கவில்லை
ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளன.

இதன்பின், தலைப்பு தெரியாத 15 பாடல்கள் கொண்ட ஏடொன்றுளது.

வரிசை எண் : 3565 சுவடி எண் : 1625-i

# சிவவாக்கியர் பாடல்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 13 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : சிவவாக்கியர் பொருள் : சித்தர்பாடல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்:

அரியுமன் நானுமன் றானுமன்ற தப்புரங்
கரிய செய்ய வெண்மையைக் கடந்து நின்ற கள்வ நீ
பருமை யல்லை நேரமை யல்லை பாங்கறுத லற்றனை
துரியமுங் கடந்து நின்ற தூரதூர தூரமே —1

முடிவு:

ஞானநூல்கள் தேடியே நவின்ற
ஞானமான கூத்தனை நாடியுள் ளறிகிலீர்
நானுமன்ற நின்றதோர் தனிமைதா னறிந்தபின்
நானுமன்றி நின்றதோர் நமச்சிவாய நாதனே! —6

குறிப்பு:

பதினெண் சித்தர்களில் ஒருவர் சிவவாக்கியர். இவர் இயற்றிய பாடல்கள் தத்துவம் நிறைந்தவை, அச்சிடப் பட்டுள்ளன.

வரிசை எண்: 3566 சுவடி எண்: 1625-j

# பட்டிணத்துப் பிள்ளை பாடல்

ஏடுகள்: 9 கி. எண்ணிக்கை: 250 அளவு: 13 × 3 செ.மீ.
பக்கத்திற்கு: 11 வரிகள் ஆசிரியர்: பட்டினத்தார் பொருள்: சித்தர் பாடல்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம்:

எல்லாம் படித்து மறிந்தே யிகந்து ...... க்குழல்படி
வல்லா னருத்துவ தென்றுணராது மனஞ்சலித்துச்
சொல்லால் மயங்கி வெகு செட்டிலே மிகத்துக்கித்துப்பி
னெல்லாஞ் சிவன்செய லென்பதென்றே கச்சியேகம் பனே.

முடிவு:

நாப்பிளக்கப் பொய்யுரைத்துப் பிறர் பொருளை வவ்வி
நருட்டுமுலைத் திருட்டு விழி நாரியைக் கொண்டுழல் வீர்
பூப்பிளக்க வெழுந்து வரும் புற்றீசல் போலப்
பொலபொலெனக் கலகலெனப் புதல்வரையும் பெறுவீர்

காப்பதற்கு வகையறியீர் கைவிடவு மாட்டீர்
கவர்பிளந்த மரத்திடையே கைநுழைய விட்டு
வாப்பிளக வீழ்ந்த பரும் பேய்க்குரங்கு மானீ
(அ)கப்பட்டீர் சுழலக் குரங்குமெனத் தலைப்பட்டீரே! —55

குறிப்பு :

இப்பாடல்கள் பதினெண்சித்தர் பெரிய ஞானக்கோவையில் இடம்பெற்றுள்ளன, அச்சாகியுள்ளன.

வரிசை எண் : 3567 சுவடி எண் : 1625-k

# பதினொன்றாவது பரிகாரவியல்

ஏடுகள் : 25½ கி. எண்ணிக்கை : 750 அளவு : 13×3 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம்

...மம்புசிப்பார் சுட்டநிலம்......முழ்கே
குருவேதுணை

நூல்

அறிந்திடு பரிகாரம் வல்வினை யறுத்தற்
கறைந்திடு வாமரு முனிவ் வாகார சுத்தி
நிறைந்த புனலான் மாசு நீக்கலுடற் காடை
திறைநீரின் முக்கயக்கை நீசனார் பேசிடினு

முடிவு :

......பாம்பு முடையவனே யுழுமையின்னுரித்
தோலுமுடைய .........த்தகனே யெனக்க
...............கும் பலினு ...............
............... ம்பயுமே — 105

பதினொன்றாவது ........... முற்றும்
............னடி வாழ்க

குறிப்பு :

இது, மிகவும் செல்லரித்துளதால் எழுத்துக்கள் சரிவர விளங்கவில்லை இது எதன் பகுதி என்பதும் அறிய இயலவில்லை. மனிதர்க்குச் சில விதி முறைகளைக் கூறுகிறது.

வரிசை எண் : 3568 சுவடி எண் : 1625-1

## பனிரெண்டாவது சிவகவசம்

ஏடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 13 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பங்கையத் தவிசின் மேவி
யிருந்துடற் பத்து நீக்கி
...........த்திய ை. யுடன் செய்து பின்னர்
கங்கையைத் தரித்த சென்னிக்
கற்பகத் தருவைச் செம்பொன்
கொங்கை ..................ற்றனை

முடிவு :

கடவுணீற் றுடை வ ...... ணச் சாதி
........... பன்னிரண்டாயிரத்து டறிநடு
.........துநீ நீடுவாழ் கென்று
வடுவற வாழ்த்தியே வழிக்கொண்டானரே —23

சிவகச முற்றும்

குறிப்பு :

இது, எதன் தொடர்ச்சி என்பது விளங்கவில்லை ஏடுகள் மிகவும் செல்லரித்த நிலையில் உள்ளன. தொடர்நிலைச் செய்யுள் போலுயுள்ளது.

××××××

வரிசை எண் : 3569 சுவடி எண்: 1625-m

# சிவார்ச்சனா போதம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு . 13×3 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ தோத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

நூல்
எழுத்தாக்கிப் பதமாக்கி யியலாக்கி
யருளா லெவ்வுயிர்க்கு
மறிவிலக்கு மீசனடி யெண்ணி
வழுத்தாமுன் .........

முடிவு :

பார்சுட்டநி ......... சுத்தீ... ண்டி பூசு.
...... தவி ...... ணணதுக்...சுக்
விட்டெழித்திரந்து ......... மற்......

குறிப்பு :

ஏடுகள், செல்லரித்தநிலை. பின்னேடுகள் இரண்டும் முறிந்து பாதியாக உள்ளன. செய்யுட்கள் படிக்குமாறு இல்லை.

வரிசை எண் : 3570 சுவடி எண் : 1626

# தத்துவக் கட்டளை

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 900 அளவு : 22×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவ சித்தாந்தம் நிலைமை : பழுது முழுமை ; முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக.

பராப(ரமாகி)ய பரமேசுரனார் தராதலம் படைக்கத்
தானினைந்தருளிப் பராபரத்தில் பரந் தோன்றிப்
பரத்துள்ச் சிவந்தோன்றிச் சிவத்துள் சத்தி தோன்றிச்
சத்தியுள் நாதந்தோன்றி நாதத்தில் விந்து தோன்றி
விந்துவில் சதாசிவந் தோன்றி

முடிவு :

புறாடனாவது அற்றுமா அவிகாரியா யிருக்கிலும்
விகாரத்தை யுண்டாக்கி ஒன்றுபோலே எல்லா
இந்திரியங்களிலுங் கொள்ளி வட்டம் போலே அந்த
இந்திரியங்கள்தோறும் ஆற்றுமாவைச் செலுத்தும்
மாயை யாவது யாதொரு விடய போகங்களை
யெல்லாம் தன்னி

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1442/D-2080 போன்றது.

—★★—

வரிசை எண் : 3571 சுவடி எண் : 1627

# பெருங்கதை

ஏடுகள் : 230 கி. எண்ணிக்கை : 12000 அளவு : 40 × 3½ செ.மீ. பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : கொங்குவேளிர் பொருள் : பிரசித்த காவியம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கண்டெனக் கேட்டோர் கண்டினித் தெளிமெனத்
திருவின் செய்யோ ளுருவமெய்த் தோன்ற
தீட்டிரும் பலகையிற் றிருத்தித் தேவர்
............ ............ மருப்பியல் செப்பி

முடிவு :

யாறு கிடந்தன்ன விறுசால் வீதி(தொறும்
ஆனாது திரிதரு மானச வேகன்
கோலக் கோயிலு நால்வ) கை நிலனும்
புடைசூழ் நடுவட் பொன்மலர் ............

(பொன்மணிக்) கொடியும் ......... மஞ்சும்
மதன மஞ்சிகை மென்றோட் கண்டு ................

குறிப்பு :

பெருங்கதை ஒரு தொடர்நிலைச் செய்யுள். இந்நூல் சொற்சுவை, பொருட் சுவை, நனி சிறந்தது தெள்ளிய இனிய நன்னடை வாய்ந்தது. குரு குலத்தில் பிறந்தவனும் கௌசாம்பி நகரத் தரசனுமாகிய சதானிகனுடைய புதல்வன் உதயண னது சரிதத்தை விரித்துக் கூறுவது. பல நல்லறங்களைக் கூறுவது.

'பிருகதத்நா' என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு, அதிலுள்ள வேறு கதைகளை நீக்கி நரவாண தத்தனுடைய தந்தையாகிய உதயணனுடைய சரிதத்தையே முதன்மையாகக் கொண்டு இயற்றப்பட்டது.

சைன சமயக் கோட்பாடுகளையுடைய ஒரு வடநூலே இதற்கு ஆதாரமெனத் தெரிய வருதலின் இதற்குப் பெருங்கதை என்று பெயராயிற்று என்பர். மாக்கதை என்பது இதற்கு மற்றொரு பெயர்.

இச்சுவடியில் தொடக்கமும் முடிவும் இல்லை. 110-ஆம் வரியிலிருந்து தொடங்கு கின்றது.

வரிசை எண் : 3572 சுவடி எண் : 1628-a

## நன்னூல் — மூலம்

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 750 அளவு : 21×4 செ.மீ.
பக்கத்திற்கு: 11 வரிகள் ஆசிரியர் : பவணந்தி முனிவர் பொருள் : இலக்கணம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்னூல் சிறப்புப் பாயிரம்

எண்ணிய எண்ணிய வெய்துப கண்ணுதல்
பவழ மால்வரை பயந்த
கவழ யானையின் கழல்பணி வோரே. —1

தவளத் தாமரை தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே! —2

முடிவு:

பொறுபா னிரண்டெண் ணான்கு வினைபொதுத்தா
னொறுபத் தெட்டிடைதான் மூவேழின் மேலொன்றுரி
யிருபத் தொன்றாகச் சொற்சூத் திரத்தின் விரி
இருநூற் றோரைந்தா வேண்டு,
சொல்லதிகார சூத்திரம் 205
நன்னூல் முற்றும்

குமரன் பாதார விந்தமே கெதி.
முத்துக்குமார சுவாமி தேசிகன்
பாதாரவிந்தமே கெதி.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 631-a/D-72 போன்றது. பிற குறிப்புக்களை, எமது சுவடி எண் 632/D-64-ல் காண்க.

இதன் பின்னர் நன்னூற் றொகை எழுதிய ஏடொன்றுளது.

வரிசை எண் : 3573 சுவடி எண் : 1628-b

# சரசுவதி தோத்திரம் (சகலகலாவல்லி மாலை)

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 50 அளவு : 21×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள் : சைவத் தோத்திரம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவெண் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொல்லோ
சகமேழு மளித்
துண்டா னுறங்க வொளித்தான்
பித்தாக வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே.

முடிவு :

மண்கண்ட வெண்குடைக் கீழாக
    மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச் செய்வாய்
    படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும்
    விளம்பி லுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
    சகலகலாவல்லியே! —10

சரசோதி தோத்திர முற்றும்
குமரன்துணை.

குறிப்பு

இந்நூல் அச்சாகியுளது.

—★—★—

வரிசை எண் : 3571 சுவடிஎண் . 1628-c

## அகப்பொருள் விளக்கம்

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 400 அளவு : 21×4 செ.மீ
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : நாற்கவிராச நம்பி பொருள்: இலக்கணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அகத்திணையியல்

எண்ணிய வெண்ணிய வெய்துவ கண்ணுதல்
பவள மால்வரை பயந்த
கவள யானையின் கழல்பணி வோரே !
தவளத் தாமரை தாதார் கோயி
லவளைப் போற்றுது மருந்தமிழ் குறித்தே !
சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்
× × × × ×
சிரமேற் கொள்ளுதுந் திகழ்தரற் பொருட்டே !
பூமலை நாவன் மாமலைச் சென்னி
யீண்டிய விமையோர் வேண்டலிற் போந்து

முடிவு :

வன்மையிற் கோடலு மயக்கத்திற் புணர்வு
மென்றின்ன னவற்றி னெண்ணிய தொழிலே !
அகப்பொருள் விளக்க முற்றும்
வேணுவன லிங்கந் துணை வடிவே துணை
விநாயகமூர்த்தி துணை, குமரன்துணை, குருவே துணை

குறிப்பு :

இதில், அகத்திணை யியல்—16, கைக்கிளை யியல் 53, வரை வியல் 28, கள வியல் 10, ஒழி பியல் 46, ஆக சூத்திரம் 253 என்று கடைசி ஏட்டில் உள்ளது. இதன் பிற விபரங்களை எமது சுவடி எண் 651/D-107-ல் காண்க,

××××

வரிசை எண் : 3575 சுவடி எண் : 1628-d

# (யாப்பருங்கலக்) காரிகை

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 150 அளவு : 21×4 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : அமிதசாகரர் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முதலாவ துறுப் பியல்
கந்த மடிவில் கடிமறர்ப் பிண்டிக்க ணார்நிழற்கீ
ழெந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே ! — 1

முடிவு :

ஒழிபிய லோத்து முற்றும்
சீருந் தளையிடமாஞ் சீரியற் றளைசேர்ந்தருகே
கூறுந் திகழ்வருக்கந் தான் சுருங்கிற்றுக் கொள்பொருளோ
டேரு மெழுத்துப் பதின்றான் றொழிபிய லென்பதொன்பான்
வாரும் படமுரா திகழு முகிண்முலை வாணுதலே !

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 639-b/D-91 போன்றது. இதன் பிற செய்திகளை எமது சுவடி எண் 83/D-95 காண்க.

★★—★★

23-வது தொகுப்பு

வரிசை எண் : 3576 சுவடி எண் : 1628-e

# (தண்டி) அலங்காரம்

ஏடுகள் : 4½ கி. எண்ணிக்கை : 300 அளவு : 21×4 செ.மீ

பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர்: தமிழ்த் தண்டியாசிரியர் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொதுவியல்

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே ! — 1

செய்யு ளென்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகங் குளகந் தொகைதொடர் நிலையென
எத்திறத் தனவு மீரிரண் டாகும். — 2

முடிவு :

வைவகை முத்திறத் தாங்கவை யுளப்பட
மொழிந்த நெறியி னொழிந்தவுங் கோட
லான்ற காட்சிச் சான்றோர் கடனே ! — 28

நான்காவ தொழிபியன் முற்றும்
அலங்கார நூன் முடிபு சூத்திர நூற்றிருபத்தாறு
முடிந்தது. முற்றும்.
வடிவே துணை. சிவமயம்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 631-h/D-79 போன்றது. இதன் விளக்க செய்திகளை எமது சுவடி எண் 170-a/D-114 ல் காண்க.

இதன் பின் கடைசி ஏட்டின் பின்புறம். 'கண்ணப்பா திரு வெட்டத் தெழுந்த' எனத் தொடங்கும் பாடல்கள் துறைசை சுப்பிரமணிய குருமணியின் மீது பாடப்பட்டதாக உள்ளன.

வரிசை எண் : 3577 சுவடி எண் : 1628-f

# வெண்பாப் பாட்டியல்-மூலம்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 400 அளவு : 21×4 செ மீ.
பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : குணவீரபண்டிதர் பொருள் : இலக்கணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மொழியியல்

மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தா
டுதிகொண்டு நாளுந் தொழுது -நுதிகொண்ட
பல்கதிர்வே லுண்கண்ணாய் பாட்டியலைக் கட்டுரைப்பன்
றொல்லுலகின் மீதே தொகுத்து

முடிவு :

நன்குணர்ந்தோ ராய்ந்த தமிழ்நூலி னன்னெறியை
முன்புணர்ந்து பாட்டியனூன் முற்றுணர்ந்து-பின்புணரு
நல்லார்மு னல்லாய் நலமார் கவியுரைக்க
வல்லார தன்றோ மதி. — 30

பொதுவியன் முடிந்தது.

என்கல(க்)கம் யாவையு நீக்கி யினிதருளி
நன்கலந்த நூலோடு நாட்டுவராற் - றென்களந்தை
மன்பெயரா வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்
றன்பெயரா நாட்டுந் தமிழ் !

என்பது அவையடக்கம்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 631-g/D-78 போன்றது. இதன் பிற செய்திகளை எமது சுவடி எண் 645-a/D-99-ல் காண்க.

❀ ❀

வரிசை எண் : 3578 சுவடி எண் 1628-g

# அரங்கனந்தாதி - மூலம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 500 அளவு : 21 × 4 செ மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : மணவாளதாசர் பொருள் : அந்தாதி

நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி: ஓம்.

திருவரங்கா வுரைமார்பர் திசைமுகன் செவிப்பக்கந்
திருவரங்கா தரித்தின்னிசைப் பாடத் திருக்கண்வளர்
திருவரங்கா வுன்பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங்கா தவித்தே னுனக்கே தொண்டு செய்வதற்கே! —1.

முடிவு :

தீர்த்தாங்கப்ப னோயதுடைத் தென்னை யத்தேவரொடுந்
தீர்த்தாங்கணப் பாவைத்தாள் கவஞ்——லென்பதோர்
தீர்த்தாங்கவ பைய மென்றாக்குத் திரைப் பொன்னிசூழ்
தீர்ந்தாங்கன ........ம்பா..... தை செய்ய திருவடியே! — 100

அரங்கனந்தாதி முகிந்தது, முற்றும்
ஆழ்வார் திருவடிகளே சரணம்

காலம் :

963-ஆம் வருடம் புரட்டாதி மாதம் 23-ந் தேதி நாயித்துக்கிழமையும் பஞ்சமியும் விசாக நட்சேத்திரமும்.........பெற சுபதினத்தில் அரங்கனந்தாதி எழுதி முகிந்தது.

சீரெங்கநாதர் திருவடிகளே சரணம்.

குறிப்பு :

இது, திருவரங்கத்திலே எழுந்தருளி அருள்பாலித்து வரும் அரங்கநாதப் பெருமாள்மீது பாடப்பட்டதாகும். திருவரங்கத்தந்தாதி உரையுடன் உள்ள சுவடி எண் 1096/D-1572-ல் உள்ளது. மேலும் எண் 12 /D. 225-லும் உள்ளது. மூலம் மட்டும் உள்ளது சுவடி எண் 125/D-224.

இதில், காப்புச் செய்யுளும், பலச்செய்யுட்களும் இல்லை.

வரிசை எண் : 3579 சுவடி எண் : 1628-h

# திருவள்ளுவ மாலை

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 300 அளவு : 21×4 செ.மீ.
பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : நீதிநூல்
நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்.

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க — விருத்த
யுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல். —1

முடிவு :

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுன்னுமால்
வண்டமிழ் வள்ளுவர்வாய்ச் சொல். —53.

திருவள்ளுவர் மாலை முற்றும்.
சாலிவாடீசர் காந்திமதியம்மன் பாதாரவிந்தமே கெதி.
முத்துக்குமார சுவாமி தேசிகன் பாதாரவிந்தமே கெதி

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 69-b/-131 போன்றது. இதில் 53 பாடல்கள் இருக்கின்றன.

வரிசை எண் : 3580 சுவடி எண் : 1628-i

# திருக்கோவையாருக்குப் பேராசிரிய ருரையிற் செய்த சூத்திரம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 70 அளவு : 21×4 செ.மீ.
பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : பேராசிரியர் பொருள் : திருமுறை
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

இயற்கைப் பாங்க னிடந்தலை மதியுட
னிருவரு முள்வழி யவனவர் புணர்தன்
முன்னுற வுணர்தல் குறையுற வுணர்த
தன்னிலை நாண நடுங்க நாடன்

முடிவு:

பிறைதொழு கென்றல் பின்னு மவளை
யுறவென வேறு படுத்தி யுரைத்தல்
சுனையாடல் கூற்றொன்றக் கண்டு
புணர்ச்சி யுரைத்தல் பொதுவெனக் கூறி
மதியுடன் படுத்தல்வழி நாண நடுங்கல்
புவிமிசை வைத்தல் புகலுங் காலே.

குறிப்பு:

திருச்சிற்றம்பலக் கோவை என்னும் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் எழுதிய உரையில், கோவைத் தலைப்புகளின் தொடர்ச்சி சூத்திரமாகக் கூறப்பட்டுளது.

இதன் பின்னர், சோதிடம் எழுதிய ஏடொன்றும் திருப்புகழ் எழுதிய ஏடொன்றும் தமிழ்ச்சிறப் பெழுதிய ஏடொன்றும் ஆக மூன்று ஏடுகள் உள்ளன.

வரிசை எண்: 3581 சுவடி எண்: 1628-j

# பஞ்சாக்கர தேசிகர்-மாலை

ஏடுகள்: 1 கி. எண்ணிக்கை: 60 அளவு: 21×4 செ.மீ.

பக்கத்திற்கு: 12 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: மாலை

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து: தமிழ்

தொடக்கம்:

அறிவே யருட் தெய்வமே
நிறையெயர் சேயடியா
ருறவே யென்னா ருயிரே மணியே
யுருகாத நெஞ்சிற்
குறியே துரியங் கடந்த
சிவானந்தப் பேரமுதச்
செறிவே கருணைப் பிழம்பே
பஞ்சாக்கர தேசிகனே! —1

முடிவு :

குருவினை தாமிவை மும்மல மீங்கினை
யீது சிவங்
கருவு மாகுயி ருண்மை யிது வென்று
காட்டவல்ல
குருபரனீ யன்றிவே றில்லை யிக்
குவலயத்திற்
றிருவெண்ணை மெய்கண்டதே வே
பஞ்சாக்கர தேசிகனே. —10

பஞ்சாக்கர தேசிக மாலை முற்றும்
அனவரத்தான நாயகர் காந்தி மதியம்மாள்
பாதார விந்தமே கெதி.

குறிப்பு :

இம்மாலை திருவாடுதுறை ஆதீனத்து நமசிவாயமூர்த்தி சுவாமி திருமுன்பு இரவு வழிபாட்டின் போது ஓதப்பெறுவதாகும். ஒவ்வொரு பாடலையும் ஓதுவாமூர்த்தி விண்ணப்பித்து முடிந்ததும்; குருமகா சந்நிதானம் அவர்கள், சுவாமி திருமுன்பு விழுந்து வணங்குவார்கள், பஞ்சாக்கர தேசிகர் என்பது நமசிவாயமூர்த்தி சுவாமிகளாவர்.

வரிசை எண் : 3582 சுவடி எண் : 1628-k

# ஆழிவண்ணப் பெருமாளந்தாதி

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 30 அளவு : 21×4 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் அந்தாதி
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கரிப்பு

ஓராழி வெய்யவன் சூழுல கெழுவந் தெடுத்தாங்கா
காராழி வண்ணப் பெருமாள் அந்தாதிக்குக் காப்புரைக்கிற
சீராழி யங்கையிற் பொற்பிரம பேந்திய (செம்பியர்) கோன்
கூராழி சங்கந் திருக்கைதை நந்நதிகங் கோதண்டமே! —1

முடிவு :

மாறன் பராங்கதி தப்தடியேனை மருட்பிறவி
மாறன் பரான் குழாத்துள் வைப்பான் றொல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யாமலென் கண்மலர்க்கண் வைப்பான்
மாறன் பராங்குசன் வாழ்கவென் னெஞ்சினு வழக்கினுமே! —1

திருவேங்கடநாத மகாகுரு பாதார விந்தமே கெதி
திருஞான முத்திரை துணை.

குறிப்பு :

இதில் காப்புச் செய்யுட்கள் 5 மட்டுமே உள்ளன. நூல் இல்லை.

இதன்பின், அட்டவணை, சங்கல்பம், மலரட்டவணை, சோதிடம் முதலியன எழுதிய உதிரி ஏடுகள் 21 உள்ளன.

வரிசை எண் : 3583 சுவடி எண் : 1628-1

# இலக்கண தீபம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 80 அளவு : 21×4 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

எழுத்தென்னை வொலியொரு தொகைத் .............
வகைத்தா யிருந் திருவகைப் பெயரிலீரி...........
லெண்ணிரு வகைத்தா யொழுக்கும் பிறப் ...........

முடிவு :

செய்யுள் விதி ..........
ந்தசி.......... ருமடிய...........பண்ணியாய
.........— செ............ டுறை பாட்டு வண்ணமிவை
தொன்குயர் ............றுமி . ........ ருந்தியைப்புல
......—...... —9

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 649-a/D-105 போன்றது, கடைசிச் செய்யுள் மாறுபட்டுளது.

★ ★ ★ ★

வரிசை எண் : 3584 சுவடி எண் : 1629-a

# திருவள்ளுவ மாலை — உரையுடன்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 700 அளவு : 33×5 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : நீதிநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்
சங்கத்தார் பாடிய திருவள்ளுவ மாலை
அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க
வுருத்திர சன்ம ரெனவுரைத்து வானி
லொருக்கவோ வென்றதோர் சொல்.

இதன் பொருள்:- புலமைக்குத் தகு முருவுடைய நல்ல
சங்கப் பலகையி ........... ..........

முடிவு :

தெள்ளமுதத்தைத் தேவர் மாத்திரமே அதன்சுவை
யறிவார் வண்மை பொருந்திய தமிழினாகிய முப்பால்
மு ........யுலகத்தா ரெல்லா மகிழ்ந்துண்ப ரென்றவாறு —53

திருவள்ளுவ மாலையுரை முற்றிற்று

குறிப்பு :

இச்சுவடி சல்லடைக் கண்ணாயுளது. படித்தறிதல் கடினமாயுளது. உரை செய்தவர் யாரென விளங்கவில்லை. தலைப்பு ஏட்டில் 'திருவள்ளுவருரை' என்றுளது.

இதில், 53 செய்யுட்களும், அதனை இயற்றியவர் யார் என்பதும் உரையுடனுள்ளன.

வரிசை எண் : 3585 சுவடி எண் : 1629-b

# திருவள்ளுவருரைப் பாயிரம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 40 அளவு : 35×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : பரிமேலழகர் பொருள் : நீதிநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவமயம்

திருந்திய தமிழிற் றெய்வப் புலமை
யருந்திறல் வள்ளுவ னாய்ந்துதன் வாக்கா
லறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
றிறந்தெரிந் துரைத்த செவ்விழுப் பாலுக்
கோருரை யன்றி யொன்பது சென்று

முடிவு :

செய்து — மோ மேலே
பரித்த வுரையெல்லாம் பரிமேலழக ருரைத்த
வுரையாமோ தெளி.

காலம் :

1003-ம் வருஷம் சருவதாரி வருஷம் ஆடி மாதம் 15-ந் தேதி சோமவாரமும் ............ நட்சேத்திரமும் கூடின சுபதினத்தில் ............... ......... நாழிகை 15-ல் துலா லெக்கினத்தில் திருவள்ளுவருரை எழுத ஆரம்பித்தது. ஆறுமுகத் தெய்வமுன்னிற்க வேண்டும். அம்பலவாண குரு தேசிகன்......................... தங்களே சரணம் சிவமயம். ஆறுமுகம் பிள்ளை குமாரன் ........................ முத்துப் பிள்ளை கையெழுத்து. நீடூழி காலம் வாழ்க. சாலிவாடி வேணுவன் ............... கள் சரணமே கெதி.

குறிப்பு :

ஆசிரியப் பாவினமைந்த இது, பாயிரம் பகர்கிறது.

வரிசை எண் : 3586 சுவடி எண் : 1029-c

# திருவள்ளுவருரை [திருக்குறள் பரிமேலழகருரை] அறத்துப்பால்

ஏடுகள் : 200 கி. எண்ணிக்கை : 12000 அளவு : 33×5 செ.மீ.
பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் & பரிமேலழகர்
பொருள் : நீதிநூல் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இந்திரன் முதலிய விறைவர் பதங்களு
மந்தமி லின்பத் தழிவில் வீடும்
நெறியறிந் தெய்தற் குறிய மாந்தர்க்
× + × ×
அம்மூவர்க்கும் பொதுப்படக் கூறினா ரெனவுணர்க.
அகர முதல (வெழுத்தெல்லா மாதி
பகவன் முத)ற்றே யுலகு.

எ. து. : அகரமாகிய முதலையுடையன வெழுத்துக்களெல்லா மதுபோல வாதி பகவனாகிய முதலையுடைய துலக மென்றவாறு.

முடிவு :

''ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்''

எ.து : இதுவுமது ; காம நுகர்ச்சிக் கின்பமா லத்தனை நுகர்தற்கரிய
× + × + ×
னொருகாலத்துக் குற(ற)தீ துளதாவதல்லது லகியல்பாய்
வாராமையானு மீண்டொழிக்கப்பட்ட தென்பதாம் — 10

250 காமத்துப்பால் முற்றும் × × ×
பரிமேலழகியார் விருத்தி முடிந்தது
பாயிரம் நான்கில்லற + × + + வள்ளுவனார் நன்கு.
நன்றாக குருவே துணை

காலம் :

கரவருஷம் 1006-ம் வருஷம் வைகாசி மாதம் 18-ந் தேதி சோமவாரமும் அமரபட்சத்துச் சதுர்த்தியு முத்திராட நட்சேத்திரமுங் கூடின சுபயோக சுப கரணமுங் கூடின புண்ணிய தினத்திலே திருவள்ளுவர் உரை எழுதி முகிந்தது. முற்றும்

குமரகுருபர சிவசண்முக சிவசுப்பிரமணியக் கடவுளே துணை, தெட்சணாமூர்த்தி பாதாரவிந்தமே கெதி,

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளன. படித்தறிதல் அரிது, இது. எமது சுவடி எண் 63-a/D 127 போன்றது. இது அச்சாகியிருப்பினும் பாடவேறுபாடுகள் காணப் படுகின்றன. இதனைக் கையாளுவதே கடினம்.

வரிசை எண் : 3587 சுவடி எண் 1630-a

# அருணகிரிப்புராணம் - உரையுடன்

ஏடுகள் : 112 கி. எண்ணிக்கை : 3500 அளவு : 12 × 4½ செ.மீ.

பக்கத்திற்கு: 14 வரிகள் ஆசிரியர்: சைவ எல்லப்ப நாவலர் பொருள்: தல புராணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவமயம்

.........ய பன்ற யருள் செ............
மமத வாரினவாய் ... ... ... ... ...

அருணை மான்மியம்

.......... .......... .......... ..........
மணிகொண்ட பாதலத்தும் பூதலத்துமீ தலத்தும்
பரந்துதேட
வணிகொண்ட பிரமாண்ட ...............

முடிவு :

............ முனிவருடனே கனகமு ........
......... தொழுதான்

புளகாதிடச் சுருக்கம் முற்றும்.
அமுசெழுத்து ......... வைசம் வாழி. வாழியே.
அருணகிரிப்புராண முற்றும்.
ஆகா விருத்தம் 579.

காலம் :

... ... 983-ம் வருஷம் பிரபவ வருஷம் பைங்குனி மாதம் 30-ந் தேதி ...... வாரமும் உத்திர நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில் ஞானமுத்து எழுதி முகிந்தது முற்றும். ... ... யீசர் காந்திமதி அம்மை சகாயம்

(இதன் பின்னர் 12 சருக்கங்களின் பெயர் அட்டவணை உளது).

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 981/D-1190, எண் 1415/D-2031 போன்றது. இந் நூல் சல்லடைக்கண்ணாக உள்ளதால் சரியான விபரங்கள் கூற இயலவில்லை. இது அருணாசல புராணம் எனவும் வழங்கப்படுகிறது:

வரிசை எண் : 3588 எண் சுவடி 1630-b

# சுகிவர்ண போதகம்

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 750 அளவு : 12 × 4½ செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : தத்துவராயர் பொருள்: வேதாந்தம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ கமுதந் ............ ............
தாம் பொருள் ............ .........
ச்சினுடப்பொருள் ............

நூல்

நல்லசொற் ............ ............ நடத்தவு
மெல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லு மானை முகத்தனை மேவி வாழ
வல்லபைக் குரியானை வாழ்த்து வாம்

முடிவு :

தாவி சரையாய்நி......ரை கொண்ட
படியினாலே........... தப்பிர ...........
ரயுவு ராசனல்ல ............ —50

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 767-d/D-1241, எண் 1497/D-2088 போன்றது. ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளதால் வாசித்தறிய இயலவில்லை.

வரிசை எண் : 3589 சுவடி எண் : 1631

# பன்னிருபாட்டியல் - மூலம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 700 அளவு : 30×4 செ.மீ.

பக்கத்திற்கு : 14 வரிகள் ஆசிரியர் : இந்திரகளியார் முதலியோர்

பொருள் : இலக்கணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தையில் வைத்து முன்னோர் பொருணெறி
கூட்டியுரைப்பல் பாட்டியன் மரபே —1

முடிவு :

பின்னரு ............ தெள்ளாவியல
திருபா விருபது ... ...... —163
ஒருபா ஒருபது மிருபா விருபதுங்

கருதிய வெள்ளையும் கவலுங்காட்டினர் —164
கோவை யென்பது கூ.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 650-b/D-106 போன்றது. ஓரங்கள் ஒடிந்துள்ளன. பூச்சியரித்துள்ளதால் படிக்க சற்றே கடினமாயுளது.

இது, பொருத்த இலக்கணம், பிரபந்த இலக்கணங்களை சூத்திர யாப்பாற் கூறுவது. சொல்லியல், செய்யுளியல் என இரண்டு இயல்களை யுடையது. அச்சாகி யுளது. ஒரு துண்டு ஏட்டில் நெல்லையப்பக் கவிராயர் பன்னிரு பாட்டியல் என்றுளது

★★★★

வரிசை எண் : 3590 சுவடி எண் : 1632

# சித்திர புத்திரன் கதை

ஏடுகள் : 152 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 44×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதை

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

சீர்கொண்ட பூதலத்தில் சித்திர புத்திரன் கதையைப்
பார்கொண்ட செந்தமிழால் பாடவே பேர்கொண்ட
மார்பூத்த கோலமுலை மாதுமையா ளீன்றவென்
கார்பூத்த குஞ்சரமே காப்பு

நூல்

திருவொலிந்து வாழுமிக சித்திர புத்திரர் கதையை
விருப்பமுடன் சொல்ல விநாயகனே வேளை முகத்தோனே

**முடிவு :**

... ... ... ... சிறப்பாக வாழியதே
... ... ... ... ... ... ... வாழியதே
... ... ... பாதம் பெல திடவெ
... ... ... ... ... ... பெற்றிடவே
... ... ... டிய லெல்லாருந் தான் கேட்க
... ... ... ... ... ... ......

**காலம் :**

(தொடக்க ஏடுகளில்) 1025-ஆம் வருஷம் அற்பசி மாதம் 2-ந் தேதி எழுதி படித்து வருகிற சித்திர புத்திர நயினார் கதை நீடூழி காலம் வாழ்க.

1025-ஆம் வருடம் பிரட்டாசி மாதம் 2-ந் தேதி எழுதிப் படித்து வருகிற சித்திர புத்திர நயினார் கதை நீடூழி காலம் வாழ்க.

சொக்கலிங்கம் துணை.

**குறிப்பு :**

இது, மிக மிகப் பழுதுபட்ட சுவடி. சல்லடைக் கண்ணாக உள்ளது. இது, எமது சுவடி எண் 400/D-610, 1408/D-2039 முதலானவைகளின் வேறாயது போல் தோன்றுகிறது. 2 பத்தியாக எழுதப்பட்டுள்ளது.

எமனுக்குக் கணக்கராக இருந்து உயிர்களின் முடிவு நிலையை அறிவிப்பவர் சித்திர புத்திரர் எனப்படுவார். சித்திரபுத்திரன் அம்மானை எழுதியவர், அதிராம் பட்டினம் சிதம்பரநாதன் என்பவராவர்.

வரிசை எண் : 3591 சுவடி எண் : 1633

# சேந்தன் திவாகரம்

ஏடுகள் : 115 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 40×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : திவாகரமுனிவர் பொருள் : நிகண்டு
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவன் பெயர்

சங்க(ர) னிறையோன் காம தகனன்
கங்கா தரனே கறைமிடற் றண்ணல்
கூற்றை யுதைத்தோன் குன்ற வில்லி
ஏற்று வாகனன் றிரியம்பகன் சோதி

முடிவு :

பாரதம் பொருத பேரிசைச் சிலையும்
பாடிய புராண பாரக ஞனர்வொடு
தாருதற் கடிந்த வீரபத் தனிவேல்
பாடிய புலவன் பதியம்பச் சேந்தன்
பயில வுற்ற திவாக ரத்துப்
பத்தாவது ஒலிபற்றிய பெயர்த் தொகுதி
முற்றும்

சிவகுருநாதன் பாதார விந்தமே கெதி.

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லை. காணப்பட்டது தமிழ் நிகண்டுகளுள் ஒன்று. இது, காலத்தால் முற்பட்டது. பன்னிரண்டு தொகுதிகளையுடையது. இதில், 10 தொகுதிகளே உள்ளன. சேந்தன் என்பாரது வேண்டுகோட்கிணங்க திவாகர முனிவரால் செய்யப்பட்டது. அதனால் சேந்தன் திவாகரம் எனப் பெயர் பெற்றது. சேந்தன் என்பவர் சோழ நாட்டுச் சிற்றரசர். இது அச்சிடப்பட்டுளது. இதில், ஏடுகள் மிகவும் சல்லடைக் கண்ணாகவும், தலை தடுமாற்றமாகவும் உள்ளன. பிழைகள் அதிகம்.

வரிசை எண் : 3592 சுவடி எண் : 1634

# திருக்குறள் - மூலம்

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 400 அளவு : 35 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........கொடுத்த ....... பதி துணை.

ஆயிரத்து முன்னூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்தற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

நூல்

முதலாவது கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு. —1.

முடிவு :

நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வ........ .......... .........

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 71/D-133 போன்றதெனினும் இதில், 27 அதிகாரங்கள். முழுமையும், 28-வது அதிகாரம் பாதியும் உள்ளன. பின் ஏடுகள் முறிந்துள்ளன. சல்லடைக்கண்ணாகவும் உள்ளன.

வரிசை எண் : 3593 சுவடி எண் : 1635-a

# இராமதாசர் சரித்திரம்

ஏடுகள் : 15 கி எண்ணிக்கை : 600 அளவு ; 42 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சரித்திரம்

நிலைமை: மிகப் பழுது முழுமை முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அதர்வண சீர்ஷம் (கிரந்த எழுத்துக்களில்)

அஸ்த்ரேண சஸ்த்ரேண பீஜேண மனுனா பூர்வத:
ஸ்தம்பத் வயம் உபய பார்ஸ்வயோ ரேக மேகம்.

ஸ்ரீ ராம ஜெயம்

சுவர்மிகு வர்ந்தனம் சேதிவாசீனம் ஜெகத் சர்வம்

ராமதாசு கதை

ராமன்தூதனாழுகை. ஸ்ரீகறமுக பத்றாசால மந்துண
செலகு ஸ்ரீறாமு கிருஷ்ணாகு பிறாகடமுக ஸ்ரீராமதாசுகனு

முடிவு :

வேதனாத பளயிவவது அறிய னாமா
மாதவணை நீரு சுவவது அரிய னாமா
உபவிள்ளத பதவி கோடுவா அரிய னாமா
நெபவிள்ளத பிறந்தர விட்டால னாமா ...கெங்க

காலம் :

சர்வசித்தி வருஷம் தை மாதம் 6-ந்தேதி
நன்னிலம் தாலுக்கா டோர்நம்பர்.. அம்மையப்பன்
யேலங்குடி குண்டா ரெங்கன் செட்டியார் குமாரன்
ராமகிஷ்ண செட்டியார் ராமதாசு சரித்திரம் அசல்
பொஸ்தகம். வெங்கிடாசலபதி துணை. (முகப்பு ஏட்டில் உளது)

குறிப்பு :

இதில், தெலுங்கு மொழியில் தமிழ் எழுந்துக்களால் எழுதப்பட்டுளது. அவரது கீர்த்தனைகள் பெரிதும் இடம் பெற்றுள்ளன.

—★★—

வரிசை எண் . 3594 சுவடி எண்: 1635-b

# இராமதாசர் கீர்த்தனைகள்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 500 அளவு : 42×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : இராமதாசர் பொருள் : தோத்திரங்கள்
நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுபமஸ்து குருப்யோ நம:

றாகம் தன்னியாசி. தாளம்: ஆதி
ஸ்ரீ கறமகு தஞ்சாபிறி வெலசினா
ஸ்ரீ நறசிம்மகு கிருபகு
கோலக மந்த பெந்த ஒரத்து சுடை
அரிலோக முனகு மூனு சன்னு —1.

முடிவு :

தினமும் சொல்வார் கேள்வாருக்கு சீக்கிரமாகவே
யெழுந்திருந்து ஸ்ரீ மகாலக்ஷ்மி நன் கிருபையினால்
... ... னமதினம் ஸ்ரீ கிஷ்ண பாதத்தை நிச்சயமாகவே
நம்பினேன் வறபாகவதரே சொன்ன வையகம்
புகழாகவே. —7. யோ.

காலம் :

ஏவிளம்பி வருஷம் அற்ப்பசி மாதம் 27-ந் தேதி
(முன் ஏட்டில் உளது)

குறிப்பு :

இதில், தெலுங்கு கீர்த்தனைகளும், திருமால்மீது தமிழ் கீர்த்தனைகளும் உள்ளன. தெலுங்கு மொழி, தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 3595 சுவடி எண் : 1636

# கல்லாடம்

ஏடுகள் : 64 கி. எண்ணிக்கை 2000 அளவு : 51×4 செ.மீ.
பக்கத்திற்கு : 8-9 வரிகள் ஆசிரியர் : கல்லாடனார் பொருள் : சமயநூல்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிவமயம்

செவ்வி திகழ்தருணச் செந்தா மரைவதனம்
கொவ்வையெயிற் செவ்வாய் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரு வேளை மதவெள்ளம்
பொழியானை யைமனமே போற்று.

முடிவு :

பதமிரண்டன மத்த வுள்ளக்
கதியினராய் வேரானனனே.
நெடுவரைப் பொங்காப் புனமெறிக ராகிற்
கரும்புகை வானகப்புப் பொதிந்து

குறிப்பு :

ஏடுகள், சல்லடைக்கண்ணாகவும், ஒடிந்தும், முறிந்தும் தலை தடுமாறியும், முன் பின்னாகவும் உள்ளன. சரிசெய்யவும் இயலாத நிலையில் உள்ளன.

இது, ஒரு சிறந்த நூல். 'கல்லாடம் கற்றவரிடம் சொல்லாடாதே' என்பது பழமொழி.

வரிசை எண் : 3596 சுவடி எண் : 1637-a

# சூடாமணி நிகண்டு

ஏடுகள் : 112 கி. எண்ணிக்கை : 12 அளவு : 26×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : வீரைமண்டல புருடன் பொருள் : நிகண்டு நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

(தொடக்க ஏடுகள் பெயர்த் தெழுதுமாறு இல்லை)

முடிவு :

உரைத்தவிப் பல்பேர்க் கூட்டத்
தொருபெயர்த் தொகுதி தன்னில்
விரித்தமு வைம்பதின் மேலிதின்
மூன்றிவையுந்தான் செய்தான்
திருக்கி ........ க்குரை பத்திரன்றாள்
சென்னியிற் சூட்டிக் கொண்டோன்
மருக்கிளர் பொழில் சூழ் வீரை
மன்னன் மண்டலவன் றானே ! — 154

நிகண்டு பன்னிரண்டாவது முற்றும், ஆகவிருத்தம் ........ ஸ்ரீ சாலிவாபீசுவரர் காந்திமதி துணை.

காலம் :

வியாக்கிர—புரிவாசன், சதாசிவகுரு சீஷன் கயிலாச நாதன் சுத்தகவி சுஹஸ்த லிகறிதம்.

974-ம் வருஷம் புரட்டாசி மாதம் ... ... குருவாரமும், சதுர்த்தியும், ரேவதி நட்சேத்திரமும் சுபயோக சுப கரணமும் கூடின சுபதினத்தில் எழுதி முடிந்தது.

முற்றும்.

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக் கண்களாக உள்ளன. ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. முன் பகுதி மக்கிய நிலையில் உள்ளது.

இது எமது, சுவடி எண் 439/D 24 போன்றது.

வரிசை எண் : 3597 சுவடி எண் : 1637-b

# தாணுப்பிள்ளை யவர்கள் பேரில் பஞ்சரெத்தின மாலை

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 26 × 4 செ.மீ.
பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : மாலை
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

[தேன்] வாழை ... ... ... தூக்குவார்
காவணத்தின் மேற்கட்டி கமுகம் பூவிற்
குலைகட்டி நோக்குவார் (பதிற்றுமா)
மலர்மாலை சூடுவர்க் கெதிர் வைமார்கள்
புனிதமாகநின் றொருவர்க் கொருவர்
புகழ்ந்து பாடுவார் பெருத்த மணிகளெடுத்தும்
பூட்டுவார் மகர தோரணம்

முடிவு :

... ... நிர்த்தி ,டன் வாங்க ... .. யைப் புகழ்ந்து!
... ... ங்குனிச் சிந்தை மகிழ்ந்திட வாழ்கின்றாரே !

தாணுப்பிள்ளை யவர்கள் பேரில் பஞ்ச ரெத்தின மாலை

முற்றும்.

குமரன் திருவடிகளே கெதி.

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும், ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. பிற செய்திகள் அறியமுடிய வில்லை.

வரிசை எண் : 3598 சுவடி எண் : 1637-c

# சிங்கை வெண்பா

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 350 அளவு : 26×4 செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: வெண்பா

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கங்கைவெண் பாமாலை...........
சிங்கைவெண் பாமாலை சிறப்பாக
கற்பகத்தின் கார்மலர்க் கட்டின்னார்..............
கற்பகத்தின் தான்மலர்..... .......
........... க்குளார்த்தய்............

முடிவு:

........... களவு முதலான பாதக்ரே............
...........ப்படை .... ன்றால்........ யென்னு ளங் குடிகொ ...
நிதிசரவணோபற்பவ குமரே தணிகையங்கிரி............
........... திருச்சிற்றம்பலம்.

குறிப்பு :

இதன் ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும் ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. பிற செய்திகளை இதிலிருந்து அறிய இயலவில்லை.

வரிசை எண் : 3599 சுவடி எண் : 1638

# நீதிக்கதைகள்

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 800 அளவு : 29 × 4½ செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதைகள்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

……… திருவைச் சேர்வாம்
செந்தமிழ்ப் பாடலா மிந்திரனை போல
வாழ்ந்து கொண்டு ருக்கால் மந்திரஞ்சேர்
வெற்பகத்தையூடறுத்து ……… தொழுதக்கால்
அல்லல் போம்… ……… தொழுதக்கால்
………சலைக்கியான் ஷேனாத சம்பூ ரணம்
……… பேரல் மத்தும்ன் … … மன்னுள் ………
——— கண்ட நீதிகதை சொல்லும் போதிலே —13

முடிவு :

காற்படிகன்றா ———தக் காட்டினுள் செய்த———
சேர்ப்ப …… வாரம் யாண்ண………
மாடை நாத புவிவ…………

காலம் :

1838-ஆம் வருஷம் அட்டப்பர் மாதம் 28-ந் தேதி
1014-ந் ஆம் வருஷம் அப்பிசி மாதம் 8 தேதி சுப்பு. —18

குறிப்பு :

இக்கதைகள் பார்வதிக்குப் பரமேசுவரன் சொல்லியதுபோலத் தெரிகிறது. முதல் ஏடு இல்லாததால் தலைப்பும், பிறவிபரமும் தெரியவில்லை. ஏடுகள் கல்லடைக் கண்களாகவும், முறிந்தும், ஒடிந்தும், உள்ளன.

இதில், முதலாவது பதுமாபதிகதை, மந்திரவாதி கதை, கிளியின் கதை, வீரபரன் கதை கூர்மத்தின் கதை, சூரன் கதை, தலைவாகு கதை ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3600 சுவடி எண் : 1639

# மீனாட்சி மந்திரம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 250 அளவு : 21×2½ செ.மீ. பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மீனாட்சி மந்திரம்
அகண்ட பறிசறணை ஞான சக்தி
தோத்திரம் யிது சரிதை கிரிகை யோகம்
ஞானம். இந்த நாலு பாதத்துக்கும் அடியார்கள்
எவ்விதமாய் தியானம் பண்ணிநார்களோ
அந்தவிதம் மோக்ஷசமாகும்.

முடிவு:

உன்னுடைய பேரேத யேது மகானென்
லோகந்தோர் ரிஷி சித்தர் மவுனமென்ம்பார்
என்னுடைய பேர் .........

குறிப்பு :

இது, மதுரை மீனாட்சி அம்மையினைத் துதித்துச் செய்யும் செபம், மந்திரச் சொற்கள் முதலானவற்றைக் கொண்டது.

வரிசை எண் : 3601 சுவடி எண் : 1640

# ஆத்ம பாவனை

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 350 அளவு : 24×3 செ.மீ. பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தத்துவம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : கிரந்தம்.

தொடக்கம் :

........நிச்சய நயத்தினால் அனந்த ஞான தரிசன
சுகவீர்ய குணங்களுடைய ஆத்மாவிற்கு ஐந்து
விதமான வர்ணங்களும் இரண்டுவித ....... ந்தங்களும்
ஆறுவகையான ரசங்களும் எட்டுவித மான
ஸ்வரங்களும் வாஸ்த்தவத்தினால் கிடையாது.

முடிவு :

விறைவில் நடத்திக்கொண்டு போய்.... மாறி
கோவிலின் முன்னிடமாகிய பலிபீட நிடகுத்தி நிடத்தே
திருத்தி அரசனை வணங்கி அப்புறம் விலங்கி நின்றநன்
கிங்கர்களும் அங்சணமே வணங்கி விலங்கிநர்

முற்றிற்று
சுபம் ஸ்ரீரஸ்து

குறிப்பு :

இது, கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுளது. ஆன்மாவைப் பற்றிய விபரங்கள் கூறப்பட்டுள்ளன.

—★★—

வரிசை எண் : 3602 சுவடி எண் : 1641

## திருக்குறள் — உரையுடன்

ஏடுகள் : 272 கி. எண்ணிக்கை : 12000 அளவு : 34 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

சற்குரு பாதந்துணை சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன்
திருவடி வாழ்க.

தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் .........
கடுகைத் துளைத் தேழ்கடலைப் புகட்டி ........
சிவசண்முக மெஞ்ஞான தேசிகன் திருவடி .........
தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரருளிச் செய்த

குறள். கடவுள் வணக்கம்.
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முற்றே யுலகு. ... என்றது எழுத்துகளுக்கெல்லாம் அகாரயெழுத்து முதல்யெழுத்து குருப்போலே உலகத்துக்கெல்லாம் சருவக்கியனான சு(வாமி) முத லென்றயாறு.

முடிவு :

தம்மில் லிருந்து தமதுபாத் துண்டற்று
லம்மா வரிவை முயக்கு எ.து யிவனை நீ
எழுதிக் கொண்டு .......

குறிப்பு :

இதில், புணர்ச்சி மகிழ்தல் அதிகாரத்தில் 6 குறட்பாக்கள் வரையிலும் உரையுடன் உள்ளன. 1106 குறட்பாக்கள் உள்ளன. ஏடுகள் சல்லடைக் கண்ணாகவும். ஒடிந்தும், மடிந்தும் உள்ளன. உரை இன்னாரொன்று அறியக்கூடவில்லை.

திருக்குறள் உரைக்கொத்து காண்க.

வரிசை எண் : 3603 சுவடி எண் : 1642

# சேந்தன் திவாகரம்

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 800 அளவு : 45 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : திவாகர முனிவர் பொருள்: நிகண்டு

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

குருவே துணை

(தவளத் தாமரைத் தாதார்) கோவி
லவளைப் போற்றுது மருந்த மிழ்க் குறித்தே!
தந்திமுகத் தெந்தை சதங்கைப் பதம்போற்றி
சிந்தை விளக்காத் திவாகரத்தை - வந்த
தொகுதியொரு பன்னிரண்டுஞ் சோராமல் நேரே
பகுதி யுறமனமே பற்று.

நூல்

சிவன் பெயர்

சங்கர னிறையோன் காம தகனன்
கங்கா தரனே கறைமிடற் றண்ணல்

முடிவு :

நாடியே கூதிர் நாடகக் கணிகை

பாண்மகள் பெயர்

பாடினி விறலி பாட்டி மதங்கி
பாடன் மகடூ பாண்மக ளாகும்

பெண் பொதுப் பெயர்

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 474/D-1 போன்றது. ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளன. ஏடுகள் முறிந்தும், ஒடிந்தும் உள்ளன.

இதில் தெய்வப்பெயர்த் தொகுதி, மக்கட் பெயர்த் தொகுதியில் பாண்மகள் பெயர் மட்டும் உள்ளன.

தலைப்பு ஏட்டில் ... ... ... ''சேர்வைக்காரன் குமாரன் ஆக்கினி முத்து சேவைக்காரன் திவாகரம்'' என்றுளது.

வரிசை எண் : 3604 சுவடி எண் : 1643

## யாப்பருங்கலக் காரிகை -விருத்தியுரை

ஏடுகள் : 110 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 39×3 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அமிதசாகரர் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக

பொன்மலை நெற்றியின் வெண்மருப் பெழுது
மும்மத வானை யொன்றெண் பவம்மத வானை
மற்றாறு மதமுடைத்தே — 1

ஹரி : ஓம் நன்றாகக்

காரிகை விரித்துரை உறுப்பியல்

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்
கண்ணார் நிழற்கீழ்
ழெந்த மடிக. ளிணையடி யேத்தி
யெழுத்தசை சீர்

முடிவு :

வைக லெய்தின்றா லுலகே... எனவரும்
ஒழிபியல் முற்றும்.

சீருந்தளை விட்டு மாஞ்சீரியற்றளை...... முகிண்முலை வாணுதலே.
காரிகை முற்றும்

தமிழ்மணங் கமழும் கமலையம் பதிவாழ்
ஞானசம்பந்தனை வணங்கி
வீன சம்பந்தமில்லை வீடெளிதே.

காலம் :

983-ஆம் வருஷம் புரட்டாதி 6-ந் தேதி சனிக்கிழமையு நவமியு மூல நட்சேத்திரமுங் கூடின சுபதினத்தில் எழுதி முடித்தேன் நல்ல குற்றாலம்.

ஆசாரியன் திருவடிகளே சரணம். குமரன் துணை,

குறிப்பு

இது, எமது சுவடி எண் 83/D-95 போன்றது. ஏடுகள் சல்லடைக்கண்களாகவும், ஒடிந்தும், முறிந்தும், இடம் மாறியும் உள்ளன.

வரிசை எண் : 3605 சுவடி எண்: 1644-a

# யாப்பருங்கலக் காரிகை - உரையுடன்

ஏடுகள் : 90 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 31½ × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அமிதசாகரர் பொருள் : இலக்கணம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம்

காரிகை உரை பாடம்

சற்குரு பாதமே கெதி

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்க ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே!

முடிவு :

என்பது அமுதசாகரரைக் குடவுழுந்தார் பாடியது
யாப்பருங்கலக் காரிகை முடிந்தது.
ஓரா தெழுதினே னாயினு மொண்பொருளை
யாராய்ந்து கொள்வ ரறிவுடையோர் — சீராய்ந்து
மிக்க களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்
காரிகை முடிந்தது முற்றும்
அழகிய நம்பி குருபாதார் விந்தமே துணை.
ஸ்ரீ வாலை ஞான சரசுவதி கிருபை
திருஞான முத்திரைக்கை ............திருவடிகளே சரணம்.

காலம் :

1166-ஆம் வருடம் வைகாசி மாதம் 24 ந்தேதி (ரேவதி) நட்சேத்திரமுஞ் சுக்கிரவாரமு மாகிய சுபதினத்திலெழுதி முடிந்தது.

குறிப்பு :

இது, முன்பிரதி போன்றது. இதுவும், சல்லலைக்கண்ணாகவும், ஏடுகள் பிறழ்ந்தும், இடம் மாறியும், முறிந்தும் ஒடிந்தும் உள்ளன.
இடையிடையே ஏடுகள் இல்லை.

இது, எமது சுவடி எண் 83/D.95 போன்றது. இதன்பின்னர் ஒரு ஏட்டில் உவமான சங்கிரகத்தின் இறுதிப்பகுதி உள்ளது. முடிவில் 'உவமான சங்கிரகம் முற்றும்' என்றுளது.

வரிசை எண் : 3606 சுவடி எண் : 1644-b

# வெண்பாப் பாட்டியல்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 600 அளவு : 31½×4 செ.மீ

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : களந்தை குணவீரபண்டிதர் பொருள் : இலக்கணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தான்
துதிகொண்ட நாளுந் தொழுது-நுதிகொண்ட
பல்கதிர்வே லுண்கண்ணாய் பாட்டியலைக் கட்டுரைப்பேன்
றொல்லுலகின் மீதே தொகுத்து

**முடிவு :**

............மிராமயாணம் என்பன பாடப்படும்
பொருளாற் பெயர் பெற்ற..............

**குறிப்பு :**

இதன், ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும், ஒடிந்தும், சிதைந்தும், இடம் மாறியும் உள்ளன.

இது, எமது சுவடி எண் 646/D-102 போன்றது. பிற செய்திகளை அங்கு காணலாம்.

வரிசை எண் : 3607 சுவடி எண் . 1645-a

# கந்தரலங்காரம்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 500 அளவு : 41×4 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : தோத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்: நன்றாக

அடலருணைத் திருக்கோபுரத்தே வந்த வாசலுக்கு
வடலருகிற் சென்று கண்டு கொண்டேன் வருவராதலாற்
நடபுடெனப் படுகுட்டொடு சற்ககரை முக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே —1

சரவண பவ.
தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை

முடிவு :

பெரும்பேறு சற்று மறியாத வென்னைப் பிறவியறத்
தரும்பே ரிதுவென்று காட்டியவா கனந்தத் தழிய
வரும்பேறு தி........ப் பழனிப் பிரான் மயில்வாகன வண்ணச்
சுரும்பேறிய குழலாளுமையாள் பெற்ற சோதியனே! —105

குறிப்பு :

அருணகிரிநாதர் முருகன் மீது பாடிய பல தோத்திர நூல்களுள் இதுவும் ஒன்று இது அச்சாகியுளது.

வரிசை எண் : 3608 சுவடி எண் : 1645-b

# மூதுரை

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : 41 × 4 செ மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : நீதிநூல்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

ஆதிரை யானை யடிபணிந் தேத்த
மூதுரை யானது முப்பதும் வருமே.

நூல்

நன்றி யொருவற்குச் செய்தக்கா லன்னன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால் —1.

முடிவு :

மருவினைய சுற்றமும் வாழ்பொருளும்
உருவு முயர்குலமு மெல்லாந்......... மடந்தையாம்
போதவ ளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம். —22.

குறிப்பு :

இது, 32 செய்யுட்களைக் கொண்டது, இதில் 22 செய்யுட்களே உள்ளன. இது, எமது சுவடி எண் 813-C D-1137 போன்றது. பிறசெய்திகளை ஆண்டு காண்க. ஏடுகள் துண்டு துண்டாக உள்ளன. சல்லடைக்கண்ணாக அரிக்கப்பட்டுளது. அச்சாகியுளது. இது 'வாக்குண்டாம்'' என வழங்கப்படுகிறது.

வரிசை எண் : 3609 சுவடி எண் : 1645-c

# திருவேங்கட மாலை

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 500 அளவு : 41×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக

(மூலமே) யென்ற கரிமுன் வந்திடாது .........
நீல மேகம்போல் நின்றானை (பாலாய்)
வேலை நடுவில்த் துயிலும் வித்தகனை
வேங்கடத்து ......... யன்றியே

நூல்

பொன்னும் மணியும்போ லிந்தோங்கிப் பார்மகட்கு
மின்னு மணிமுடியாம் வேங்கடமே!

முடிவு :

......... வானவ ருடன்றடுத்தார் வாழ்வு. —100

திருவேங்கட மாலை முற்றும்
சுவாமி திருவேங்கட முடையார் திருவடிகளே சரணம்

குறிப்பு :

கடைசி ஏடு பாதியாக ஒடிந்து உளது. இது, எமது, சுவடி எண் 1620-b போன்றது. பாடவேறுபாடுகள் காணப்படுகின்றன. சல்லடைக்கண்ணாக ஏடுகள் உள்ளன. மடிந்து ஒடிந்தும் உள்ளன.

வரிசை எண் : 3610 சுவடி எண் : 1645-d

# (திருக்) கருவை பதிற்றுப் பத்தந்தாதி

ஏடுகள் : ௰ கி. எண்ணிக்கை : 9 அளவு : 41×4 செ.மீ. பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அதிவீரராம பாண்டியன் பொருள் : பதிற்றுப்பத்தந்தாதி நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக.

ஆன கருவைப் பதிற்றுப் பத் தந்தாதி
சொல்லங்கன முத்தி
ஞான வுருவாங் களவீசர் நளினச்
சரணமிசை சாத்தித்

முடிவு :

தெள்ளு செந்தமிழ்க் கருவை மாநகர்ச்
செல்வ போற்றி நின் சீர்கள் போற்றியே. —100

சங்கரனாகிய பால் வண்ணர்
முகலிங்கரும் ஆவுடையாகிய
யொப்பனை வல்லியும் லட்சிக்கக்

குறிப்பு :

பத்துப் பத்துப் பாடல்களாக பத்து பத்துகள் பாட இதற்குப் பதிற்றுப்பத்து எனப் பெயர்வந்தது. அந்தாதித் தொடையினால் பாடப்பட்டதனால் இது பதிற்றுப் பத்தந்தாதி எனப் பெயர் பெற்றது. கருவை மாநகர் இறைவன் மீது பாடப்பட்டதனால் இது, திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி எனப் பெயர் கொண்டது.

முதலேடு பாதியேயுளது. ஏடுகள் சல்லடைக் கண்ணாக முறிந்தும் ஒடிந்தும் உள்ளன. இது, எமது சுவடி எண் 1681-c போன்றது.

—★★★—

வரிசை எண் : 3611 சுவடி எண் : 1645-e

# கருவையந்தாதி

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 400 அளவு : 41×4செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அதிவீரராமபாண்டியர் பொருள் :அந்தாதி

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

ஹரி: ஓம்

தீட்டும் பனுவல்க் கருவை யந்தாதி
தெரியல் தந்தை
சூட்டும் படிக்குத் துணை செய்தவா சுடர்சூழ்
பிறங்கல்
லெட்டும் பிறத்தில் முனிமொழியார்

நூல்

சீரணி கொன்றைச் சடைக்காடு முக்கண்ணுஞ்
செம்முகமும்
காரணி கண்டமும் நான்கு திண்டோளும்......

**முடிவு :**

பரஞ்சுடர் முகந்திட பரமன் சித்தாந்தன்
நடத்தால்...... முப்
புரஞ்சுட வாங்கும் பொருப்பு வில்லான்
பொருந்தாத் தக்கன்
சிரஞ்சுடக் கொய்து முத்தீயிட்ட பால்வன்...........

**குறிப்பு :**

இதில், 63 பாடல்கள் அந்தாதித் தொடையால் முழுமையாக உள்ளன. இதுவும் செல்லரித்தும், ஒடிந்தும் மடிந்தும் உள்ளது. திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதி பாடிய அதிவீரராம பாண்டியரே பாடியிருக்கலாம் என்று செய்யுளமைதி கொண்டு கருதமுடிகிறது. இது, எமது சுவடி எண் 1681-a, போன்றது.

வரிசை எண் : 3612 சுவடி எண்: 1645-f

# நெல்லைக் கோவை

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 500 அளவு . 41×4 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கோவை

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக
தேரோடும் வீதியெல்லாஞ் செங்கயலுஞ்

சங்கினையும்

நீரோ டுலாவி(வரும்) நெல்லையே—தாரோடு
கந்தாத்த ரந்தரத்த கந்தரத்தர் கந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு.

நூல் காட்சி

அமிழ்துங் கயலும் புயலுந் தனியாக் காம்பலுந்தேனு
முமிழும் பசியவெண் முல்லையுமா வுண்மையரணமுந்
தமிழுந் தெருமணக்கும் நெல்லைநாதர் தடஞ்சிலம்பிற்
கமழும் பொழில்வளர் வல்லி கண்டகண்களி கொண்டதே.

முடிவு :

வெவ்விய செவ்வி வடிவுடையாள் தன் மகிழ்ச்சியன்பும்
வெவ்விய சங்கமு மங்கல நாணு மிக்குத்த .... ....
செவ்விய கோலத்தர் நெல்லையன்னார்தம் மணிப்புயத்தை
வவ்விய கோலமும் நெல்லையும் வாழி வவஞ்சிறந்தே —98

வேயீன்ற முத்தரும் வடிவாளுமே துணை,

குறிப்பு :

கோவை என்பது காட்சி முதலாக 400 பாடல்களைக்கொண்டு பாடப்படுவதாகும். இக்கோவை காட்சி முதலா 98 யாடல்களைக்கொண்டு முற்றுப்பெற பாடப்பட்டுளது. செய்யுள் நயம் மிக்கிருப்பினும் பிழைகள் அதிகம். இது, திருநெல்வேலியில் அருள் பாலிக்கும் வேயீன்ற முத்தர் எனும் நெல்லையப்பர், காந்திமதி அம்மை மீது பாடப் பட்டதாகும். ஏடுகள் ஒடிந்தும், மடிந்தும், செல்லரித்தும் உள்ளன.

வரிசை எண் : 3613 சுவடி எண் : 1646-a

# விறலி விடுதூது

ஏடுகள் : 66 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 29×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுப்ரதீபக்கவிராயர் பொருள் : விறலிவிடு தூது நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........ தும் சீலைகட்டி
தாராதே வாரா‌ரா தந்தணையில் நேராகச்
......... சுற்றத்கா ராராரென்று தொட்டிலாட்டின்
தாராட்டி ... ... ... ... ... ...
கொட்டிக்காட்டி மஞ்சள் நீராட்டி
அந்தி நிலாக் ... ... ... ... ... ...

முடிவு :

பெருத்தசில வூர்தந்தா னும்பிளக்கை யூர்தோறும்
பண்ணை வைக்க யோர்தந்தார் வாழ்வுக் கிடந்தந்தான்
ஆதந்தார். இந்தத் தியாகம் இவளைப்போ
யோவியரை யிந்தத் தியாகம்வந்த மெல்லியலே

குறிப்பு :

இது, கூளப்ப நாக்கன் விறலிவிடுதுதாகும். தொடக்கம் 13 ஏடுகள் இல்லை. இறுதி நிலைகண்டு இதற்குத் தலைப்பு கொடுக்கப்பட்டது. இது, எமது சுவடி எண் 96/D-283 போன்றது. கூளப்ப நாயக்கன் மீது பாடப்பட்டதாகு மிது.

ஏடுகள் மடிந்தும், பொடிந்தும், சல்லடைக்கண்ணாகவும் உள்ளன.

வரிசை எண் : 3614 சுவடி எண் : 1646-b

# விறலிவிடுதூது

ஏடுகள் : 45 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 36×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுப்ரதீபக்கவிராயர் பொருள் : விறலிவிடுதூது
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

கார்பூத்த மேனிக் கருணைத் திருநெடுமால்
பார்பூத்த வுந்திப் பரந்தாமன்-நீர்பூத்த
வேலைகுமு றக்கடைந்த வேலவரும் தெள்ளமுத
மாலைதரும் வெண்சா றொடுபாகும்—பாலும்

முடிவு :

விட்டுப் பிரிந்தக்கால் வேறு பிழையில்லையோ—முட்டி
தூக்கிப் பயிலொ......... ஊரைவிடத்தென்றா ளுதாரி
வீட்டிரப்புக் கூரையிலொன் றிக்கேட்டுக்கோ..... ......

குறிப்பு :

இதில், முடிவு இல்லை. இதுவும் எமது சுவடி எண்96/D-283 போன்றது. ஏடுகள் பூச்சியரித்தும் ஒடிந்தும் உள்ளன. இது முன் பிரதி போன்றது. கூளப்பநாயக்கள் மீது பாடப்பட்டதே.

வரிசை எண் : 3615 சுவடி எண் : 1647

# நெல்லேசர் பைங் கிளிக்கண்ணி (கிளிவிடுதூது ?)

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 400 அளவு : 22½×3 செ.மீ. பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சிற்றிலக்கியம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

...... ...ம யைத்துறந்த ரெங்கள் திருநெல்லெ............
எ.........ந் துறந்தா ரெனைத் துறவார் பைங்..... ......

முடிவு :

பாசத் திறையறுத்தார் பஞ்ணையில் சேர்வேன் முன்
நெஞ்சத் திறைப்போட்டார் நெல்லேசர் —வைங்கிளியே! —156

யாங்கி மறையப் பணிமறைய நான்மறைய
மூங்கில் வனத்தார் முளைத்தார்காண் - பைங்கிளியே! —157

குறிப்பு

திருநெல்வேலியில் எழுந்தருளியுள்ள நெல்லையப்பர்மீது காதல் (அன்பு) கொண்ட பெண்ணொருத்தி கிளியிடம் கூறுவதாக கண்ணிகளால் பாடப்பட்டது இதில் நெல்லையப்பர் சிறப்பியல்புகள் கூறப்படுகின்றன. முதல் 2 ஏடுகள் இல்லை. 3-ஆம் ஏடும் ஒடிந்தும் சிதைந்தும் உள்ளது. மற்ற ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளன.

வரிசை எண் : 3616 சுவடி எண் : 1648

# திவாகர நிகண்டு

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 500 அளவு : 38×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : திவாகர முனிவர் பொருள் : நிகண்டு

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ நாராயணியே ........
............ கன்னி குமரி
சீர்சால் பகவதி
சிறந்ததொல் பெயரே !

முடிவு :

மூதேவி பெயர்

முகடி கேள்வை
கலதி சேட்டை
காக் ... ... ... ள்
கழுதை வாகினி

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 484-a/D-15 போன்றது. இதன் விளக்கம் எமது சுவடி எண் 474/D-1-ல் காண்க.

இந்தப் பிரதியில் முதலிரண்டு தொகுதிகளே உள்ளன. ஏடுகள் சல்லடைக் கண்ணாகவும், ஒடிந்தும் மடிந்தும் உள்ளன. தலைப்பு ஏடு இல்லை.

வரிசை எண் : 3617 சுவடி எண் ; 1649

# சூடாமணி நிகண்டு

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 400 அளவு : 32×3 செ.மீ.
பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர் : வீரைமண்டல புருடர் பொருள் : நிகண்டு
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பதினோராராவது தொகுதி

பகலனே யீசன் மாயோன் பங்கயாசினனே புத்தன்
பகலே நாளொடு முகிழ்த்தம் பகலவன் வெதெ ... ...

சுருப்பூந் தாதாம் வசி கூர்மை.

முடிவு :

பாலையாழ் முடிகியற் பாட்டாரை கரேணுவே
பிடியானைக்குங் கடுங்கொலை யானைக்கும் பேர்
கிரணப்பங்கிரண மூக்காங் கிளர்சிறுவட்டில் முப்பேர்.
கரீரமெய் ... ......

குறிப்பு :

இதில், பதினோராவது தொகுதியும் பனிரண்டாவது தொகுதியும் (ஏடுகள்) கலந்துள்ளன ந க ர எதுகை முதல் ர க ர எதுகை வரை உள்ளன. இடையிடையே ஏடுகள் முறிந்தும், இல்லாமலும் உள்ளன.

எமது சுவடி எண் 506/D-43 போன்றது.

★★—★★

வரிசை எண் : 3618 சுவடி எண் : 1650

# மன்னாரு செட்டி அட்டவணை முறிச் சீட்டுகள்

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 53×3 செ மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : மன்னாருசெட்டி பொருள் : முறிச்சீட்டு
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குண்றா கோபாலு செட்டியார் மகன்
றெங்கன் செட்டிக்கி தமயனார்
ராமன் செட்டியும் மனைாரு செட்டியும்
யெழுதிக் குடுத்த அட்டவணை

முடிவு :

யென்னிடமாகிலும் ஒரு மாசம் அறெ
மாசமாகிலும் வந்து சாப்பிட்டால்
அண்டு முதல் நாங்கள் கணக்கு யெழுதி
வச்சி தமயன் மன்னா

காலம் :

சுக்குல வருஷம் ஆனி மாதம் 27-ந் தேதி

குறிப்பு :

இதில், தம்பிக்கு அண்ணன்மார் எழுதிக் கொடுத்த முறிச் சீட்டுகள் உள்ளன. வெவ்வேறு காலங்களில் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்கள் முறி என்றும் அட்டவணை என்றும் எழுதப்பட்டுள்ளன. முழு இரட்டை ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன.

★ ★ ★ ★

வரிசை எண் : 3619 சுவடி எண் : 1651

# நெல்லையப்பர் காந்திமதி ஆனித் திருநாள் ஐப்பசித் திருநாள் வாகனக் கவிதை

ஏடுகள் : 128 கி. எண்ணிக்கை : 5000 அளவு 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கவிதை

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

தந்து விழி மருங்குலொளி.....................

........ ...... ......... ........

இந்துடலந் தைவரும்

........ ......... ........ ........

முடிவு :

விதிகமலை கேள்வனுடன் விண்ணோர் வாழ்த்த
வெள்விடையின் மேற்பவனி மேவுற்றாரே ! —4

காலம் :

1021-ஆம் வருடம் ஐப்பசி மாதம் முதல்
1051-ஆம் வருடம் ஆனி மாதம் வரை.

குறிப்பு :

திருநெல்வேலியில் கோயில் கொண்டுள்ள நெல்லையப்பர் காந்திமதி அம்மனுடன் விழாக் காலங்களில் எழுந்தருளிவரும் வாகனங்கள் குறித்து ஒரு பக்தர் கவிதை பாடியுள்ளார்.

1021-ஆம் ஆண்டு முதல் 1051-ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஐப்பசி விழாவிலும் ஆனி விழாவிலும் வேயின்ற முத்தர் வரும் வாகனச் சிறப்புக் கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

× × × ×

வரிசை எண் : 3620 எண் சுவடி 1652

# வீடணன் புத்தி

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 500 அளவு : 40×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : கம்ப நாடன் பொருள்: கதை

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

நாடியபொருள் கை கூடும் ............ கூறுவோர்க்கே.
..... வர் வாழ்க அருந்தவ முனிவர் வாழ்க
......மும் வாழக வாழ்க வேந்தன் குலமும் வாழ்க.
..... மும்பர் வாழ்கப் புவிநகர் தானும் வாழ்க.
..... ருமம் வாழ்க மன்னறுக் குறைக்க லுற்றேன் —3

மதத்தினால் வலிய வீரன் மன்னனுக் கிளைய தம்பி
விதத்தினா லிலங்கை யாண்ட விபூசனன் சொன்ன புத்தி
சிசுத்தினில் வேந்தர் கேள்கத் திருவழுந்தூரான் சொன்ன
கதைக்கு நான் முகத்தோன் மாது கந்தனுங் காப்ப தாமே —1

முடிவு :

இன்றுநா னுன்னை விட்டு ஏகியே வனத்தில்ப் புக்கி
மன்[னிடை] யளந்தோன் பாதம் சீரடி பணிந்தே னாகில்
அன்றுனை அவன்கை யம்பால் அறுத்துனைக் கொல்வான் நீயும்
பொன்றிடும் போது பகைவ றாகிறேன் போகிறேனே —100

முற்றுப் பெற்றிது.

குறிப்பு :

இராவணன் சீதையைக் கவர்ந்து வந்தது தவறு என்றும் சீதாப்பிராட்டியை விடுவிக்க வேணும் என்றும், இராவணன் தம்பியாகிய விபீஷணன் இராவணனுக்குக் கூறிய புத்திமதியாகும். இது எமது சுவடி எண் 123/D-590 போன்றது. அதற்கும் இதற்கும் பாடபேதம் காணப்படுகிறது. முதற்பாட்டில் 'திருவழுத்தூரான்' என்றும், 2-வது பாடலில் 'கம்பநாடன்' என்றும் கூறப்பட்டுளது. பாடல்களிலும் வேறுபாடு காணப்படுகிறது.

வரிசை எண் : 3621 சுவடி எண்: 1653

# சூடாமணி நிகண்டு

ஏடுகள் : 170 கி. எண்ணிக்கை : 8000 அளவு : 45×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வீரைமண்டலபுருடர் பொருள் : நிகண்டு
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

......சயதோன்
பரந்தசீர் குணபத்திரன் றாள் பணிந்த
மண்டலவன் றானே ! —7

பாயிர முற்றும்

இப்பாயிறஞ் சிறப்பு............
பூமலியசோகி னிழல் புஷ்பங்கணிறைந்த

முடிவு :

............ தாவிவருவானரங்கள்............
............ மற்றிழுவால் ............ தாரன்முன் —43
............ ............

குறிப்பு :

இது, சல்டைக்கண்ணாக உள்ளது. ஏடுகள் உதிர்கின்றன. இதன், தலைப்புக் கட்டையில் பிங்கல நிகண்டு என்று எழுதப் பட்டுள்ளது. இது உரையுடனுளது.

இது, எமது சுவடி எண் 486 D 23 போன்றது.

வரிசை எண் : 3622 சுவடி எண் 1654-a

# இராம நாடகக் கீர்த்தனைகள்

ஏடுகள் : 42 கி. எண்ணிக்கை : 1100 அளவு : 44×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : சீர்காழி அருணாசாலக் கவிராயர்

பொருள் : இதிகாசங்கள் நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வெண்பா — 2 விருத்தம் — 3
ஸ்ரீ ராம செயம்

முதலாவது பாலகாண்டம் கடவுள் வணக்கம்

விருத்தம்

ஆதி ஆய நடுவாகி முடிவும் ஆகி
அண்டபகி ரண்டமும் அனைத்தும் ஆகிப்
போதினை ஆவினை வெள்ளிப் பொருப்பை விட்டுப்
புகழ் பொறைகள் கருமம் எல்லாம் பொலிந்து நல்ல

முடிவு :

ராமசந்திரன் மன்னவரு தம்பியரும் தேர்மேல்க் கொண்டு
வர அருகே தானும் மணித்தேர் மேல் ஏறி — மின் அனைய
சீதையுடனே சந்தோசம் மிக வந்தான். அயோத்திமா
நகர் வந்தானே — 25

பாலகாண்ட முத்தும்.

வசனம் — 1. விருத்தங்கள் — 24. ஆக (25)
தோடையம் — 1 திபுதைகள் — 3-க்குத் ... ... ...

ஆக பாயிரம் — 1-க்கும் காண்டம் — 1 —க்கும் கூ ... ... ...
கொச்சகம் — 1 வெண்பா — 2 வசனம் ... ... 30 ஆக
34. தோடயம் — 1 திபுதைகள் ... ... 25. ஆக - 21
சக்கிற வாத்தித்தி ... ...

திருவடிகளே சரணம்.

குறிப்பு :

இதில், இடையிடையே ஏடுகள் இல்லை. தலைப்பு ஏடு இல்லை. சில ஏடுகள் தலைப்பு முறிந்துள்ளன. தொடர்ச்சி இல்லை இது. அச்சாகியுள்ளது. பாயிரமும் பால காண்டமும் மட்டுமே உள்ளன. சொல் நயம், பொருள் நயம், இசை நயம் முதலான சிறப்புக்களைக் கொண்டது. பிழைகள் மலிந்துள்ளன, இது, எமது சுவடி எண் 817/D -1174, எண் 982/D-1175 போன்றது.

வரிசை எண்: 3623 சுவடி எண் : 1654-b

# மாதபலன்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 40 அளவு : 44×3 செண்டி மீட்டர்
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சித்திரை மாசம் மாகில் - புருசனக்கு ஆகாது
யிது பிரசித்தம். புருசனுக்கும்
பெண் சாதிக்கும் நறு பிடவை கட்டிக் கொண்டு
ஆயிரம்ஞ் சிவனு விட்டு

முடிவு :

யிதுக்கு பிரசித்தம் — பதினாறு பெத்து
பெறுவாழ்வு வாழ்ந்த வீரலஷ கிமிக்கி
நல்லயென வாத்து கலை ழ்றுக பண்ணி
நறுசிகப்பு சந்தனம்.

குறிப்பு :

இது, ருது பலன் கூறுகிறது. இன்ன மாதத்தில் ருதுவானால் இன்ன பலன் என்று கூறுவது. முன் பின் ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3624 சுவடி எண் : 1655

# பஞ்சதசப் பிரகரணம்

ஏடுகள் : 135 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 20×4 செ.மீ.

பக்கத்திற்கு: 10 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

...... வெண்ணுகிற மயக்கமே
யக்ஞானந் தனக்கொருக்காலுஞ்
சம்சார.........சம் சாரமுஞ்
சம்சாரியுங் கற்பித மென்றறிகின்ற
விதேகமே யக்ஞானத்தை

முடிவு :

............வாய்த் தானாகவே விளங்கு மென்றுத்தரம் — 12

யிப்படி............னந்தத்தற்கு வழிபாடாகத் தானே
விடயானந்தத்தை............வழியே
யெல்லாரு மோட்சத்தை யடைக்கடவ————
————ட ——— னந்த முற்றும்.

பஞ்சதசப் பிரகரணம் முற்றிற்று.
திருச்சிற்றம்பலம் —சிவமயம்
————சரணம். யருத் சங்கை — 600

குறிப்பு :

இதன், கடைசி ஏட்டில்: சித்திரதீபிகை சங்கை—126. எனத் தொடங்கி, விடயானந்தஞ் சங்கை—12 ஆகப் பிரகரணம் 15-க்கு சங்கை 600 என முடிகிறது.

இது, மிகவும் சல்லடைக் கண்ணாகவும் ஏடுகள் ஒட்டிக்கொண்டும் உள்ளது. படித்தறிவது கடினம்.

இது, எமது சுவடி எண் 256/D-654, எண். 527/D-656, எண் 528/D-655 போன்றது.

வரிசை எண் : 3625 சுவடி எண் :1656

# திருவிளையாடற் புராணம்

ஏடுகள் : 300 கி. எண்ணிக்கை : 15000 அளவு : 23×4 செ.மீ.

பக்கத்திற்கு : 15 வரிகள் ஆசிரியர் : திருவால்வாயுடையார் பொருள்: தலபுராணம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

திருச்சிற்றம் பலம்

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதி செயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானையின் செய்ய பொற் பாதமே !

குருபாதமே கெதி சண்முகநாதன் றுணை.

ஹரி ஓம்

நூல்

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெங்கும் பரவுக வுரங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லா நான்மறைச் சைவ மோங்கிப்
புல்குக வுலக மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

முடிவு :

————த்தி யருச்சனை செய————
ன்னயங்கயற் கண்ணி கணவன் முப்போதும்————

காலம் :

———— தம் 3359, 1035-ஆம் வருடம் ஆனி மாதம் 30-ந்
தேதி———— கையும் நட்சேத்திரமும் சித்தினாம
யோகம் செச——————— சட்டைனாத————
மாரியாடும் பெருமா————

சண்முக சற்குரு தேசிகர் கிருபையுண்டாக————

குறிப்பு :

இது, பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணத்தினும் வேறாயது. மதுரையில் சொக்கேசப் பெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களைக் கூறுவது. ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும், ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. ஏடுகள் தலை தடுமாற்றம். தொடக்கம் நடுவில் இருக்கிறது. படித்தறிவது கடினம். பின்னர் 2 ஏடுகளில் படல அட்டவணையும், விருத்தங்களின் எண்ணிக்கையும் உள்ளன.

வரிசை எண் : 3626 சுவடி எண் : 1657

## கைவல்ய நவனீதம்

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 30×3½ செ.மீ

பக்கத்திற்கு 18 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி : ஓம்

பொன்னில் மாதராசை
பொருந்தினர் பொருந்தா ருள்ளந்
தன்னிலந் தரத்தில் சீவ
சாட்சிமாத் திரமாய் நிற்கும்

முடிவு :

குலவு சற்குரு பின்பாதிக் குவிர்புனர்
தலைமேற் கொண்டா லுலகினிற் தீர்தரும
மலவாமுற்ற பெறடேவாசால
நலமே யாகுங் கேவல கேவல்லிய நவனீதநூலைக்

கற்றோர் ... ... வலை ஞான நூல்கள்
படித்தஞானிகளாய் வாழ்வார்
உத்திரப் படலம் - சந்தேகந் தெளிதல் முற்றும்
பரிபூரணானந்த சற்குரு முன்னிற்க
வாலை சரசுவதி துணை

இளையாத்தங்குடி சில்லய்யஞ் செட்டியாருக்கும்
சற்குரு நாதன் செட்டியார் புரத்து (பொஸ்தகம்)

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 822/D-1212 போன்றது. நடுப்பகுதி மிகவும் சல்லடைக் கண்ணாக உள்ளது.

வரிசை எண் : 3627 சுவடி எண் : 1658

## பகவத் கீதை

ஏடுகள் : 182 கி. எண்ணிக்கை : 4000 அளவு : $19\frac{1}{2} \times 4$ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி : ஓம்

தேரின் பேரி ே ... ... ...
பத மடித்தும் ... ... ... ...
ஒருவக ஞான ... ... ... ...
ரம்பட்ட தனு ை ... ... ...

முடிவு :

அப்படிக் கொற்ற தெ ... ... ...
டிப் பசு மேய்த்த ... ... ... ...
சுவாமி யென தோத்தி ... ... ...
ரு. தொழிலு மிராதித ... ... ...

குறிப்பு :

பகவத் கீதைச் செய்யுளின் உரை மட்டும் உளது. ஏடுகள் சல்லடைக்கண்களாக உள்ளன. எமது சுவடி எண் 754-b/D-1231-ன் வேறுபோல் தெரிகிறது. தலைப்பு ஏடும், இறுதி ஏடும் இல்லாததால் சரியாக அறிய முடிய வில்லை.

வரிசை எண் : 3628 சுவடி எண் : 1659

# நன்னூல் — உரையுடன்

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 39×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : இலக்கணம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

..............பயனிலை வகையானுந் தொகைநிலை
வகையானும் எண்ணுநிலை வகையானுந்தொட......
...............மண்மை யானுந் தகுதியானுந்
தொடருமெனவு மவற்றிற்கு காரண முறையே
சாத்தன் வந்த...... ............

முடிவு :

பேரறுபா னிரண் டெண்ணான்கு வினை
பேரதுத்தா னோரறுபத் தெட்டிடை தான் மூவேழின்மே
லொன்னுரி யிருபத் தொன்றாகச் சொற் சூத்திரத்தின்
விரியிருநூற் றோரைந்தாறு வேண்டு.

நன்னூலுரை முற்றும்
ஸ்ரீதரன் நாதாய மங்களம். காந்திமதியம்மை துணை
சங்கர நமச்சிவாய குரு சரணாரவிந்தமே கெதி.
குருவே துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 633/D-65, நன்னூல்—மயிலைநாதருரையுடன் போன்றது. தொடக்க ஏடுகள் இல்லை. எட்டெண் (97) 100-லிருந்து 197 வரை உள்ளன. ஏடுகள் சல்லடைக் கண்களாக உள்ளன.

இதன் பின்னர் இலக்கணம் எழுதிய உதிரி ஏடுகள் 3 உள்ளன.

வரிசை எண் : 3629 சுவடி எண் : 1660-a

# நீதி சாரம் — உரையுடன்

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 44×2½ செ.மீ.

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : நீதிநூல்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

............சற்வ லோகேகபரனுமாய் தேவர்களுக்கெல்லாம்
தேவனாய் விளங்கப்பட்ட புருஷோத்துமனை நமஷ்கரித்து
சர்வ சாஷ்த்திரங்களிலும் சொல்லப்பட்ட
நீதியை திரட்டித் நீதிசாரமாய் சொல்லத்
துவங்கினேன என்றவாறு —1

முடிவு :

சந்திர சூரியர் தெக்கு வடக்கானாலும்
மகாமேரு பேர்ந்தாலும் சமுத்திரம்
மேரை தப்பினாலும் அக்கினி குழுந்தாலும்
சறசனனானவன் ஒருக்காலும் வார்த்தை
பொய்யா னென்ற வாறு —99

குறிப்பு :

முன்பகுதி ஏடுகள், தலைப்புகள் முறிந்துள்ளன. பாதி பாதி ஏடுகளாக உள்ளன இரண்டு பத்தியாக நூலும் உரையுமாக உள்ளன. தலைப்பு ஏடு இல்லை. நூல் உரைகொண்டு 'நீதிசாரம்' எனத் தலைப்பிடப்பட்டது.

இது, எமது சுவடி எண் 348/D-1 -ன் வேறாயதுபோல் தெரிகிறது.

வரிசை எண் : 3630 சுவடி எண் : 1660-b

# அரப்பளீசுர சதகம்

ஏடுகள் : 42 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 44×2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அம்பலவாணக்கவிராயர் பொருள் : சதகம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உம்பர்கோ னெம்பெருமா வோங்கரப்ப ளீசர்மேல்
பைம் பொருள்சே ரும்சதகம் பாடவே—அம்புவியில்
ஆக்கும் துழிக்கை உளான் அன்புடையார்க் கின்பருளி
காக்குந் துதிகையுளான் காப்பு.

சிவமயம்

நூல்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவேதுணை

கடலுலகில் வாழுமுயிர் யெழுபிறப்பினு மிக்க
காச்சிதரு நர சென்மமாய்க்
× × × + + ×
அண்ணலே அருமை மதவேள்
அனுதினமு மனதில் நினை தகு சதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே! —1

முடிவு :

அருவாகி யுருவாகி வொளியாகி வெளியாகு
மண்ணலே யருமை மதவேற
அனுதினமு மனதில் நினை தருசதுர (கிரிவளர்
அறப்பளீசுர தேவனே) —86

குறிப்பு :

இது, சதுரகிரி மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் அறப்பளீசுரர் மீது பாடப்பட்ட 100 பாடல்களைக் கொண்ட நீதிநூலாகும் உலக நியதிகளையும் ஒழுக்க முறைகளையும் போதிப்பது.

ஏடுகள் ஒடிந்தும் முறிந்தும் உள்ளன. அச்சாகி உள்ளது.

வரிசை எண் : 3631 சுவடி எண் : 1661

## மதி வெண்பா

ஏடுகள் : 12 (2—13) கி. எண்ணிக்கை : 300 அளவு : 27½ × 3 செ மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நீதிநூல்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

யெல்லாந் துணிந்தவர்க்கே தள்ளுமல்லால்
பொல்லாத மாய்கைவிட்டுப் போகாது—சல்லாப
லீலையிலே தான்மயங்கி நின்றவுடல் கெட்டுவிடும்
வாலைசிறு பெண்ணாள் சொன்ன மதி. —8

முடிவு :

அரிவா லரிந்துகொண்டு ஆசையெல்லாந் தான்போக்கி
நெரியாக ஞானநிலையில் நில்லு—குரியாக
னான்சொன்ன வெண்பாவில் நத்துவது புத்திசொன்னேன்
மோனஞ்சொன்ன மதிவெண்பா முத்தே. —100

முற்றிற்றும். வாலாம்பிகை துணையாக வேணும்
ராசஸ்ரீ வயித்திய சிதம்பர பிள்ளை அவர்கள் குமாரராகிய சாஸ்திரசிரோ
மணிகளாகிய ராமச்சந்திர பிள்ளை அவர்கள் மதிவெண்பா
நூரும் யெழுதி நிரைந்தது.
முற்றும்.

குறிப்பு :

இது, அந்தாதித் தொடையாக, நீதிகளை உரைப்பது. ஏடுகள் சிதைந்தும், முறிந்தும் உள்ளன. வெண்பாவில் பிழைகள் மலிந்து கிடக்கின்றன. எழுத்துக்கள் நன்றாக உள்ளன. முதல் ஏடு இல்லை. 71-ஆம் பாட்டில் "கொல்லிமலைச் சித்தன் சொலக் கூறு" என்றுளது.

—★★—

வரிசை எண் : 3632 சுவடி எண் : 1662

# மந்திர சாத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 150 அளவு : 16×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திசை கட்டு

முன்னு மானமல்லா பின்னும் மல்லா
யெடது மானமல்லா வலதுமான மல்லா

தின்லாயி லாயி மகாமதற சூறல்லா
யென்ங்குறிக் கோட்டையிலே புகுந்து

முடிவு :

கரைந்து உருகிப்போக உன்திருவாய்
மலர்ந்தருளிய உன் திருக்கண்ணால் பார்த்து
அடியேனை லெஷித்தருள வேணும் சுவாகா
உரு 108 கிரிகை மடை —5

காலம்:

1894-ஆம் வருஷம் வைகாசி மாதம் 19-ந் தேதி
17—5—1894. 17 May 1894.

குறிப்பு :

இதில், வைப்பு மந்திரம், ராச வசியம் முதலியன உள்ளன. எவ்வ மந்திரங்களும், சக்கரங்களும் உள்ளன.

★★★★

வரிசை எண் : 3633 சுவடி எண் : 1663

## திவாகர நிகண்டு

ஏடுகள் : 29 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 40×3 செ.மீ

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : திவாகர முனிவர் பொருள் : நிகண்டு

நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

எலும்பின் பெயர்
(என்)புத்தி அங்க மெலும்பாகும்

தலையோட்டின் பெயர்

வெ(ண்)டலை யோடே கபால மாகும்

(முழு)வலும்பின் பெயர்
(உ) டல் முழுவென்பு கங்காளமாகும்,

× + + + + +

நாகரிகர் நாடத்தாரிய னரு விந்தை
தெருக் காட்சிச் சேந்தன் றிவாகரத்
திரண்டாவது மக்கட் பெயர்த் தொகுதி முற்றும்

நெல்லயப்பார் துணை.

முடிவு:

தானொறவன்னே தரணி மானவன்
செந்தமிழ் சேந்தன் சேற் றிவாகரத் தைந்தாவது
யிடப் பெயர்த் தொகுதி முற்றும்
நெல்லையப்பார் துணை

குறிப்பு :

இது, இத்தொகுதி சுவடி எண் 1648-ன் தொடர்ச்சியாக இருக்காலம். இதில் இரண்டாவது தொகுதி கடைசி முதல் 5-வது தொகுதி முடிய உளது. இடையிடையே ஏடுகள் இல்லை.

இது, எமது சுவடி எண் 474/D-1, எண் 484/D-15 போன்றது.

வரிசை எண் : 3634 சுவடி எண் : 1664

# அகராதி நிகண்டு

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 43 × 4 செ.மீ

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : இரேவணசித்தர் பொருள் : நிகண்டு

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இலாங்கலி கலப்பைந் தெங்கும் வெண்காந்த.......
இல்சா......மிடமு மனையு மனையாளு... ...
இல்லை யென்றலு ......ராசியு மாகு... ... ...
இவர்த லாசையு மேவலு மெ... ... ...

முடிவு :

வியங்கோள் வேலு மழுவும் வில ... ... ...
வியப்புச் சினக்குறிப்பு மதிசய முமாகும்

வியாளப் பாம்பும் புலியும் வியாழ முமாகும்
வியலே யகலமுங் காடு மேம்பாடும்
மாவட்டு மென வழங்கினா ... ... ...

குறிப்பு :

இதில் தலைப்பு ஏடு இல்லை. நூல் நிலைகண்டு பெயர் தரப்பட்டது. இது. எமது சுவடி எண் 524/D-53 போன்றது. ஏடுகள் சல்லடைக் கண்ணாக உள்ளன. மேலும் ஒடிந்தும் மடிந்தும் உள்ளன.

வரிசை எண் : 3635 சுவடி எண் : 1665

# திருச்சிற்றம்பலக் கோவை

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 14×4 செ.மீ
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள்: கோவை
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

......வழி......கூறல்
சீரியல் வாவியுமயர்............
காரியல் வாட்டகண்ணி
வேரியுஞ் சந்தும் வியறற்தென் கற்பினிற்

முடிவு :

வெய்துயிர்ப் புற்று தலையெல்லனையெ . ...
செப்புற்ற கொங்கை............

குறிப்பு :

ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும், ஒடிந்தும் மடிந்தும், இடம் மாறியும், தலைதடு மாறியும் உள்ளன. செல்லரித்துள்ளதால் தலைப்பு, முடிவு காண இயலவில்லை

வரிசை எண் : 3636 சுவடி எண் : 1666

# பரமானந்த தீபம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 300 அளவு : 27 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : பரமானந்தர் பொருள் : வேதாந்தம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் குருகமல பரமானந்தம்

அஞ்செழுத்தி னுருவாகி யறிவுமாகி
யாதிநடு வீறாகி யனாதி யாகிச்
செஞ்சடையிற் கொன்றைமலர் அணிந்தோனாகி
தேனாகிப் பாலாகிச் செகமேழாகி

முடிவு :

னோர்பெருகு மஞ்ஞானக் கடலை நீந்தி
பேச.........மெ.........னம் மேறுவர் ,ாமே. —73

திருச்சிற்றம்பலம்

குறிப்பு :

இது, மிகவும் சல்லடைக்கண்ணாக இருப்பதால் பிற செய்திகள் அறியக்கூடவில்லை. 25-வது ஏடு நடுவில் உள்ளது. ஏடுகள் தலை தடுமாற்றம். இடையிடையே ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3637 சுவடி எண் : 1667-a

# தமிழ் சோதிடம்

ஏடுகள் : 31 கி எண்ணிக்கை : 1000 அளவு : 33 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திசை பலன்

சூரியன் 800 யோசினை; சந்திரன் 880 யோசினை
செவ்வாய் 897 யோசினை புதன் 888 யோசினை
வியாழம் 890 யோசினை சுக்கிரன் 891 யோசினை
சனி 900 யோசினை நட்சத்திரம் 884 யோசினை

முடிவு :

மெய் ரெண்டா மிடத்தினில் நீசனும்
தாய் ரெண்டா மதிபனும் சூழ்ந்திட
வாய் பாலா ரணுகிட நோக்கிட
மாயுமே கடித்திட்டுட நாணுவார். —2.

குறிப்பு :

இதில், ஏடுகள் உதிரிகளாக பிறழ்ந்திருந்தது சரிசெய்யப்பட்டது. வீடு அறிவது, நிரியாண மறியும்படி, சந்திரபவன் அறியும்படி, அந்திராந்திர புத்தி, சீவனம், அங்காயீன சதுர்புயராசி யறியும்படி, நாய் கடிக்க ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3638 சுவடி எண் : 1667-b

## உபநிடதம்

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 800 அளவு : 33×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........ ளிய மாத்திரமா யிருந்தால் அதனையறிய
வேறொரு அறிவில்லாத படியினாலும்
இந்திரிய கோசரமாயிருக்கும் பிரபஞ்ச மெல்லாம்
சைதன்னிய.........

முடிவு:

அருளானது உள்ளத்தி விருந்து சொல்வித்த
அதிசயமே அதிசய மல்லாமல் மற்றோர்
அதிசயம் அறியேன். என்றவாறு

இச்செய்யுள் இந்நூலாசிரியர் தங்குருவைப்
புகழ்ந்து கூறியது.
உபநிடத மூல முற்றிற்று.

குறிப்பு :

4-வது ஏட்டிலிருந்து உளது, முதல் 3 எடுகள் இல்லை. இடையிடையே ஏடுகள் இல்லை.

இது, எமது சுவடி எண் 1011/D-1723 போன்றது. பிறசெய்திகளை அங்கு காண்க.

வரிசை எண் : 3639 சுவடி எண் : 1667-c

# சோதிடம்

ஏடுகள் : 12 (3-வது ஏடு இல்லை) கி. எண்ணிக்கை : 400 அளவு : 33×3 செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை
பொருள்: சோதிடம் நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஐந்து மறிந்து மதினால் வலியறிந்து
வந்த கயத்தின் வரவுணர்ந்து ......முந்......
படியோர்ந்து கண்டமதி ணோக்கி னவற்றுளெல்லா ந்
சவிப்பறின் மன்னோற்குந் தாய்.
எ-து. நட்பாட்சி யுச்சம் பகை நீசமாகிய
ஐந்தினையும்

முடிவு :

ஆதித்தன் சந்திரன் வெள்ளி புதன் இவர்கள்
முழு நோக்கில் வலியர். செவ்வாய் முக்கால்
நோக்கி லரைக்கால் னோக்கி வலியர்.
சனி கால் நோக்கில் வலியர் வியாழ
மரை நோக்கில் வலியர் என்றவாறு. —43

குறிப்பு :

இதில், ராசிரூபம், ஆரூட சக்கரம், ராசி எதிர்க் கயறு, கவிப்பு, ராசியுதையம், ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3640 சுவடி எண் : 1667d

# பூமு சல்லியம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 300 அளவு : 33×3 செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து: தமிழ்

தொடக்கம் :

.........மென்றும் ஆரூடத்தில் கவிப்பில் நிற்கினுந்
தண்மையாவா ரென்றவாறு —10

உதையத்து மாமதிய மொண்பொருளுண்டாக்குஞ்
சிதையாய்ப் பெருஞ் சிறப்புஞ் சேருஞ்-சிதையாது.
சிந்தித்தல் முற்றுஞ் செழுங்கவிப்போ டாருடஞ்
சிந்திக்கி லவ்வகையே சாற்று. எ.து.

முடிவு :

ராகு நின்றறையளவு மெண்ணி பழங்கிணறு யென்பது
வெள்ளி நின்றறையிலே நீருண என்பது. வியாழம்
நின்றையிலே பூமி சல்லிய மென்பது
உத்திராடத்து பின்னே அபிசித்து நித்துவது
முன்பு சொன்ன அனுஷ முதலான நாட்களெல்லாம்
2 1/8 நாழிகையில் பேரும் என்பது

குறிப்பு :

முதல் 6 ஏடுகள் இல்லை. இதில் நஷ்டகாண்டம், வசூநாள், சுபாசுபம், செப்பிய தறிக்காலுக்குக்குரை ஆகிய தலைப்புகள் உள்ளன. இச்சுவடியின் ஏடுகள் தலை தடுமாறியுள்ளன.

××××

வரிசை எண் : 3641 சுவடி எண் : 1667-e

# தொடுகுறி சாத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை 150 அளவு : 33×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இவையாக வென்றவாறு

தலைமறையோர் என்றது யாதாமொருவன் ஒருகாரியம்
வினவு மிடத்துத் தலை தொடில் ராசாக்கள் யென்க
அரை, துடை, முழங்கால் இதுகள் தொடில்
பூவாணிகர், தனவாணிகர் ரென்க

முடிவு :

தோத்திரம் பண்ணினால் ஒருக்காலும் துன்பம் வாராது
பூசை செய்யென்று வியாழ பகவான் சொன்னது
இந்தப்படி நவக்கிரக பூசை செய்ய வேண்டியது.
நன்று

குறிப்பு :

உடல் உறுப்புக்களைத் தொடும் போது சோதிடம் கூறப்படுவது.

வரிசை எண் : 3642 சுவடி எண் : 1667-f

## நஷ்டா முஷ்டி சிந்தனை

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 40 அளவு : 33×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முஷ்டி நிறம்

... ... ... உபையங் காணும்
சரங்காணும் சிரங்காணும்
உபையத்தி லாதி வெள்ளை
மத்தியை சாம்ப வண்ணம்

முடிவு :

யிரவி புந்தி கேந்திரத்தி
லிருக் கணுமே கிழக்காம் ... ... ... ...
ணியன் கேந்திரத் தேறி யிரு ... ... ...
டிலுத்தரமே. அரவு செவ்வா ... ... ...

குறிப்பு :

இந்நூல் சோதிட வகையைச் சார்ந்தது. இதன் பின்னர், பல நூல்களிலிருந்தும் உதிர்ந்த 18 ஏடுகள் உள்ளன. பக்க எண்ணும் இல்லை.

வரிசை எண் : 3643 சுவடி எண் . 1668

# மந்திர சாத்திரம்

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 450 அளவு : 25×3½ செ மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரங்கள்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : கிரந்தம்.

தொடக்கம் :

மாலிநீ பாதுகுல் பௌ
த்ரிபுர சுந்தர: பாதௌ
பாது பரா தேவீ.........
அங்குலிம் பாதுமே லக்ஷ்மீம்
சிம்மவர்ணப் ப்ரபூதித:

முடிவு :

நிக்ரஹானுக்ரஹம் யந்த்ரம்
பஞ்ச விச்சதி கீர்த்திதம் |
துஷ்க்ருதம் சுஹ்ருதம் ச்ருத்வா
யந்த்ரகர்ம சமாசரேத். ||

(இதன்பின் பஞ்சாட்சர சக்கரங்கள் உள்ளன)

குறிப்பு :

இதில், உச்சாடனம், ஆகர்ஷணம், திருவம்பலமுடையார் மந்திரம், யந்ரபூசை, த்ரைலோக்ய மோகன யந்த்ரம் முதலான பல யந்திரங்களும் மந்திரங்களும் உள்ளன.

வரிசை எண் : 3644 சுவடி எண் : 1669

# பரசிவ வணக்கம்

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 3500 அளவு : 32×3½ செ.மீ.

பக்கத்திற்கு 10 வரிகள் ஆசிரியர் : தாயுமானார் பொருள் : சைவ தோத்திரம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

நித்தியானந்தம்

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்த தெது தன்னருள்
வெளிக்குள்ளே அகிலாண்டகோடி யெல்லாம்
தங்கும்படிக் கிச்சை வைத்து யிர்க்குயிராய்த்
தழைத்த தெது

முடிவு :

இடை.........ந்திடைந் தெங்குமெய் புளகிப்ப
வெழுந் தெழுந்தைய நின்
சரண மடைந்தன னினி நீய் கைய்
விடே லுனக்கைபைய மென்றஞ்.........
......... .........

குறிப்பு:

இது, தாயுமான சுவாமி பாடல்கள் ஆகும். இதில், இத்தலைப்பு இல்லை. உள் தலைப்புகளே உள்ளன.

இதில், பொருள் வணக்கம், பலபாவின சந்தபோதம், கருணாகரக் கடவுள். சிற்சுகோதய வணக்கம்; ஆனந்தமான பரம், ஆனந்த விளக்கம், பரமானந்தம் விளைகின்ற பொருள், சிவானந்த மகிழ்ச்சி, தேசோமயானந்தம், சிதானந்த மகிழ்ச்சி, தென்முகம், பொன்னை மாதரை, ஆரணம், சொல்லற்கரிய. வம்பனேன், சிவன்—செயல் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3645 எண் சுவடி 1670

## குமரேச சதகம்

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 500 அளவு : 20 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : குருபாத தாசர் பொருள் : சதகம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கண்டெளுது வாள் பத்தினில்
மயிரபிளைந்தே கணக்கிக்கனு......
.........ம் விடார்
காசில் வீனில்ச் சிலவிடார்

உச்சிதமான திக்கனதி

முடிவு :

நெத்திதனில் மூவிரலஞந்து......லே
பசபகா.........ங்கத்த போகள்
திருவிளையணுகாது நித்தலும் பொறுவா
நவில் முத்திமூலப் பொருளே —69

குறிப்பு :

இதில், 5 முதல் 69 செய்யுட்களே உள்ளன. முதலிரண்டு ஏடுகளில் 'திருச்செந்திலாதிபனே!' எனமுடியும் திருச்செந்தூர் மாலைப் பாடல்கள் எழுதிய (சிதைந்த ஏடுகள்) உள்ளன.

ஏடுகள் சல்லடைக்கண்ணாகவும் மடிந்தும், ஒடிந்தும் உள்ளன. 'மயிலேறி விளையாடு குகனே புல்வயல் நீடு மலைமேவு குமரேசனே' என முடியும் பாடல்கள் உள்ளன.

இது, எமது சுவடி எண் 805/D-1130 போன்றது.

வரிசை எண் : 3646 சுவடி எண் : 1671-a

## இராம நாடகக் கீர்த்தனைகள்

ஏடுகள் : 21 (2—22) கி. எண்ணிக்கை : 600 அளவு : 40 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: அருணாசலக் கவிராயர் பொருள் : இதிகாசம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........... சற்றுவீறு பரவஸ்து வானதொரு
தசமுககுல இடர்படும் உயர் அமரர்கள்
நகையுடனே துதிகர நரவுருவொடு
தார்புனை ஈசனும் மலின சூரியனும்
வேதனு மாமகவானும் அவன் பாலனும்
தேய்வுஞ்சீர் அனுமான் சுக்ரீவன்

முடிவு :

இராகம் — மோகனம் தாளம் — ஆதி.

பல்லவி

ஏன் பள்ளி கொண்டீ ரய்யா-ஸ்ரீரங்க நாதரே நீர்
ஏன் பள்ளி கொண்டீ ரய்யா.

× × × × ×

மீசுரமாம் சித்ர கூட ..............கரக்கல்மிசை நடத்த இளைப்போ
(கா) சினிமேல் மாரீசன் ஓடி கதி (தொடர்ந்த) இளைப்போ
ஓடிக்களைத்தோ............

குறிப்பு :

இதில், அருணாசலக்கவிராயரின் சிவகீர்த்தனைகளும், சில கவிகளுடைய வரலாறும், அவரவர் எழுதிய கீர்த்தனைகளும் உள்ளன. தலைப்பு ஏடு இல்லை அதனால் தலைப்பு அறியக்கூடவில்லை.

வரிசை எண் : 3647 சுவடி எண் : 1671-b

# திருப்புகழ்

ஏடுகள் : 27 (12-வது ஏடு முதல்) கி. எண்ணிக்கை : 1000 அளவு: 40 × 2½ செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அருணகிரியார் பொருள் : சைவந் தோத்திரங்கள் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............பொனினகந்திக குளை மொதிக்
குணலை மெந்திரியஞ்சங்கிஞ்சிதஞ்
செறிவதில் குந்திவருந்... .... ......

முடிவு :

மதியாதே மருவி வந்தெனக்கு
மரக்கஞ் சொற்க மயிலில் வந்து மு.........

குறிப்பு :

இதில், சில திருப்புகழ் உரையுடனிருக்கின்றன. கடைசி இரண்டேடுகளில் திருச்செந்தூர் மாலைப் பாடல்கள் சில உள்ளன. தலைப்பேடுகள் இல்லை. 9-வது ஏட்டில், ''ஸ்ரீராமாயண ஓரடி கீர்த்தனை முற்றும். கவி சிறப்பு. அருணகிரி முதலியார் பேரில்'' என்றுளது. இது, அருணாசலக் கவிராயர் போலும்.

வரிசை எண் : 3648 சுவடி எண்: 1672-a

## சிவஞான சித்தியார் - பரபக்கம் - மூலம்

ஏடுகள் : 65 கி. எண்ணிக்கை : 1400 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அருணந்தி சிவாச்சாரியார் பொருள்:
சித்தாந்த சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆதி ...... ... யந்தமிலா யளவில்
சோதி யருண்ஞான மூர்த்தியாய் ...... மன்ற
மாதி ......... மொருபாகந் தடக்கி வானோர்
மகுடகூளா மணியாய வையம் போற்றப்
பாதிமதியணி பவளச் சடைகடாம் படரொழிய

முடிவு :

இப்படி பிருகுசாபத் தீரைந்து பிறப்பில் வீழ்ந்து
மெய்ப்படு துயரமு ... ... .... விமல னல்ல
னெப்படி யானுஞ் சொன்னே னிறையரியல்ல னென்றே
மைப்படி கண்டன் மலரடி வணங்கி டாயே ! — 301

......மறுத்தல் முற்றிற்று
பரபக்ஷம் முடிந்தது

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 54-b/D-689 போன்றது. ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளன. முதல் 32 ஏடுகள் இல்லை. 33 வது ஏட்டிலிருந்து தொடங்குகிறது.

வரிசை எண் : 3649 சுவடி எண் : 1672-b

# சிவஞான சித்தியார் - சுபக்கம் - மூலம்

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 800 அளவு : 22×3 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அருணந்தி சிவாச்சாரியார் பொருள் : சித்தாந்த சாத்திரம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது
எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஒரு கோட்ட னிருசெவியன் மும்மதத்த
னால்வாய னைங்கரத்த னாறு
தருகோட்டம் பிறையிதழித் தாழ்சடையான்
றருமொருவா ரணத்தின் றாள்க
ளுருகோட்டன் பொடும் வணங்கி யோவாதே
யிரவுபக லுணர்வோர் சிந்தைத்
திருகோட்டு மயன்றிருமால் செல்வமு
மொன்றோ வெனச் செய்யுந் தேவே ! — 1

முடிவு :

தேசமிடங் கால நதிக் காரணங்களி
னரிச் செய்வதெ ... ... ...
... ... ... செய்யாச் செயல்தனைச் செய்தங் கிட ... ...
... ... ... மின்றி யுலாவ னின்ற ... ... ...
... — ... னெனவுண்டிப் பட்டினி யிருத்தல் கிடத்தல்
மாசதனிற்றூய மையினில் வறுமை வ... ...
... ... ... ...ந்தரத்திற் றிருத்தத்தில் மைதுனத்தில் சினத்தி
லாசையினில் வெறுப்பினில் வய ........

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 54-c/D-690 போன்றது. ஏடுகள் சல்லடைக்கண்ணாக உள்ளன. இது, முன்னுள்ள பரபட்சத்தின் தொடர் ஏடுகளைக் கொண்டது.

வரிசை எண் : 3650 சுவடி எண் : 1673

# பிரமோத்தர காண்டம்

ஏடுகள் : 57 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 28×3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : வரதுங்கபாண்டியன் பொருள் : மான்மியம்

நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

...........திரம் பிழையார் ந ..........ரண்டுரையார்
நன்கல்லவை புரியார் காவன முறைதிரம்பார்
கர்ம ........ செயல் பொறுக்கார்
பூவலையங்காவல் புரியும் புரவலரே! —20

முடிவு :

வீறாய தேவர் புகன்ற சிவகதை முழுதும் விழைவுடன் கேட்குநர்
அவர்தாம் யாவர் மற்றெனும் மாலயன் முதலோ
ரெய்தருஞ் சிவபத மடைவாம். —108

இருபத்திரண்டாவது சிவகதை கேட்டபோர் பேறுபெற்ற
அத்தியாய முற்றும்
உலகருத்தீசழகமகன் துணை. வெண்காடங்கர்,
வாடா முலையம்மை துணை.

காலம் :

991-ஆம் வருடம் யுவ வருடம் புரட்டாசி மாதம் 7-ந் தேதி குருவாரமும் அமரபட்சத்து சதுர்த்தியும் அசுபதி நட்சேத்திரமும் துலாலக்கனமும் கூடின சுபயோக சுபதினத்தில் பிரமோத்திர காண்டம் நல்லசிவன் பிள்ளை யவர்கள் குமாரன் ஆண்டியப்பன் எழுதி முகிந்தது முற்றும். அபிராமி துணை. × × × × சிதம்பரேசுரர் துணை. × × × × குருவே துணை.

குறிப்பு :

இதற்கு முன் ஏட்டில்-பிரமோத்திர காண்டம் 22 அத்தியாயத்திற்கும் பெயர் ஏட்டெண் எழுதிய அட்டவணை உள்ளது. முதல் 67 ஏடுகளும், இடையிடையே ஏடுகளும் இல்லை.

இது. எமது முதலாம் தொகுப்பு சுவடி எண் 248'D-465 போன்றது. இதில், பஞ்சாக்கரமகிமை, சிவராத்திரி மகிமை, பிரதோட மகிமை, சோமவார மகிமை, சிவயோகி மகிமை, விபூதி மகிமை, ஸ்ரீருத்திர மகிமை, உமாமகேசுவரபூசை மகிமை முதலியன இல்லை. 12-வது பத்திராயுவுக்குச் சிவகவச முரைத்த அத்தியாய முதல் தொடங்குகின்றது.

வரிசை எண்: 3651 சுவடி எண் : 1674

## சாதகம்

ஏடுகள் : 23 கி. எண்ணிக்கை : 500 அளவு : 25×3செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் :சோதிடம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ் & கிரந்தம்

தொடக்கம் :

........... பவ வருஷம் பிரட்டாசி மாதம்
26-ஆம் தேதி திங்கட்கிழமை
பரணி நட்சத்திரம் பீடபதிக்குள்
............ 26க்கு நாழிகை அளவில்
மீனலெக்னத்தில் சுப ஜெனனம்
(ராசி சக்கரம் இருக்கிறது)

முடிவு :

ப்ரபூதம் சத்வ க்ஷேத்ரத்தில்
ஜெனனவலம் பவ:

காலம் :

முன்கூறப்பட்ட காலம்

குறிப்பு :

இது, தனியார் ஒருவது சாதகம்

வரிசை எண் : 3652 சுவடி எண் : 1675

# திருவாய் மொழி

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 45 x 3 செ.மீ. பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : நம்மாழ்வார் பொருள் : வைணவ பிரபந்தம் நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்&கிரந்தம்

தொடக்கம் :

உயர்வர உயர்நல முடையவ னவனவன்
மயர்வர மதிநல முடையவ னவனவன்

முடிவு :

யானை யலற்றியவர் வறது வீடுபெற்ற
குருகூர்ச் சடகோபன் சொன்னவ்
வாவலந்தாதி ....... லிவை
யாயிரமு முடிந்தவாறே.

குறிப்பு :

இதன், பிற செய்திகளை, 2-ம் தொகுப்பு சுவடி எண் 140/D-964ல் காண்க.

வரிசை எண் : 3653 சுவடி எண் : 1676

# அறவான் நாடகம்

ஏடுகள் : 100 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 42 x 3 செ.மீ. பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : வையாபுரிக் கவிஞன் பொருள் : நாடகம்—கதை நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

நிலவாற் குழலுஞ் சொற்ண பங்கயமும்
நித்திய வாழ்முகமும் சொரிய கிரிகை
கோல வேல்விழி நிண்டருள் தாளினை குத்தந்தீர
தெரிசினை நல்குவாய்.

நன்னரி அருள் கோதண்ட ராமர்தன் பாதப்போற்றி
மன்னவன் நல்லறவான் மகிமைசேர் நாடகத்தை
உன்னித் தென்புரத்தில் உருவு மின்மினிபோலப் பண்ணுஞ்
பன்னுந் செந்தமிழால் யானாய் கற்கின்றேன் கவிவல்லோர்முன்

திங்களோற் பாகவேதான் சிறந்திடும் வதன னான
துங்கனாம் நல்லறவான் துறந்திரன் சரிதை தன்னை
புங்கவன் னருளினாலே நாடகமாய்ப் புவியோர் காண
இங்கித கவிஞன் வைய்யா புரிமகிழ்ந் தியம்பி னேனே !...

முடிவு :

.........சீக்கிரத்தில் காளிகா தேவிக்கு
பெலியாகப் போய் பதினெட்டுநாள்
பாரதம் ..................

குறிப்பு :

இது, பாரதக் கதையின் தொடர்பினதாகும். முதலில் ''வித்தகன் தருமராசன் வேந்தநல் சரிதை தன்னை'' என்றுளதால் பாரதத்தை முழுதும் பாட எண்ணி இயற்றியுள்ளார்.

கடைசியேடு துண்டாக உள்ளது. அரவான் என்பவனை போர்க்களத்தில் பலியிட்ட செய்தியாகத் தெரிகிறது.

—★—★—

வரிசை எண் : 3654 சுவடி எண் : 1677-a

# ஏரெழுபது

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 400 அளவு : 26½×3 செ.மீ

கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : கம்பர் பொருள் : கவிதை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நான்றர்க்

பார்புகழு வேந்தர் பரிபா லினச் சிறப்பால்
யேர்புகழும் பூமிக் கியல்புகளாங் காராளர்
தார்புகழும் நான்மறையார் தான் திகிரி மேலினிய்
சீரெழுதும் வெள்கோட்டு திருவடிசீர் காப்பாமே !

முடிவு :

பார்வாளி நன்மனப்பருணி கார்குதி வாளி
கார்வாளி வளவர்பிரான் கரவேரி நதி வாழி
சீர்வாளி பெருக்காளர் பெருஞ் செல்வக் கிளை வாவி
யேர்வாளி யெழுபத் தொன்பது வளநாடே ! — 72

யேரெழுபது முற்றும

குறிப்பு :

கவிச்சக்கரவர்த்தி கம்பர் சோழநாட்டு வளங் கூறுவான் போந்து, வேளாண்மைக்கு இன்றியமையாத ஏரினைச் சிறப்பித்துப் பாடிய பாடலாகுமிது.

இதன் பின்னர் 'தடமார்பன் மாதோடு வனம் புக்குநாவ்ல்' எனத் தொடங்கும் 3 வரிசைகளைக் கொண்ட ஏடொன்றுளது.

★ ★ ★ ★

வரிசை எண் : 3655 சுவடி எண் : 1677-b

## வாள் இருபது

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 300 அளவு : 26½ × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வரலாறு

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

நாவலந் தீவிற் பாண்டி மண்டல முதல்
நவ்ன்ற வெண்ணெழு தேசமு
நடாத்து செங்கோல் வழுதி யரசு
நிலையிட் டாளும் நானிலந்தனில் பாரதியின்
காவலன் பெருமை மாபிர சித்தி நமதிக
காசினிதனிற் தமிழுநூல் கற்றோர்கள்
பொற்பாக மாளி சொன்னியிற்
கருணைபெற வைத் தருவிலே

முடிவு :

மூதண்ட லோகமெங்குந் தன்னாணைக்குள்
மறுமுறை செல நடாத்து செங்கோன்
முழுது மொருநாளதிற் பகல வழுதி காவலாங்

முறமை பெற வரசியற்றி
யேதங்க ளண்டாகிரா வங்கநில மெங்கு
மிவர் காவலாய் நகர்தோறும்
மிருப்பூசி போகையில்ப் பொன்னூசியைக்

குறிப்பு :

தென்பாண்டி நாட்டு மதுரையில் செங்கோலோச்சிய மலையத்துவச பாண்டியன் பெற்ற பெருவாழ்வுடை மும்முலையாள் தடாதகைப் பிராட்டியின் வரலாறுடன் அவள் கைவாள் கொண்டு செங்கோலோச்சிய திறமும் பேசப்படுகிறது.

வரிசை எண் : 3656 சுவடி எண்: 1673

# சிட்டா ராகங்கள்

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 400 அளவு : 25×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இசை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சரிமா கரி சரி கரி சரி மப தம
பதப மாகரிச சரிமாக்ரி சரிச
மபத........ சரிரீசத பமப ரிம பத
மபதப மாகரிச சரிமாக ரிசரி கரிச

முடிவு :

சரசிருக சணாபிரியே சுரத வினா
கானா பிரியே. சஅஅன தயா தயே
மயைச்சுயே சரநகசுதம் மமவ மசுள
ளரணகி சலயெ சமமோ திதத கவிசன
யிரதயே. சாரோச சின நிலயெ மணிவலயே.
சாசிருக சரணபிரி யே.

குறிப்பு :

இதில், அரிகாம் போதி, காபூதி, தோடி, அடாணா, பயிரவி, கமாசு, கேதாரம் முதலான ராகங்களின் சுரங்களும், ரூபகம், ஆதிமுதலான தாளங்களின் முறையும் கூறப்பட்டுள்ளன.

குறிப்பு :

வரிசை எண் : 3657 சுவடி எண்: 1679

# இராமாயணப் பதம்

ஏடுகள் : 242 கி. எண்ணிக்கை : 8000 அளவு . 31×4 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அருணாசலக்கவிராயர் பொருள் : இதிகாசம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக
இராமாயணப் பதம்-பாலகாண்டம்
ஏாச ரசற்கும்

மக ராசனய்யன் மகாராசனீன்ற
மக ராசன் மிகு சூரிய வங்கிஷ ராசன்
சுகராசன் கோசலை நாயகி கைகேசி சுமித்திரையாந்
தேவியர் கைதொட்டரசன்
மிகராசர் பணிந்திட

முடிவு :

வருமறை யோர்த்மாசீர் வாதங் கொண்டு
மன்னுயிரைத் தன்னுயிர்போல மனதிற்கொண்டு
கருமுகிலா மேனிரெகுராமன் பூமி காத்திட்டா
ரொருகுடைக்குட் சேர்த்திட்டானே !

ராமாயணப் பதம் முற்றும்.

ஆகதரு 518. ஆக விருத்தம் 123. ஆக காண்டம் 6-க்குந் தரு 247. விருத்தம் 259. ஆகத் தருவிருத்தம் 506. ஸ்ரீராம ஜெயம்.

இந்த ஏடு எழுதினேன் முத்திருளப்பன்.

நன்றாக

காப்பேட்டில், ''இந்த ஏடு விசையா பட்டணத்தில் எழுதியது'' என்றுளது.

குறிப்பு :

இதில், பால, அயோத்தியா, ஆரண்ய, கிஷ்கிந்தா, சுந்தர, யுத்த காண்டங்கள் 6-க்கும் கீர்த்தனைகள் உள்ளன. எழுத்துக்கள் நன்றாக உள்ளன.

ஆசிரியர் அவையடக்கம், பாயிரம் மிக அழகாகக் கூறியுள்ளார். இராகம், தாளத்துடன், பல்லவி, அனுபல்லவி சரணங்கள் உள்ளன. முதலில், காப்பேட்டில் ''ஹரி: ஓம், ராமயாணப்பதம். நன்றாக, குருவே துணை'' என்றுளது.

வரிசை எண் : 3658 சுவடி எண் : 1680

# சோதிடம்

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 200 அளவு : 9½ × 2½ செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக
சந்நனக் கயறு
வாக்குண்டாம் × × × × தமக்கு
குமரன் துணை

நூல்

தனமருந்த மடிமாருந் திரியோதனன் தன்னுடனே
சூது பொருது பாக்கவும். அதினாலே பதினெண் குரோணி
பேரும் படையு மாண்டு சீனமயும் தன்மருக்காகின்ற

முடிவு :

ஒருநான்கு தோச முண்டு. நீ விசாரித்தகாரியம்
பலியாது செட்டு வெள்ளாமை
நாட்டுப் போக்கும் கணக்கும்,
பலியாது. ஒருவனாலே அனேகஞ்
சண்டை யுண்டு—தீது.

குறிப்பு :

இது, கயறு போட்டுப் பார்க்கும் சுவ்டி. கயறு போட்ட இடத்தில் நன்று, தீது என்ற குறிப்புகள் இருக்கும். அது கொண்டு செயல்புரிவது.

வரிசை எண் : 3659

சுவடி எண் : 1681.a

# கருவை யந்தாதி

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 500 அளவு : 11 × 3½ செ மீ
பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : அதிவீரராம பாண்டியர் பொருள் : அந்தாதி
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம் நன்றாக குருவே துணை

தீட்டும் பனுவற் கருவை யந்தாதித் தெரியல் நந்தை
சூட்டும் படிக்குத் துணைசெய்து வர சுடர்சூள்

நூல்

சீரணி கொண்றைச் சடைக்காடு முக்கண்ணுஞ்
செம்முகமும்
காரணி கண்டமு நான்கு திண்டோளுங்
கருவைப் பிரான

முடிவு :

பெரிருள் காட்டி மாசற்ற போதகமுங் காட்டி
யப்போத மல்கு
மருள் காட்டிச் சந்தத மானந்தங் காட்டி
யடரதை கங்கு
லிருள் காட்டும் பூங்குழல் யொப்பனை
பாகருருள றுத்துத்
தெருள் காட்டிப் பாதமலர் சூட்ட வென்றலை
சீர் பெற்றதே ! — 100

கருவை யந்தாதி முற்றும்
பால்வண்ணனாதர் யொப்பனை யாவுயம்மன் துணை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1645-c போன்றது. மிகச் சிறிய எழுத்துக்கள்.

வரிசை எண் : 3660 சுவடி எண் ; 1681-b

# திருக்கருவை வெண்பா வந்தாதி

எடுகள் : 13 கி. எண்ணிக்கை : 400 அளவு : 11 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அதிவீரராம பாண்டியர் பொருள்: அந்தாதி

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

நன்பான தென்கருவை நாதனார் தன் பேரில்
வெண்பா வந்தாதி விளம்பவே - பண்பாக
மைமலையு மேமலையு மாற்றுபுகழ் தமதத்த
கைமலையு மாமுகத்தோன் காப்பு.

நூல்

சீரணிந்த தென்கருவைச் செல்வனே யொப்பனையாள்
வாரணிந்த கொங்கை மணந்தோனே - காரணிந்த
கண்டனே நின்பொற் கழலல்லாற் காதலித்த
தொண்டனேற் குண்டோ துணை.

முடிவு :

மோன விரத முனிவர் விழித்துரங்கும்
ஞான துதியமுதம் நண்ணுவோர் - மானத்தி
னுள்ளிவதுந் தன்னைமறந் தொன்றுவதும் பால்வண்ணா
தெள்ளுவது நின்மலர்த்தாட் சீர். — 100

வெண்பா வந்தாதி முகிந்தது முற்றும்.
நன்றாக. பால்வண்ண நாதர் துணை
சுப்பிரமணிய சுவாமி துணை

குறிப்பு :

இது, திருக்கருவை மாநகரில் எழுந்தருளியுள்ள ஒப்பனையம்மை உடனாய பால்வண்ண நாதர் மீது பாடப்பட்ட அந்தாதி. வெண்பாவினால் அந்தாதித் தொடையாகப் பாடப்பட்டது. மிகச் சிறிய எழுத்துக்கள்.

★★—★★

வரிசை எண் : 3661 சுவடி எண் : 1681-c

# திருக்கருவைப் பயிற்றுப்பத் தந்தாதி

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 11×3½ செ.மீ.

பக்கத்திற்கு: 13 வரிகள் ஆசிரியர் : அதிவீரராம பாண்டியர் பொருள் : அந்தாதி

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி : ஓம் நன்றாக

ஆன கருவைப் பயிற்றுப்பத் தந்தாதிச்
சொல்ல லங்க முத்தி
ஞான வுருவாங் களவீச னளின சரண
மிசை சாத்த

நூல்

சீரார் கமலச் சேவடியைச் சிந்தை
யிருத்தி யுனதுதிருப்
பேரா யிரமு மெடுத்தோதிப்
பெம்மான் கருவை யெம்மானென்

முடிவு :

தெள்ளு செந்தமிழ்க் கருவை
வாழ்வுறுஞ் செல்வ போற்றி
நின் சீர்கள் போற்றியே —100
பயிற்றுப் பத் தந்தாதி முகிந்தது முற்றும்.

திருச்சிற்றம்பலம்.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1645-d போன்றது. மிகச் சிறிய எழுத்துக்கள். பாட வேறுபாடுகள் உள்ளன.

'பதிற்றுப் பத்தந்தாதி' என்பதனைப் 'பயிற்றுப் பத்தந்தாதி' என்று எழுதப் பட்டுளது.

வரிசை எண் : 3662 சுவடி எண் : 1681-d

# அபிராமி யந்தாதி

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 500 அளவு : 11×3½ செ மீ.

பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : அபிராமிப் பட்டர் பொருள் : அந்தாதி

நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

..........................கமலாலயனு
மதியுறு வேணி மகினனு மாலு மறையுமெண்ணித்
துதியுறு சேவடியாய் சிந்துரானனச் சுந்தரியே ! —7

முடிவு :

குழையத் தழுவிய கொன்றையந்தார் கமழ்கொங்கை வல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங் கருப்பு வில்லும்
விழையப் பொரு திறல்வேரி ஐம்பாணமும் வெண்ணகையு
முழையைப் போதவிழியும் பொற்றோடு முகிக்கின்றதே , —100

அபிராமி யந்தாதி முற்றும்
குருவே துணை செண்பகவல்லி துணை.
அபிராமியம்மன் துணை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 138/D-231 (முதல் தொகுதி) போன்றது. இதில், பிழைகள் மலிந்துள்ளன. முதலேடு இல்லை. 6 பாடல்களும், 7-ஆவதில் முதல் பாதியும் இல்லை.

வரிசை எண் : 3663 சுவடி எண் : 1681-e

# கலைசை யந்தாதி

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 500 அளவு : 11×3½ செ.மீ.

பக்கத்திற்கு: 9 வரிகள் ஆசிரியர்: தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்

பொருள் : அந்தாதி நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருமால் பிரமன் றெரிய தழலா
யருமா லுறநீண் டருளங் கணனெம்
பெருமான் கலைசைப் பதிபே ணியவா
விருமா மலமற் றெள்யே னுய்யவே ! —1

முடிவு :

ஈசனே திருக்கலைசை மேவிவா னிறைவனே
சிவகாமி நாயகி
நேசனே யருட் சிதம்ப ரேசனே நித்த நித்த
நெக்குருகி யேத்துவோர்
பாசவே ரறப்பதிக்கு நின்னிரு பாத
பங்கயம் போற்றி பொய்யெல்லாம்
வீசி மேலை வீட்டின்ப நல்குவாய்
மெல்லவந் தெனைத் திருத்தியே! —100

கலைசை அந்தாதி முற்றிற்று,
சுபமஸ்து

குறிப்பு :

விருத்தப் பாக்களாலான, அந்தரதித் தொடையாக பாடப்பட்ட நூறுபாடல்களைக் கொண்டது.

வரிசை எண் : 3664 சுவடி எண் : 1681-f

# திருநீற்றி மந்திரம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : $11 \times 3\frac{1}{2}$ செ.மீ. பக்கத்திறகு: 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிைல முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

கொண்டு கொண்டிட்ட குரு பதங்களுக்
கழகு கோலஞ் சமைத்த நீறு
கொடிய யெண்ணாயிரஞ் சமணரைக்
கழுவில் குலைத் தளங் கொண்ட நீறு

முடிவு :

வெண்டிசைப் பட்ட பொருளா லேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே ! —10

தலைவாசல் நின்று தலைமயிர் நூத்திய தய்ய நல்ல
வினி தான மருட்டுவள். வீட்டுக்கு வாவென்பள்
அவள் வீட்டிற் சென்றால்க் கதையா நடத்துவள்
கைப்பொருள் கேப்பள். கைப்பொரு ளில்லை யென்றால்த்
தலை தான் வலிக்குது போ போ யென வென்று தள்ளுவளே.

சிவமயம்.

குறிப்பு :

இதில், திருநீற்றின் பெருமையும், ஞானசம்பந்தரின் திருநீற்றின் பதிகமும் எழுதப்பட்டுளது, இடையிடையே ஏடுகள் இல்லை. இடையில் வெவ்வேறு பாடலும் செய்தியும் இடம் பெற்றுள்ளது.

இதன்பின் ஒரு ஏட்டில், ''செண்பகவல்லியம்மன் பேரில் விருத்தம்'' 'என்று ஒரு பாடல் உளது.

வரிசை எண் : 3665 சுவடி எண் : 1681-ஜ

# சிவபூசை விதி

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 300 அளவு : 11 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு: 12 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : சைவதோத்திரம்

நிலைமை: சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

அத்திரத்தினாலே புரோச்சித்துக்
கவசத்தினாலே வளைந்து கோடிட்டு
இருதயத்தினாலே சமதலஞ் செய்து
அத்திரத்தினாலே எட்டுத் திக்கும்
பத்திரங் கிள்ளி வைத்து

முடிவு:

தேவக் குய்யாயே நம வென்று
குய்யத்தில் அரலிப் பூச் சாத்த
சத்தியோ சாத மூர்த்தியே நம வென்று இரண்டு
முழுந்தாளில் செண்பகப் பூச் சாத்த அத்திராய நம
வென்று இரண்டு பாதத்திலும் நீலோற்பலஞ் சாத்த.

குறிப்பு :

இதில், சிவபூசை விதி முறைகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3666 சுவடி எண் : 1682-a

# பிறைக் குறி

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 15 அளவு : 27 × 3 செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர்: நாராயண ஆசாரியார் பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வைய்காசி மாசமுதல் மாற்களி மாசம் வரையும்
வடக்குயர்ந்து, தை மாசி சமமாகி, பங்குனி
சித்திரை தெற்குச் சாய்ந்தி டாமல்
மெய்யாகப் பிறை காணப் பூமி யெங்குஞ் செழித்தோங்கும்
விலகிக் கண்டால் பொய்யாத வேந்தருக்கு போதாது.
அன்னமது பொன்றுந் தானே

முடிவு :

மீனாடு தெக்குயரம் மிக்கயெட்டு வடக்குயரம்
தானா மகரகும்பஞ் சமமாகும் — மானேகேள்
சொன்னபடி சோம னிராவிடிலோ கோன்மடிவான்
அன்னமறி தாமென் றறி !

குறிப்பு :

இவ் விருபாடல்களே உள்ளன. இது, மூன்றாம் பிறைச்சந்திரனைப் பார்த்து வடக்குயரக், கிழக்குயர சமனாக இருப்பது கண்டு சோதிடம் கூறுவது.

இதன் 4(17) வது ஏட்டின் இறுதியில் 'இவை ரேவதி நட்சத்திர உரிச்சொல் முற்றும், என்றுளது.

வரிசை எண் : 3667 சுவடி எண் : 1682-b

# சோசிய நட்டா முட்டி சாத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 400 அளவு : 27×3 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுற்றதினம் பஞ்சாங்கஞ் சூழுங் கிரகமுடன்
பத்தியா யெண்ணிப் பயனறிய—சித்தியென்றே
அன்பலத்தி லாடு மரனார் பயந்தெடுத்த
கம்பமதக் களிறே காப்பு.

முடிவு :

இந்த வாரங்களில் ஒத்தைக்கண் வாரம் — சமன்.
ரெட்டைக் கண்வாரம் நலம். சுபகற்மங்களுக்கு
சனி செவ்வாய்க் கொடிய வார மென்று
பேர் விலகவும்.

குறிப்பு :

இது, நட்ட சாதகம் போல் சோதிட வகையைச் சாரும்.

—★★★—

வரிசை எண் : 3668 சுவடி எண் : 1682-c

# உள்ள முடையான் வாக்கியம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 200 அளவு : 27×3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஞூரிய உள்ளமுடையான் வாக்கியம்

வாக்குண்டாம் .............. தமக்கு.
எண்ணுங் கருமங்க ளெல்லா முடித்தனர்க்கு
நண்ணு கலைகள் நையித்து நல்குவாய்
கண்ணுதவி முண்டத்தா ரண்டத்தா மூலத்தார்
நாலஞ்சேக் கண்டத்தார் பெற்ற களிறு.

முடிவு :

கலகம்
விஷம்
உத்தியோகம்
லாபம்
தனம்

குறிப்பு ;

இது, சூளாமணி உள்ள முடையானின் வேறாயதுபோல் காணப்படுகிறது.

வரிசை எண் : 3669

சுவடி எண் : 1682-d

# இராசி உரிச் சொல் அறிவது

ஏடுகள் : 24 கி. எண்ணிக்கை : 800 அளவு : 27 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

போமரித காவற் காலிப் பெரிய மௌகம்பின்
கொச்சைக் கூறிய மெல்லை மெத்தை
மேடப் பொகுண்டைப் பாண்டில்ச் சீரியே
விடையே புல்லந்தே சேவே
குந்திடப்ப பொறாமந் தாரமேக வஞ்சன
வினைதன்டி யாள் மிதுனந்தானே

முடிவு :

சவுண முத்தும்

இஞ்சி தேன் தயிர் ரெண்ணை யிலைக்கறிக்
கஞ்சி கறபொடுக் காரிரு ளுண்டிராய்
வஞ்சந் தங்கிய மாங்குயில் பூங்குழ
லஞ்சி ஓடியரையி லொளிப்பாரே!

குறிப்பு :

இதில், வாரங்கிரக உரிச் சொலறிவது, தெத்தயோலை, அமிர்தயோகம், மரண யோகம், சித்தியோகம், சிலயோக மறிவது, சையோகம், சகடயோகம், கிளமை பிறந்த நாள், நட்பு பகை, நட்பாச்சி யுச்சம் நீச மறிவது, தானிய மாதம் நாள், தானியம் வாங்க, எண்ணெய் விட நாள், சவரஞ் செய்ய நாள், குளிகனிலை அறிவது, 12 லக்கினத்துக்குத்தான மறிவது, நவக்கிரக காரகன் அறிவது, தீய்க் கோளறிவது, கிரகப்பார்வை அறிவது, நட்சத்திர சந்தேகம், சந்திப்பு, லக்னச் சந்திப் பறிதல், குழந்தைகளுக்கு அன்னங் கொடுக்க நாள், ஆண்டு நிறப்பநாள், மயிர்வினை களைய, பல்லுக்கீரி விளக்க நாரியர், பள்ளிக்கிருத்த, நட்சத்திர கறுடு அறிவது, கலியாண நாள், பொன் பூண நாள், கிரகங்கள் கேந்திரம், மாத லக்ன மறிவது, சவுனம் பார்க்க ஆகிய தலைப்புகள் உள்ளன.

'சவுனம் முற்றும்' என்றுளதால் இது முழுச்சுவடி போலும்.

வரிசை எண் : 3670 சுவடி எண் : 1682-e

## நாலடியார் வாக்கியம்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 27 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: இலக்கியம்

நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பன்றிக்கூன் பத்தலில்த் தேன்மா வடிந்தற்றே
நன்றறியாய்ப் புல்லருக் கதைத்தானு ரைக்குங்கால்
குன்றின்மேல் கோட்டின் தலைபோல தலைசிதறிச்
சென்றிசையாவா ஒனஞ் செவிக்கு

முடிவு :

அடுத்தது காட்டும் பளிங்கு அதுங்
கடுத்தது காட்டும் முகம். என்றது

மனதில் கடுப்பை முகத்தனா லறியலா மென்றவாறு.

இளையொன்று ரெண்டு வகிர் செய்து நின்னிடையேந்து கொங்கை
குளையொன்று ரெண்டு விளியணங்கே கொண்டகோபந் தணி
மளையொன்று ரெண்டு கைமானாபரணுந்தன் வாசல் வந்தால்
பிளையொன்று ரெண்டு பொறுப்பதல்லோ கடன் பேதையற்கே !

குறிப்பு :

இதில், முதலில் 'நாலடியார்' என்றும், பின்னர் 'குறள் அறிவது' என்றும் உளது. செய்யுட்கள் பிழைமலிந்து காணப்படுகின்றன.

பின் ஒரு ஏட்டில், 'கொள்ளவே' எனத்தொடங்கும் பாடல் காணப்படுகிறது.

வரிசை எண் : 3671 சுவடி எண் : 1683-அ

# லெக்கின பாவகம்

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 600 அளவு : 22×4 செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

இலக்கண பாவகம். நன்றாக

இலக்கின முதையங் கீர்த்தி மூர்த்திமா னென்பதாகும்
இலக்கினத் ததிமனாட்சி யுச்சநட்பேரி நிற்க
யிலக்கினத் ததிபனானோன் கேந்திரத்திரிகோண மெய்த
யிலக்கினந் தன்னை யந்த அதிபனை யெளிற்கோள் நோக்க —1.

முடிவு :

செவ்விய செவ்வர் யந்த வியனாத னாகச் சேரி
செவ்விய லுளவிலீயுமுடன் பிறப்பின்த்தோர் கீயுங்
கவ்வை கொள் காரியாகி லுலோபியாங் கடுத்தற்கீயும்
செவ்விய வெய்யோனாகில் வேதியர் வேந்தர்க்கீயும் —3.

பனிரண்டாம் பாவகம் முற்றும்.
பெற்றவள் துணை.

காலம்:

1017-ஆம் வருடம் மார்கழிமாதம் 22-ந் தேதி
சுவயன்னீதி 32 முற்றும்.
ஆக பாவகம் 12-க்கு பாட்டு —126.

குறிப்பு :

இதில், 12-ஆம் பாவக பலன் வரை முழுமையாகத் தெளிவாக உள்ளது. பிழைகள் அதிகமாக உள்ளன.

இது எமது சுவடி எண் 1393/D-2155 (10-ஆம் தொகுப்பு) போன்றது.

வரிசை எண் : 3672 சுவடி எண் : 1683-b

# கிரக நோக்கு

ஏடுகள் : 7½ கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

உதையமும் யேழுந்தானு முழுநோக்
கெல்லாலர்க்கும் நோக்கும்
புதிய பொன்னவழ்கைந் தொன்பான்
முழுநோக்காய் வகுப்பர் சேய்க்கு
மதிக்குமோ நாலோ டெட்டை
முழுநோக்காய் வகுப்பர்

முடிவு :

பன்னிரண் டார்ரிலெட்டில்
பதியலக்கணத்து னாதன்
தன்னுடன் கேது ராகு
சார்ந்திட திசையபகாரம்
சென்மவான் யெட்டில் னாதன்
யிவரொடு சேர்ந்த கோள்க

ளன்னவர் திசையப காரம்

........ ............ .........

குறிப்பு :

இதில், கிரகங்களுக்கு ஆட்சி, யுச்சம், பகை, நீசம் அறிய, சாதகவாரி, ஆயுள்ப் பாவகம், ஆகிய தலைப்புகள் உள்ளன. இது, முன் சுவடியோடு தொடர் புடையது.

வரிசை எண் : 3673 சுவடி எண் : 1183-c

## இடைக்காட்டார் பஞ்சாங்கம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×4 செ.மீ

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : இடைக்காடர் பொருள் : சோதிடம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீ ஓம் நன்றாக

பிரபவ வருஷம் : மழை மிகுந்து வருசிக்கும்
வியாதியால் மனுடர் மாளுவார்கள்
பசுக்கள் வற்திக்கும். கார் மழை யுண்டு
ஆமணக்கு பருத்தி உப்பு குறையும்

யுபவ வருடம் : மழை மிகுதியுண்டு
வெள்ளாமை விளையும். கார்மழை யுண்டு

முடிவு:

அட்செய வருஷம் : மழை மத்திபம்
மனுவுக்குப் பீடை யில்லை. கோடைகாலம் போல
விளையும், வசந்த காலமென்றியவும்

குறிப்பு :

இதில், பிரபவ முதலான 60 ஆண்டுகளுக்கும் வருட பலன் கூறப்பட்டுளது.

வரிசை எண் : 3674 சுவடி எண் : 1684-a

# நெஞ்சறி விளக்கம்

ஏடுகள் : 14 கி. எண்ணிக்கை : 300 அளவு : 15×3 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : கணபதிதாசர் பொருள் : தத்துவம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

**தொடக்கம் :**

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

திருச்சிற்றம்பலம்

நெஞ்சரி வளக்கம்

பூதாதி ஓரைந்து பொரியந்து புலனைய்ந்து
கன்மமைய்ந்து ஞான மய்ந்து
தீதாய கரணம் னான்கு அரிவொன்று
திசைநாடி பத்து திசை வாய்வு பத்து

**முடிவு :**

இதுக்கு திருமந்திரம

மத்தளம் ஒன்றுண்டு தாளம் பலவித
மத்தளத் துள்ளே ஒருகள்ள னிருப்பான்
மத்தளம் விட்டு கள்ளன் வெளிப்பட்டால்
மத்தள ஓசையு மண்ணுண்ட வாறே.

திருச்சிற்றம்பலம்

**குறிப்பு :**

இது, சரீர சித்தாந்த முரைப்பது, பிழைகள் அதிகம். நெஞ்சை முன்னிலைப் படுத்தி அறவுரை கூறுவது போல தத்துவ உண்மைகளைக் கூறி நாகை நாதரை வணங்கி உய்ய வேண்டும் என்று கூறுகிறது. அச்சாகியுளது.

வரிசை எண் : 3575 சுவடி எண் : 1684-b

# மீனாட்சியம்மன் பேரில் அகவல்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : 15 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : சிதம்பர சிவாமிகள் - போரூர் பொருள் : சைவத் தோத்திரம்-அகவல் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுள்ளது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக

சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக் கருங்குழலே - ஆராயும்
வேதமுத லாகிநின்ற மெய்ப்பொருளே மின்னொளியே
ஆதி பராபரையே அம்பிகையே - சோதியே
அண்டரெல்லாம் போற்று மரும்பொருளே ஆரணங்கே
எண்டிசைக்குந் தாயான யீசுவரியே - தெண்டிரையில்

முடிவு :

ஆசுமதுரந் சித்திர வித்தார மென்று
பேசுகின்ற உண்மைப் பெருவாக்கும்—நேசமுடன்
தந்தென்னை யாட்கொண் டருளிச் சற்குருவா
யென்னிடத்தில் வந்திருந்து புத்திமதி விளைத்துச்—சந்ததமும்
நீயே துணையாக நின்றுலெட்சித் தங்கயற்கண்
தாயே நின்றாள் சரணம்

அகவல் முற்றிற்று
மீனாட்சியம்மன் துணைசெய்ய வேண்டியது
குருபாதமே கெதி

குறிப்பு :

இது, "மீனாட்சியம்மை கலிவெண்பா" எனப் பேசப்படும். கலிவெண்பா யாப்பாலமைந்தது. மதுரை மீனாட்சி அம்மையினுடைய புகழைச் சிறப்பாகவும், நிந்தாத் துதியாகவும் கூறுவது. நல்ல சந்த முடையது. வழிபாட்டுக் குகந்த நூல். எமது சுவடி எண் 831-b/D-1316 போன்றது இந்நூல், அச்சாகியுளது.

வரிசை எண் : 3676

சுவடி எண் . 1684-c

# சரநூல்

ஏடுகள் : 28    கி. எண்ணிக்கை : 500    அளவு : 15×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள்    ஆசிரியர் : அறியக்கூடவில்லை (பரமேசுவரன்)

பொருள் : சோதிடம்    நிலைமை : நல்ல நிலை    முழுமை : முற்றற்றது

எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

குருமொழி விபரம்

பரமேசு பரரைத் திருமுகம் நோக்கிப் பார்பதியம்மன்
கேழ்க்கிர உத்தாரம்.

சுவாமி ! வாக்கினாலே நாலுவேத மாறு சாஷ்த்திரம்
பதினெண்புராணம், பஞ்சாங்க மத்த பல சாஷ்த்திரத்தினாலே
விசாரித்துச் சொல்லாமல் நினைத்தாப்போலே ஒரு
காரியஞ் சொல்லச் சாஷ்த்திர முண்டோ

முடிவு :

சனி செவ்வாய் நாயறு யிம்மூன்றுனாளுங் காலமே
சூரிய னியங்க வேணும். வியாழத்துக்கும் பூருவ பட்சத்—
துக்கும் யமர பட்சத்துக்கு மிரண்டிலையும்—னியங்க வேணும்
பூறுவ பட்சத்துக்குச் சந்திரனியங்க வேணும். அமர
பட்சத்துக்குச் சூரிய னியங்க வே.........—

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 834-a/D-1459 (ஆறாம் தொகுப்பு) போன்றது. அச் சாகியுளது. 'ஸ்வர சாத்திர' மென்ற வடமொழி நூலைச் சார்ந்ததாகும். பார்வதி யாள் கேழ்க்க பரமேசுவரன் கூறியதாக உள்ளது.

வரிசை எண் : 3677 சுவடி எண் : 1685-a

## கும்மிப் பாடல்

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 700 அளவு : 30 × 3 செ மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : நாராயணன் பொருள் : கும்மி

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

திருவளருங் கடைய நகர்
செல்வம தென்னாளும் ........
அருமை யரிசேரர் வேண்டுதலால்
சரவண முத்தெ...... ......
தருநிக ராமன்ன சத்திரந் தெப்பமதுங்
கட்டிவைத்த ..........

முடிவு :

வள்ளல் சரவண முத்தேந்திரன்
மரபிலுள்ளோருந் தழைத் தோங்க
கள்ளவிழ் பூங்குழல் மாதரசே நீங்கள்
கதித்துக் கும்மி யடியுங்கடி.

குறிப்பு :

இது, கடைய நகரில், அன்ன சத்திரமும், தெப்பக்குளமும் கட்டிவைத்த வள்ளல் சரவணமுத்தேந்திரன் மீது அருள்சுதன் நாராயணன் என்பார் பாடியது.

இரண்டு பத்தியாக எழுதப்பட்டுளது. தலைப்பு இல்லை பிழைகள் அதிகம்

★★★★

வரிசை எண் : 3678 சுவடி எண் : 1685-b

## சரவண முத்தேந்திரன் கும்மி

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 300 அளவு : 30 × 3½ செ மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : நாராயணன் பொருள் : கும்மி

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக கும்மிப் பாடல்

செந்திரு வாழன்ன சத்திரமுந்
தெப்பமுஞ் செய்ததைக் கும்மியதாய்ப் பாட
கந்தன் துணைவ னிபமுக வைங்கரன்
கட்டி வினாயகன் காப்பாமே.

முடிவு :

ஐந்தொழில் கண்ணாளர் வீதிகளும்
தெலுங் காதியர் ஆயற் தன் வீதிகளும்
சுந்தரஞ் சேரும் பொதுமாதர் வீதியுஞ்
சூத்திரர் வாழ் தெரு வீதிகளும்

... .. .... ... ... ... ... ...

குறிப்பு :

இது, முன் பிரதி போன்றதே.

வரிசை எண் : 3679 சுவடி எண் : 1686

# சோதிடம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 200 அளவு ; 10 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காணபாதியே (கணபதியே)
காண்டபோதே வெத்தியாகும்.
காணபதி யெண்டயிட காலங்கயிடும்
வள்ளுவினை சேர்ந்திட (ரது)
காணபாதியே தேர்த வெலினகலம்
ணா(ந)ம்பி யிருக்கி உண்டே ணமக்கு
உத்தமம்.

முடிவு :

அந்தகன் தன நெ கானட அல
ஆவத்து வந்ததிறும். தெயிவம்
ஒடி பொகம். கேது வாறும்.
சாவி ஒலெ வறும். னியிய
கோரிண காரியம் காயி குடு
ஆது மாத்தி விம்.

குறிப்பு :

இது, கயறு போட்டுப் பார்க்கும் சுவடி. பிழைகள் மலிந்து கிடக்கின்றன. படித்தறிவது கடினம்.

வரிசை எண் : 3680

சுவடி எண் : 1687-உ

# கொக்கோகம் — உரையுடன்

ஏடுகள் : 109 கி. எண்ணிக்கை : 2300 அளவு : 25½×3 செ.மீ.
பக்கத்திற்கு 7 வரிகள் ஆசிரியர் : வரதுங்கபாண்டியன் பொருள் : காமநூல்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி: ஓம் நன்றாக
கடவுள் வாழ்த்து

திருமலி கருப்பு வென்றிச் சிலையினா லுலக............
...............தும்புகழ் புனை யேகவீரன்
விரிகடற் பிறந்த திங்கட ..............
............மலி மலர்க்கை வாளி மைந்தனைச் சிந்தை செய்(வாம்).

முடிவு :

வெண்பா

கற்றறிந்து மூற்கராய்க் காமநிலை நல்லார் போல்
மற்றொருதெய் வத்தை வணங்காவே—பொற்றொடியார்
மாற்றடவு நெஞ்சில் வரும்புலவி நீக்கயவர்
காற்றடவு மென்னிரண்டு கை. —107

ஆக அத்தியாயம் 6-க்கு
விருத்தம் 334. நன்றாக

குறிப்பு !

இதில், முதலத்தியாயம், இரண்டாமத்தியாயம் போக நிலை முதல் 6-ஆம் அத்தியாயம் முடிய உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை.

இது, எமது சுவடி எண் 1416/D-2113 (பத்தாம் தொகுப்பு) போன்றது.

வரிசை எண் : 3681 சுவடி எண் : 1687-b

# மதன சாரம் (மதன நூல்)

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 800 அளவு : 26 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : காமநூல்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சாபநெடும் புருவத்தி னிடையே யோடுஞ்
சங்கிலி நாடியை யுகிராற் சருவக் காம
தீபமெனுங் கபாலந் தொட்டங்கு மூலச்
சிற்பரத்தைச் சுழற்றி விரற்கடையாற் றூண்டி
நாபிதனில் வவ்வுமிட்டு நாற்கோணங் கீறி
நாலெழுத் திரட்டிதனை மருவ மார்பிற்
றாபித்தங் கிதழ்பருக்கக் கொங்கை யூடு
தழற்கதிரைச் செலுத்திடினுஞ் சாதியாதே ! —என்றது

முடிவு :

............றாகிலு மாமுனி தெய்வ மங்கை
மத்திம மொன்பான் பூதம் மிதியிலா
நாகங் காந்தையத்..................
பேச்சி யாக்கியும் பன்னிரண்டாங்
கொத்தலர் குழலியானா ளல்குலில் குறித்துத் தெ.........

மதனனூல் முற்றும். நன்றாக.
குருபாதம். சிதம்பரந் துணை.

குறிப்பு :

இது, எமது ஆறாம் தொகுப்பு சுவடி எண் 842/D-1371, பத்தாம் தொகுப்பு சுவடி எண் 1383/D-2112 போன்றது. 113-ஆம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது இடையிடையே சக்கரங்களும், மந்திரங்களும் உள்ளன. இதில், மூவிருடி, தெய்வ தத்துவம், இருடி தத்துவம், நாக தத்துவம், காந்திருவ தத்துவம் முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3682 சுவடி எண் : 1688-a

## சல்லிய நூல்

ஏடுகள் : 26 கி. எண்ணிக்கை : 600 அளவு : 17 × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 8—9 வரிகள் ஆசிரியர் : சல்லியர் பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெள்ளறுக்குத் துவச்சு........... போட்டுப் புதைக்கவும்.
வேதமாலயன் விண்ணவர் போற்றியே............பொன்னடிக்கமல .........

நூல்

ஆதியா மாந்தரீகம் ஆய்ந்துள முனிவர் தம்மில்
நீதிசேர் சல்லிய னென்போன் நிலைத்திடச் செய்த நூலை
தீதறுந் தமிழினாலே செப்பவே (குழக்கை) யான்றன
சோதிசேர் செம்பொற்பாதஞ் சூட்டினேன் சென்னி மீதே ! —1

முடிவு :

குருவருளாலே சல்லியன் கூறிய தொழில்க ளெல்லாங்
குருவருளாலே கண்டு குறிப்புடன் அறிய வேணுங்
தருவருள் தானே தெய்வங் குருவருளாலே முத்தி
குருவருள் பாத மாண்டுங் கொண்டருனான் சென்னி மீதே ! —100

முத்தும். கடவுள் துணை

குறிப்பு :

இது, எமது சுவடி எண் (6-ஆம் தொகுப்பு) 929-b/D-1418 மற்றும் (7-ஆம் தொகுப்பு) சுவடி எண் 1253/D-1977 போன்றது.

××××

வரிசை எண் : 3683 சுவடி எண் : 1688-b

# மாந்திரீகம்

ஏடுகள் : 31 (27—57) கி. எண்ணிக்கை : 600 அளவு : 17×4 செ.மீ.
பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சக்கதேவி மந்திரம்

அங் உங் எங் ஐயும்
ஒங் கிலியும் யிருக்கு ங்
முருவயா நம சிவாய
ரரரர மனதல்லி
சக்கதேவி ரரரர.

(இரண்டு பக்கத்திலும் சக்கரங்கள் இருக்கின்றன)

முடிவு :

மிகங் கோவியாது அங் ஐ என்று
செவிக்க மான் மரை புல்வாய் வேங்கை
வரிப்புலிக் காட்டுப் பன்றி சுணங்கள் எருது
இவையெல்லாம் ஒடிப்போம்
ஈநாவென்று செவிக்க மிருகவாய் கட்டும். —64.

குறிப்பு :

இதில், அனுமார் மந்திரம் முதலான மத்திரங்கள் உள்ளன.

வரிசை எண் : 3684 சுவடி எண் : 1688-c

# ஒட்டியம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 250 அளவு : 17×4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : ஒட்டிய முனிவர் பொருள் : சோதிடம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

நன்றாக

சீரணி கொன்றை சூடுஞ்
செஞ்சடை யுடையான் பங்கில்
நாரணி கெவுரி முற்கண
னாகிய புவனன் பெத்த
காரண யுமையாள் சோதி
கருங்களிற் றானாய் நிற்கும்
பூரணி பெற்ற யானை
முகத்தனைப் போத்தி செய்வாம்: —1.

முடிவு :

ஒன்று புது வுருச்செய்யவேண்டும் —30
ஒட்டியம் முற்றும்.
தேவி பிரயும். செகதீசுபரி லட்சிக்க வேணும். ஓம்
(சக்கரம் உளது)

குறிப்பு :

இது, எமது சுவடி எண் (ப-ம் தொகுப்பு) 21-b/D-1476 போன்றது.

வரிசை எண் : 3685 சுவடி எண் : 1688-d

# மந்திர சாத்திரம்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 300 அளவு : 17×4 செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உச்சாடனம்

அரகர அரகர சிவாய நம
மசிவயந நமசிவய யநமசிவய
யநமசி யெறி யெறி உதச்சாடு

முடிவு :

தீப தூபங்குடுத்து குளிய மாடி
மனெறு 108 உருச் செவித்து
வயலில் புதைக்க விளையாது.

குறிப்பு :

இதில், பலவகையான மந்திரங்கள்,
சக்கரங்கள் உள்ளன.

வரிசை எண் : 3686 சுவடி எண் : 1688-e

# அகத்தியர் ஞானம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : 17×4 செ.மீ

பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மந்திரம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உதிரமதே ஓமென்ற மூலசிவன்
ஓங்காரப் பிரணவமு மிதுவு மாட்சு
பதியான வட்டமிது கிணேசன் வீடு
பாங்கான குண்டலியும் வல்லபையு மாக
விதியான விதியெல்லா மிதினாலா கும்
வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டு மிங்கே

முடிவு :

உத்தமனே அச்சுளிக்குள்ளுரைத்துக் கொள்ளும்
கூடவென மூலாங்காரங் கொண்டே எத்து
குறைக்க வென்றால் சிகாரத்தைக் கீழ்க்கொள்வாயே. — 18

முற்றும்
சண்முகத் தெய்வந் துணை

குறிப்பு :

இதில், பலவிதமான மந்திரங்கள் உள்ளன.

வரிசை எண்: 3687 சுவடி எண் : 1688-f

# ஒல்லியம்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 500 அளவு : 17 × 4 செ.மீ.
பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்ரதிம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

நன்றாக

குருபாதம் போத்திக் குணபதியைக் கைதுதித்துத்
திருவான ஒல்லியநூல்ச் செப்பவே — கருவான
வாதிபதங் காப்புக் ககண்டவெளி முட்டிநின்ற
சோதிபதந் துதித்தே சொல். — 1

முடிவு :

என்னைக் கண்டுபார் யெப்பிணி வாதை
கள்ளத்தன மெல்லாம் வாய்விட்டலறிப்
போகச் சிவா.

ஓம்காளி ஓம்நம காளி நீலகாளி
நீல பத்திரகாளி சறுவ சிங்காங்கு
வங்காரங் ............

குறிப்பு :

இதில், நாவடக்கம், தீயேத்த, வயித்தியம் ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3688 சுவடி எண்: 1689

# பாரதம் — உரையுடன்

ஏடுகள் : 224 கி. எண்ணிக்கை : 7500 அளவு . 36 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : வில்லிபுத்தூரார் பொருள் : இதிகாசம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.
மகா பாருதம்

ஓத வினையகலும் ஓங்கும் புகழ் பெருகும்
காதல் பொருளனைத்துங் கைகூடும்—கீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்பேர் தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்.

நூல்

படையெடுழிசசிச் சருக்கம்
படந்த கானகந் திரிந்துமீண் டன்புடன்
பணிந்த பஞ்சவர்க் காக
கடந்த ஞானியர் கடவுளர் காணகில்லாக்
கழலினை சிவப்பேர்

முடிவு :

........ ...திருக்கிட்டு அதிசயித்தார்கள். இப்பால்
அரபக் கொடியுடைய............ சமஷ்த்தான
பேரும் நன்றாய்க் கூடி அமறகளமே வந்து
.............

குறிப்பு :

இதில், பதினாலாம் நாள் போர்ச் சருக்கம்—செயித்திரதன் பாடு என்ற தலைப்பில் 2 ஏடுகள் மட்டும் உள்ளன. முதலாம் நாள் போர்ச் சருக்கம் முதல் இருக்கிறது

இது, எமது 6-ஆம் தொகுதி சுவடி எண் 983/D-1179 போன்றது,

வரிசை எண் : 3689 சுவடி எண் : 1690-ஆ

# நாமாவளி

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 300 அளவு 34×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள்: தோத்திரம்

நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தெலுங்கு

தொடக்கம் :

அறியக்கூடவில்லை

முடிவு :

அறியக்கூடவில்லை

குறிப்பு

இதில், அரிகேச நல்லூர் எனவும், அன்னமாச்சரியார் எனவும் காணப்படுகிறது.

வரிசை எண் : 36-0 சுவடி எண் : 1690-b

## பூலீசர் பேரில் தாய் மகள் ஏசல்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 34 × 3 செ மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஏசல்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

சீரணி யரிகை யாளுஞ்
செல்வர் பூலீச்ர் மீதில்
தாரணி புகழ வேண்டி
தாய்மக ளேசல் பாட
(வா)ரணி முலைமா தீன்ற
வள்ளி நாயகன்முன் தோன்றுங்
காரண மான செல்வங்
கணபதி காப்புத் தானே.

முடிவு :

கொப்பை வளைத்து மலர்கொய்ய யிப்படிப்
பதறி யிளுத்துதடி தாயே —11
அந்தமுள்ள திருவ்யது யெந்தவிதங்
களத்துதடி மகளே — மன்

குறிப்பு :

தாயும் மகளுமாக ஏசிக் கொள்வது போல் ஈசன் புகழைப் பாடுமாறு அமைந்து உள்ளது.

இது, சிற்றிலக்கிய வகையைச் சாரும்

வரிசை எண் : 3691 சுவடி எண் : 1690-c

# பரந்தாமன் வண்ணம்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வண்ணம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

தான தானந்தனனா தன தான தந்தனனா
தன தான தந்தன தான தந்தன
தான தந்தன தந்தனந் தான

நூல்

வேலை நெடுந்திரை யாகிய பாய் விரிந்த திலே
நிமிராயிரம் பணநாக பஞ்சணை மீதுரங்கிய
நன்பரந்தாமா

முடிவு :

யினியாரை நொந்து பிரயோசனந்
தனியே கிடந்து புலம்புமென் பிராணன்
அனுகூல பவகறம விதியே ! — 1

வண்ணம் முற்றும்
சிவாகமி துணை.

குறிப்பு :

தலைப்பில்லாததால் இன்னவண்ணமென்று அறியக்கூடவில்லை. முடிவிலும் வண்ணம் என்று மட்டுமே உளது. செய்யுள் முதல் கருதித் தலைப்பிடப்பட்டது. இது சிற்றிலக்கிய வகையைச்சாரும். கேசாதி பாதமாக பேனியழகை யுரைப்பது, முன் உள்ள சந்தத்தின்படி பாடக்கூடிய கழிநெடிலடி ஆசிரியர் விருத்தம். ஒவ்வொரு பாதி வரி முடிவிலும் அரைக்கால், கால், காலே அரைக்கால் என்று குறியிடப் பட்டிருப்பது.

வரிசை எண் : 3692 சுவடி எண் :1690-d

# மூவரையான் பேரில் வண்ணம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 20 அளவு : 34 > 3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வண்ணம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக தன்னதன ......... தன்னனா

வெளியொரு பச்சை மாலை
வாடின துடர்க் கிசைந்த
புதுவாயிலுற்ற கோதை
நாயகி கருத்து கந்து
வெளியுகந்து தந்தை தொ—
லருளுக் கிந்து விஞ்சை பாணி

முடிவு :

சொல்லோசை கனவிலும் பிறந்திடாமல்
வெகுரசம் பிறந்த வாயி
நகை புரத்த நளின வான்
யிகல்வேந்தர் தோளுஞ் சேனை
மூற்கவான். — 18

குறிப்பு :

இதில், எட்டில் ஒருபங்கு செய்யுளே உள்ளது.

வரிசை எண்: 3093 சுவடி எண் : 1690-e

# குமரேச சதகம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34×3 சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : குருபாத தாசர் பொருள் : சதகம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

தருணத்தி லுதவி செய்யாத நட்பாளர்பின்
 தந்தென்ன தராம லென்ன
தராதர மறிந்து முறை செய்யாத
 மன்னரைச் சார்ந்தென்ன நீங்கிலென்ன
பெருமையுட னாண்மை யில்லாததொரு
 பிள்ளையைப் பெற்றென்ன

முடிவு :

ஒட்டியை குருனிமையிட்டாலும்
 நயமில்லா யோனிகண்ணாகி விடுமோ
வுலவுகன கற்பூரவாடைபல கூட்டினும்
 வள்ளியும் குணமாறு மோ.
மட்டியளக் காயிரம் புத்திசொன்னாலும்
 மதில் மாற்க மரியாதி வருமோ
மயிலேறி விளையாடும் குகனீ புவயல்நீடு
 மலைமேவு குமரேசனே ! —?

குறிப்பு :

புல் வயலில் எழுந்தருளியுள்ள குமரேசர் மீது பாடிய பாடலாகுமிது. 100 பாடல்களைக் கொண்டது. நீதிகளைப் போதிப்பது. அச்சிடப்பட்டுள்ளது. எமது 6-ஆம் தொகுதி சுவடி எண் 928/D-1132 போன்றது.

வரிசை எண்: 3694 சுவடி எண்: 1690-f

# நாராயண சதகம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34 × 3 செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வெண்மணி நாராயணபாரதி பொருள் : சதகம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி : ஓம்

பூமேவுந் திசைமுகனை யுந்திதனி லீன்றதும்
புனிதவே தாக மெல்லாம்
புருஷோத்த மின்றே யவ மென்பதும்
பூசுரர் பொருந்து மந்திர கற்பமும்

முடிவு :

சாதிகுல மொன்றில்லை வீரர்குமனு
..............பதமிக யோகிக்கு
வினை செய்வோரில்லை பொய்யா முன்
சாட்சி யில்லை
மாத ரொ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ...
மகிளாத பேரில்லை
மணவாள நாராயுணன் ! —5

குறிப்பு :

திருவேங்கடம் மணவாள நாராயணனைப் பாட்டுடைத் தலைவனாக்கிப் பலவகை அறங்களையும் எடுத்துரைப்பது. அச்சிடப்பட்டுளது.

பின்னர் 2 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3695 எண் சுவடி 1690-g

# சிவகாமவல்லி தோத்திரம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 15 அளவு : 34 × 3 செ.மீ. பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

சங்கந் தரித்த திருமால் விரிக் கெட்டாத
தரணி சிவகாம வல்லி
தவலோக சனலோக பதினாலு லோகமுந்
தந்தசிவ காமவல்லி

முடிவு :

திங்கள்க் கொழுந்தை புகழ்தங்கப் படிக்காசே
தேவிசிவ காம வல்லி
தென்புதுமை நகர்மேவுஞ் சிவகாமவல்லியே
சிங்காதனக் கவுரியே ! - 1

குறிப்பு :

இதில், ஒரே பாடல் உள்ளது. புதுமைநகர் என்பது அறியக்கூடவில்லை.

வரிசை எண் : 3696 சுவடி எண் : 1690-h

# தாய் மகளேசல்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஏசல்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

வண்டுலவும் பூங்கூந்தல் மறுத்தவிழ்த்து
முடிப்ப தென்ன — மகளே —ராசை
அண்டர் தொழுதேற்றுஞ் சங்கரேசருனைக்
கூடியணைத்தாரோ அது கேள்

முடிவு :

சீராசர் நாதருடன் சேர்ந்துமிக்
வாழ்ந்திருங்கோ நன்றாய்—இந்த
பாரேழு மெச்சிடவே பண்பாக
வாழ்ந்திருங்கோ ! —மகளே !

குறிப்பு :

இது, இராசை சங்கரேசர் புகழைக் கூறுவது போலும். தாய்மகளேசல் போல் சங்கரர் புகழைக் கூறுவது.

வரிசை எண் : 3697 சுவடி எண் . 1690-i

## தாய்மகள் ஏசல்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 34 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஏசல்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

வண்டுலவும் பூங்கூந்தல் மருத்த விழ்த்து
முடிப்ப தென்ன மகளே! —ராசை

முடிவு :

மங்கையர்கள் வாலிபத்தில் வானாதோ
தேமலிது தாயே, —!1,

(ந)ன்னாகந் தனைச் சுமந்துத் தணித்த புன்னை
வணத்திருந் தாண்டி — உன்னை

குறிப்பு :

இது, முன்பிரதி போன்ற தெனினும் பாட வேறுபாடுகள் உள்ளன.

வரிசை எண் : 3698 சுவடி எண் : 1691

## அரிச்சந்திரன் அம்மானை

ஏடுகள் : 103 கி. எண்ணிக்கை : 2200 அளவு : 41½ × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : அம்மானை
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஆராருங் கேள்க்க அரிச்சந்தி ரன்கதையைச்
சீராரும் அம்மானை செப்பவே — நீராருந்
தும்பைச் சடைமுடியான் சோதியான் றந்தருளுங்
கம்பக் கடக்களிறே காப்பு.

முடிவு :

அந்த மொழிகேட் டரிச்சந் திரனுரைப்பான்
நொந்தகுடி யானவரே நுங்கடமை நான்பிடித்து
ஆராண்டு கொள்கடமை யத்தினையு மீய்ந்திடவே
...... ...... ...... ......

குறிப்பு :

இது, அரிச்சந்திர மன்னனுடைய வரலாற்றினை அம்மானை சந்தமாகப் பாடப் பட்டுளது. இது, சிற்றியலக்கிய வகையைச்சாரும். சந்தம், வரலாறு நன்றாக உள்ளன.

வரிசை எண் : 3699 சுவடி எண் : 1692

# வீரையன் அம்மானை

ஏடுகள் : 116 கி. எண்ணிக்கை : 2300 அளவு : 41 × 2½ செ.மீ.
பக்கத்திறகு: 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : அம்மானை
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

மகாதேவி யீஸ்பரியே யென் மாதாவே தம்பினேன்
கரக்கனுடை யாகத்தில் தான்பிறந்த யீஸ்பரியே
× × × × × × ×
சடையால் பெருத்தவளே தயே பரமேஸ்வரியே
நன்ம்பினே னுன்ம்பாதம் நாடினேன்கு சீர்பாதம்
வீறயன்மேல் பாடுதற்கு விதமுடனே வரந்தருவாய்

முடிவு :

கேட்டவற்கள் ளெல்லாம் கிளை கோத்திர வாளியதே
படித்தோர்க ளெல்லோரும் பாக்கியங்கள் பெற்றிருப்பார்
மதிரை வீறய்யன் அம்மானை யெளுதி முடிந்தது.

முற்றும்
திருச்சித்தம்பலம்,
தேவி சிகாயம்,

காலம் :

சறுவதாரி வருஷம் மாசி மாதம் 2-ந் தேதி திங்கட்கிழமை காளியப்பக்கவுண்டனூரிலேயிருக்கும் கொத்துக்காற் கருப்பகவுண்டன் மகன் கருப்பக் கவுண்டனுக்கு புண்ணிய குமாரன் யேட்டியா கவுண்டன் மருதிவீற அம்மானை யெழுதி முடிந்தது,

முற்றும். சம்பூருணம். வாலை ஞான சாஷிபதி துணை.
யெட்டிக்காற் கிருபா கிடாச்சம், தேவிசிகாறம்.
திருச்சித்தம்பலம்

குறிப்பு :

இதில், இடையில் ஏடுகள் இல்லை. இது, எமது 7-ஆம் தொகுப்பு சுவடி எண் 997/D-1576 போன்றது, இது, எமது சரசுவதி மகால் நூலக வெளியீடாகும். முதல் 4 ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3700 சுவடி எண் ; 1693

# பாரதம் - உரையுடன்

ஏடுகள் : 90 கி. எண்ணிக்கை : 2 00 அளவு : 38 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : வில்லிபுத்தூரார் பொருள்: இதிகாசம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நீடாளி உலகத்துள் மரை நாலுடைந் தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை தவறாத முனிராசன் பாறதஞ் சொன்னனா

ளேடாக வடமேரு வெற்ப்பாக வெனங்கூற் ரெழுத் தாணிதன்
கோடாக வெளுதும் பிரானனைப் பணிந்தன்ம்பு கூற்வாமரோ.

என்றது: நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்திலே

முடிவு :

கடல்போலும் சேனையுடனே றாத்திரியிலே வளைந்து
கொண்டாலும் அழகுடைய மேகவற்ணனான
கோபால கிஷ்னன் ன.........ய்யிலும் அகப்படுகிறவ -
னல்லவென்று சொன்னான், விகற்ன னென்றவாறு. — 174

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 84/D-422 போன்றது.

★—★★

வரிசை எண் : 3701 சுவடி எண் : 1694

# வைகுந்த அம்மானை

ஏடுகள் : 240 கி. எண்ணிக்கை : 9000 அளவு : 37 × 3½ செ.மீ.
பக்கத்திற்கு : 7—9 வரிகள் ஆசிரியர் : தென்வீரையம்பதியார் பொருள்: அம்மானை நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

வாரிசூ ழுலகு தன்னில் மன்னுயி ரனைத்தும் வாழ்க
சீரிய தமிழி னாலே தேடியம் மானை பாட
ஆறிய அனந்த ராம அச்சுதன் கமலக் கண்ணன்
பாரிய மேக வண்ணன் பச்சைமால் பாதங் காப்பாம்,

முடிவு :

............முகிழ்ந்து பட்சி மரத்தை விட்டுத் தான் பறந்து
............ கடந்து நல்ல வைகுண்டந் தான் சேர்ந்து|
........... திரு மாலுடனே தெண்டனிட்டங் கேது சொல்லும்
............ னாய உண்மை யொடு தன்மையுமாய்
மாத்தறிய பஞ்ச ... ... ...
பாத்திபர்கள் வேற ... ... ...

எத்துயம் வந்தாலு ... ... ...
அத்துயர ... ... ...

மாலே துணை ... ... ...
ஆலே துயிலு ... — ...
வாக்கு மனமு ... ... ...

குறிப்பு :

இது, முழுமையாயிருப்பினும் இடையிடையே ஏடுகள் இல்லை. சில ஏடுகள் புதிதாக எழுதிக் கோக்கப்பட்டுள்ளன. அதனால், இதில் இருவகையான ஏடுகள் காணப்படுகின்றன.

இது. எமது சுவடி எண் (7–ஆம் தொகுப்பு) 1368/D-1577 போன்றது.

வரிசை எண் : 3702 சுவடி எண் : 1695-a

# இராமதேவர் சோசியம்

ஏடுகள் : 33 கி. எண்ணிக்கை : 1500 அளவு : 41×3½ செ.மீ

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : இராமதேவர் பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பலகலை நூலி லுள்ள பகர்ந்திடும் சோசி யத்தைப்
புலமதி லுள்ள தெல்லாம் பிறக்கிநா னிருநா றுக்குள்
உலகினில் இராம தேவ னுரைத்த சாஸ்த்தி ரத்தின்சூட்ச
இலகிடும் பயனை நன்றாய் இயல்பினா லுரைக்க லுற்றேன், —1

முடிவு:

சமையமாய் சேற்கை செய்யுஞ்
சண்டாள சென்ம மென்று
யுமையுறு பாகன் செய்கை
யுருதியா யுரைத்தி டாயே! —191

குறிப்பு :

ஏடு 7-ல் தொடங்குகிறது. இது, எமது 6-ஆம் தொகுப்பு சுவடி எண் 8?2-b/D -1?2? ன் ?ேறாயது.

வரிசை எண் : 3703 சுவடி எண் : 1695-b

# மாசத் துருவம்

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 40 அளவு : 41×3½ செ.மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர்: அறியகூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

சிவமயம்

| | | | |
|---|---|---|---|
| சித்திரை மாதம் | —16 | புரட்டாசி | 13 |
| வய்யாசி | —10 | அற்ப்பிசி | — 8 |
| ஆனி | —14 | கார்த்திகை | — 6 |
| ஆடி | —7 | மார்கழி | —15 |
| ஆவணி | —11 | தை | —12 |

**முடிவு :**

அக்கினி பஞ்சகம் 1½
மிருத்தி பஞ்சகம் யிது பஞ்சகத் தோஸ
மென்பன. 3 5,7,9 நிலை பஞ்சகம் உத்தமம்
நல்லது, பருக தோசமில்லை.

**குறிப்பு :**

இதில், தேதி துறுவம், நட்சேத்திர துறுவம் வார துறுவம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3704 சுவடி எண்: 1695-c

# சிறோமணி தினபலன்

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 250 அளவு : 41×3½ செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சோதிடம்.
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சிரோமணி தினபலன காப்பு.

சீறாசை வாழ்ந்திருக்கும் செல்வ கணபதியைப்
பேறாசை யாவாழ்த்திப் பேருலகில் — லோறாக
வந்த வடனூல் சிரோமணியை வாற
செந்தமிழி லால்பாடினேன் தேர்ந்து.

வேலுமயிலுந் துணை.

நூல்

உலகிலொரு பிறந்திரு நாள்த் தொட்டெ
யிலகுநாளளவு மென்னி -- பிலமாய்

முடிவு :

கரியோ டொத்த வன்னமாம் பொசிப்பானோது. ......86.

ஓது வெள்ளி புத்திதல்
ஓங்கு வெள்ளை யாடைகொந்தம் போத்துதன்... ..

குறிப்பு :

இதில், முதலேடு பிறழ்ந்துளது. 6-வது ஏடு இரண்டு உள்ளது, தினபலன் கூறுகின்றது.

வரிசை எண் : 3705 சுவடி எண் : 1695-d

## சோதிட சாத்திரம்

ஏடுகள் : 47 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 41×3½ செ.மீ
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவோணம்

... ... .. னிபாரு யெளிதாகத் தோணுமடா
யிசைந்து பாரே ! — 252

இசைந்துபார் சொன்ன சொல்லை
வான்றுமில்லை யென்று சொல்லுவது

முடிவு :

வித்தான பொருள்களெல்லாம் இதிலே தோணும்
வேதாந்த சுழிமுனையும் இதிலே காணும்
கொத்தான அடிதொடுத்து முடிவரைக்கும்
கூறினேன் அறிவுள்ளோர்க் குதவி யாமே ! — 456

குறிப்பு :

இது, 174-ஆம் ஏட்டில் தொடங்குகிறது. தலைப்பு இல்லாததால் இன்ன நூலென்று அறிய இயலவில்லை. ஏடுகளின் எண்கள் இரட்டிப்பிலும் உள்ளன. பிறநூல் ஏடுகளும் இதில் கலந்திருக்கக் கூடுமென அறிய முடிகிறது.

வரிசை எண் : 3706 சுவடி எண் : 1696-a

## கடைச்சரக்கின் பாகம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 80 அளவு : 34×3 செ மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : வீரமா முனிவர் பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ஆடும் சறக்குகளில் ஆறுபத்து நால்சரக்கை
தேடும் சறக்கெனவே தேர்ந்து சொன்னோம் மாதவர்கள்
பாடுஞ் சறக்குதான் பாகமிது எப்போதும்
நாடுஞ் சறக்கறிந்து நாடிடுவீர் பண்டிதரே !

முடிவு :

உச்சிதமான செவியமது திமிர் பூன்றிடாதே
மிகுப்பா யிருக்கும் கச்சித மென்றுப் பூதழ வாதியே
நிதம் கலவியில் நேர் வூகுமெனப் பெண்ணிடை
நேர்ந்த தோர் மூலமது கொல்.

குறிப்பு :

இதில், தீபத்தின் குணம், மூலத்தின் குணம், என இரு தலைப்புகள் உள்ளன. ஏடு பிறழ்ந்திருக்கிறது.

வரிசை எண் : 3707 சுவடி எண் : 1696-b

## சந்தரங் தீபிகை

ஏடுகள் : 11 (54-64) கி. எண்ணிக்கை : 1000 அளவு : 34×3 செ.மீ. பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : இராமலிங்க முனிவன் பொருள் : சோதிடம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கணபதி வேதம்

கடலான கலைஞான தேசிகனைக் கயமுகனை குகனைக்
கான் சூழ்
மடலார் தன் கவிநிலும் காவினிலும்
வதிந்துறையும் வாணி மானை

முடிவு :

தையலை முதலாந் திதிதநிற் கூடிலன்பது
சட்டியில் விரோதம
பொங்கிலட்டமி யில் நோய்
நவமியிற் றுக்கம் பொருந்து மேகாதேசி
பாவம் மெய்யறு கின்றதுபா தெசியதனில்
மருவிடில் பூமியில் மருவாள்
மெய்யுளோ ரோதுஞ் சதுர்த்தேசி யதனில் மேவிடில்
நோயென விதிப்பார் —17.

ஈகுவா மாதப் பிறப்பினில்

குறிப்பு :

இது, நன்னூலாம் வடமொழிச் சந்தரந்தீபிகையின் தமிழ் மொழி பெயர்பு. ஆசிரியர் சந்திரசேகரன் புதல்வன் இராமலிங்க முனிவன் என்று பாடல் கூறுகிறது. சோதிட பலன்களை விளக்கமாகக் கூறுகிறது.

சுவடி எண் : 1696-c

வரிசை எண் : 3708

# அகத்தியர் ஞானகாவியம்

ஏடுகள் : 49 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 34 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : வேதாந்தம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கணபதி வல்லவை காப்பு

……… மானபதி கருணை கூர்ந்து
அடிமுடியும் நடுவான குணமே காப்பு
பாதிமதி சடைக்கணிந்த பரனே காப்பு
பரஞ்சுடர்க்குப் பாதிஉடல் பகுத்த சோதி

முடிவு :

அதனில் போட்டு
வேதாந்த பூசை விதிப்படிக்குச் செய்து
யேழுடா மந்திரமே லெட்டெழுத்தைத்
தூக்கு விந்தி யினி சித்திரம் போல் குசியைப் பாரே! —350.

குறிப்பு :

இந்நூல் சௌமியத்தைச் சாரும் என்று இந்நூலே கூறுகிறது. இதில், சௌமியத் தைச்சார, நாற்பத்திமுக்கு, பிரமநிட்டை, ராசபோகம், தாபம், மூணுபாட்டுவேலை, முழபத்து, வீண்குரு, சமயமதம், கூடாமல் கூடுவது, பெண்கு விட்டௌ, மார்க்கண்டர், பொசுண்டரும் சிவனும் விளக்கம், கண்ணாடி லீலை முதலான தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 3709

சுவடி எண் : 1697

# சோதிட ரேகைச் சுருக்கம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 500 அளவு : 41½ × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சுக்கிர சிந்தாமணியார் பொருள் : சோதிடம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வெண்பா

பொன்னுலகி லாண்பெண் பொருந்தியகை ரேகைகண்டு
முன்னுளதும் பின்னுளது மூதறிவால்—சொன்ன
சுக்கிரசிந் தாமணிநூ லைச்சுருக்கிச் சொல்லவருட்
கைக்கச முகக்கடவுள் காப்பு.

முடிவு :

ஆதியி லாதிமூர்த்தி அருளிய முறைதப்பாமல்
சூதிலாச் சுக்கிர சிந்தாமணி முனிசொன்ன நூலை
மேதினிதனில்ச் சுருக்கி விளம்பினா மாகையாலே
நீதிமான் தனக்கேயிந்த நிஷ்யந் தோன்றுந் தானே !

முற்றுப் பெற்றது.
சுக்கிர சிந்தாமணியார் பாதமே கெதி
வேலாயுதக் கடவுள் துணை.

குறிப்பு :

இதில், சோதிடன் பொய் சொல்லாமை, ரேகைசாரம், பத்துவரையும், வற்க சாஸ்த்திரம், சோதிடன் முறைமை ஆகிய தலைப்புகள் உள்ளன.

வரிசை எண் : 8710 சுவடி எண் : 1698

## அருணாசல புராணம் - உரையுடன்

ஏடுகள் : 130 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 44 × 3 செ மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: சைவ எல்லப்ப நாவர் பொருள்: தல புராணம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

மிக்க வேதவியாசர் விளம்பிய
விக்கை க்கியைபின் றருள் செய்திட
முக்கண் வெற்பினை மும்மத வாரியை
கைக்களிற்றினைக் கைதொழு தேத்துவாம்.

இதன் பொருள்: அநேக வேதங்களை இயல்பாகவே உணர்ந்த வியாசரால் அருளிச் செய்யப்பட்ட ஸ்காந்த புராணத்தில் உருத்திர சங்கிதை யிலிருக்கும் இந்த அருணாசல சரித்திரத்தை

முடிவு :

இ.ள்: நவகண்ட மட்டும் ஆண்ட மகிடா சுரனுடைய கழுத்தை இலக்காக வைத்துத் துர்காதேவி அறுக்க அந்தக் கழுத்தி லிருந்த படிகலிங்கத்தைக் கண்ட போதே கையினா லெடுத்தா னென்றவாறு.

குறிப்பு :

இதில், எடுகள் தலைதடுமாற்றம். திருநகரச் சருக்கம், திருமலைச் சருக்கம், பார்வதியார் திரு அவதாரச் சருக்கம், திருக்கண் புதைத்த சருக்கம், பார்வதியார் இடப்பாகம் பெற்ற சருக்கம், ஆகிய சருக்கங்கள் உள்ளன.

இது, எமது சுவடி எண். (தொகுதி-1) 293-a/D—512 போன்றது.

வரிசை எண் : 3711 சுவடி எண் : 1699

# தருமர் நாடகம்

ஏடுகள் : 113 கி. எண்ணிக்கை : 4500 அளவு : 41½×2 செ.மீ.

பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : நாடகம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

திரு துணை செயி அத்திபுரத்தரசு செங்கோல்
திக்குவிசயஞ் செலுத்துந் தர்மராசன்
பரம பதமுதவு கெதி தருவை குண்ட
பதியுலவு சரிதை நாடகத்தைப் பாட
புறமுரெண்டு யெரித்தவனே

முடிவு:

............லோகத்துக் கிணையான சரியாப்புகழ்
புகனடந் தாவு துரைத தற்ம்ம ராசனும் நடந்தான்

சுத்துவீதியுங் கடந்தே ம..................
டந்தே வெத்தி வீதியேத் தொடுத்துச் செம்பொன்
மின்னும் வீதியே அடுத்து மாடவாலை..............

காலம் :

முகப்பு-முதலேட்டில் விசுவாவசு வருஷம் மாசி மாதம் 1-ந் தேதி
தாளியாபட்டி ரெங்கனாதக் கோனான் 'தருமர் நாடகம்'
வெங்கிட்ட ராமன் சுவாமி துணை உண்டாகவும்

குறிப்பு :

இது, நாடக பாணியில், தரு, விருத்தம், மங்களம் முதலான பல அமைப்புகளுடன் காணப்படுகிறது. பிழைகள் இருப்பினும், சிறந்த நூலாகக் கருதப்படுகிறது.

பஞ்சபாண்டவர்களில் மூத்தவர் தருமர். அவர் வரலாற்றைக் கூறும் முகத்தான் பாரதத்தைப் போதிக்கிறது.

வரிசை எண் : 3712 சுவடி எண் : 1700

# கஞ்சன் (கம்சன்) நாடகம்

ஏடுகள் : 110 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 36 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நாடகம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

ராசா ராசா ராசா ராசா ராசன்
கம்ஞ்சுக மகாராசன். தேசமன்னர் புடைசூழ
தெய்வதுந்துமி தா ... ...... . க மத்தாளந்
தொனி முழங்க மகரக் கொடிகள் தான் பறக்க
முத்துக் குடைகள் கைப்பிடிக்க

முடிவு :

கஞ்சா வுன்னை யிதோ அரை நாளிகையிலே
மடிக்கிறேன் பாராடா. கஞ்சா.
தருவு.

காரியமாய் வந்த நானறிவேனடா பயலே
சும்மா வீண்பகட்டு ... ... ... மிரட்டுறாய் பயலே
தாறுமாறாக நீ பேசுறாய் நீயடா கஞ்சா நீ
சமர்த்த னென ... ... ...

குறிப்பு :

இதில், தொடக்கம் முடிவு இல்லாததால், தலைப்பு அறிய முடிய வில்லை... ... செய்திகள் கொண்டு தலைப்பு கொடுக்கப்பட்டது. நடை நன்றாகவும், எளிமை யாகவும் உள்ளது இது, தரு, விருத்தம் முதலான நாடக இலக்கணங்களைக் கொண்டு இயற்றப்பட்டுளது.

வரிசை எண் : 3713 சுவடி எண் : 1701

# பொன்னர் சங்கர் கதை

ஏடுகள் : 172 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 44×3 செ.மீ
பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : கதை
நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

முந்தி வினாயகனே முக்கண்ணனார் தன் மகனே
சத்தி வினாயகனே சங்கரனார் புத்திரனே
× × × × × ×
காராளர் பொன்ன(ர்) சங்கர் கதைதனைப் பாடுதற்கு
ஆதிபராபரியே அகிலாண்ட நாயகியே

முடிவு :

தேவர்களும் வாழி திருமாலுந் தான்வாழி !
ஆதிபர மேஸ்வரியாள் அம்பிகையுந் தான்வாழி !
சத்தேனுக்கன்னி தாயாரூந் தான்வாழி !
வெம்முடியில் வீற்றிருக்கும் வீரமகா முனியுந் தான்வாழி !

குறிப்பு:

இது. பொன்னர் சங்கர் அம்மானை என்றே வழங்கப்பெறும். சுவடியில் கதை என்றே உளது. இது காதை அம்மானை என்ற பகுதியில் இடம்பெறும். ஏடுகள் முறிந்தும் ஒடிந்தும் உள்ளன. இடையில் 2 ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3714 சுவடி எண் : 1702

# புலந்திரன் களவு மாலை

ஏடுகள் : 130 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 44 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியககூடவில்லை பொருள் : மாலை
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

அத்தி முகத்தோனே அரனார் திருமகனே
சத்திக் கணபதியே சங்கரனார் திருமகனே
பானை வயிற்றோனே பழமேந்துங் கையோனே
ஆனை முகத்தோனே ஐங்கரனே முன்னடவாய்

முடிவு :

மாளுவே னென்று சொல்லி வாளுருவிக் கைபிடித்து
ஆயுதம் நாட்டி அவரிருக்கப் பூங் கொடியாள்
அங்கு திசைநாட்டான் அவர் மாண்டா ராமரினால்
மகாராஜ ராசாக்கள் மன்னவர்கள் நூற்று வர்க்கும்
சேரவே மாளுவார் செம்பொன் மணி முடியார்
உங்கள் – ஐவர் முதலாக ஆச்சியருந் தான் கூட.

காலம் :

(முதலேட்டில்) விரோதி கிருது வருஷம் தை மாதம் 14-ந் தேதி தாளியா பட்டியிலே யிருக்கும் நாச்சியப்பக் கவுண்டன் மகன் காளியணான் டியான் மகன் மாறப கவுண்டன் புலந்திரன் களவுமாலை. சிவ சிவா சிவசுத கணபதி துணை. உண்டாக வேண்டியது.

குறிப்பு :

இது, பாரதக் கதையின் ஒரு பகுதியாகும். அம்மானை சந்தத்தில் பாடப்பட்டுளது. பிழைகள் இருப்பினும் வரலாறு சிறக்கக் காணப்படுகிறது.

—★★—

வரிசை எண்: 3715 சுவடி எண் : 1703-a

# உலக நீதிப் புராணம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : $41\frac{1}{2} \times 2\frac{1}{2}$ சென்டி மீட்டர்

பக்கத்திற்கு: 4 வரிகள் ஆசிரியர்: (ஔவையார்) உலகநாதன் பொருள்: நீதிநூல்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
உலக நீதிப் புராண முரைக்கவே
கலகலன் றோதுங் கணபதி காப்பு.
மாரப்பன் உலகநீதிப் புராணம்.

நூல்

ஓதாம லொருநாளு மிருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

முடிவு :

ஓதிவைத்த வாத்தியார் உலக நாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலக நீதி
காதிலுற்றுக் கருத்துடனே கேட்ட பேர்கள்
கருத்துடனே கயிலாசங் காண லாமே ! —13

அரகரா. அவையா ரருளிச் செய்த நீதிச் சொல்
உலகநீதிப் புராணம் படித்து முகிந்தது முற்றும்.

காலம் :

சவுமிய வருஷம் ஆடி மாதம் 20-ந் தேதி

குறிப்பு :

நீதிகளைச் சுருக்கமாகக் கூறும் இது, முருகக் கடவுளை முன்னிலைப்படுத்திப் பாடப்பட்டுளது. இதில் 13 பாடல்கள் இருக்கின்றன. இதனை, 'உலக நீதிப் புராணம்' என்றே எழுதியுள்ளார். அதனால் தலைப்பிடப்பட்டது.

இது, எமது 6 ஆம் தொகுதி சுவடி எண் 859]D-1107 போன்றது.

—★—★—

வரிசை எண் : 3716 சுவடி எண் : 1703 b

## பிள்ளையார் சிந்து

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 50 அளவு : 41½ × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை - பொருள் : சிந்து
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மன்று ளாடு மணியே செய செய
யக்கரச் சூல மேந்தி செய செய
ரவாக் கின்கினி காப்பாய் செய செய
லவரக் கும்ப மேந்தி செய செய

முடிவு :

ஓடாதே ஒளியாதே யிட்டதே சோறும்
பெற்றதே கறியும் உண்டு தூங்கி வெள்ளி
யுதிக்கு முன்னே பள்ளிக்கூடம் வந்து
சேரப்பண்ணும் பள்ளிப் பிள்ளையார் சிந்து
முகிந்தது. முற்றும்.
சிவமயம்.

காலம்:

1909 அக்டோபர் மாதம் 2-ந் தேதிக்கிச் சரியான தமிழ் வருஷம் சௌமிய வருஷம் ஆனி மாதம் 28-ந் தேதி தாளியாபட்டியிலே யிருக்கும் வண்டிக்கார காளியணன் மகன் மாரப்புன் விக்கி நேஷ்பரன் பேரில் வேளமுகம் யெழுதி நிறைந்தது சம்பூரணம். வேணும், வெங்கிட்டராமன் சுவாமி துணை உண்டாக வேண்டியது.

குறிப்பு:

இதில், முதல் இரண்டு ஏடுகள் இல்லை. இது வேழ முகத்து விநாயகனைத் தொழ எனத் தொடங்குவதால் இதற்கு வேழ முகம் என்று பெயர் முன்காலத்தில் முதன் முதலாகப் பிள்ளைகளைப் பள்ளியில் வைக்கு (சேர்க்கு)ம் போது பாடப்படும் பாடலாகுமிது.

வரிசை எண் : 3717 சுவடி எண் : 1704

## ஆத்தி சூடி

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : $41\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : நீதி நூல்

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஆத்தி சூடி யமந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.

சிவமயம்

வெங்கிட்ட ராமன் சுவாமி பாதாரவிந்தமே கெதியடைய வேண்டியது.

நூல்

அறஞ்செய விரும்பு இயல்வது கரவேன்
ஆறுவது சினம் ஈவது விலக்கேன்

முடிவு :

வென்னார்த் தேரேன்.
வோதுவது வேதம்.

அரகரா. அவையாறருளிச் செயித நீதிச் சொல்
ஆத்திச் செவுடி படிச்சு முகிந்தது. முற்றும்.

காலம் :

நந்தன வருஷம் ஆவணி மாதம் 29-ந் தேதி தாளியாபட்டியிலே யிருக்கும் வாட்டக் கோனான் மாகன் வடமலைச் கோனானுக்கு ஸ்ரீரி புண்ணிய குமாரனாகிய குப்பணன் ஆத்தி சூடி சிவ்மயம். கிஷ்ணசுவாமி துணைவுண்டாகவும்

 சிவமயம்

குறிப்பு :

ஆத்திமாலையணிந்த சிவபெருமானைக் குறித்து, நீதிகளை மிக மிகச் சுருக்கமாக உரைப்பது. பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

இதன் பின்னர் முழுமையற்ற ஆத்திசூடி ஒருபிரதி ஒரு ஏடு மட்டும் உளது.

வரிசை எண் : 3718 சுவடி எண்: 1705

# திருப்புகழ்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 300 அளவு : 41½ × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள்: சைவத்தோத்திரம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி: ஓம்

எல்லாரு மானிடவ ராவரோ யிப்புவியில்
கல்லெலா மாணிக்கக் கல்லாமோ-பொல்லாக்
கருப்புகழைக் கேள்க்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேள்க்குஞ் செவி.

நூல்.

கைத்தலம் நிரையவே முப்பழ மொடு பொறி
அப்பமொ டவல் பயர் கப்பிய கறிமுகனடி பேணி
கத்திடு மடியவர் யுத்தியி லுரைபவர்
கர்ப்பக மென வினை —கடிதேகு

முடிவு :

நெரு நெரென்றிட வேறொடே நிலைகுலைய வங்கையில் மேலே
வீசிய மயிலோனே! குயிலோ வுன்றிகவ கூகூகூவென
மலர்கள் போலகிய தென விளகாமிசை குலவு
சுந்தரி மீதே மேவிய பெருமாளே! —19

முகப்பு ஏட்டில் தாளியாபட்டியிலே யிருக்கும் பொ. ப. நா. காளியப்ப கவுண்டனுற சீரி புண்ணிய குமாரனாகிய மாரப்பன் திருப்புகளலங்காரம் என்றுளது.

குறிப்பு :

இதில், 19 திருப்புகழ் பாடல்கள் இருக்கின்றன பிழைகள் மலிந்து கிடக்கின்றன. பாட வேறுபாடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

வரிசை எண் : 3719 சுவடி எண் : 1706-a

# கதிர்காம மாலை

ஏடுகள் : 9 கி. எண்ணிக்கை : 200 அளவு : 42×2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

சீரார் கதிர்காமச் செந்தூ ரருமுகவர்
பாராரு மாலைதனைப் பாடவா மேயருள்வாய்
தாரார் குழலுமையாள் தானீன்ற தற்பரனே
காராரு மேனிக் கணபதியும் காப்பாமே ! —1,

முடிவு :

ஆருமுகனே ஆறிரண்டு கை யோனே
வேரு வினை வாறாமல் வெத்திதர வேணுமையா
சூரனையும் வேறருத்த சுப்பிரமண்ணிய தேசிகனே
சாரும் தமிழ்ப் பாட தயாபரனே வந்துதவாய் ! —35

குறிப்பு :

முகப்பு ஏட்டில்:. சுபநமஸ்த்து.

ருத்திரோத்காரி வருஷம் வைகாசி மாதம் 25-ந் தேதி தாளியாபட்டியிலிருக்கும் வ. கா. வையாரிக் கவுண்டன் மகன் பழனியப்பன் கதிர்காம மாலை எழுதினது சம்பூரணம். ஸ்ரீ மகாகணபதி துணை. வேலு மயிலும் துணை, சரஸ்பதியம்மன் துணை. ஸ்ரீமந் நாராயணமூர்த்தி துணை. சிவமயம்.

இது, எமது 6-ஆம் தொகுப்பு சுவடி எண் 813-a D. 1135 போன்றது. அதில் 30 விருத்தங்கள் என்றுளது. இதில் 35 விருத்தங்கள் உள்ளன. அதிலுள்ள, 'மணக் கோல' மெனத் தொடங்கும பாடல் இதில் 25—வது பாடலாக உளது. 2 பத்தியாக பக்கத்திற்கு 2 பாடலாக எழுதப்பட்டுளது.

—★★★—

வரிசை எண் : 3720 சுவடி எண் : 1706-b

# அவினாசிப் பத்து

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 150 அளவு : $42 \times 2\frac{1}{2}$ செ.மீ. பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலைமேலிருந்த குமரா
உற்றா ரெனக்கு ரொருபேரு மில்லை
உமையாள் தமக்கு மகனே!
முத்தாடை தந்து வடியேனை யாளு
முருகேச ரெந்தன் மனத்தே
வித்தார மாக மயில் மீதி
லேர்வர வேணுமெந்த னருகே! —1.

முடிவு :

மையான மேனியசு ரேசர் மாள
வடிவே லெடுத்த முருகா
மெய்யாக வந்து அமரர் சிறைமீள
விடுவித்து வந்த செயல்போல
கையாற வென்று உயிர்கொண்டு தூதர்
கடிதேகி மூன்பு மலைமேல்
வையாவூர் நாடர் பழனிவடிவேலர்
வரவேணு மெந்தன் அருகே. —21.

குறிப்பு :

பதிகமென்பது 10 பாடல்களைக் கொண்டது. இதில் 21 பாடல்கள் உள்ளன. அவினாசித் தலத்தில் எழுந்தருளியுள்ள முருகப்பெருமான் மீது பாடப்பட்டது. பிழைகள் அதிகம்.

வரிசை எண் : 3721 சுவடி எண் : 1706-c

# ஆறுமுக சுவாமி பேரில் ஆசிரிய விருத்தம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 42 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சிவதோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஆருமுகமும் பனிரெண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரண மணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீறும் புனைந்த மெய்யும்
செகமெல்லாம் புகழ்படைத்த சுப்பிர மண்ணியா
முருக சரவண பவனே கார்த்திகேயா
முக்கணனார் புத்திரனே உக்கிர வேலா
இருவருமே யுனைப்பணிந்தோம் பழனி வேலா
இதுசமய மடியாரை ரெட்சிப் பாயே ! —1

முடிவு :

(மு)த்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள் மனம் பொறாதே யாள்வாய்
(சத்)தியமா யுனைப்பணிந்தோம் நாங்க ளையா
சண்முகனே யடியாரை ரட்சிப் பாயே ! —11

குறிப்பு :

இது, முருகப்பெருமானைப் புகழ்ந்து பாடிம எண்சீர் விருத்நமாகும், 'நாங்கள் இருவர்' என்கிறார். யார் என விளங்க வில்லை.

வரிசை எண் : 3722 சுவடி எண் : 1707

# கதிர்காம மாலை

எடுகள் : 8 கி. எண்ணிக்கை 200 அளவு : 42 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை

நிலமைை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

சீரார் கதிர்காமஞ் செந்தூர ரறுமுகவர்
பாராரு மாலைதனைப் பாடவர மேயருள்வாய்
தாரார் குழலுமையாள் தானின்ற தற்பரனே
காராரு மேனிக் கணபதியுங் காப்பாமே.

சிவமயம். ஸ்ரீராம செயம்
மாறப்பன் கதிர்காம மாலை

முடிவு :

ஆறுமுகனே ஆறுரெண்டுங் கையோனே
வேறுவினை வாராமல் வெற்றிதர வேணுமையா
சூரனையும் வேரறுத்த சுப்பிரமண்ணிய துரையே
சாறுந் தமிழ்பாடத் தயாபரனே வந்துதவும் —31

காலம் :

சாதாரண வருஷம் வைகாசி மாதம் 2-ந் தேதி மையிந்த வாரமும் கூடின சுபயோக சுபதினத்தில் தாளியாபட்டியிலே யிருக்கும் நார்ச்சியப்ப கவுண்டன் மகன் காளியணக் கவுண்டனுக்கு ஸ்ரீ புண்ணிய குமாரனாகிய சின்ன மாறப்பன் பழனியாண்டவர் பேரில் கதிர் காம மாலை எழுதி முடிந்தது. சம்பூரணம். முற்றும். வேணும் வெங்கிட்டராமன் சுவாமி துணை. சிவசுத கணபதி துணை உண்டாக வேண்டியது. ஸ்ரீ ராம செயம். சிவமயம்.

குறிப்பு :

இது, முன்பு கூறப்பட்ட சுவடி எண் 1706-ஐ போன்றது இதில், 31 பாடல்களே உள்ளன,

வரிசை எண் : 3723 சுவடி எண் : 1708

# இராசகோபாலர் மாலை

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 250 அளவு : 40×2½ செ.மீ.
பக்கத்திற்கு 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

நந்தன்மகன் மோதகத்தின் வரையில் வாழும்
    ராசகோபால னெனும் மாலை தன்னை
விந்தையுடன் பூவுலகில் நீதிசாறம் விபரமுட
    னடியேனும் விளம்பும் பாடல்
× × × × × × ×

நூல்

தண்டமா மலரின் தேனை தனித்தனி வனத்தில் வாழும்
வண்டது அறியு மல்லால் மண்டூக மறிந்தி டாது

முடிவு :

இடம்பதி தனையிகழ்ந்து இனஞ்சொல்லி யஞ்ச கத்தை
அடைந்தவர்க் கிடுக்கஞ் செய்தால் அதுபழி வினைபோ காது
துடந்தது வருமே நன்றாய் தூக்கியே அடிவைத் தாலும்
நடந்தகா விடரு மையா ராசகோ பால மாலை, — 44

குறிப்பு :

இது, 'இராச கோபால மாலை' என்ற ஈற்றடியுடன் நீதிகளைக் கூறுகின்ற நீதி சாரமாகும். நம் மகாலில் அச்சாகியுளது.

வரிசை எண் : 3724 சுவடி எண் : 1709

# இராச கோபால் மாலை

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : $41\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

நந்தன் மகன் மோதகத்தின் வரையில் வாழும்
    ராசகோ பாலனெனு மாலை தன்னை

விந்தையுடன் பூவுலகில நீதிசாறம்
விபரமுட னடியேனும் விளம்பும் பாடல்

முடிவு :

தாயிதனைப் பிள்ளை பார்த்துத்
தானது சொன்னா லுந்தான்
நாயனே பொறுப்பார் செய்கை
ராசகோ பால மாலை! —40

**காலம்:**

சாதாருணா வருஷம் தை மாதம் 12-ந் தேதி மங்களவார முங்கூடின சுபயோக சுபதினத்தில் காளியாபட்டியிலே யிருக்கும் நாச்சியப்பக் கவுண்டன் மகன் காளியண கவுண்டனுக்கு ஸ்ரீரி புண்ணிய குமாரனாகிய சின்ன மாரப்பன் ராசகோ(பால)மாலை யெழுதி நிறைந்தது. சம்பூரணம். வேணும் வெங்கிட்டராமன் சுவாமி துணை. வாசிவா. சுப்பிரமண்ணியர் துணை உண்டாக வேண்டியது.

ஸ்ரீ ராம செயம். சிவமயம்.

குறிப்பு :

இது, முன்பிரதி போன்றது. இதில், 40 பாடல்களே உள்ளன.

வரிசை எண் : 3725 சுவடி எண் : 1710

# ஸ்ரீகிருஷ்ண சுவாமி தூது-மூலமும் உரையும்

ஏடுகள் : 16 கி எண்ணிக்கை : 500 அளவு : $41\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : வில்லிபுத்தூரார் பொருள் : இதிகாசம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் ஸ்ரீ ராமசெயம்

காப்பு

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று
நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன்
மாபாரதஞ் சொன்ன நாள்

முடிவு :

சௌரியத்தை யுடைய வீமசேனன் சொன்னதும் யெல்லாங் கேள்விப் பட்டோர் சொல்லுதற்கரிய வரிவையுடையவனே! கீர்த்தியை யுடையவனே! சௌகர்யத்தை யுடையவனே! உனக் குத்(த)தை நீ சொல்லென்று கேட்க, கரிய மேகத்தை யொத்த திருமேனியை யுடைய கிறுட்டின் தேவரைப் பார்த்து மனமுருகும்படி சொல்லுவான் சகாதேவன் யென்றவாறு. முப்பது. ஸ்ரீ ராமஜெயம், வெங்கிட்டரமண சுவாமி துணை உண்டாக வேண்டியது, வெங்கிடாசலபதி துணை. சிவமயம்

காலம் :

விரோதி கிருது வருஷம் அற்பிசை மாதம் 21-ந்தேதி காளியாபட்டி நா. காளியண கவுண்டனுக்கு ஸ்ரீ புண்ணிய குமரானாகிய சின்ன மாரப்பன் ஸ்ரீ கிரிஷ்ட்டண சுவாமி தூது மூலமும் உரையும் காப்பு. சிவசுத கணபதி துணை. வாசுவா.

குறிப்பு :

இதில், வில்லிபாரதத்தின் கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில் உள்ள 30 பாடல்கள் உரையுடன் காணப்படுகின்றன. பிழைகள் அதிகம். உரையாசிரியர் யாரெனத் தெரிய வில்லை.

வரிசை எண் : 3726 சுவடி எண் : 1711

## அம்பிகை மாலை

ஏடுகள் : 8. கி. எண்ணிக்கை : 200 அளவு : 42 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : குலசேகர பாண்டியன் பொருள் : மாலை
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுள்ளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

நடக்குந் திருவிளையாட லறுபத்து நாலுஞ் சொக்கர்
அடக்குந் தென்கூடலி லம்பிகை மாலை அய்யாறுக்வி
தடக்கும் பகம்ப சிறுகட் புகர்முகத் தாலவட்டம்
முடக்குந் தடக்கே ஒருகோட்டு வாரண முன்னிற்கவே

நூல்

திருவே விளைந்தசெந் தேனே வடிவிட்ட தெள்ளமுர்தே
உருவே மடப்பிள்ளை யோதிபமே ஒற்றை யாடகப்பூ

முடிவு :

பிடித்தாரைக் கட்டி அனைத்தமு தூட்டிய பேயின்முலை
குடித்திட்டு மாய்ன் குல்சேகரன்றன வட்குன்றச் சென்றான்
அடித்தான் படித்தசொல் அம்பிகை மாலை அய்யாறுகவி
படித்தார்கள் கர்ப்பகக் காவும்பொன் னாடும் படைப்பவரே! — 31

காலம் :

சௌமிய வருஷம் பங்குனி மாதம் 4-ந் தேதி தானியாபட்டியிலிருக்கும் நா. காளியண கவுண்டனுக்கு ஸ்ரீ புண்ணிய குமாரனாகிய சின்ன மாரப்பன் மதுரை மீனாட்சி அம்மன் பேரில் அம்பிகை மாலை எழுதி முடிந்தது. முற்றுப் பெற்றது.

சிவமயம்.

குறிப்பு :

இதில், பிழைகள் அதிகம் உள்ளன. இது, 6-ஆம் தொகுதி சுவடி எண் 882-b/-D 11 5 போன்றது. மதுரைக்கரசி மீனாம்பிகை பேரில் பாடப்பட்ட தோத்திர மாகுமிது, இது 30 கட்டளைக் கலித்துத்துறை யாலானது. 'அய்யாறு கவி படித்தார்கள்' என்பதனால் ஆசிரியர் அய்யாறு கவி அல்லர்.

வரிசை எண் : 3727 சுவடி எண் : 1712

# சுப்பிரமணியர் பேரில்-சிவசோதி மாலை

ஏடுகள் : 1 கி. எண்ணிக்கை : 200 அளவு : 41½×3 செ மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் தன்றாக குருவாழ்க குருவே துணை.

காட்டுவழி போனாலுங் கள்ளர்பய மானாலுங்
கேட்டுவளி காலன்றா கிட்டினாலும்-நாட்டமுன்

நம்பிக்கை யாக நமக்கு விநாயகனார்
தும்பிக்கை யுண்டே துணை. சிவமயம்.

ஸ்ரீ ராமசெயம்

நூல்

செந்தில்வளர் நாயகனே சிவனே யுந்தன்
சீர்பாதம் போற்றிசெய்து சிறப்பாய்ப் பாட

முடிவு :

தன்மனது நீயாமோ நான்தா னுன்மேல்
தானினைந்த சித்திதந்து ரட்சியையா.
தென்பொதிகை முனிபணியும் மையா வாவா
சிவசிவா செந்தில்வளர் சிவனே போற்றி! —30

காலம் :

சாதாரண வருஷம் மார்கழி மாதம் 18-ந்தேதி சோமவார முங்கூடின சுபயோக சுபதினத்தில் தாளியாபட்டியிலே யிருக்கும் காளியணைக் கவுண்டனுக்கு ஸ்ரீரி புண்ணிய குமாரனாகிய சின்ன மாரப்பன் சுப்பிரமணியர் பேரில் சிவசோதி மாலை யெழுத துடங்கியது. சிவமயம். வாசிவா.

குறிப்பு :

இதன், 2-ஆம் பாடலில், 'தீர்க்கமா யன்பத்தோர் கவிபாட' என்றிருப்பதால் இது குறைபாடுடைய சுவடி. திருச்செந்தூர் முருகனைப் புகழ்ந்து பாடியது.

வரிசை எண்: 3728 சுவடி எண் : 1713

# குமரேச சதகம்

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 600 அளவு : $41\frac{1}{2}\times 3$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : குருபாத தாசர் பொருள் : சதகம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

பூமேவு புல்லை பொருந்துகும ரேசர்தம்மேல்
தேமேவிய சதகம் செப்பவே — கோமேவும்

காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகர
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

சிவமயம்

அவையடக்கம்

மாரிக்கு நிகரென்று பனிசொறிதல் போலவு
மனைக்கு நிகரென்று சிறுபெண்

நூல் குமரேசர் மகிமை

குறையாத காயத்திரியாதி செப மகிமையுங்
கூறுசுருதிப் பெருமையும்

முடிவு :

மனிதர்கள் சரீரங்கள் போகிலுஞ்
சாகாத மனித ரிவராகு மனமே
மயிலேறி விளையாடு குகனே புல்வயனீடு
மலைமேவு குமரேசனே ! — 32

காலம் :

சாதாரண வருஷம் பங்குனி மாதம் 18-ந் தேதி தானியாபட்டி யிலிருக்கும் நாச்சியப்பக் கவுண்டன் மகன் காளியணைக் கவுண்டனுக்கு ஸ்ரீரி புண்ணிய குமாரனாகிய சின்ன மாரப்பன் குமறவேல் சதகம் என்றறியவும். முற்றுப் பெற்றது. ஸ்ரீரி ராம செயம். தலைப் பேட்டிலும் காலம் உளது.

குறிப்பு :

இது, புல்வயல் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள குமரேசர் மீது பாடிய பாடலாகும். சதகம் என்பது 100 செய்யுட்களைக் கொண்டது. முழுநூல் 100 செய்யுட்களையுடையது. நீதிகளைப் போதிப்பது.

இது எமது சுவடி எண் 805/D-1130 (ஆறாம் தொகுப்பு) போன்றது.

வரிசை எண்: 3729 சுவடி எண்: 1714

# திண்டியம்பதி அங்கம்மன் சமூக நீதி சதகம்

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 250 அளவு : 41×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 4— வரிகள் ஆசிரியர் : இருளப்பசன்னாசி பொருள் : சதகம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரிஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

அமுற்த மொழியாள் திண்டியம்பதி யங்கம்மன்
சமுகநீதி சதகஞ் சாற்றவே — குமுகநய
நன்னன்று கன்றுசிக் கண்ணனுக்கு முன்வறு முக்
கண்ண னிரு தாளிணையே காப்பு

ஸ்ரீரி ராமசெயம். சிவமயம்.

நூல்

தேவிரூபம் அலங்காரம் அறிவது

கனபறவு முதவு குழலமுத நிரைமனைய பிரை
கனிவுபெறு திலதநுத லுங்கனக மதிலெழுது

முடிவு :

மார்க்க மாகிய நல்ல சகுனமது தானென்று
வாழ்த்தலாந் திண்டி நகரில் வனரு மிருளப்ப
சன்னாசி மனமகலாத வாலை யங்காளம்மனே ! — 36

குறிப்பு :

இதன், ஈற்றடிகளில் 'இருளப்ப சன்னாசி' என வருவதால் இதன் ஆசிரியர் இவரேயாகலாம். இதில். அமிர்தயோகம் அறிதல், சுபயோகமறிதல், அக்கினி யோக மறிதல், வாரநாள் நட்சேத்திரப் பகை யறிதல், பெண்கள் திரட்சிப் பலன் அறியவும், விதியில்லாத நாளறியவும், உலுத்தர் முறமை முதலான பல சோதிட சம்பந்தமான தலைப்புகள் உள்ளன:

வரிசை எண் : 3730 சுவடி எண் : 1715

# மூதுரை

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 150 அளவு 41×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள்: நீதிநூல்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

ஆதி பகவான் அவையா ருரைத்த மொழி
ஓதுவார் வெண்பா உலகத்தில் நீதியாயி
ஆதிரை யானை அடிபணிந் தேற்ற
மூதுரை யானது முப்பதும் வருமே !

நூல்

நன்றி யொருவருக்குச் செயிதக்கா லன்நன்றி
யென்று தருங்கொல் லெனவேண்டா — நின்று
தளரா வளர்ந்தெங்குந் தாளுண்ட நீரை
தலையாலே தான்தருத லால்.

முடிவு :

முப்பதா மாண்டளவில் மூன்றத் தொருபொருளை
தப்பாமல் தங்கைப் பட்டானாகில்ச் — செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு. —31

காலம் :

தொடக்கத்தில்: சௌமிய வருஷம் தை மாதம் 6-ந் தேதி தாளியா பட்டியில் யிருக்கும் நாச்சியப்பக் கவுண்டன் மகன் காளியணக் கவுண்டனுக்கு ஸ்ரீ புண்ணிய குமாரனாகிய மாரப்பன் மூதுரை யென்றறியவும்.

கடைசியில்: தாளியா பட்டியிலே யிருக்கும் நா. கா. மாரப்பன் மூதுரை யெழுதி நிறைந்தது. சம்பூரணம். முற்றும். வாசிவா.

குறிப்பு :

இதில், பாட வேறுபாடுகளும், பிழைகளும் மிகுந்து காணப்படுகின்றன. இது, எமது 6-ஆம் தொகுப்பு சுவடி எண் 813-c/D-1137 போன்றது.

வரிசை எண் : 3731 சுவடி எண் : 1716

## எண்சுவடி

ஏடுகள் : 28 கி. எண்ணிக்கை : 400 அளவு : 41½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கணிதம்
நிலைமை: சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | — | க | ங_ | — | ங_ |
| ய | — | ய | ங_ய | — | ங_ய |
| உ | — | உ | ச | — | ச |
| உ_ய | — | உ_ய | சய | — | சய |

முடிவு :

அடி 30-க்கு நாழிகை 21. அடி 80-க்கு நாழிகை 30
யிந்தப்படிக்கி நாழிகை பார்க்கவும்.
இந்த ஏட்டில் எழுத்துக் குற்றம், சொல் குற்றம்
பொருள் குற்றம் யிருந்த போதிலும்
பெரியோர்கள் பொறுத்துக் கொள்ளவும்
வெங்கிடாசல பதி துணை
ரெங்கநாத சுவாமி துணை.

காலம் :

சௌமிய வருஷம் மார்கழி மாதம் 2-ஆம் தேதி குருவாரமுங் கூடிய சுபயோக சுபதினத்தில் தாளியா பட்டியிலே யிருக்கும் நாச்சியப்பக் கவுண்டன் மகன் காளியணக் கவுண்டனுக்கு ஸ்ரீரி புண்ணிய குமாரனாகிய மாரப்பன் யெண் சுவடி எழுதி நிறைந்தது.

சம்பூரணம் முற்றுப் பெற்றது.

குறிப்பு :

இது, பெருக்கல் வாய்பாடு, சிறு குழி மாறல், பெருங்குழி மாறல் முதலான பகுதிகளைக் கொண்டது. இது, அச்சாகி யிருப்பினும் கிடைப்பதரிது. எண்சுவடி வாய்பாடு முதலியன ஆரம்பத்தில் கற்க வேண்டிய நூல்கள்.

இரட்டை ஏடுகளைக் கொண்ட சுவடி இது. ஏடுகள் தலை தடுமாற்றம்.

வரிசை எண் : 3732 சுவடி எண் : 1717

# மந்திர சாத்திரம்

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 500 அளவு : $14\frac{1}{2} \times 4$ செ மீ பக்கத்திற்கு : 7—8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

புருசடனுன் வாழ மந்திரம்

தூளி தூளி தூள் பாதம்
காதவளியே வட்டம்
இன்னானும் இன்னாளும்
பரவையாகப் பரந்து
பத்தாவின் மேல்போகச் சிவாய

முடிவு :

வகைக்கு மூன்று கழஞ்சு, சிறு தேக்கு
கருவாய்ப் பட்டை கடுக்காய்
தாணிக்காய் நெல்லிப் பருப்பு
சித்திரமூலம் அமுக்குரா வேர்
செவ்வியம் வாய் விளங்கம்,

குறிப்பு :

இதில், பலவிதமான மந்திரங்களும். சக்கரங்களும் மருந்துகளும் கூறப்பட்டுள்ளன. உதிரி ஏடுகளாகக் காணப்படுகின்றன. 2 அளவுள்ள ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3733 சுவடி எண் ; 1718

# உள்ள முடையான்

ஏடுகள் 33 கி. எண்ணிக்கை : 250 அளவு : $10\frac{1}{2} \times 3$ செ.மீ பக்கத்திற்கு 6 வரிகள் ஆசிரியர் : அறிய இயலவில்லை பொருள்: சோதிடம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுப்பிரமணியருதயம்

நமய உறுயன் நினைத்த காரியம் செயம்
அகமெனும் மனையுண்டு ஆண்பிள்ளை
பெறுவாய். எதிராளி தோர்ப்பான்
தேவதை பெண் தேவதை,

முடிவு :

அனுமான் இலங்கைக்குப் போய்
உயிரதஞ் செய்த விடம்

வினை சடுதியில் தீரமாட்டாது
மனை மத்திமம். எதிராளி சிலுகு உண்டு
ஒரு காரியமும் பலியாது. மத்திபம்
விடகாது மத்திபம் ஆகாது மத்திபம்
ஆகாது.

குறிப்பு :

இன்ன காரியம் செய்ய நல்லதோ, கெட்டதோ என்று அறிய கயறு போட்டுப் பார்க்கும் சுவடி இது,

இது, எமது சுவடி எண் 1231/D-1963 (ஏழாம் தொகுப்பு) போன்றது.

வரிசை எண் : 3734 சுவடி எண் : 1719.

# சகாதேவநூல் சந்தனக் கயறு

ஏடுகள் : 65 கி. எண்ணிக்கை : 700 அளவு : $10\frac{1}{2} \times 3$ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : சாகதேவர் பொருள் : சோதிடம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஆறு முகவனை நாது மலர்கொடு
கூறு மடியவர் (பேறு) பெறுவரே !
தெண்டாயுத பாணி லெட்சிக்கவும்

நூல்

1,2,10,100 இந்தக் கணக்குப் பிரகாரம்
சந்தனக் கயற்றில் அட்சரம் யெழுதவும்.

முடிவு :

இந்தப்படி கானில் தருமர் தம்பி
சகாதேவன் அருளினாலே பிணி
உறவு சேரும். எல்லாக் காரியமும்
நன்றாம், உத்தமம், நல்லது.
சகாதேவர் சாஸ்த்திரம்—சந்தனக்கயறு
எழுதி முடிந்தது. முற்றும். சம்பூரணம்.

குறிப்பு

இது, கயறு போட்டுப்பார்க்கும் சுவடி. நினைத்த காரியம் நடக்குமா, நடக்காதா? என்பதனை அறிவது.

இது, எமது சுவடி எண் (6-ம் தொகுப்பு) 890/D-1456 போன்றது.

வரிசை எண் : 3735 சுவடி எண் : 1720-a

# சுப்பிரமணியர் அகவல்

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 150 அளவு : 11½ × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்:தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

ஓம் பரப்பிரம்பனே நம : அசிந்த்யாவ்யாக்த ரூபாயா
நிற்குணாய குணாத்மநே : சமஸ்த சகதாதார மூர்த்தயே
பாஹ்பிரம்மனே நம:

காப்பு

சுந்தரா நந்தனெனுஞ் சோதிசுப்ர மண்யர்மேல்
செந்தமிழா லேயகவல் செப்புதற்கு—வந்தருளும்

விந்தைமகு சுந்தருக்கு மேலாகி முன் பிறந்த
தந்திமுக சுந்தரன்றாள் காப்பு.

நூல்

தந்திமுகற் கிளைய கந்தா சரணம்
அந்திர வானவர்க் கதிபா சரணம்.

முடிவு :

சந்திரன் துலங்க யிந்திரன் துலங்க
சிந்தையில் வந்து சிவபதம் தாரும்
தஞ்சமென் றுன்னைப் போற்றினேன் முருகா
நெஞ்சுக்கு மேலே நின்றிடுங் குமரா !

சுப்பிரமணிய ரகவல் முற்றிற்று.

காலம் :

ரங்கசாமிக் கவுண்டன் போத்தம்பாளையம்
4—11—35

குறிப்பு :

இது, மாதம், வாரம் முதலானவற்றை இணைத்து முருகர்மீது பாடப்பட்டதாகுமிது. பிழைகள் மலிவு.

வரிசை எண் : 3736 சுவடி எண் : 1720-b

# கடம்பன் கவசம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 150 அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காப்பு

கல்விகுண ஞானங் கருணைபொறை யீகைமலர்ச்
செல்வ்யரு றெல்லாஞ் சிறக்கவே — நல்ல
கடம் பொழியு மும்மதக் காரானை வாழ்த்தி
கடம்பன் கவசங் களறு.

நூல்

முருகா முருகா முருகா முருகா
சரவண பவசிவ சண்முக முருகா

முடிவு :

காக்க முருக காக்கா முருகா
வாழ்க முருகா வாழ்க முருகா
முருகா முருகா முருகமுரு கோனே

கடம்பன் கவசம் முற்றிற்று

வேல வேல வேல வேலாயுதபாணி துணை.

குறிப்பு :

தன்னைக் காக்கும்மடி கந்தர் சஷ்டி கவசம் போல பாடப்பட்டதாகுமிது: கடம்பனை வேண்டிய பாடப்பட்டது.

வரிசை எண் : 3737 சுவடி எண் : 1720-c

# ஔவையார் முதலானோரின் வெண்பாக்கள்

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 40 அளவு : 11½×2½ செ.மீ.
பக்கத்திற்கு: 6 வரிகள் ஆசிரியர் : ஔவையார், உப்பை முதலானோர்
பொருள் : நீதிநூல் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம்

இட்டமுட னென்தலையி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ — முட்டமுட்டப்
பஞ்ச(மே) யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ !

முடிவு :

எவ்வுயிருங் காற்பதற்கோ ரீசனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யானொருவனல்லனோ — வவ்வி
அருகுவது கொண்டிங் கலைகுவதே னன்னே
வருகுவது தானே வரும்

மனோன்மணி துணை

குறிப்பு :

இதில், ஔவை, உப்பை, அதியமான், உருவை, கபிலர், வள்ளியம்மை' திருவள்ளுவர் ஆகிய எழுவர் பிறந்ததும் ஒவ்வொருவராக ஆங்காங்கே விட்டுச் சென்ற பெற்றோரைப் பார்த்துக் கூறிய வெண்பாக்களாகு மிவை.

வரிசை எண்: 3738 சுவடி எண் : 1720-d

## சர்வ சங்காரவிஞ்சைக்குத் திறவுகோல்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 150 அளவு : 11½×2½ சென்டி மீட்டர்

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறுமுகவன் பொருள்: மாந்திரீகம்

நிலைமை : நல்ல நிலை சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீர்மேவும் வாலை யபிராமி சூலி
திரிபுரை சங்கரி கௌரி மாரி வாமி
கார்மேவு மயிட சங்கரி துற்கை சாமுண்டி
கங்காளி தந்த மைந்தன்
கார்மேவும் அத்திமுகன் ஒற்றைக் கொம்பன்
கருணைதிரு நயனமிரு கமல பாதம்
பார்மேவும் அறுமுகவன் குறுமுனிக்கு
பகர்ந்த சர்வ சங்கார விஞ்சைக்கிக் காப்பதாமே.

முடிவு :

புவியாடை யுடுத்தி மான்மழு கரத்தி லேந்தி
பூங்கொன்றை மாலையது புனைந்திருக்க
கெவியான பிரமனென்றும் சிந்தை யெண்ணி
கேசரிமேல் மூலத்தை வைத்துத் தாக்கே

சிவசுப்பிர மணியர் துணை

விஞ்சைக்கி துரவுகோல் முற்றிற்று

குறிப்பு :

இது, மந்திர சாத்திர மெனப்படும். அகத்திய முனிவருக்கு முருகன் உபதேசித்த தாகக் கூறப்படுவது.

வரிசை எண் : 3739 சுவடி எண் : 1720-e

## சுப்பிரமணியர் பூசை மாலை

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 30 அளவு : 11½ × ½ செ மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஓம் சரஹண பவனே சங்கரி யீன்ற
சண்முக ரீங் ஓங்கார சமைய
காருண்ணியாள் புதல்வனே முருகா

முடிவு :

வியாழன் வாரும் வேலாயுதனே
புள்ளி மானீன்ற வள்ளிநா யகனே
வெள்ளிக்கிழமை வெளிவர வேணும்
புள்ளி ம..........

குறிப்பு :

இதில். சுப்பிர மணிரகவலில் வந்துள்ள வரிகளும் வந்துள்ளன.

வரிசை எண் : 3740 சுவடி எண் : 1720-f

## வராகி மாலை

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 200 அளவு : 11½ × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வசியம்

இருகுழை கோமளம் தாள்புட்ப ராகம் மிரண்டுகண்ணுங்
குருமணி நீலங்கை கோமேதகம் நகம் கூர் வயிரம்

திருககை முத்து கனி வாய் பவளம் சிறந்தவல்லி
மரகத நாமம் திருமேனியும் பச்சை மாணிக்கமே.

முடிவு :

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரி நற்
றவமாறு மெய்யன்பர்க்கே யிடஞ்சூழுந் தரியலரை
அவமானஞ் செய்யக் கணங்களை யேவும் கோரி யிங்கு
நவமாக வந்தெனைக் காக்கும் திரிபுர நாயகியே ! —32

வராகி மாலை முற்றிற்று.
கௌரி மனோன்மணி துணை.

குறிப்பு :

இச் செய்யுட்களைக் கொண்டு தரிசனம், தம்பனம், மோகனம் ஆகருஷணம், உச்சாடனம், பேத மாரணம் முதலானவைகளைச் செய்வதற்கு முனைவர்.

இது, எமது சுவடி எண் 637-b/D-1140 போன்றது

வரிசை எண் : 3741 சுவடி எண் : 1720-g

# ஆனந்த லகரி

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 200 அளவு : 11 1/2×2 1/2 செ.மீ.

பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர்: வீரகவிராஜ பண்டிதர் பொருள் : நாடகம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வாக்குண்டாம் + + + தமக்கு.
குருசகாய முண்டாகவும்

நூல்

வஞ்சினைக்கு

சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு சேரி
லெத்தொழிலும் வல்லதா
மிவள் பிரிந்திடி லியங்குதற்கு மரிதே

முடிவு :

மூலம் ஓம் நாராயணி இங் உங் நமஸ்து
மகிளிரை மோகிக்கவேண்டினோர் தியானிக்குமியல்பு
கூறியது. தேவதை கிருபை சக்கரம்

(சக்கரம் உள்ளது)

குறிப்பு :

இது, எமது 7-ஆம் தொகுப்பு சுவடி எண் 1175-a/D-1813-ன் வேறாயது போல் தோன்றுகிறது. இதில், இச்செய்யுட்களைக் கொண்டு, இடி விலக்க தியானம், ஸ்ரீ வசீகர மோகினி, தேவி தியானம், கவிதை பாட, தெரிசனை அட்சரம் அடைக்க, அபிராமி கடாட்ச வசீகர மோகனம் முதலியன செய்ய மார்க்கம் சக்காங்களுடன் கூறப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3742 சுவடி எண் : 1720-h

## கந்தரனு பூதி

ஏடுகள் : 30 கி. எண்ணிக்கை : 300 அளவு : $11\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : தோத்திரம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வணங்காத பேரை தண்டிக்க

உல்லாச நிறாகுல யோகவிதச்
சல்லாபவி னோதனு நீயலையோ
எல்லாமரந் தென்னை யிகள்ந்தவிதஞ்
சொல்லாய் முருகா சூரர் பூபதியே!

மூலம் ஸ்ரீம் கிலியும் ரீயும் சாஹணை பவவென்று
25000 உரு செபிக்க

முடிவு:

ஓம் ஐயும் கிலியும் சவ்வும் சிவாய
சரஹணபவ கிழக்கு முகம் 25000 உரு
மகாவசியம். சக்கரை பால் பழம் பாயசம்

குறிப்பு :

இதில், இந்த கந்தரனுபூதிப் பாடலை வைத்து மந்திரங்கள் செபித்து விரும்பிய காரியத்தை சாதிப்பதாகு மிது.

வரிசை எண் : 3743 சுவடி எண் : 1721

# கிழமை பலன்

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 200 அளவு : $13\frac{1}{2} \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஞாயிற்றுக் கிழமை

தேவ பிரம சாதி பொன்னிறம்
முதுகிலே கிற்றிம கயிறுக்கும்
ஸ்ரீயும் தானும ஆதாரங்
கொண்டிருக்கும்.

முடிவு :

ஆகாத்தில் வியாத னிருப்பான்
நினைத்த காரியம் நன்று. பூமியில்
சவுக்கிரனிருப்பான். சுவானத்தை வரும்
சனிக்கிழமை பலன் முற்றும்.
நாராயண மூர்த்தி துணை யுண்டே
இது எழுதினது உபாத்தியார்
சிவன் மலை.

குறிப்பு :

அந்தந்த கிழமைகளுக்குரிய சோதிடம் இதில் கூறப்பட்டுளது. வாரபலன் என்பதும் இது. பின்னர் மூன்று உதிரி ஏடுகள் உள்ளன;

வரிசை எண்: 3744 சுவடி எண் : 1722

# சுப்பிரமணியர் மாலை

ஏடுகள் : 34 கி. எண்ணிக்கை : 200 அளவு : $14\frac{1}{2} \times 3$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாலை

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

வெற்றி (வே)லுற்ற துணை. வாலை மனோன்மணி துணை
ரங்கசாமிக் கவுண்டன்

காப்பு

சீர்பெருகும் தென்பழனி யாண்டவர் மேல்
சுப்ரமண்யர் மாலை செப்ப

நூல்

சரவண பவனே ஆரிரு புயனே
சயாரொளி பவனென வருவாய்

முடிவு :

மந்திர உப.....................

திரமுடன் கிரியுங் கிரியுடைத்தாக
திரள்புய அட்சரத் தொளிவாய்
சரவண பவனே சௌயொளி பவனே
............ கோற்வை முதலாய்
............. ............ய திரிபுர பவனே
............ சிவகுரு நாதா
அரகர பவனே பகனொளியான
ஐயனே சுப்ரமண்யனே ! — 32

முற்றும்

காலம் :

யுவ வருஷம் சித்திரை மாதம் 1-ந் தேதி யெழுதியது. போத்தம் பாளையம் ராமக் கவுண்டன் மகன் ரங்கசாமிக் கவுண்டன்.

குறிப்பு :

இது, எமது 6-ஆம் தொகுப்பு சுவடி எண் 849/D-1152 போன்றது அதில் 33 பாடல்கள் உள்ளன. இதில் 32 பாடல்கள் முற்றும் என்றுளது. 33-வது பாடல் இல்லை. பழனிமலை முருகன் மீது பாடப்பட்டது. இரட்டை ஏடுகளாக உள்ள சுவடி.

ரிசை எண் : 3745 சுவடி எண் : 1723-a

## மந்திர வைத்தியக் கோர்வை

ஏடுகள் : 35 கி. எண்ணிக்கை : 400 அளவு : 13×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்தி சாத்திரம் நிலைமை : எலிகடித்தது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் குருபாதம் துணை.

ஹரிஓம் ஆனந்த குருவுமாகி அருள்சதா சிவமு மாகி
தாந(ந்)த விஷ்ணுவாகி சதுர்முகப் பிர்மாவாகி
மோனந்த யானை ஞான முக்கண்ணன் பாதம் போற்றி

வெற்றிவே லுற்ற துணை

முடிவு :

சகல கரியமும் நினைத்தபடி சித்தியுண்டாம்
பூசையில் மறந்த ...............டும் மந்திரத்தை
மூன்......... ........ ஆரம்பிக்கவும் ............
மங் ஸதம்பய ஸ.......... உங் சிங் கிலியும்
............ வங் சிங் உம்படு ...........

காலம் :

கலியுகாதி 5041 பிறமாதி வருசம் புரட்டாசி மாதம் 7-ந் தேதி சனிக்கிழமை சித்தியோகத்தில் யிது எழுதியது. ராமக் கவுண்டன் மகன் ரங்கசாமிக் கவுண்டன் எழுதியது. போத்தம் பாளையம்.

குறிப்பு :

இதில், கணபதி சக்கரம், சு. விஞ்சை, சகல அச்சம் தீர, சுப்பிரமணியர் சக்கரம், பஞ்சாட்சரம், பேய் பிசாசுக்கு முதலான தலைப்புகளும் மந்திரங்களும் யந்திரங்களும் உள்ளன.

வரிசை எண் : 3746 சுவடி எண் : 1723-b

# கந்தரனுபூதி

ஏடுகள் : 52 கி. எண்ணிக்கை : 250 அளவு : 13×3 செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அருணாகிரியார் பொருள் : தோத்திரம்
நிலைமை : எலிகடித்துள்ளது முழுமை : முற்றாற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

காப்பு

நெஞ்சக்........... ...... ....... ............
தஞ்சத் தரு ........ ... ........... ............
செஞ்சொற் பு .......... ............ ............
பஞ்சக்கர வானை (பதம் பணிவாம்)

முடிவு :

நினைத்தபடி தரிசனங் கொடுக்க

உருவா யாருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா ஒளியாய்க்
கருவாய் யுராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குக நே. —51

நிவேதனம்: பழம் பால் தேங்காய் தாம்பூலம். உரு லட்சம்
மூலமந்திரம்: ஓம் சீம் சீம் சீம் ஓம் வகறா மகறா நகறா நமஹா
சிவய நம (சக்கரங்கள் உள்ளன)

காலம் :

(முன் சுவடியிலுள்ள காலம்)

குறிப்பு :

கந்தரனுபூதிப் பாடல்களைக் கொண்டு, வணங்காரை வணங்கச் செய்ய மூல மந்திரம். மாயையை ஒழிக்க, குடிகள் நலம் பெற முதலான 51 தலைப்புகள் உள்ளன. பாடலும், மூலமந்திரமும் சக்கரமுமாக உள்ளன,

வரிசை எண் : 3747 சுவடி எண் : 1724

# இலவன பஞ்சரம்

ஏடுகள் : 72 கி. எண்ணிக்கை : 1000 அளவு : $19 \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம்

நிலைமை : எலிகடித்த மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இலவன பஞ்சரமவியல்

இலவனம் அஞ்செழுத்து ............
இலவனம் பிரமா விஷ்ணு ருத்திர மயேசுபரன்
இலவனம் சதாசிவன்றான் யிது வஞ்சு சத்தியாகும்
இலவனம் வாணி லட்சுமி இனியொருத் திரியே யாமே!

முடிவு :

உத்துவாலா ஷானாயா சந்திர சூரியர் ............
ஷானாயா சமுத்தி .......... ............

குறிப்பு :

இதில், பிரிதிவி சக்கிரம், அப்பு சக்கரம் மோகனம், ஆகாச சக்கரம், வாயுவு சக்கரம், தேய்வு சக்கரம், இலவனத்துக்கு பெயர், ஐம்பூத சக்கரம்,வசிய சக்கரத்துக்கு பஞ்சலோகத் தகடு, சிதம்பர சக்கரத்துக்கு விபரம் முதலான பல மந்திரங்கள், சக்கரங் களுடன் உள்ளன.

வரிசை எண் : 3748 சுவடி எண் : 1725-a

# திரிபுரை மாலை

ஏடுகள் : 13 கி. எண்ணிக்கை : 150 அளவு : 20 × 2½ செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

மாதறி வீரி வயிரவி காளி வலையஞான
பூதறி மோக புரந்தரி காளி பொறக்கிருள்
நீதரி மந்திர சடாதரி யென் னெஞ்சத்துள்
ஆதர வாக நின்றுதவும் திரிபுரை யானந்தியே !

(சக்கரம் உள்ளது)

முடிவு :

குத்தங்கள் கோடி செய்யிலுங் கடாச்சங்
கொடுத்தருள்வாய்
சித்தமே மெஞ்ஞான பொருளே திரிபுரை
வாலை சிவசத்தியே. —28

சக்கரம் உள்ளது

குறிப்பு :

இது, திரிபுரை மாலை செய்யுட்களைக் கொண்டு மந்திரம் முதலியன செய்தல். இதன் பின்னர் 4 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3749 சுவடி எண் : 1725-b

# மனோன்மணி மாலை

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 200 அளவு : 20 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை: மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி : ஓம்

அந்தெ கறுங்குளல் பொற்றொடிடு குழை
அம்பு விழி
யிந்தே கருபமும் கையமத்திலேங்கிடுவள் கி

முடிவு :

நீதேவி யென்றுனை நானே மனதில்
நினைக்க வரும்
மாதே பூவனை திரிபுரை வாலை
மனோன்மணியே !
அவ்வுஞ் சவ்வுஞ் சிவாயநமா ஓம் பட்டு
பீக்கக்கு —32

குறிப்பு :

இம் மனோன்மணி மாலை செய்யுள் கொண்டு மந்திரம் செபித்தல் கூறப்படுகிறது.

வரிசை எண் : 3750 சுவடி எண் : 1725-c

# வராகி மாலை

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 250 அளவு: 20×2½ செ மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திர சாத்திரம் நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

வராகி மூல மந்திரம்

அய்யும்ங் கணபதி கிலியும்ங் கணபதி
ஸ்ரீயுங் கணபதி சவ்வுங் கணபதி

நூல்

பெருக்கும்ங் கருணை வராகிதன் மாலையைப்
பேசுதற்கு
னெருக்கு மருவி மூலை அம்பிகை வாம நிறைந்து
மகிழ்ந்திருக்கும்

முடிவு :

யிழுத்து யிழுத்துக் கிரக்கிக் கிரக்கி
தியக்கி மயக்கிப் போடு போடு சிவாகா.
சிற்கிர்ம மாரண மாரண மருகு குருஸ்வாமி
பஞ்சமி பஞ்சமி நமசிவாய சிவாக கிலியும்.

குறிப்பு :

இது, வராகி மாலை செய்யுட்களைக் கொண்டு மாந்திரீகம் செய்வது.

இதன் பின்னர் இரண்டு மாந்திரீக ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3751 சுவடி எண் : 1725-ஏ

# கொங்கணர் ஞானம்

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 200 அளவு : 20 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : மாந்திரீகம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

குருசகாயம்

ஆதிசிவ சூட்சாதி சத்தி மூலம்
ஆனந்த நிர்த்தமிடு மரனோ டாயி
சோதிதிரு ஞானஒலி சமூலங் கொண்டு
தொந்தமென் றாடிநின் றற கூத்தினலே

முடிவு :

விடைக்காத மோகமினிச் சொல்லமுடி யாது
விளம்புகுரோ னானுமினிச் சொல்லக் கேளு
திடைக்கொன் றுஞ் சொல்லாதே நித்தம் நித்தம்
சலியாம லுன்னிடத்தி லிருப்பான் பாரே ! — 29

குறிப்பு :

இதில், மருத்துவமும் மாந்திரீகமும் பேசப்படுகிறது.

வரிசை எண் : 3752 சுவடி எண் : 1725-e

# திசைக்கட்டு மந்திரம்

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 250 அளவு : 20×2½ செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் கட்டு கட்டு முட்டு முட்டு
முப்பத்தி முக்கோடி தேவதையுங் கட்டி
அண்டம் கட்டி ஆகாசங் கட்டி
ஆகாசத்து வலி ஆனெயெக் கட்டி

முடிவு :

சதுர்புஜம் ப்ரசன்ன வதனம்
த்யாயேத் சர்வவிக்னோப சாந்தயேத்.
(கிரந்தத்தில் உள்ளது)

குறிப்பு :

இதில், சபைக்கட்டு, தனக்கட்டு, புலிவாய்க்கட்டு, வாலை தீட்சை மந்திரம், சுப்பிரமணிய சக்கரம் முதலியன உள்ளன.

—★★—★

வரிசை எண் : 3753 சுவடி எண் : 1726-a

# ஆனந்தலகரி

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 150 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மாந்திரீகம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பில்லி வஞ்சினை

சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரி
லெத்தொழிலும் ............
மிவள் பிரிந்திட லியங்குதற்கு மரிதிரி தேனான
............

முடிவு :

ஓதலிங் கிருசுடர் முலையனையவும் ...........
மங்கையை மயல் செய்வர் கமலையே! —19

மூலம்: ஓம் னாரு ........... உங் னமஸ்த்து
யிது மகளிரை மோகிக்க வேண்டினோர்
தியானிக்கும் மியல்பு...........க்கு சக்கரம்
தேவதை கிருபை............

குறிப்பு :

இது, முன் சுவடி 1720-ஐ போன்றது. ஆனந்தலகரிப் பாடல்களைக் கொண்டு மாந்திரீகம் செய்வது.

இதன் பின்னர், சிலாக்குவிட மந்திரம் என ஒரு ஏடும், ஆடாத தேவதைக்கி என ஒரு ஏடும், 'தருணமாங் கலையுனது' எனத் 'தொடங்கும் பாடல்களுள்ள 2 ஏடுகளும், சக்கரங்கள் எழுதிய ஒரு ஏடும் ஆக 5 உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3754 சுவடி எண் ; 1726-b

# கந்தரனுபூதி

ஏடுகள் 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : 22×3 செ.மீ.
பக்கத்திற்கு 6 வரிகள் ஆசிரியர் : அருணகிரியார் பொருள்: மாந்திரீகம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் ஹரி ஓம்

கந்த நனுபூதி தன்னைக் கற்றுரைப் போர் தங்களுக்கு

............

செந்தி நகர்ச் சேவுகா வென்று திருநீறணிந் தோர்க்குப்பா

............ பாக்கும் பரன்.

× × × + + ×

நெஞ்சில்க் கனகல்லு நெகிழ்ந்திட வே

தஞ்சத் தருள் சண்முக நற்கழல் சேர்

முடிவு:

கலையே பதறிக் கதறிக் கதறி × × × வாகையனே!

மூலமந்திரம்: சவ்வும் அவ்வும் சற அண பவவென்று

50000 உருச்செவிக்கவும். நிமித்தியம்: பச்சரிசி அடை

பால் பழம் தாம்பூலம் வைத்துப் பூசிக்கவும்.

குறிப்பு:

இது, முன்சுவடி 1720-h. போன்றது. கந்தரனுபூதிப் பாடல்களை முன்னிறுத்தி, மதவானையை அனுசரிக்க, வணங்காத பேனாத் தண்டிக்க, கல்வியில் பேசுதல் எதிரி வினையாயிருந்த குடி கிட, பிசாசு தீற்க்க, சத்துரு செயம், மாய்கை யொழித்தல் அறிவு உண்டாக்கல், பெண் புருஷனைக் கூடாத பேருக்கு முதலான தலைப்புகள், சக்கரங்கள் உள்ளன.

வரிசை எண் : 3755 சுவடி எண் : 1727-a

## சர்வ பட்சணி

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 80 அளவு : 25×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறுமுகவன் பொருள் : மந்திரங்கள்

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

யானைமுகம் ஆறுமுகம் அம்பிகை

× × × × ×

பழனியங்கிரி முருகரே துணை

நூல்

சீர்மேவும் வாலை யபிராமி சூலி
திரிபுரை சங்காரி கௌமாரி வாமி
தார்மேவு மயிடசங்காரி துற்கை
சாமுண்டி கங்காளி தந்த மைந்தன்

முடிவு :

கானாரும் மும்மதந் தான்பிடித்த பேற்கு
காராவின் பால் நெய்தேன் மூன்று மொன்றாய்க்
கோனான விஞ்சையாயிரஞ் செவிக்கக்
கொடுக்கவொரு திங்களுக்குள் குணமாய்ப் போமே !

குறிப்பு :

இது, எமது 6–ஆம் தொகுப்பு சுவடி எண் 810-C/D-1337 'ஆறுமுகன் விஞ்சை' யேயாகும். இங்கு சர்வபட்சணி என்று பாடலில் உள்ளது. பாடவேறுபாடுகள் மிகுதி.

வரிசை எண் : 3756

சுவடி எண் : 1727-b

## விநாயகர் அகவல்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 30 அளவு : 25×3 செ.மீ.
பக்கத்திறகு: 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : தோத்திரம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஓம் கணபதி மகா கணபதி முக்கண்ணன்
பால மூசிக வாகனா பால்பழம்
தேன் நானுனக் களிப்பேன்

முடிவு :

ஓங்கு ஓங்கு உமையவள் சுதனே
அச்சுதன் மருகா கச்சி பதியே
கடுகோன் வாவா ஓம்ஆம் சிவாயநம.

விநாயகர் அகவல் முற்றிற்று

குறிப்பு :

இது, ஔவையார் இயற்றிய விநாயக ரகவலின் வேறாயது இது மாந்திரீகம் தொடர்புடையது.

வரிசை எண் : 3757 சுவடி எண் : 1727-c

## சுப்பிரமணியர் அகவல்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 100 அளவு : 23×3 செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவாவி னன்குடி சிவகிரி பழனி
குருவாம் குமரா குமர குருபரா
சரஹண சண்முகா சதாசிவன் பாலா
இரபல சகாயா ஏழைபங் காளா

முடிவு :

இன்பமாய் ஆகருசனம் தந்திரம் மந்திரம்
அருள்மணி யஷள்சதம் உந்தன் விபூதி
உடனே சித்திக்க கந்தனே தோத்திரம்
கவசமாய்க் காரனை. சந்ததி யெனக்கருளு
சண்முகா சரணம் சரணம்.

குறிப்பு :

இது, மாந்தீரிகத்தின்பால் தொடர்புடையது

வரிசை எண் : 3758 சுவடி எண் : 1727-d

## காளி மந்திரம்

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை : 200 அளவு : 25×3 செ மீ
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் திரிபுர காளி மிறா ஐய
திமிரி கபாலி பிடிபிடி உதிரம் பிடி
ரத்தமும் சேரும்

முடிவு :

நீ தொட்ட மூலி எட்டு திசையும்
பதினாறு கோணமும் என்முக மாக
ஓம் சிவாய நம. சிவாய நம சிவய நம

முருக நாதன் துணை. சுபம்

காலம் :

ஆங்கீரச வருசம் தைமாதம் 18-ந் தேதில் எழுதியது ரங்கசாமிக் கவுண்டன்.

போத்தம் பாளையம் ரங்கசாமிக் கவுண்டன் (இதன் பின்னர் சக்கரங்களும் விக்னே சுபர மந்திரங்களும் உள்ளன),

குறிப்பு :

காளி மந்திரத்தோடு நவக்கிரக மந்திரமும் உள்ளது. இரட்டை ஏடுகளாக உள்ளன.

வரிசை எண் : 3759 சுவடி எண் : 1728

## நாசிகேது புராணம்

ஏடுகள் : 10` கி. எண்ணிக்கை : 2500 அளவு : 23 × 2 செ.மீ
பக்கத்திற்கு : 4—5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : புராணம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ...தோற் றம்போல — வங்கே
புகுந்து முழங்கும் புரிசங்கின் னோசை
யுகந்துகந்த நெஞ்சமே யுற்று. — 3

முடிவு :

சருவ ரிஷிகளுங்கூடி னாசு கேதுவை நோக்கி நீ செய்த புண்ணியமோ உன்னுடைய பிதாச் செய்த புண்ணியமோ காய்ந்த யிரும்பு யுண்ட நீர் மீண்டு வந்தாலும் மேலோகத்துக்குப் போனவர்கள் மீள்வதில்லை. யென்று மெத்த மெத்த ஆசுபரியப் பட்டு யின்னமும் யீசுபரனுடைய அனுக்கிரகத்தினாலே சிவனுடைய திருவடியைச் சேர்வா யென்று மகா விருள்சிக ளுரைப்ப ... ... ... (அடுத்த ஏடு இல்லை]

காலம் :

............... வெள்ளிக் கிழமையும் விசாக நட்சேத்திரமும் திசைமியும் பெற்ற னாளில்ப் புதுப்பாளையம் பழனியப்ப முதலி மகன் இருளப்ப முதலி அவருடைய குமாரன் சித்திலிங்க முதலியார்க்கு ஞானக்குப்பையாண்டி பொன்முத்து வேலாயுத வாத்தியார் நாசுகேதுப் புராணம் எழுதிக் குடுத்தது. சம்பூர்ணம்.

யாதா மொருவன் எடுத்துக் கொண்டாலும் படிச்சுப் பிரசங்கம் பண்ணிக் குடுக்கவும். ஆண்டவர் துணை.

குறிப்பு :

இது, எமது முதல் தொகுப்பு, சுவடி எண் 314/D-627 போன்றது. பிற விப ரங்களை அங்கு காண்க. அது வசனநூல் இது வெண்பாவும் உரையுமாக உள்ளது. முதலேடும், இறுதியில் ஒரு ஏடும் இல்லை.

வரிசை எண் : 3760 சுவடி எண் : 1729-a

# ஸ்ரீராமர் துதி

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 25 அளவு : 25 × $2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.
சரஸ்பதி துணை

ஆநந்த குருவுமாகி அருள் சதா சிவமு மாகி
தாநந்த விட்ணு வாகி சதுர்முக பிறமா வாகி

முடிவு :

வாது செய் யாமலே சங்கு சக்கரத்துடன்
வந்துகார்த் தருள்புரிவாய்
வடமலையில் வளர்கின்ற திருமருவு வாசனே!
வடவேங்கடா சலேசனே!

குறிப்பு :

இதில், ராமரின்—ராமாயணப் பாடலொன்றும், வேங்கடேசர் பதிகத்தி லொன்று மாக இடம்பெற்றுள்ளன.

வரிசை எண் : 3761

சுவடி எண் : 1729-b

# கருடப் பத்து

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 120 அளவு : 25 × 2½ செ மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்

கடவுள் துணை.

ஓம் பூரணனே பதிநாறு திங்கள் சேரும்
பொருந்தியே யருக்கன் பதினெட்டு சேரும்
× × + × × ×
ஆரணனே ரகுராமா கெருடன் மீதில்
அன்புடனே யேறிவந் தருள் செய் வாயே ! —1

முடிவு :

துளபமணி மார்பழகா சுகத்தைத் தாதா
சுருதியே மெய்ப்பொருளே வரத்தைத் தாதா
+ + × +
அளவிடா மெய்ப்பொருளே கெருடன் மீதில்
அன்புடனே யேறிவந் தருள்செய் வாயே ! —12

12 பததி முற்றுப்பெற்றது

குறிப்பு :

இராமபிரானைக் கருடன் மீது ஏறிவந்து அருள் செய்ய வேண்டுமென்று வேண்டுவது. பிழைகள் மலிவு.

வரிசை எண் : 3762 சுவடி எண் : 1729-c

# கசேந்திர மோச்சக் கீர்த்தனை

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 50 அளவு : 25 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீ

இராகம்—சுருட்டி தாளம்—ஆதி

பல்லவி

மூலமென் றழைத்த யானையைச் காத்தருள்
முகுந்தனைப் பணி நெஞ்சே.

அனு பல்லவி

சீலமேவும் பத்மாசனன் வணங்கும்

முடிவு :

துந்துபியெலி வெகுவாய் நீட மாதவர் களித்தாட
வேகமொடு சென்று மரகத மலைபோல எதிர்த்து நின்று
நீதிகை அஞ்சாதே அஞ்சாதே யென்று
நெடிய முதலையைக் கொன்றிடர் தொலைத்தன்று

மூலமென்றழைத்த யானையைக் காத்தருள்
முகுந்தனைப் பணி நெஞ்சே !

கசேந்திர மோச்சக் கீர்த்தனை முற்றிற்று

ஸ்ரீராமர் துணை.

குறிப்பு :

'ஆதிமூலமே' என்றழைத்த யானையின் இடர்தீர்க்க வந்த திருமால், யானைக் காலைப்பற்றியிருந்த முதலையைக் கொன்று, யானைக்குத்திருவள் செய்தார்.

வரிசை எண்: 3763 சுவடி எண்: 1729-d

# சனிபகவான் தோத்திரம்

ஏடுகள் : 4½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 25 x 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

உ

சிவமயம்

காப்பு வெண்பா

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரொடு கிம்புருடம்
மூவர் முனிவர் முதலோரை— மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதைபுலகக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

நூல்

ஆதிவேதாந்த முதலறியான் ஞான
ஐந்தெழுத்தி னுட்பொருளை

முடிவு :

மூரிகொளு நோய்முகவர முடவா போற்றி
முதும(கனின் மு)ண்டகத்தாள் போற்றி போற்றி ! —11.

சிவமயம்

குறிப்பு :

இது, எமது 6 ஆம் தொகுப்பு சுவடி எண் 812-a/D-1296 போன்றது.

—★★★—

வரிசை எண் : 3764 சுவடி எண் : 1729-e

# நவக்கிரகத் தோத்திரம்

ஏடுகள் : 3½ கி. எண்ணிக்கை : 100 அளவு : 25×2½ செ மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மண்ணு(யிர் கட்கனை)த்தும் மாரா தளித்து நல்
நண்ணு நவக்கிரக நன்புசொல் - தண்ணுலவு
திங்கள(ணி தங்குமு)யர் செஞ்சடைய ருண்மகிழ்செய்
கங்கையரு ளைங்கரனார் காப்பு.

முடிவு :

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியான வெள்ளி
காரியன் ராகுகேது கடவுள ரொன்ப (நா)மத்
தாரியல் சக்கரத்தைத் தரித்திரர் பூசித்தாலும்
பாரினில் அரிட்டம் நீங்கி பாக்கிய மருளுவீரே !

......... தோத்திரம்

யெழு(த)யது ரங்கசாமிக் சுவுண்டன்.

காலம் :

யுவ வருஷம்...............11...........

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 812-b/D-1297 போன்றது, (6-ஆம் தொகுப்பு)-பிழைகள் மலிந்து கிடக்கின்றன.

—★—★—

வரிசை எண் : 3765 சுவடி எண் : 1730

# திருக்குறள் — உரையுடன்

ஏடுகள் : 248 கி. எண்ணிக்கை : 10,000 அளவு 23×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8—10 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாகக் குருவாழ்க

ஆயிரத்து முன்னூற்று முப்ப தருங்குறளும்
× × × × ×
வீற்றிருக்க லாம்

நூல்

கடவுள் வாழ்த்து

உத்தமம்

அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே வுலகு. எ.து.

உயிரெழுத்துப் பனிரெண்டுக்கும் அகர முதலெழுத்தான
முறமை போல ஆதியான பகவன் முதலாம் உலகத்துக்
கென்றவாறு. ... ......... —1.

முடிவு :

உணர்வினு முண்டதற லினிது காமம்
புணர்தலினி முடலினிது. எ.து.
ஆறுவகை யிரசமுங் கூட்டி உண்பதிலு முன்னாளுண்பது
செரிப்பது நன்று நன்று (கடைசி ஏடு இல்லை)

காலம் :

ஆயிர்வர் குலத்தில் பழனி செட்டியார் குமாரன் வேலாயுத செட்டியாருக்கு இந்த திருமுறை எழுதிக் குடுத்தது.

மீனாட்சி சகாயம். ஆறுமுகந் துணை

ஆனந்த வருஷம் மார்கழி மாதம் 1—ந் தேதி பொத்தம் பாளையம் அண்ணையக் கவுண்டன் தன் ஊட்டு வேலை..... ......

குறிப்பு :

மிகப் பழுதடைந்துள்ள சுவடி. உரை அறியக்கூடவில்லை. வெவ்வேறு கையெழுத்துக்களைக் கொண்டது.

வரிசை எண் : 3766 சுவடி எண் : 1731

# மந்திர சாத்திரம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : மந்திரங்கள்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சக்கரம் உள்ளது
கணபதி தியானம் சக்கரம்
ஓம் கங் கெங் கணபதி நம.
சக்கரம் உள்ளது

முடிவு :

சற அணபவா வென்று 100000 உருச் செவிக்கவும்
நிமித்தியம் பாயசம் தாம்பூலம்
உயிற்புக்கு

குறிப்பு :

இதில், சக்கரங்களும் மந்திரங்களும் உள்ளன வெவ்வேறு சுவடிகளின் உதிர்ந்த ஏடுகள்.

இதன் பின் மருத்துவம் எழுதிய ஏடொன்றுளது.

வரிசை எண் : 3767 சுவடி எண்: 1732-a

# சண்முக பூசா விதி

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : 28×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : புலிப்பாணியார் பொருள் : மந்திரம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி: ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை.

ஆதியாஞ்சிவனுமையு மரையுங் காப்பு
அரியயனுங் கொலிசனோடு கிணேசன் காப்பு
வீதியாஞ் சன்முகத்தின் பூசை மார்க்கம்
விளம்புரேன் சக்கரத்தின் தியானந் தானும்

முடிவு:

பாரேநீ துவாபரையிற் போக னாதர்
பண்பாகப் பூசை செய்து பணிந்தார் பாரு
கோனேநீ கலியுகத்தி லிரனூற் றஞ்சில்
கொற்றவனே புலிப்பாணி பணிந்திட்ட டேனே! —34

சண்முக பூசா விதி முற்றுப் பெற்றது
சம்பூரணம்

குறிப்பு:

இதில், சக்கரங்கள் இல்லை. உரை நடையில் கூறப்பட்டது. வடமொழியில் உள்ளதைத்த தமிழில் கூறினேன் என்று புலிப்பாணி கூறுகிறார்.

வரிசை எண் : 3768

சுவடி எண் : 1732-b

# வ் ஞ் ஏ ச மந்திரம் சக்கரம் — திறவுகோல்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 28×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மந்திரம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அவ்வும் சவ்வும் ஓம் நசிமசி
சகல வியாதிக்கி சகல மாரணத்துக்கும்
இதுவில் துரவு.

முடிவு :

பழம்பால் பொங்கல் வஷத்து சர்க்கரைப்
பொங்கலும் தேங்காய் வடை பருப்பு
வைக்கவும்

குறிப்பு :

இதில், என்னென்ன மந்திரங்களுக்கு என்னென்ன சூட்சுமம் என்று கூறப்பட்டுளது.

இதன் பின்னர் மந்திரங்கள் ஒழுதிய மூன்று உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3769 சுவடி எண் . 1733-a

# அரி கீர்த்தனை

ஏடுகள் : 21 கி. எண்ணிக்கை : 400 அளவு : 29½ × 3 செ மீ

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இசை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கச்சேரி பண்ணுவமே — பிரமானந்தக்
கச்சேரி பண்ணுவமே.

அச்சுதானந்த கோவிந்த நாமங் கொண்டு
இச்சையாகுற யிந்த எச்சுப் பிசாசை யோட்டி —
கச்சேரி பண்ணுவமே.

முடிவு :

சோதினையாய்ப் பிரகலாதனுக் கன்பாய்
தூணிடை வந்ததார் மனதே மனதே
ஆதிமூல மென்று முறையிட்டலறு கின்ற
ஆனையைக் காத்தவ ராா் மனதே மனதே ! — திருமா.

குறிப்பு :

இது, திருமாலைப் புகழ்ந்து பாடப்பட்ட கீர்த்தனைகளைக் கொண்டது. சற்றே பிழைகள் உள்ளன.

வரிசை எண் : 3770 சுவடிஎண் : 1733-b

# கட்டியம்

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 30 அளவு : 29½ × 3 செ.மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இசை

நிலைமை : சற்றே பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

ஐங்கரனை மாலை ஆறுமுக வேலவனைப்
பொங்கமுட னேதொழுது போற்றுவோம்—இங்கிதஞ்சேர்
நயம்பெறவே அயநாவில் நளினியெனுஞ் சரஷ்பதியே
ஜெயஞ் ஜெயஞ் பசிப வா.

சிவமயம்.

முடிவு :

மங்கையுமை யானந்தி மால்தங்கிய விருமவல்லியே
வெகு பராக்கு
வார் கொண்டணிந்த தன சிவகாம சுந்தரியே
வெகு பராக்கு

குறிப்பு :

இது, ஒரு நாடகத்தின் கட்டியக்காரன் கூறும் கட்டிய மாகும். இன்ன நாடகமென்றறிய இயலவில்லை.

வரிசை எண் : 3771 சுவடி எண் : 1734-a

# கல்வியொழுக்கம்

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 150 அளவு : 38 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : ஔவையார் பொருள் : நீதிநூல்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

கல்வி யொழுக்கங் கருத்துடன் ..................
செல்வ ............ ............ .........

நூல்

அஞ்சு வயதில் ஆரிய மோது
ஆரிய மோத அறிவுண் டாமே-
இனியது கொடுத்து எழுத்தை யறி
ஈட்டிய பொருளை எழுத்தே யுட............

முடிவு :

வொத்துடை யென்போர் ரெழுத்துடை யோரே !
வோதி யுணர்ந்தோற் கெல்லாம் வரு(மே)
அரகரா அவையா ரருளிச் செய்த
கல்வி யொழுக்கம் படித்து முயன்றது முற்றும்
சம்பூர்ணம் சிவமயம் குருவே துணை

விக்கினேஸ் பரன் துணை.

குறிப்பு :

இது, ஆத்திசூடி போல தமிழ் எழுத்துக்களின் அகர வரிசையில் பாடப்பட்ட நீதிநூல்.

வரிசை எண் : 3772 சுவடி எண் : 1734-b

# இராமாயணப் பாடல்கள்

ஏடுகள்: 10 கி. எண்ணிக்கை : 100 அளவு: 38×3 செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : இதிகாசம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மராமா முருக வெய்து ளாலியைக் கொன்ற வேந்தன்
குராமுக முடிகளெல்லாங் கொடுமுடியிடர்ச் செய்து
கராமுக மளிக்க வேண்டி கருணைசேர் குரங்கை யின்று
......... யென்று விடை கொடுத்த புகழ்வல்ல ராமன்கண்டாய் —15.

முடிவு :

காதள வோடுங்கண்ணி கன்னியைச் சிறையில் வைத்து
யேதுரைத் தாலுனான்தான் விடுவதே யில்லை கண்டாய். —41.

குறிப்பு :

ஏடுகள், பக்க எண்கள் கூட அறிய இயலாத வண்ணம் பூச்சியரித்துள்ளன முன்னும் பின்னும் இன்மையால் இன்ன தலைப்பு நூலென்று அறிவதற்கில்லை.

வரிசை எண் : 3773 சுவடி எண்: 1734-c

# பாரதப் பாடல்கள்

ஏடுகள்: 10 கி. எண்ணிக்கை : 150 அளவு : 38 × 3 செ மீ.
பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இதிகாசல்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

.................. லென் று வாந்தாரே
போத மனமகிழ்ந்து புண்ணியனா ரிருக்கையிலே
வேத வியாசர் முனி மேவியங் கேவந்தார்
வந்ததொரு மாமுனியை மன்னவருங் கண்டெழுந்து

முடிவு :

சொல்லுகுரேன் கேளாய்நீ துரோபதையோராவி
பாலமுர்தங் கனிகிளங்கு பலகாரமா ............
உள்ளங் குளுந்த சனம் பண்ணு............

குறிப்பு :

இது, அம்மானை சந்தத்தில் பாடப்பட்டுளது, தொடக்கம் முடிவு இல்லாததாம் இன்ன தலைப்பென்றறிய முடியவில்லை. பக்க எண்கூட பார்க்க இயலாத அளவுக்கு சிதைந்துளது.

வரிசை எண் : 3774 சுவடி எண் : 1735-a

# அடைக்கலப் பத்து

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 36×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை,
தற்பதத்தெழுந்த சிவ நிஷ்கள சொரூபமாயி
தானுவி லுதித்த சுத்த சாகர சாரசரம்
உற்பனத் துதித்த சுடர் ஓமகுண்டலி
உண்மையி லெழுந் துலகம் ஓம்நமசிவாய மாயி

முடிவு :

நாயினுக்கு வேறுதுணை நானிலத்தி லில்லைப்பார்
நம்பினேன் பாதாம் புயத்தை அன்பினி லென்நேரமும்
ஆதிசத்தியம்பிகை நிறந்தரி புரந்தரி
அடிமையுன் னடைக்கலம் வந்தாண் டருளுமம்மையே —10.

சிவமயம்

காலம் :

பிரமாதீச வருடம் புரட்டாசி மாதம் 15-ஆம் நாள் சிலம்பரந்தாண்டவன் அடைக்கலப்பத்து. சிவமயம். ஆனபல நூலெல்லாம் கற்றவிரில்லை. தலை ராமநாத பிள்ளை கையெழுத்து.

குறிப்பு :

இது, அம்பிகையின் பேரில் பாடப்பட்ட பத்துப் பாடல்களில், அவளை, அடைக்கலமாகக் கொண்டதாகப் பாடப்பட்டது.

வரிசை எண் : 3775 சுவடி எண் : 1735-b

# பரமராசிய மாலை

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 150 அளவு : 38×3 செ மீ·

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : குருநமச்சிவாயர் பொருள் : மாலை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக

என்னகுறை சொல்லா இயலுலகில் மாமறை கள
பன்னரிய பொன்னம் பலவனா — மன்னுதுணை
நீயிருக்க நின்னைவிட்டு நீங்காச் சிவகாமித்
தாயிருக்க நாயேற்குத் தான். குருவே துணை.

நூல்

திருவணா மலையிற் குகை நமச்சி வாயத்
தேசிக வடிவமா யிருந்து காவு நாயடியேன்

முடிவு:

மங்கி யுற்பவித்து மடி .........ந்திடா வகை
நின்மலரடிக் கமலமே தருவாய் கிங்கிணிப் பதத்தை
யடியவர்க் கருளிக் கேடிலா வின்ப மெய்தவும் பைங்

(முதலேட்டில்) சிலம்பற தாண்டவக் கவுண்டன
பரமராசிய மாலை எடுத்தவன் குடுக்கவும்
ரெங்கநாயகர் லட்சிக்கவும். குருவே துணை.
அங்காளம்மை லட்சிக்கவும்,

குறிப்பு :

இது, எமது சுவடி எண் (முதல் தொகுதி) 341 D-317 போன்றது பிறசெய்திகளை ஆண்டு காண்க. இதில் 17 பாடல்களே முழுமையாக உள்ளன.

வரிசை எண் : 3776 சுவடி எண் : 1735-c

## அகத்தியர் வேதாந்த சூத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 38×5 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : வேதாந்தம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

சத்தியமே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலருக்கும் சிவனுயிர அதுதானாச்சு
புத்தியினா லறிந்தோர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே ஒருவனுண்டு

முடிவு :

புத்திகெட்டுத் திரியாதே பொய்பேசாதே
புண்ணியத்தை மறவாதே பூசை மறவாதே
கத்தியே சன்னிட்டுத் தக்கமிடாதே
கருமி யென்றுந் திரியாதே மலையிலேறு. —9

சிவமயம் குருவே துணை,
(கடைசி ஏடு இதன் தொடர்ச்சியா என்பது தெரியவில்லை)

குறிப்பு :

இது, நீதிகளை மிக எளிமையாகக் கூறுகிறது.

வரிசை எண் : 3777 சுவடி எண் : 1735-d

## வைத்தியக் கும்மி

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 200 அளவு : 38×5 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : கும்பமுனி பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வையஞ்செழிக்கக் குருமுனிவன் சொன்ன
வயித்தியக் கும்மித் தமிழ் பாட
கை(மை)யந்து வாயொன்று ........ ங்கு
புயரிருகாலன் கணபதி காப்பாமே — 1

முடிவு :

பத்திய மன்றி பெரியோர்கள் சொன்ன
பாகமறிந்த முர்தங் கொடுத்தால்
சத்தியம் நோய்தீரு மென்பத தனா...... ..
சுகனனி சாற்றிரேன் முற்றும்

சம்பூர்ணமே

ராமசெயம் குருவே துணை.

கும்பமுனி வைத்தியக் கும்மி எழுதினவன். சிலம்பரதாண்டவக் கவுண்டன் எழுதிய வயித்தியக்கும்மி. றங்கநயாகர் லட்சிக்கவும். பொத்தம்பாளையம் அன்னையக் கவுண்டன் மகன் சிலம்பர தாண்டவக் கவுண்டன் எழுதினவன், அன்னையக் கவுண்டன் லட்சிக்கவும்.

குறிப்பு :

மருத்துவ முறையினை எளிதில் புரிந்து கொண்டு மருத்துவம் செய்ய கும்மி சந்தத்தில் பாடப்பட்டதாகு மின்னூல்.

இதன் பின், அறிய இயலாத ஒன்றும், மருத்துவம் எழுதியது ஒன்றும், கதை ஏடு ஒன்றும் ஆக மூன்று உதிரி ஏடுகள் உள்ளன.

வரிசை எண் : 3778 சுவடி எண் : 1736

# தருமநெறி நீதி

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 38 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : நீதிநூல்

நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

பருதி மதியிலகும் பார்மிசை யோர்க்கெல்லாம்
தருமநெறி நீதிதனைச் சாற்றவே — கருதியிடுந்
துங்க வெழுத்தைந்து பொருள் சுந்தரப்பொற் செஞ்சடையார்
கங்கைசுதன் தந்திமுகன் காப்பு.

தெண்டாயுதபாணி துணை. வாலைபரமேஸ்பரி அம்மன் துணை.

நூல்

அனைத்துல கெங்குந் தானா அமரர்தன் தேவனாகி
நினைத்தவ ளத்தி லளித்தம ரேசமாய் நெடுமால் பாதம்

முடிவு :

தானம் பண்ணினவனும் இவர்கள் வங்கிஷத்திலுள்ள
பிதிர்களெல்லாம் தேவ தத்துவத்தை (ய)டைவார்க ளென்றவாறு — 91

குருவினைத் துதிக்குமுன்னே கூடிய சபையில் நண்ணி
யருநா வோன் றோளன்றன் …………

குறிப்பு :

இது, எமது பத்தாம் தொகுப்பு சுவடி எண் 1405/D-2011 போன்றது. இது உரையுடனிருக்கிறது. அச்சாகியுளது.

வரிசை எண் : 3779 சுவடி எண் : 1737.

# சித்திர புத்திரர் கதை

ஏடுகள் : 39 கி. எண்ணிக்கை : 400 அளவு : 35×3 செ.மீ.

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள் : கதை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

அத்தி முகனே அருள்சடையோன் புத்திரனே
சத்தி கணபதியே தையல்நல்லாள் புத்திரனே
மெத்தப் பதந்தருவாய் விக்கின விநாயகனே
நல்ல நற்குணங்கள் நடுவெழுதும் புண்ணியனே !

முடிவு :

பட்டோலைக்குள்ளே பட்டவனைக் கண்டு கொண்டோம்
கைக்கூலி வாங்கி யல்லோ கள்ளியை விட்டுவந்தார்.

(இதன் பின் ஒரு ஏட்டில்)

அய்யோ மறக்கவும் நாள் வந்துதோ × + +
× × × நானிங்கும் அதிசயமே !
என்ற பாடல் காணப் படுகிறது

குறிப்பு :

இது, எமது முதலாம் தொகுப்பு சுவடி எண் 400/D.610 சித்திரபுத்தரர் அம்மானை போன்ற தெனினும் மாறுபடக் காணப்படுகிறது. தலைப்பு, முடிவு இன்மையால் பெயர் தெரியவில்லை. பிழைகள் அதிகம்.

வரிசை எண்: 3780 சுவடி எண் : 1738-a

# குசல நாடகம்

ஏடுகள் : 140 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 36×3 சென்டி மீட்டர்
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியகூடவில்லை பொருள்: நாடகம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
வாக்குண்டாம் × × × தமக்கு.

நூல்

அண்டர்கள் துயரந் தீர்க்க
அயோத்திமா நகரம் தன்னில்
தெண்டகா ருணியம் சென்று
சமுத்திரம் அணையாக் கட்டி

முடிவு :

............ வந்தபி மா தேவர் அரி அரி ராமர்
குருவே துணை. முற்றிற்று.
............யிருக்கும் யுருமத் தட்டான்
குசல நாடகம் எழு............குருவே துணை.
ஒச்சாம் பாளையத்திலே யிருக்கும் சும்ப
............முற்றும் சம்பூர்ணம்

குறிப்பு :

தொடக்கப் பாடலில் ''குசலவேந்தன் பிறந்த நாடகத்தைப் பாட'' என்றுள்து. ஏடுகள் முன்னும் பின்னும் கலைந்தும் உள்ளன. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண் : 3781 சுவடி எண் : 1738-b

# ஸ்ரீ வீரபோக வசந்தராயர் அவதரித்த பத்திரிக்கை - வரலாறு

ஏடுகள் : 34 கி. எண்ணிக்கை : 600 அளவு : 26×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வரலாறு
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

கலியுக மகத்துவ காலக்கியான மென்னும்
ஸ்ரீவீரபோக வசந்த ராயர் அவதரித்த கலியுகப்பிரளய
சாஸ்த்திரம் ஆகிய சண்டமாருதப் பத்திரிக்கை.

நூல்

நீர்கொண்ட அண்டத்தும் தாவரத்துஞ் சங்கமத்தும்
நிறைந்து நின்ற சுகாதீத சுத்த பரப்பிரம்ம வஸ்துவாகிய
நித்தியானந்த சுரூப ஸ்ரீமந் நாராயணனை

முடிவு :

ஹே வீரப்பிரம்மமே தெக்ஷண தேசம் சென்று வருவாய். அன்றியும் இப்பூவுலக முழுமையும் சுற்றி வந்தாலும் நலம். ஜெ ஜெ விஜயீபவ. எவக் கூறியருளிய சாம்பவி யானவன் அந்தர்த்தான மாயினன். அப்பால் சித்தர் முதலான யாவரும் நமது வீரப் பிரம்மம் அவர்களும் அம்பிகையைத் தோத்தரித்து தேஜோமயானந்தத்துடன் தவயோக நிஷ்டானு பூதியில மர்ந்தனர், சுபம். சுபம். சுபம், ஜெய ஜெய வந்தே மாதரம் அல்லாஹூ அக்பர். மகாத்மா காந்திக்கு ஜே. ஏழாவது பத்திரிக்கை இரண்டாம் பாகம் முற்றுப் பெற்றது.

குறிப்பு :

இதில், வரலாறு கூறப்பட்டுளது, பிறக்கப்போகிற பிரபவ முதலான வருஷங் களில் நிகழும் நிகழ்ச்சிகள் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3782 சுவடி எண் : 1739

## பாரதம் - கிருஷ்ணன் தூது உரையுடன்

ஏடுகள் : 118 கி எண்ணிக்கை : 5000 அளவு : 32×3 செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : வில்லிபுத்தூரார் பொருள் : இதிகாசம்

நிலைமை : பழுது முழுமை முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க

நீடாழி யுலகத்து மறைநாலோ டைந்தென்று
நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராச ராசன்
மகாபாரதஞ் சொன்னனாள்
ஏடாக மகமேரு வெற்பாக வெங்கூ
ரெழுத்தாணிதன
சோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு
கூர்வாமரோ! என்றது

நெடிய கடல் சூழ்ந்த பூலோகத்தில் வேத னாலுடனே
யஞ்சாம் வேதமென்றும் பிரசித்தமாகி

முடிவு :

அநேகம் புரவி பூண்டிழுக்கப்படா நின்ற கனக ரதமேற்கொண்டு அத்தினா புரத்துக்குத் தூதுக் கெழுந்தருளி மீண்ட கதையினைச் சூரியன் கிரணம் விளங்கப் படான்ற எவ்வுலகும் புகழத் தக்கதாகச் சொல்லுகிறே னென்றவாறு. 263. அரகரா

காலம் :

துன்முகி வருஷம் ஆடி மாதம் 9-ந் தேதி மூல நட்சேநதிரமும் பக்கந் துவா தேசியும் சுக்கிரவாரமும் இப்படிக்கொத்த சுபதினத்தில் காடையாம் பதியிலிருக்கும் செந்தலை வேளாளரில் புரளந்தை கோத்திரத்தில் முழுக்காதரில் கவுண்டர்களி மன் மத மாரப்பக்கவுண்டன் கிருஷ்ணன் தூது படித்து நிறைவேறினது. அதிக சம்பூரணம்.

........ யம்மனும் வட்டமலை வேலனார் தெய்வயானை வள்ளியம்மனுங் காத்து ரட்சிக்க ...........

குறிப்பு :

இதில், தலைப்பு ஏடு இல்லை. ஏடுகள் தலைதடுமாற்றம், பிற செய்திகளை எமது முதலாம் தொகுதி பக்கம் 340-ல் காண்க.

வரிசை எண் : 3783 சுவடி எண் : 1740-a

# அருணசல புராணம் - உரையுடன்

ஏடுகள் : 229 கி. எண்ணிக்கை : 7000 அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சைவ எல்லப்ப நாவலர் பொருள் : (புராணம்) மான்மியம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது

எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அருணாசலப் புரா்ணம்

நல்ல கணபதியே நான்கால மேதொழுதால்
அல்லல் வினையெல்லா மகலுமே—சொல்லறிய
தும்பிக்கை யானைத் தொழுதால் வினைதீர்க்கும்
நம்பிக்கை யுண்டே நமக்கு.

காப்பு

மிக்க வேத வியாசர் விளம்பிய மிக்கதைக் × × × ×
× × × × × × ×
கைக்களிற்றினைக் கைதொழு தேத்துவாம் எ.து.
மிகுதியான தவசினையுடைய வேதவியாச ரிஷி

முடிவு :

ஆகச் சருக்கம் 12-க்குத் திருவிருத்தம் 566. அரகரா.

காலம் :

ஆனந்த வருஷம் ஐப்பசி மாதம் 18-ந் தேதியில் வெள்ளிக் கிழமையில் மயிலேறு பாளையத்திலிருக்கும் சவுரி பண்டாரத்தின் மகன் சவுரிமலை வாத்தியார் அருணாசல புராணம் எழுதி முகிந்தது. சம்பூர்ணம். சிவமயம். மல்லிகார்ச்சுனன் பாதமே கெதியுண்டாகவும். வெற்றிவேலுற்ற துணை. குருவே துணை.

குறிப்பு

இதில், அருணை மாநகர்ச் சருக்கம், திருமலைச் சருக்கம், திருவவதாரச் சருக்கம், திருக்கண் புதைத்த சருக்கம், பாகம் பெற்ற சருக்கம், வச்சிராங்கதப் பாண்டியன் சருக்கம், வலம்புரிச் சருக்கம், தீர்த்தச் சருக்கம், ஆதித்தன் சருக்கம், பிரத்தராசன் சருக்கம், பாவந்தீர்த்த சருக்கம், புளகாதிபன் சருக்கம் ஆகிய 12 சருக்கங்கள் இருக்கின்றன

இது, எமது 6-ஆம் தொகுப்பு சுவடி எண் 981/D-1190 போன்றது.

வரிசை எண் : 3784 சுவடி எண் : 17240-b

# கிருஷ்ணன் தூது - உரையுடன்

ஏடுகள் : 116 கி. எண்ணிக்கை : 4000 அளவு : $37\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : சீரங்கராயர் போலும் பொருள் : இதிகாசம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

நீடாழி யுலகத்து + + + + பணிந்தன்பு கூர்வா மரோ !
பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்

திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரென
மருப்பிலே துயன்ற பாவை மருங்கிலே வளர்கின்றானே !

என்றது. பொதிய மாமலையிலே சென்மித்துப் பாண்டியன்
கீர்த்தி என்னும் பசும் பொன் தொட்டிலிலே சேர்ந்து

முடிவு :

சீராம ராமா திருமாலழகா திருமலைவாழ்
நாராயணனல்ல சீரங்கராயர் நாவுதனில்
ஆராய்ந்து சிந்தை யகமுற்று நாளு மடிபணிந்தால்
வாராத செல்வமும் வைகுந்த வாழ்வும் வரந்தருமே.

சிவகுருவாய நம. வேலுண்டு வினையில்லை

காலம் :

ராட்சத வருஷம் சித்திரை மாதம் 7-ந் தேதியில் மயிலேறு பாளையத்தில் சவுரி பண்டாரத்தின் மகன் சவுரிமலை கிஷ்ட்டணன் தூது எழுதி முகிந்தது, சம்பூர்ணம்.

குறிப்பு :

இதில், மகா பாரதத்தில் கண்ணபிரான் தூது சென்று வந்த வரலாற்றினைக் கூறுவது.

வரிசை எண் : 3785 சுவடி எண் : 1741.

# அருணாசல புராணம் — உரையுடன்

ஏடுகள் : 196 கி. எண்ணிக்கை : 7000 அளவு : 38×3 செ.மீ.
பக்கத்திற்கு 8 வரிகள் ஆசிரியர் : சைவ எல்லப்பநாவலர் பொருள் : மான்மியம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

மிக்க வேத வியாசர் விளம்பிய × + +
கைக்களிற்றைக் கை தொழு தேத்துவரம். — எ.து.
மிகுதியாகிய தவசுடைய வேத வியாச மகாமுனி

முடிவு :

எங்கு மெங்குங் கீர்த்தி : 88 மியற்றெறிந்
துன்ணாமுலையா ளெனப் பகிர்ந்த
யிங்கிதமா யிக்கதை கட்டுற்றோர் கேட்டோ
ரெழுதினோ ரெண்ணிறந்த பெருமீடேற்றம் பெற்று
சங்கரனா ரருணைகிரி யீசன் பாதஞ் சாயுச்சியம்
பெருகி மிகத் தழைப்பர் தாமே !
புளகாதிபன் சருக்கம் முற்றும் ஆகச் சருக்கம் 12-க்கு
திருவிருத்தம் 584.

காலம் :

சுபானு வருஷம் வைகாசி மாதம் 16-ந் தேதி எழுதி
முகிந்தது முற்றும். குருவே துணை.

குறிப்பு :

இது, இதற்கு முன் சுவடி எண் 1740-a போன்றது

வரிசை எண் : 3786 சுவடி எண் : 1742

# இராமாயணம் – உரைநடை

ஏடுகள் : 290 கி எண்ணிக்கை : 7500 அளவு : 40 × 3 செ.மீ.
பக்கந்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இதிகாசம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க

பொன்னிற மாமெணப் புவனம் படைத்துக் கார்த்து
புயல் நிறமாய்த் தழல் நிறமாய்த் துடைத்துப் போர்ந்து
முன்னிற வாதினைத் துயர்ந்து முழங்கு நார்முடிகிடவே
நீண்டவடவிலை மேல் அமுந்தி
தொன்னிற மாமென்னிரண்ட மென்னில் கோடி
துவங்கிடவே வயற்றமைத்துத் தூயதாய்

முடிவு :

வாழி யிராமன் மலர்ப்பதம் வாழி சேர மலர்க்குடை
சொல்லினும் வாழி ராமன் மலர்ப்பதம் வாழியே !

எ.து, இராமசுவாமியினுடைய இராமயாணத்தை எழுதின பேரும், எழுதி வைத்தபேரும், படித்துப் பிரசங்கம் பண்ணின பேரும், ஆசை வைத்துக் கேட்டபேரும் லட்சுமி கடாட்சத்தினாலே தீர்க்காயிசாயிருந்து போக போக்கியங்களை யனுபவித்து அவரவர்கள் மனதிலே நினைத்தபடிமுடிந்து மூவேழிருபத் தோரு தலை முறைக்கும் கெதி மோட முண்டாகி பின்பு யிரப்புமில்லமால் வைகுண்டத்திலே சேர்ந்து மகாவிஷ்ணு வைப் போலே எப்போதும் வச்சிர காயமாய் தேவேந்திர போகமாயும் நீடூழி காலம் வாழ்ந்திருப் பார்களென்ற வாறு இராம ஜெயம். நடை இராமாயாணம் முற்றும். வீரேஸ்பர மூர்த்திலட்சிக்கவும். கடவுள் துணை.

காலம்:

சர்வதாரி வருஷம் ஆனி மாதம் 19-ந் தேதி (முதல் எட்டில்)

குறிப்பு :

உனாநடையாகவே உள்ளது. ஆங்காங்கு ஒவ்வொரு பாடலும் உரையும் காணப்படுகிறது.

வரிசை எண் : 3787 சுவடி எண் : 1743

# கிரக சார கணிதம்

ஏடுகள் : 62 கி. எண்ணிக்கை : 1000 அளவு: 28 × 3½ செ மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.

செவ்வாய் கிரக சார புடம்

எந்தத் தினத்திற்குச் சாரங் கணிக்க வேண்டுமோ
அந்தத் தினத்திற்குள்ள கலி சுத்தத் தினத்தை வைத்து
அந்தக் கிரகத்திற்கு சாரங்கணிக்க வேண்டும்

முடிவு :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 600 | ரா | 8 | 24 | 59 | — |
| 630 | ரா | 9 | 17 | 36 | 9 |
| 660 | ரா | 10 | 10 | 28 | 8 |
| 700 | ரா | 11 | 11 | 13 | 7 |
| 740 | ரா | 0 | 11 | 8 | 3 |
| 780 | ரா | 1. | 9. | 31. | 1. |

குறிப்பு :

இது, கிரகங்களின் சஞ்சாரத்தைக் கணிக்க உதவும் சுவடியாகும்.

வரிசை எண்: 3788 சுவடி எண் : 1744-a

# சப்தமுனி சோதிடம்

ஏடுகள்: 399 கி. எண்ணிக்கை: 16,000 அளவு: 35 × 3½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம்
× × × சாந்தயே

அத்திரு மாலய னிருவர் தேடிக் கான்றந்கரிய
னொற்றை மருகனீன்றருளு மைந்தன்
றந்திமுகற் றைங்கரன்றன் சரணம் போற்றி
சத்தமுனி சோதிடத்தைச் சாற்ற னாளுஞ்

முடிவு :

யாங்கள் தாரிணுயர்

முன்னான்கி லிருபதிற் சுரமே தீரு யிருபத்தி யெட்டு
நாளி லிருமல் தீரும் தாருமே யெழுபத்தி யைந்தா
மாண்டில் கைலைச்கி யேகியவன் பிறவியாவான் —13

முற்றும்.

குறிப்பு :

இது, சப்தரிஷி நாடி போன்ற சுவடியாகக் காணப்படுகிறது. இதில் சீவன் முத்தர் சாதகம் முதலான பல சாதகம் என்ற தலைப்புகள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3789 சுவடி எண் ; 1744-b

# சோதிட நூல்

ஏடுகள் 147 கி. எண்ணிக்கை : 2500 அளவு : 19 × 3 செ.மீ.
பக்கத்திற்கு 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சுத்த தினத்தை 10-வது சென்ற
மாதமும் தேதியுங்கூட்டி
7-னில் கழித்து வெள்ளி முதல்
வாரங்கள் 5. அதில்
பாடக மின்னேற் கூற

முடிவு :

ராசிமானம் செய்யும்படி
சோளில்லாத ராசியை
ராசிமானத்தில் பெருக்கும் வகை
மேடதுலாம்..........ரிடபசிங்கம்
பத்திலும் கும்பம் நாலிலும் மிதுனம்
விருக்ஷ ...........

குறிப்பு :

தலைப்பு இல்லை. தொடக்கம் முடிவு அறியும்படி இல்லை. இதில், கணபதி தீட்சை, சிவகுளிகை சனி சூரியன் அரணம், காலசக்கிரம் முதலான தலைப்புகள் காணப்படுகின்றன.

சுவடி தெளிவில்லை.

வரிசை எண் : 3790 சுவடி எண் : 1745

# சோதிட நூல்

ஏடுகள் : 356 கி. எண்ணிக்கை : 12000 அளவு : 38 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

நஞ்சென நினைப்பா னென்றும்
நயப்பிலா விரோதி யாவான
தஞ்சவென் றடைந்த பேர்க்கு
நயவுள்ள வனாகு வானாம்

முடிவு :

வந்து புக்கி பதவியிலே யமர்ந்து நிற்பாள்
வகையாக மேல்திக்கின் முப்பானான்கில்
வந்ததொரு கன்னியொன்றை
மணமுடிப்பான் —13

குறிப்பு :

இதில் தனித்தனி சோதிடங்கள் காணப்படுகின்றன. தலைப்புக்கள்லில்லை பக்க எண்களில்லை. எந்த எந்த கிரகங்கள் சேர்ந்து நிற்கும் போது என்ன என்ன பலன் என்று கூறுகிறது.

வரிசை எண் : 3791

சுவடி எண் : 1746

## சோதிட நூல்

ஏடுகள் : 19 கி. எண்ணிக்கை : 450 அளவு : 28 × 3½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை: மிக மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

............ லாரும் தாய் தேசி யென்றால்
கன்னிருந்து வானதுங் கலந்து வாழும்
இருபேரும் ஒருதலமாய்க் கூடி வாழும்
இன்பமாய்த் தலப்பிள்ளை பிறந்து

முடிவு :

மாற்றி விடுங் கெற்பமது களவுபோகும்
அன்னசுற்றங் கூடி மிகப்பிரிவு காணும்
பார்த்தவர்கள் திடுக்கிடவே வீரங் காணும்
பகையான பேர்களெல்லாம் வுறவு மாமே —141-

குறிப்பு :

இது, 9-ம் ஏட்டிலிருந்து இடையிடையே ஏடுகள் இல்லாது காணப்படுகிறது. சஷ்டி—ஆதிரை, சப்தமி—புனர்பூசம். அஷ்டமி—பூசம், நவமி—ஆயில்யம் இப்படிப்பட்ட தலைப்புகள் காணப்படுகின்றன. தலைப்பு இல்லை.

வரிசை எண் : 3792 சுவடி எண் : 1747

# இராசி பலன்

ஏடுகள் : 10 கி. எண்ணிக்கை : 200 அளவு : 26½×2½ செ மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியப்படவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

சிவமயம்

**மேஷம் 1 - வது**

பாசமாம் சிவலை சேரும்
பால்பழம் உள்ளதாகும்
தேசமே போனார் மீள்வார்
சேயிழை மணமுங் கூடும்

முடிவு :

பாரிய அரசனாலே
தொக்கிடை மிகவுண்டாகும்
தூரமே போனார் மீளார்
திக்கெலாம் அய்ய தாகும்
செட்டுவெள் ளாமை கூடார்
தொக்கிலே சேத முண்டாம்
துலங்கிட துலாங்கள் தானே.

குறிப்பு :

இதில், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம் வரையிலுமே ராசி பலன்கள் உள்ளன.

வரிசை எண் : 3793 சுவடி எண் : 1748-a

# கௌளி நூல்

ஏடுகள் : 40 கி. எண்ணிக்கை : 650 அளவு : 12 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : பாஸ்கரன் பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
கெவுளி நூல்
கணபதி துதி

வார்கொண்ட கொங்கை யபிராமி
பாத மலரருளாற்
பார்கொண்ட கோணிலை யாருடக் காதலைப்
பாஸ்கரன் சொல்

முடிவு :

கிழக்குத் திக்கு முதலாக எந்தத் திக்கில் பல்லி
சொல்லுகிறதோ அந்தத் திக்குக் குரியவர்களுக்கு முன்னமே
பாவினுள் கிரக வடையாளம் சொல்லியிருக்கின்றபடி
சொல்வாயாக என்பதாம் — 54

கெவுளி நூல் முற்றிற்று
வெங்கிடாசலபதி சகாயம்

குறிப்பு :

இது, பல்லி சொல்லுக்குப் பலன் விரிவாகக் கூறுகிறது. இதன் பின்னர் ஒரு ஏட்டில் தேள்கடி மந்திரமும், மற்றொரு ஏட்டில் மருத்துவமும் எழுதப்பட்டுளது.

வரிசை எண் : 3794 சுவடி எண் ; 1748-b

# நவக்கிரக பலன்

ஏடுகள் : 120 கி. எண்ணிக்கை : 1200 அளவு : 19½ × 2½ செ.மீ
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மன்னுயிரட னைத்தும் மாறாதளித்து நலந்
தண்ணு நவக்கிரக நற்பலனைக்-கண்டுரைக்க
திங்களணி தங்குமுயர் செஞ்சடைய ருண்மகிழ்செய்
கங்கையரு ளைங்கரனார் காப்பு

முடிவு :

எண்ணமும் இனிதிலா துழல்வன்
கடங்களும் முண்டாம் விரண ரோகத்தால்
கலங்குறும் அக்கினி பயமாம்
அடங்கு பின்பாக கன்றவை சேரும்
மறுந்தணம் சீவிதமாமே

குறிப்பு :

ஏடுகள் தலை தடுமாற்றம். இதில் வேறொரு நூலும் கலந்திருப்பதாகத் தெரிகிறது. தொடக்கம் முடிவு காண்ப தறிதாயுளது.

வரிசை எண் : 3795 சுவடி எண்: 1749

# அரிச்சந்திரன் அம்மானை

ஏடுகள் : 172 கி. எண்ணிக்கை : 12,000 அளவு : 43 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கதை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

**சிவமயம்**

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

ஆராருங் கேட்க்க அரிச்சந்தி ரன்கதையைச்
சீராரும் அம்மானை செப்பவே—நீராருந்
தும்பைச் சடைமுடியான் சோதியான் தந்தருளும்
கம்பக் கடக்களிறே காப்பு.

முடிவு :

உரைத்தவர் செவிப்புறத் துகந்து கேள்ப்பவர்
விருப்பமுற் றெழுதியே மிகவும் வைத்தவர்

திரைப் பெருங் கடவுளர் பதத்தைச் சேர்ந்தினி
யிருப்பா ரென்னாளு மின்னா னிதையங் கூறவே !

ஆக விருத்தம் 139.

காலம் :

குரோதி வருஷம் தை மாதம் 11-ந் தேதி குருவார நாள் திசமியும் ரோகணி நட்சேத்திரமுங்கூடின சுபதினத்தில் கொடையாம் போத்தைய் மலையப்பபிள்ளை அரிச்சந்திரர் அம்மானை யெழுதி நிறைந்தது முற்றும்.

குருவே துணை

குறிப்பு :

இது, அரிச்சந்திர மன்னனுடைய வரலாற்றினைக் கதையாக அம்மானை சந்தத்தில் பாடப்பட்டுள்ளது. பிழைகள் அதிகம். ஏடுகள் தலைதடு மாற்றம். சில ஏடுகளில் ஏட்டெண் இல்லை.

—★★★—

வரிசை எண் : 3796 சுவடி எண் : 1750

# மகாவிந்தம் எனும் வைகுந்த அம்மானை

ஏடுகள் : 400 கி. எண்ணிக்கை: 8000 அளவு: 40 × 2½ செ.மீ.

பக்கத்திற்கு : 4—5 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : இதிகாசம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

விநாயகர் துதி

தக்க புகழ்செறிய தருமரவர் வைகுந்தம்
புக்க பெருங்காதை புகலவே — மிக்க
விய முகத்தான் பாரதத்தை மேலிடுங் கூத்தாடுங்
கய முகத்தான் பங்கயத்தாள் காப்பு.

முடிவு :

வாசமுடன் பூவுலகில் மன்னுயிரு மெனவே
வாழ்த்தி விடைகொடுக்க மகிழ்ந்து செனமே செயனு
போற்றி நமஸ்கரித்துப் பொற்பாதம் பூண்டு கொண்டு
சாற்றிய மாமுனியைச் சரணமென்று கைதொழுது

குறிப்பு :

இதில், ஏடுகள் தலைதடுமாற்றம். இடையிடையே ஏடுகள் இல்லை. 414-வது ஏடு நடுவில் உள்ளது. பாண்டவர்கள் கலியுகம் பிறந்ததும், பூவுலகத்தினை வெறுத்து வைகுந்தம் சேர்ந்த வரலாற்றை அம்மானை சந்தத்தில் பாடப்பட்டுளது. பிழைகள் அதிகம்.

வரிசை எண் : 3797 சுவடி எண் : 1751

## தரும நாடகம்

ஏடுகள் : 115 கி. எண்ணிக்கை : 3500 அளவு : 39×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: நாடகம்

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

யிருவத் தெட்டாய் ஆக வியா வருஷமதில் விளங்குந்
திங்கள் ஆவணி தேதி யிருவத்தாறானாளில் வாகுதரும்
புவிதனிலே மொழியும் வேதமகா விந்தை சரிதை நாடகத்தின்
செஞ்சொல்

பாகுமொழி யமுர்தகவி வாலை கேஷன்
பைந்தமிழைப் புவி தழையப் பாடினானே.

முடிவு :

படிப்பவருங் கேட்பவருங் கெதிசேர் வாழி
மாயவன் தன்னருமை தரும் பெருமை பூண்ட
வைகுந்த திருநகரி வாழி தானே.

முற்றுப் பெற்றது.

திண்டுக்கல்லுத் தாலுக்காவைச் சேர்ந்த கம்பினியம்பட்டி சேர்ந்த
புதுக் கலிங்கிபட்டியிலிருக்கும் போலாச்சி ரெட்டியார் மகன்
போலாச்சி ரெட்டியார் எழுதிய தரும நாடகம்.
போலாச்சி ரெட்டியார்

காலம் :

தொடக்கத்தில் உள்ளது.

குறிப்பு :

இதனை ஆசிரியர் 'மகா விந்தை சரிதை' என்பதனால் இது மகாவிந்தம் எனப் படுகிறது. முதலேடு இல்லை. இடையில் 56,57,58, ஆகிய ஏடுகள் இல்லை.

வரிசை எண் : 3798 சுவடி எண் : 1752-a

# கயிறு போட்டுப் பார்க்கும் சுவடி

ஏடுகள் : 108 கி. எண்ணிக்கை : 700 அளவு : 20×2¼ செ.மீ.
பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை.
இந்த ............ ............ பாக்கிறவி...............
ன்ருலளவு ............ லக்கம் ............
லி மூணும் ஒன்றாய்க் கூட்டி

நூல்

விநாயகனே எழுந்தருளப் பண்ணநன்றோ தீதோ.

முடிவு :

இங்கே யிருக்கிற மனுசர் தயவாயிருக்கிறார்கள்
இந்த உடமை இனிமேல் விற்க வேணும்
இவள் தெய்வத்துப் பிராத்தினை தப்பிப் போனாள்
இந்தக் கோட்டையிட்டால் அழிவு வரும்

குறிப்பு :

இதில், கயறு விழுந்த எட்டில் உள்ள பலன் சொல்லுகிறது.

வரிசை எண் : 3799 சுவடி எண் : 1752-b

# மனையடி சாத்திரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 25 அளவு : 20 × 2½ செ மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

5 அடி அமுர்தம் நல்லது
6 அடி அலங்கோலம் பீடை
7 அடி தரித்திரம் பீடை
8 அடி கேடு இருப்பிடம் பகை

முடிவு :

38 அடி கன செலவு உண்டு
39 அடி மனையாளுக்குக் கெடுதி
40 அடி மிக்க நல்லது உத்தமம்

குறிப்பு :

இது, மனையின் அளவு கொண்டு பலன் கூறுகிறது. பிழைகள் மலிந்துள்ளன.

வரிசை எண்: 3800 சுவடி எண்: 1753-a

# கந்தர் சஷ்டி கவசம்

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 300 அளவு : 17 × 3 செ.மீ

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : பாலன் தேவராயன் பொருள் : தோத்திர

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

துதிப் போர்க்கு வல்வினை போம்
× × × × ×
நிமல னருள் கந்தர் சஷ்டி கவசம் தனை,

காப்பு

அமரரிடர்தீர அமரம் புரிந்து
குமரனடி நெஞ்சே குறி.

நூல்

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்ட்டருக் குதவும் செங்கதிர் வேலோன்.

முடிவு :

சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று
(சக்கரம் ஒன்று இருக்கிறது)

மதுரை சில்லா திண்டுக்கல் தாலுக்கா வேடசந்தூர் பிர்க்கா கோட்டா நத்தம் கிராமம் கம்பிளியம் பட்டியிலிருக்கும் கிஷ்ணஞ் செட்டியார் மகன் இராமசாமி செட்டியார் சஷ்ட்டி கவசம் ஏடு பார்த்து எழுதியது. எழுது குத்தம் சொல்குற்றம் இருந்தால் பெரியோர்கள் வாசித்துக் கொள்ளவும்.

குறிப்பு :

இது, அச்சாகியுள்ளது. முருகப் பெருமான் மீது பாடப் பட்டது.

வரிசை எண் : 3801

சுவடி எண் : 1753-b

## தும்மல் பலன்

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 30 அளவு : 17×3 செ.மீ.

பக்கத்திற்கு: 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லல பொருள் : சோதிடம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஞாயிற்றுக் கிழமை

கிழக்கே விக்கினம் தென்கிழக்கு
நல்லவார்த்தை வரும்
தெற்கு சிலவு. தென்மேற்கு மரணம்

மேற்கு சுகம். வடமேற்கு நல்லது
வடக்கு அத்த வரவு வடகிழக்கு
அற்த்த லாபம்.

முடிவு :

சனிக்கிழமை

கிழக்கு அற்த்த நாசம் தென்கிழக்கு மரணம்
தெற்கு நல்ல வார்த்தை வரும் தென்மேற்கு அடுத்தவர் வரவு
மேற்கு அர்த்த லாபம் வடமேற்கு சிலவு
வடக்கு தாமிசம் வடகிழக்கு லாபம்

நல்ல மங்கையம்மன் துணை

குறிப்பு :

ஒவ்வொரு நாளும் எந்தத்திசையில் தும்மல் ஒலி கேள்கிறதோ அதன் பலன் கூறுவது.

வரிசை எண் : 3802 சுவடி எண் : 1753-c

# பட்சி சாத்திரம்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 40 அளவு : 17 × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பிற்பக்கத்துக்கு வல்லூறு பட்சி

ஊண் நடை உறக்கத்தை வெல்லும்
நடை — உறக்கத்தை சாவை வெல்லும்
அரசு உறக்கத்தை சாவை வெல்லும்
உறக்கம் சாவை வெல்லும்
சாவு ஊணை வெல்லும்.

முடிவு :

முப்பக்கத்துக்கு

கிழக்கு வல்லூறு
தெற்கு ஆந்தை
மேற்கு காகம்
வடக்கு கோளி
மத்திபம் மயில்

குறிப்பு :

வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் ஆகிய ஐந்து பறவைகளும் பஞ்சபட்சி எனப்படும். ஒவ்வொரு பறவையின் செயல்களையும் நோய்களையும் இணைத்துச் சொல்லுவது இச் சாத்திரம்.

இது, எமது சுவடி எண் 730/D-1515 போன்றது. கடைசி ஏடு அளவில் குறைந்தது.

—★—★—

வரிசை எண் : 3804 சுவடி எண் : 1755

# மகா புராணம்

ஏடுகள் : 110 கி எண்ணிக்கை : 5600 அளவு : 41×3½ செ.மீ.
பக்கத்திற்கு: 10 வரிகள் ஆசிரியர் : கவி ஓதுவார் பொருள் : புராணம்
நிலைமை : நல்ல நிலை முழுமை முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

முதலத்தியாய முனிவர் சூதனை வினாவிய காதை
பராசர மாமுனி மகவைப் பரம புருடனை
நான்கு பழமறையின் பிறப்பிடத்தைப்
பல விஞ்ஞைக் கிருப்பை
விராவு புகழ்நிலை யற்றை வேதாந்தப் பொருளை
வெகுளியிலாப் பொறை யோனை
விடைய மறுத்தோனை

முடிவு :

மாகசீர் வளத்தினை வழுத்தும் பாடலு
ளோகையி லொருகவி யெனு மோதுவார்
போகமா மியாவையும் புவியில் துய்த்தபின்
நாகநாட் டின்பமும் நயந்து துய்ப்பரே ! —200

வாழி நான்மறை நெறிவாழி யந்தணர்
வாழி நீணிலத்தினில் மாக மாடினோர்
வாழி யிக்கதையினை வல்ல மெல்லாமேல்
வாழி மாலடியவர் வாழி வையமுமே —201

மகாபுராண முற்றும். ஆக அகத்தியாயம் க்கு விருத்தம் 1406.

காலம் :

தாருண வருஷம் மாசி மாதம் 26-ந் தேதி திருத்துறைப்பூண்டியிலிருக்கும் நாகமுத்தா பிள்ளையவர்களுக்கு குளி பழய நதத்திலிருக்கும் பெரிய தம்பியா பிள்ளை குமாரன் வெங்கிடாசல மகாபுராணம் எழுதினது முற்றும். பெரிய நாயகியம்மன் துணை செய்யவும்.

திருத்துறைப்பூண்டியிலிருக்கும் நாகமுத்தா பிள்ளை மகன் அரிகை புத்திர பிள்ளை சுபகிருது வருஷ்ம் மார்கழி மாதம் 11-ந் தேதி பெருமழையிலிருக்கும் முத்துப் பொதிய தேவர் மகன் ராமசாமித் தேவர் கய்யில் விலைக்கிறேகம் பண்ணிக் குடுத்தது. கைலாசபதி துணை. சிவகாமி துணை.

குறிப்பு :

இது, குடந்தையிலிருக்கும் மகாமகக் குளத்தில் 12 ஆண்டுக்கொருமுறை நிகழும் மகாமக நீராடலின் சிறப்பைக் கூறுவது.

—★★—★

வரிசை எண் : 3805 சுவடி எண் : 1756-a

# நிராலம்ப தீபிகை

எடுகள் : 21 கி. எண்ணிக்கை : 500 அளவு : 21×4 செ.மீ.

பக்கத்திற்கு: 11 வரிகள் ஆசிரியர் : நாராயண சுவாமி பொருள்: வேதாந்தம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

ஹரி : ஓம்

அது விது ..........வனல வென்றறி யாமற் பிதற்றி

நய்ந்தேன் மலமாதிக் கதி பெறுகக்...........
புரிந்தின்பமய மாய் மௌனக் கனக பீடமிது
பரமநிலை யிதுவே.

முடிவு :

சீராருங் கலியி னாலாயிரத்துளா யிரசேர்
முப்பதினாலுமேற் செல்லு நந்தன வருடஞ்
சித்திரைத் திங்களிற் றேதி யெட்டாகு மதிலே

யேராரு மாரூரில் தெட்சணாமூர்த்திக ளெதி
ராகம சத்துக்களு மிலக்கணைக் கவிஞருங்
கேட்டு மகிழ்வாகி யிகபர மிரண்டிலுந்தா

னேராக வாழ்வை யென ஞான சின்மயத்தீப
நோனூறு பத்தொன்பது நிராலம்ப தீபிகையு
நூற்றுப்பத்துக் கவிகணீதி தப்பாது ரைத்த

சோராத பாக்கியமுறு முத்தம்பா புரம்
வாழுந்தூய ஞானமுங் கல்வியுஞ் சொல்லு

நாராயண சுவாமியரங்கேத்து தினந் தொல்லுலகிலே
யறியவே

குறிப்பு :

இது வேதாந்த உபநிடதம் 32-க்கு அதீதமாயிருக்கிற நிராலம்ப வுபனிடதப் பொருளைத் தமிழாற் கூறுகிறது.

100 ஆம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது.
கடைசிப்பாட்டில் அரங்கேறிய காலம் காணப்படுகிறது.

வரிசை எண் : 3806

சுவடி எண் : 1756-b

# தேசோமய வெண்பா

ஏடுகள் : 16 கி. எண்ணிக்கை : 350 அளவு : 21×4 செ.மீ.

பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : தேசோமயர் பொருள் : வேதாந்தம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை

தேசோ மய வெண்பா............நீற்றுரி............
.........சரனருள் பெற்றக மகிழ்ந்து...... கூசாமற்
.........விழிசேர்த்த முத்தா சேவடியாம்
நன்மலரைச் சூடினேன் நான்.

முடிவு :

நிற்குணமிவ் வெட்டாக நின்றதுவே பூசை யென
நற்குணத் தேசோமயர்தான நாட்டினர் காண — சிற்கன
மானமுனை நாடிநுதல்க் கினிக்கணப்பட்டு மனந்
தானிற்கப் பெற்றதிது தான்.

குறிப்பு :

இதில், மோனமே கீர்த்தனை, ஞானப் பரிபூரணமே நற்செபம், சராசர மெல்லாம் சிற்றுருவாய்க் கண்டால் அதுவே முத்தி என்றெல்லாம் தத்துவ ரூபமாகப் பேசப்பட்டுளது.

வரிசை எண் : 3807 சுவடிஎண் : 1757.

# அறிவானந்த சித்தியார்

ஏடுகள் : 55 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 23 × 3½ செ.மீ பக்கத்திற்கு : 9—10 வரிகள் ஆசிரியர் : சீர்காழி சிற்றம் பல நாடிகள் பொருள் : சிற்றம்பலநாடிகள் சாத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை. சிவமயம்

உள்ற முறமை யொரு நாலாய்ச் செய்தவற்கு
கற்பகத்தின் றாளிணையே காப்பெ..............குற்றவிங்கன்
பாதமலர் மேற்கொண்டு பாடவொருப் பாடுகுரு
நாதனிரு தாளெனது நா.

திருச்சிற்றம்பலம்.

சீறீ சிவாய குருவே நமக. அறிவானந்த சித்தியார் —400

நூல் சிவமயம்.

நிரவிய நின்மல நிற்குண நித்திய நிரஞ்சனன்மெய்
பரவிய + + + + +
கரவுள(ங்) கோயில் கொண்டானெழிற் போற்றுவன் காதலித்தே.

முடிவு :

குறியா வடிவுடைக் கோமள வல்லி குடியுருந்தே
மறையாக மத்தை வலங்கை மீகாமனில் வாழ்ந்திருந்தே
அறிவான துன்னுள்ளத் தய்யாக்கி நல்லவ ருள்ளித்தே.
நெறியக முற்றிக்கும் வித்தாவரேயிது நிச்சயமே. —312

ஸ்ரீ பரம சற்குரு நாதன் துணை.

காலம்:

துன்மதி, கார்த்திகை மாதம் 4-ந் தேதி ஆதித்திய வாரநாள் பவுர்ணம் அண்ணாமலைக் கார்த்திகை தினத்தில் தொழுதூரிலிருக்கும் ராமசாமி ரெட்டியார் எழுதிய மேல் பிரதியைப் பார்த்து அய்யுலு வைய ரெழுதியது. அறிவானந்த சித்தியார் வுரை 312 முற்றும்

திருச்சிற்றம்பலம்

குறிப்பு :

இது, எமது சுவடி விவர அட்டவணை தொகுதி 2 பக்கம் 100 போன்றது. இதில் முழுது மிருக்கிறது எனினும், தொடக்கத்தில் 400 என்றுள்ளதால் விளங்கவில்லை. 'வேதாந்த விஷயத்தைக்' கூறுவது.

வரிசை எண் : 3808 சுவடி எண் : 1758

# பாகவதம் — மூலம்

ஏடுகள் : 282 கி. எண்ணிக்கை : 28000 அளவு : 46½ × 4 செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : வியாச முனிவர் செவ்வைச் சூடுவார்
பொருள் : புராணம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருசரணந் துணை.

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனவுலக நிறைந்தொளிதன்யா ரொன்ற

வேர்பூத்த முத்தொழிலு மினிதியற்றித் தனினின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண்மலர் அடி நினைவாம்

நூல்

பிறந்த பொழுதே துறந்து பிறைக்குழவிபோ
னடிப்பப் பின் போய்த் தொன்னூ
லறைந்த புகழ் வியாதமுனி யாதாத்தான்
மதலா யென்றழைப்பச் செவ்வாய்

முடிவு :

கனைத்து வணடிமிர் துழாய்க் கண்ணன் மாக ...........
மனத்து வழங்குனர் மகிந்து கெ...........னர்
வினைத்திரு கற்றுறு மெய்ம்மை யாதியாய
நினைத்தன பெற்றிவணீடு வாழியே. —16

குறிப்பு :

பதினென் புராணங்களு ளொன்றான இதனை வடமொழியில் வியாத முனிவர் இயற்றினார். தமிழில் செய்தவர் செவ்வைச் சூடுவார். திருமாலுக்குரிய வைணவ புராணங்கள் நான்கனுள் இது பகவத் விஷயமானது.

வரிசை எண் : 3809 சுவடி எண் : 1759

## ஸ்ரீமத் பாகவதம்

ஏடுகள் : 277 கி. எண்ணிக்கை : 28,000 அளவு ; 41×3½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : செவ்வைச் சூடுவார் பொருள் : புராணம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீர்பூத்த பரஞ்சுடராய்ச் சித்தாகிக் கானலிடை
நீர்பூத்த தெனவுலக நிறைந்தொளிதன் பாற்றோன்ற
யேர்பூத்த முத்தொழிலு மினி தியற்றித் தனிநின்ற
கார்பூத்த திருமேனிக் கடவுண் மலரடி நினைவாம்.

முடிவு :

புனைதரு மலங்கல் வெவ்வேற் புரவலன் புகன்ற காதை
நினைதரு முணர்வின் மிக்கோர் நிகழ்த்துவோர் நிகழ்த்தல் கேட்போர்

வினைதரும் பிறவி வேலை வீழ்ந்திடார் வேண்டல் பெற்று
வினைதரு துளவ மாயனற்பதம் பெறுவர் மாதோ. — 56

பரசுராமன் கதையும் விசுவாமித்திரன் கதையு
முரைத்த வத்தியாயமும் முற்றும்.

குறிப்பு :

இது, முன் பிரதி போன்றது, இதன் பின், குறிப்புரை எழுதிய 4 ஏடுகள் இருக்கின்றன. பாடவேறுபாடுகள் காணக் கிடைக்கின்றன.

வரிசை எண் : 3810 சுவடி எண் : 1760

# பாகவத புராணம்

ஏடுகள் : 240(249-488) கி. எண்ணிக்கை : 25,000 அளவு: 45½ × 3½ செ மீ
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : செவ்வைச் சூடுவார் பொருள்: புராணம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

நிமி மரபுரைத்த வத்தியாயம்

இக்குவாகு வென்றுரைத்திடு நிருபர்கோ னீன்ற
மக்க ளூற்றுவர் தங்களில் நிமியெனு மன்னன்
மிக்கசீர் புனைமார்பினை விண்டு ராதனுக்குத்
தொக்க நான்மறை முழுதுணர் சுகமுனி சொல்லும் — 1

முடிவு :

புகன்றவொன் பதிற்றிரட்டியாம் புராணம் நல்லளவை
× × × × × × ×
போற்று பாகவத மெனச் சொல்லுமிப் புராண
மாற்றல் சேர்ந்த சொற்றொடை .............. நானூறே. — 3

இனையநூல் கேட்குந ரியாது வேண்டினு
மனமுவந் தளிக்கு மனுக்கள் வானுளோர்

× × × × × ×
வினைத்திருக் கற்றற் மெய்மை யாதிய
நினைத்தன பெற்றிவ ணீடூழி வாழியே

சாமஜெயம். வேணும் கோபால சுவாமி சகாயம்.

காலம்:

விஷ வருஷம் மார்கழி மாதம் 6-ந் தேதி புதன் கிழமை திசமியும் சுவாதி நட்சேத்திரமு கூடின சுபதினத்தில் எழுதி முடிந்தது முற்றும் சிவமயம். சோலையா பிள்ளை குமாரன் கஸ்தூரிரங்கன் யெழுதினது. வேணும் கோபால சுவாமி சகாயம்.

குறிப்பு :

இது, முன் பிரதி போன்றது தொடக்க ஏடுகள் இல்லை. 249-ஆம் ஏட்டிலிருந்து தொடங்குகிறது. கடைசியில் பாயிர முரைத்த வத்தியாயம், புராண வன்மையுரைத்த வத்தியாயம் உள்ளன.

வரிசை எண் : 3811 சுவடி எண் : 1761

# பிரகலாத சரித்திரம்

ஏடுகள் : 45 [138-ஆம் ஏடு முதல்) கி. எண்ணிக்கை : 2500 அளவு $38\frac{1}{2} \times 4$ செ.மீ. பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வரலாறு நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது. எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

……… டிக்கி யிருந்தாலும் அணிமாதிகள் பகவத்
சுமரணத்துக்கு விக்கினமே தவிர வேறில்லை —88.

அணிமாதி சித்திகள் ஹரி சுமரணத்தினுடைய பலந்தான்
யென்குறீர்களே அப்படிக்கில்லை விஷ்ணு சேவைக்குப்
பலன் விமுக்திதான்

முடிவு :

கேட்டு சில செனங்கள் அதிக
வைராக்கியத்தை யடைஞ்சு ஆனந்த
பாஷ்பத்தோட நமஸ்காரங்கள் —11.

இன்னம் சில அந்நிய செனங்கள்

வேடிக்கை பார்த்துக் கொண்டார்கள்
அதிமூடாள் பரிகாசம் பண்ணி சிரிச்சுக்கொண்டிருந்தார்

குறிப்பு :

இதன் தொடக்க ஏடுகள் இல்லாததால் தலைப்பு தெரியவில்லை. செய்தி கொண்டு தலைப்பிடப்பட்டது. உரைநடையாக உள்ளது.

வரிசை எண் : 3812 சுவடி எண் : 1762

## திருக்குறள் - பரிமேலழகர் உரை

ஏடுகள் : 300 கி. எண்ணிக்கை: 18,000 அளவு : 34 × 3¼ செ.மீ.
பக்கத்திற்கு : 8 – 9 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்
நிலைமை : நல்ல நிலை; சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் திருக்குறள் அறத்துப்பால்
கடவுள் வாழ்த்து பரிமேலழகனாயனாருரை

இந்திரன்முதலிய விறையவர் பதங்களும்
× × × × ×
மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க.

கடவுள் வாழ்த்து
இது பாயிர முதற் கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவான் முதற்றே யுலகு. எ.து.
அகரமாகிய முதலையுடைய வெழுத்துக்க ளெல்லா

முடிவு :

நட்பு: அஃதாவது இனிய படைபோல வரசனுக்கு (வினையிடத்துதவுவதாய் நட்பினை யைந்ததிகாரம் விதி முகத்தானும்) பன்னிரண்டதிகார மெதிர்மறை முகத்தானுங் கூறுவான்றுடங்கி விதிமுக வதிகார வைந்தினுள்ளு முதற்........

குறிப்பு :

இது, சங்கமருவிய பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுளொன்று, இதன் பிற செய்திகளை எமது முதலாம் தொகுதி எண் 68-a/D-127-ல் காண்க.

வரிசை எண் : 3813 சுவடி எண் : 1763

# திருக்குறள் - பொருட்பால் பரிமேலழகர் உரையுடன்

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 3800 அளவு : 42 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 10 — 12 வரிகள் ஆசிரியர் : திருவள்ளுவர் பொருள் : நீதிநூல்

நிலைமை: சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

இனி இல்லறத்தின் வழிப்படுவன வாய

பொருளின்பங்களிருமையும் பயத்ததாய்
பொருள்கூறுவா னெடுத்துக்கொண்டா
ரதன் றுணைக் காரணமாய வரசர் நீதி கூற

முடிவு :

என்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றன்பதத்தாற் றானே கெடும். எ-து.

முறைவேண்டினாற் கெளிய செவ்வியை யுடையவர்
சொல்லியவற்றை நூலோர் பலரோடு மாராந்து
நின்ற வுண்மை கேளப்ப முறை செய்யாத வரசன்
றாழ்ந்த பதத்திலே நின்று

குறிப்பு :

முதல் 11 ஏடுகள் மிகமிகப் பொஷ எழுத்துக்களைக் கொண்டன. பொருட்பால் மட்டும் உரையுடன் இருக்கிறது.

வரிசை எண் : 3814 சுவடி எண் : 1764

## பிரமோத்தர காண்டம்

ஏடுகள் : 118 கி. எண்ணிக்கை : 6000 அளவு : 41×3½ செ.மீ.
பக்கத்திற்கு 9 வரிகள் ஆசிரியர் : வரதுங்கராமபாண்டியர் பொருள் : புராணம்
நிலைமை : சிறு பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக
பஞ்சாட்சர வத்தியாயம்

பூமேவுஞ் சதுமுகனுந் திருமாலும் போற்றி செய்யத்
தேமேவு குழலுமையாள் செழுங்குவளை விழிகளிப்ப

முடிவு :

மேவரப் புகன்ற சிவகதை முழுதும்
விழைவுடன் கேட்குன ரவர்தாம்
யாவர் மற்றேனு மாரியன் முதலோ
ரெய்தருஞ் சிவபத மடைவார் —108

இருபற்று ரெண்டாவது புராண மகிமை அற்றியாய முற்றும்.
ஆக விருத்தம் 1317.

காலம் :

தாருண வருஷம் மார்கழி மாதம் 3-ந் தேதி ஸ்திரவாரனாள் உதிச்சு இருபத்தொன்பது னாழிகைக்கு மேல் பிரமோத்திர காண்டம் நாகமுத்தா பிள்ளையவாளுக்கு வெங்கிடாசலம் எழுதிக் குடுத்தது. முற்றும்.

குறிப்பு :

இது. எமது முதல் தொகுதி சுவடி எண் 248/D-465, ஏழாம் தொகுதி சுவடி எண் 1150 D-1665 போன்றது. பிற செய்திகள் ஆண்டு காண்க.

வரிசை எண் : 38 5 சுவடி எண் : 1765

## திரட்டுக் கோவை

ஏடுகள் : 61+37 கி. எண்ணிக்கை : 5000 அளவு : 41×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : கோவை
நிலைமை: மிக மிகப் பழுது (எலிகடி) முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

..........நடைபயி லடியும் புடைபெயர்ச் சுன்னும்
மச்சமும் பிறவும் வன்பா னிகழுங் கச்சமில்லையங்
கடிவன வாகும்

துணிவு

பூசியவன்..................

முடிவு :

சொல்லார் தென்னாகையில் காரோணநாதர் சரும்பிலிப் பேர்
வல்லாருங் கொங்கை மணர்ந்தன மியாமிந்த மாநிலத்தி
லெல்லாரும் வாழச் சிவசமையத்தி னியல் விளங்கப்
பொல்லா தவையறத் திங்கள் மும்மாரி பொழிபுயலே ! —550

திரட்டுக் கோவை முற்றும்.

குறிப்பு :

இதில், முதல் ஏடு இல்லை. அதனால் கோவை இலக்கணத்திற்குரிய காட்சி, ஐயம் ஆகிய பாடல்கள் இல்லை. ஆசிரியர் பெயரும் அறிவதற்கில்லை. கோவை இலக்கணம் அமைய உளது. பாட்டுடைத் தலைவன், ஒருபாட்டில் வண்டமிழ் வாணன் தென்மாறைச் செருந்தி என உளது. இறுதியில் நாகைக் காரோணர் பேசப்படுகிறார். 400 பாடலுக்கு 550 பாடல்களில் பாடப்பட்டுளது.

இடையில் 51 69 ஏடுகள் இல்லை. பிற்பகுதி அதன் பிரதி எலி கடித்துளது.

வரிசை எண் : 3816 சுவடி எண் : 1766

# திருவரங்கத் தந்தாதி உரையுடன்

ஏடுகள் : 65 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 48×3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : அந்தாதி

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீ ரெங்கத் தந்தாதி

ஒராழி வெய்யவன் சூழுல சேழுவந் தெற்றாங்கா
காராழி வண்ணர் பெருமாள் அந்தாதிக்கே கர்ப்புரைக்கிற

சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே.

முடிவு :

சிந்தா குலமுய்யக் குன்றெடுத்தாய் தென்னரங்கஞ் சுற்றுஞ்
சிந்தா குலங்கல .. ... .. ... .. டைத்தளித்தாய்
சிந்தா குலசெல்வந் தந்தை தாய் குருதெய்வமு நீ
சிந்... ... ... ... ... ... ... ...

குறிப்பு :

ஏடுகள் தலைதடுமாற்றம். இடையிடையே ஏடுகள் இல்லை. இது, எமது 7-ம் தொகுப்பு சுவடி எண் 1096/D-1572 போன்றது.

வரிசை எண் : 3817 சுவடி எண் : 1767.

## அரிச்சுவடி

ஏடுகள் : 20 கி. எண்ணிக்கை : 3 அளவு : 46 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 1 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : இலக்கணம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

ஹரி நமோத்து சிந்தம்
அ.ஆ இ.ஈ.உ.ஊ
எ ஏ.ஐ ஒ.ஓ.ஔ

முடிவு :

ல வ.ழ ள ற.ன.

குறிப்பு :

இது, பிள்ளையைப் பள்ளியில் சேர்க்கும் போது ஆசிரியர் கற்றுத் தந்த எழுத்துச் சுவடி.

—★★★—

வரிசை எண் : 3818 சுவடி எண் : 1768.

# நளவெண்பா

ஏடுகள் : 105 கி. எண்ணிக்கை : 2000 அளவு :39×3 செ மீ

பக்கத்திற்கு : 4 வரிகள் ஆசிரியர் : புகழேந்திப்புலவர் பொருள் : கதை

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் கணபதி துணை

புலவர் திலகராகிய புகழேந்தியாரால் செய்யப்பட்டது

இஃது, கையெழுத்துப் பிரதிகளில் ஒன்றுக் கொன்று பலவிதமாக மாறுபட்டிருத்தலிற் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துச் சாரம் குமரப்ப முதலியாரால் ஆயலூர் சிதம்பர முதலியார் கேட்டுக் கொண்டபடி அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

சாலிய வாகன வருஷம் 1761-ல் விளம்பி வருஷம் சித்திரைமாதம்.

இதன் விலை ரூ-1.

× × + × × ×

நேசரி தங்கூர் நிலவலயந் தாங்கு நளன்
மாசரிதங் கூற வருந்துணையர் - யீசன்
கரியானைத் தான்க ருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

முடிவு :

கார் பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர் பெற் றுயர்ந்த நிறைபுலமோ — பாற்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர்

முற்றிற்று.

பாயிரம் 4- + + × ஆகத்திரு விருத்தம் —418.

காலம் :

ஆனந்த வருஷம் பிரட்டாசி மாதம் 5-ந் தேதி தஞ்ச நகரம் மந்தாரடி வெள்ளாளத் தெருவிலிருக்கும் வண்டி கணக்கு திருவேங்கிடத்தாபிள்ளை மூத்தவர் பெயர் வெங்கிடாசலபிள்ளை அவர்களுக்கு இளையவன் நாராயணன் கையினால்

நளவெண்பா எழுதி முகிந்தது முற்றும். ஆனந்த வருஷம் பிரட்டாசி மாதம் 5-ந்தேதி செவ்வாய்க்கிழமை மகா நட்சேத்திரம் இது கூடினத்தில் நளச்சக்கரவர்த்தியினுடைய வெண்பா எழுதி முகிந்தது முற்றும்.

இந்த பொஸ்தகங்களை யாதா ஒருவர் இந்த பொஸ்தகம் தனைக் கேட்டு வாங்கிக் கொண்டு போய் எழுதி கொண்டாலது அல்லது வாசித்துக் கொண்டாவது. குடுத்துவிட வேண்டியது. வாங்கிக் கொண்டு போய் படித்து கொடுக்காமல் வச்சு இருந்தால் மகத்தாகிய தோஷங்கள் வந்து நேரிடும் சொன்னேன். இந்த பொஸ்த்தகம் எழுதினவன் யென்னா அவஸ்தைகள் பட்டு எழுதுனானோ யென்று மனதினில் யெண்ணி குடுக்கும்படி சொல்லியிருக்கிறார். என்னுடைய வாத்தியார் சீரங்கக் கொத்தன் தெருவிலிருக்கும் நாராயணசாமி வாத்தியார் அவர்களுடைய சீஷனான நாராயணன் கையினால் எழுதப்பட்டது அனுமந்தராயர் துணையாக வேண்டியது. அஞ்சனாதேவி மைந்தன் துணையாக வேண்டியது.

குறிப்பு :

இது அச்சாகிய நூலின் ஏட்டுப் பிரதி. அச்சான பிறகு ஏட்டில் எழுதிவைக்கும் முறையும் இருந்தது.

வரிசை எண் : 3819 சுவடி எண் : 1769

## கேதாரநாதர் விரதம்

ஏடுகள் : 23 கி எண்ணிக்கை : 500 அளவு : 39½ × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : தோத்திரம்

நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் காப்பு

காரணைய கூந்தற் கவுரி யியற்றியகே
தார விரதக்கதை யான்பாடிக்கூற — சீரிலகும்
ஐந்துகரத் தந்திமுகத் தண்ணலடி யர்க்கருளும்
கந்தமலர்ச் செஞ்சரனே காப்பு.

ஸ்ரீ கைலாசத்திலே பரமேஸ்வரனும் பார்வதா தேவியும் சிங்காதனத்தில் வீற்றிருக்கையில் தேவர்களெல்லாம் வந்து யீஸ்வரனையும் யீஸ்வரியையுங் கண்டு

முடிவு :

பக்தியுடனே நோற்றவர்கள் இருக்குமளவும் அரோக திடகாத்திரராகவும் வாழ்ந்திருந்து அந்திய காலத்தில் அனாயாச மரணமடைந்து திவ்விய தேகம் பெற்று கைலாயப் பதவியில் போய் ஒரு குறையு மில்லாமல் வாழ்ந்திருப்பார்கள். கேதாரீஸ்பரன் நோன்பு முற்றிற்று.

காலம் :

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 9-ந் தேதி

குறிப்பு :

இது, உரைநடை, மூன்று பத்தியாக எழுதப்பட்டுளது. ஐப்பசி தீபாவளி அமாவாசையன்று கேதார கௌரீ விரதம் நோற்கப்படும். அதன் செயல்பாடும் பலனும் இதில் கூறப்பட்டுள்ளன.

வரிசை எண் : 3820 சுவடி எண் : 1770

# அஞ்ஞானவதைப் பரணி

ஏடுகள் : 43 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 34 × 3 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : தத்துவதேசிக நாயனார் பொருள் : பரணி

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம் திருச்சிற்றம்பலம்

தறணிவரு தத்துவனார் தாமுரைத் தஞ்ஞானப்
பறணிதனைக் கட்டவிழ்த்துப் பார்த்தால்—கறணமுடன்
சேர்ந்து மணவாது சிவமணமே பூரித்துச்
சாத்தமணம் நாறுமே தான்.

தேவிசகாயம்

கடவுள் வாழ்த்து

படைப்பானும் வியனுலகங் காக்கு மாழிப்
படையானும் படைத்தளிக்கப் பட்டதெல்லாந்

முடிவு :

வாழிதங் குருபரன் மெய்ப்பத்தறானவர்
வாழ்மைமழை துணிப்பொசித்தத்து வாழ்பவர்
வாழி பரமானந்தந்-தித்திக்க வாழ்பவர்
வாழி சோபானந்தன் நத்துவப் பிரகாசனே! —20.

ஆகக் கடவுள் வாழ்த்து முதல் தோத்திரம் வாழிவரைக்கும்

அதிகாரம் 29, குறட்டாழிசை 491.

அஞ்ஞானவதைப் பரணி எழுதி முகிந்தது. முற்றும்.

குறிப்பு :

முதலேட்டில் சித்திரமலர் காணப்படுகிறது. இதில் முழுவதும் இருக்கிறது. பரணி இலக்கணம் கடவுட்காப்பு, கடைதிறப்பு முதலான தலைப்புகளில் செய்யுட்கள் இருக்கின்றன. ஆனை ஆயிரம் வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி. இங்கு அஞ்ஞானத்தை வென்ற ஞானத்திற்குப் பரணிபாடப் பட்டுளது. இதில், பேய் முறைபாடு, அடியார்கள் பெருமை மிகச் சிறப்பாக உள்ளது.

இது, எமது 7-ஆம் தொகுப்பு சுவடி எண் 191/D-1198 போன்றது

வரிசை எண் : 3841 சுவடி எண் : 1771

# செவ்வந்திப் புராணம்

ஏடுகள் : 59 கி. எண்ணிக்கை : 3000 அளவு : 40×3½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சைவ எல்லப்பநாவலர் பொருள் : தலபுராணம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

அருளெனுங் கடன் முகந்நடியார் சிந்தையாம்
பொருபெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழையுதவு செவ்வந்தி யாண்யின்
திருவடியிணைமலர் சென்னி சேர்த்துவாம்
திரிசிர கிரியுறை செம்மலார் கதை
யுரைசெயும் பசுந்தமிழ்க் குதவி செய்யுமால்

முடிவு :

இனிய விந்தக் கதையி னொன்று படித்த பெயர்க
ளிருசெவி னேற்றவர்க ளெழுதி னோர்கள்
மனையிடத்தி லுபசரித்து வைத்த பேர்கள்
படிப்பவருக் குறையுளுண்டி வழங்கினோர்கள்
தனமிகுதி னெடுவாழ்க்கை யடைவர் நல்ல
தனையரையும் பெறுவர் சிவபதமுஞ் சார்வ
ரனலனுக் காரதரவ மெய்தர தலகை சேரா
தந்தமுறை யினிதிருந்தவ கத்திருப்பார்கள் —54

சிவமயம். தாயானச் சருக்கம் முற்றும்

ஆகச் சருக்கம் 11-க்குத் திருவிருத்தம் 544. திருச்சிற்றம்பலம்

காலம் :

அட்சய வருஷம் ஆவணி மாதம் 24-ந் தேதி சுப்பராயன் செவ்வந்திப் புராணம் எழுதி நிறைவேறினது. முற்றும்.

குறிப்பு :

இது, திருச்சிராப்பள்ளியின் தல மகிமை யுரைப்பது. இதில், திருமலைச் சருக்கம், பிரம்ம தேவனது அசத்தியந் தீர்த்த சருக்கம், அகத்தியச் சருக்கம், இந்திரன் சருக்கம், தீர்த்தச் சருக்கம், திருநகரச் சருக்கம், நினைத்தது கொடுத்த சருக்கம், சாரமாமுனிச் சருக்கம், சூரவான தித்தச் சருக்கம், உரையூரழித்த சருக்கம், தாயான சருக்கம் ஆகிய 11 சருக்கங்கள் உள்ளன. இடையிடையே ஏடுகள் இல்லை

வரிசை எண் : 3822 சுவடி எண் : 1772-a

## திருச்செந்தூரப் புராணம்

ஏடுகள் : 117 கி. எண்ணிக்கை : 3500 அளவு : 35×3 செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: அருணாசலக் கவிராயர் பொருள் : தலபுராணம் நிலைமை: பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

ஊற்றெடுத்து வண்டுடாலிடு மும்மத்
தாற்றொழுக்கு னருவியஞ் சாரல் போல

ஏற்றுகைக்கு மிறைவர்க்கு முந்திய
மாற்றில்லாக் களியானை மைவாநாத்துவாம்.

கடவுள் வணக்கம்

எழுத்துஞ் சொல்லும் பொருளு மிணக்குறு
வழுத்து தெனா செயந்திப்பதி மாண்மிய

முடிவு :

யயில்வாழி செயந்திபுரத் துற்றோர் வாழி
யாறுமுகப் பெருமான்றன் கருணை வாழி
பயில்வானனம் முகில்வாழி புராணங் கேட்போர்
படிப்போர்கள் இணையெல்லாம் வாழி மாதோ. —104

பதினெட்டாவது சுகப்பிரம வருஷி சுவாமியைப் பூசை பண்ணின அத்தியாய முற்றும். ஆகத் திருவிருத்தம் ५00. எழுதி நிறைந்தது.

திருச்சிற்றம்பலம். குருமுன்னிற்க
வேலு மயிலுந் துணை செய்ய வேண்டியது

குறிப்பு :

இது, திருச்செந்தூரின் சிறப்புரைப்பது இது, செயந்திப் பதி என்று இந் நூலாசிரியால் பாடப்பட்டுள்ளது.

வரிசை எண் : 3823 சுவடி எண் : 1773-b

# பரத கண்டத்திலே பதினெட்டு தலத்துக்கும் விபரம்

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 50 அளவு : 35×3 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள்: தலபுராணம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சுப்பிரமணிய சுவாமிக்குப் பரத கண்டத்திலே
பதினெட்டுத் தலமுண்டு. அந்த விருத்தாந்தங்
காலமே கேட்குர சகல பாவங்களையும் போக்கிச்
சகல புண்ணியங்களையுந் தரும்

முடிவு :

சறுவ துங்கை பத்திரைக்கு வடகரையிற்
கவுசிகனென்கிற பிராமணனுக்கு ஞான
உபதேசம் பண்ணின அவதாரம் பெயர் ஞான தேசிகர்
இந்தப் பதினெட்டு விதமுங் கந்தமாத்திலே யுண்டு
அறியவும்.

குரு முன்னிற்க. வேலு மயிலுந் துணை.

குறிப்பு :

இது, முருகப்பெருமான் பதினெட்டு இடங்களில் அரிய செயல் புரிந்ததைக் கூறுகிறது.

வரிசை எண் : 3824 சுவடி எண் : 1773.

## கல்லாடம் + திருக்கோவையார்

ஏடுகள் : 108 கி. எண்ணிக்கை : 4000 அளவு : 34×3 செ.மீ

பக்கத்திற்கு: 8 வரிகள் ஆசிரியர் : கல்லாட்டர் பொருள் : சிற்றிலக்கியம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக, கல்லாடம் மூலபாடம் காப்பு.

கல்லாடஞ் செய்பனுவற் கல்லாட நூறுனால்
வல்லார் சங்கத்தில் வதித்தருளி-சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

முடிவு :

போது குலாய புனைமுடி வேந்தர்தம் போர் முடிமேல்
மாது குலாய மென்னோக்கிச் சென்றார் நமர் வண்புலியூர்க்
காது குலாய குழையெழிலோனைக் கருதலர்போ
லேது கொலாய் விளைகின்றதின் றொண்ணா மிடுமதிலே,

ஒதற் கலவாமே தக்கவரெனப் பூங்கொடிக் கலக்கம்
பாங்கி கண் டுரைத்தது.

குறிப்பு :

இதில், கல்லாடச் செய்யுளும், அதற்கு நிகாரன திருக்கோவையார் செய்யுளும் குறிக்கப்பட்டுள்ளன.

முதலில் 7 ஏடுகள் இந்நூலின் சிறு குறிப்புகளைப் பெற்றுள்ளன.

வரிசை எண் : 3825 சுவடி எண் : 1774

## மதுரைக் கலம்பகம்

ஏடுகள் : 36 கி. எண்ணிக்கை : 600 அளவு : 33×3 செ.மீ.
பக்கத்திற்கு : 5 வரிகள் ஆசிரியர் :குமரகுருபர சுவாமிகள் பொருள் : கலம்பகம்
நிலைமை: சிறிது பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறு தொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்ப தென்றண் மலர் தூஉய்
வந்திப்பதுந் தனிவாழ்த்துவது முடிதாழ்த்து நின்று
சிந்திப் பதுமன்றிச் சித்திவினாயகன் றீரடியே!

நூல்

பணிகொண்ட திரையாழி சுரி நிமிர மருங்கசை இ
பணி கொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்

முடிவு :

சந்தவிருத்தம்

உடையதோர் பெண்கொடி திடுமுக மண்டல மொழுகு பெருங்கருணைக்
கடலுதவுஞ் சில்கயல் பொருமொய்ம்புள கடவுணெடும்பதியாம்
புடைகொள் கருங்கலை வளைபவள வெண்கலை புனையுமோர் பெண்கொடியர்
வடகலை தென்கலை பலகலையும் பொலி மதுரை வளப்பதியே! —98

குறிப்பு :

சுவடியில் 'மாணிக்கவாசகர் அருளிச் செய்தது' என்றுளது. இது, குமரகுருபரர் இயற்றியதே. திருவாலவாய் எனப்படும் மதுரையின் கண் எழுந்தருளியுள்ள இறைவன் மீது, பலவகைச் செய்யுளானும் கலம்பகமாகப் பாடப்பட்டுளது.

இது, எமது சுவடி என் 175 D-275 போன்றது. முதலில் சட்டைமுனியார் வைத்திய நூலிலிருந்து எழுதிய பாடல்கள் கொண்ட முறிந்த ஏடொன்றுளது.

வரிசை எண் : 3826 சுவடி எண் : 1775

# திருமந்திரம்

ஏடுகள் : 225 கி. எண்ணிக்கை : 16,000 அளவு : $34\frac{1}{2} \times 3\frac{1}{2}$ செ.மீ.

க்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : திருமூலர் பொருள் : திருமுறை

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி: ஓம்

அய்ந்து கரத்தனை யானை முகத்தனை
யிந்து யிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தனைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

திருச்சிற்றம்பலம்
கடவுள் வாழ்த்து

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றி சைக்கும் நல்மாதுக்கும் நாதனை

முடிவு :

வதனுலே முசங்குதான் துரிபிரமன் கனக
முசப்புடன் கூட்டி மெழுகு விண்வடிவி
லெனவெ விஷ்ட்டுணு வாகுந் தினமுஞ்
சாகாதிருப்பன் சிவ னவன் —3009

குறிப்பு :

தொடக்கத்தில் 'சுபசித்துள யிரத்திரட்டு' என்றுளது விளங்கவில்லை. இதில், வேதச்சிறப்பு, குரு பாரம்பரியர். குருமடம் வரலாறு. அகத்தியர் பதியில் வீரட்டம். குரு நிந்தை, மயேசுர நிந்தை, அஷ்டாங்க யோகம், இயமம் நியமம், நல்குரவு, நடு நிலையாமை, கள்ளுண்ணான்மை, திருவடிப்பேறு, ஆகாசபேதம், திருநீற்று மகிமை முதலான பல தலைப்புகள் உள்ளன. திருமூலர் 3000 என்பவர் இதில் 3009 பாடல்கள் உள்ளன. பாடல்கள் மாறுபடக் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3827 சுவடி எண் : 1776-a

# பஞ்சதசப் பிரகரணம்

ஏடுகள் : 165 கி. எண்ணிக்கை: 3000 அளவு : 22½ × 3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம்:

சித்திர தீபிகை

வித்தியா ரண்ணிய சுவாமிகள் லோகானுக்கிரக நிமித்தியமாய்
சகல வேதாந்தத்தினுடைய பொருள்களெல்லா மனதிலே
சேகரிச்சுக் கொண்டு சகல வேதாந்த மெல்லாம்
அதிகரிக்க மாட்டாத பேர்க்கு

முடிவு :

நிருபாதியாய்ச் சுயம்பிரகாசமாயிருக்கிற பிறமத்துவம்
அகண்டானந்த வடிவாய்த் தானாகவே விளங்குமென்
றுத்தரம் இப்படிப் பிரமானந்தத்துக்கு வழிபாடாகத்தானே
விஷையானந்தத்தை நிருபிச்சோம். யிது வழியே
யெல்லாரும் மோட்சத்தை யடையக் கடவார்கள்.

விஷையானந்த முற்றும்.
சுபமஸ்து.

குறிப்பு :

முதலில் அட்டவணை எழுதிய ஏடொன்றுளது.

இது, எமது சுவடி எண்கள் 256/D-654; 528/D-655,994/D-1773 போன்றது.

இதன் பின்னர், உபாசனை அனுசரிப்பு, தியானிப்பு முதலியன எழுதிய ஏடுகள் 2 உள்ளன.

வரிசை எண் : 3828 சுவடி எண் : 1776-b

# சர்பத்து முதலியன

ஏடுகள் : 4 கி. எண்ணிக்கை : 100 அளவு : $22\frac{1}{2} \times 3$ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : மருத்துவம்
நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திராட்ச பழ சர்பத்து

திராட்சபழம் சேர் —1. நீர்விட்டலம்பி
ஒரு சட்டியில் போட்டு படி 3 நீர்விட்டு
அடுப்பில் வைத்து அதில் விட்ட சலம்

முடிவு :

ஆமலகப் பழச்சாற்றி லரைப்பு சாமம் —8
சிறு பயறளவு அரைத்துப் போடவும்
முலைப்பால் நீரிதில் இடவும்

கண்வியாதி 96-ம் போம் – ஒருதலைவலி
மாலைக்கண் போம்.

குறிப்பு :

இதில், சில மருந்து முறைகள், தீரும் நோய்கள் பேசப்படுகின்றன.

வரிசை எண் : 3829 சுவடி எண்: 1777-a

# தாயுமானவர் தோத்திரம்

ஏடுகள் : 1+1 கி. எண்ணிக்கை : 200 அளவு : $21 \times 4$ செ.மீ.
பக்கத்திற்கு : 13—15 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்.
தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

அங்கையி னெல்லிக் கனியென் ஞான
அனுபவ நிலையெல்லா மறிவொன்ப
அங்க மர்த்தவருக் கறிநிலை தோன்றத்தோகு
தமிழ்மாரியாய்ச் சொரிவோன்

முடிவு :

தேக்கிய கடற்கு நாவாய்
தெக்கணா மூர்த்தி பொற்றாள்
பாக்கியம் பெற நினைந்த
பக்குவர் பாதத் தூளே —4.

குறிப்பு :

இதில், தாயுமானவரைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் உள்ளன. இதற்கு முன் ஏட்டில், அவர் பாடிய பாடல்களின் தலைப்புகள் அமைந்த செய்யுட்கள் காணப்படுகின்றன.

வரிசை எண் : 3830 சுவடி எண் : 1777-b

## தாயுமான சுவாமி பாடல்கள்

ஏடுகள் : 151 கி. எண்ணிக்கை : 12,000 அளவு : 21×4 செ.மீ. பக்கத்திற்கு : 10—15 வரிகள் ஆசிரியர் : தாயுமான சுவாமிகள் பொருள் : தோத்திரம் நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பரசிவ வணக்கம்

அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்த தெது தன்னருள் வெளிக்குள்ளே
யகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும்படிக் கிச்சைவைத் துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக் கினாற்
றிட்டாமல் நின்ற தெது சமய கோடிகளெல்லாம்
தந்தெய்வ மெந்தெய்வ மென்

முடிவு :

பந்தமற்றே பசுந்தோகையும் பதித்துவமாய்
வாழ்கப் பாசமற்றே நேசமுற்றே பத்தரெல்லாம் வாழ்கச்
செந்தமிழாலருநூலைச் செய்தோரும் வாழ்க
தென்மறைசைப் பிள்ளை முதற்றெளிதமிழ் வாழ்ந்திடவே —3

குருதுதி வாழி முற்றிறும்.

பதியம் 73-க்குச் செய்யுள் 1499
குருவே துணை.

**காலம் :**

கரவருஷம் தைமாதம் 23-ந் தேதி, சுக்கிர வாரமும் துதிகையும் சதைய நட்சேத்திரமும் கூடின சுபதினத்தில் தாயுமான சுவாமிகள் பாடல் எழுதி முடிந்தது முற்றும்.

குறிப்பு :

இதில், பராபரக்கண்ணி, அகவல், வண்ணம் முதலான எல்லாச் செய்யுட்களும் உள்ளன.

வரிசை எண் : 3831 சுவடி எண் : 1778-a

# தாயுமான சுவாமி பாடல்

எடுகள் : 77 கி. எண்ணிக்கை : 1600 அளவு : 26½ × 2 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : தாயுமான சுவாமிகள் பொருள் : தோத்திரம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம் :**

அங்கிங் கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்
யானந்த பூர்த்தி யாகி
யருளொடு நிறைந்ததெது

முடிவு :

தொண்டனென வேண்டுகின்றேன்
வுண்டிவரு கொன்றையணி
யண்டர்நாயக கயிலை யுறை[illegible]தெய்வமே

யொன்றாகி யானந்த வொளியாகி
யென்னுயிருக் குயிரான பரசிவமே !

முற்றும்
சிவமயம்

குறிப்பு :

இதில், பரிபூரணானந்தம், சின்மயானந்தகுரு, கருணாகரக் கடவுள், மவுன குரு, சித்தர்கணம், சச்சிதானந்தசிவம், தேசோ மயானந்தம், சிற்சுகோதய விலாசம், ஆனத்தமான பரம், சுகவாரி, எங்குநிறைகின்ற பொருளே, பரமசிவம் ஆகிய பாடல்கள் உள்ளன.

வரிசை எண் : 3832 சுவடி எண் : 1778-b

# தத்துவக் குறிப்பு அட்டவணை

ஏடுகள் : 15 கி. எண்ணிக்கை : 300 அளவு : 26½ × 2 செ.மீ.
பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவக்கட்டளை
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ரி: ஓம்

மூலத்தில் நின்ற குஞ்சரத்தைப் போற்றி
முளரினுள் முகந்தன்னை முறையால் லேத்தி
ஞாலத்தி லுண்ட மலரடியை வாழ்த்தி
நலஞ்சிறந்த ரூத்திரனை நயந்து பாடி

முடிவு :

அனாதகத்தில் சிகாரமென்ற அஷ்ஷரம்நிற்கும்
எழாசிசை விசித்தியில் வகாரமென்ற அஷ்ஷரம் நிற்கும்
இனியெட்டாதியில் ஆக்கினையில் யகாரமென்ற
அஷ்ஷரம் நிற்கும். ஆகதிசை எட்டுக்கும்
அஷ்ஷரம் எட்டு

திருச்சிற்றம் பலம்

குறிப்பு :

இது, தத்துவங்களைப் போதிக்கிறது.

வரிசை எண் : 3833 சுவடி எண் : 1778-c

# உடல் கூறு தத்துவம் தொண்ணூற்றாருக்கு விபரம்

ஏடுகள் : 18 கி. எண்ணிக்கை : 400 அளவு : $26\frac{1}{2} \times 2$ செ.மீ

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவக்கட்டளை

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

| | |
|---|---|
| பூதம் — 5 | தொழில் — 5 |
| பொறி — 5 | கரணம் — 4 |
| புலன் — 5 | அறிவு — 1 |
| கன்மேந்திரியம் — 5 | நாடி — 10 |
| | வாயு — 10 |

முடிவு :

அஷ்டமத மென்கிற யானைகளும் சேத்து
நாலுவேத மென்கிற புரவிகளும் பட்டு
பரபோக மென்கின்ற வாளும் பறிக் கதவும்
திறந்து அசுத்த மாய்கை என்கின்ற
தேவியும் யிரு ........ ............

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1328/D-1869 'தத்துவக்கட்டளை' போன்றது.

—★—★—

வரிசை எண் : 3834 சுவடி எண் : 1778-d

# அகத்தியர்-205

ஏடுகள் : 8 கி. எண்ணிக்கை: 150 அளவு: $26\frac{1}{2} \times 2$ செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி : ஓம்

பூரணமாயி முன்னூலும் புகையிற் சூடாம்
புகையெழும்பி மேகமதாயி சிரசிற் சூடாம்.
காரணமாய் நீர்கலந்து கண்ணில் ரோகம்
கனலெழுந்து வாயுவினால் சூலை ரோகம்

முடிவு :

பத்து நாளைக்கும் அரைத்துப் போடவும்
இந்தப்படி சாப்பிட்டால் மேகவாயுவு
தீரும். இது அறியவும்

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லை. செய்யுள் கொண்டு தலைப்பு கொடுக்கப்பட்டது. இதில், பித்த வெட்டைக்கு மருந்து, சூட்டுக்குக் கணத்துக்கு எண்ணெய், மேகவாயுவுக்குக் கிஷாயம் ஆகியவை உள்ளன.

வரிசை எண் : 3835 சுவடி எண் : 1778-e

# அகத்தியர் குழம்பு

ஏடுகள் : 2½ கி. எண்ணிக்கை : 50 அளவு : 26½ × 2 செ.மீ.

பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அகத்தியர் பொருள் : மருத்துவம்

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பற்பதம் தன்னில் வாழும்
பரமனார் அருளி னாலே
பொருமாயா யுலகி லுள்ளோர்
புண்ணிய சௌங்க ளுக்கு

முடிவு :

மதியால் வந்த நோய்க ளெல்லா
மலுணரே கடலில் போய்விடுமே

அறியாயோ யெங்கள் அகத்தீசர்
அய்ய ருரைத்த மொழியிதுவே. —10

குறிப்பு :

இது, மருத்துவத்தைச்சார்ந்த தாகும்.

வரிசை எண் : 3836 சுவடி எண் : 1778-f

## வைத்தியத் திரட்டு

ஏடுகள் : 49 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 26½×2 செ.மீ.

பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : பலர் பொருள் : மருத்துவம்

நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

மேக பஞ்சா முர்தம்

மேக வாயுவு மேகக் கட்டி அரையாப்பு
புண்ணு யிதுக்கு மேக பஞ்சாமுர்த எண்ணை.
வெளக்கெண்ணை 5 படி
பரங்கிப்பட்டை பலம் -5

முடிவு :

மேகச் சூட்டுக்கு எண்ணெய்
ஆவாரம் பட்டை...............
ஒரு பானையில் போட்டு.............
சித்தாமணக் கெண்ணெய் .............
பால்சேத்து எலுமிச்சம்...........
அடுப்பிலேற்ற...............

குறிப்பு :

இதில், குளிர்காச்சல் சுரத்துக்கு, மேகங்கள், குஷ்டங்கள், குன்மங்கள் தீ முதலான மருந்துகள் செய்முறை கூறப்பட்டுள்ளன.

வரிசை எண்: 3837 சுவடி எண் : 1779

## அவிரோத வுந்தியார் - உரையுடன்

ஏடுகள் : 123 கி. எண்ணிக்கை : 2500 அளவு : $20 \times 3\frac{1}{2}$ சென்டி மீட்டர்
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : சாந்தலிங்க சுவாமிகள் பொருள் : வேதாந்தம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

எல்லா முடையான் குருவாகி வந்தெம
தல்ல லறுத்தானென் றுந்தீபற
அவன்றாழ் தொழுவோ மென் றுந்தீபற.

என்றது. சொல்லுவார் சொல்லும் வண்ணங்க
ளனைத்தையு முடைய வொரு பூரணன்
குருவடிவமாகி யிவ்விடத்திற் றோன்றி
யொன்றுக்கும் பற்றாத வென்னுடைய பிறவித் துன்பத்தை
வொறுத் தருளினன்.

முடிவு :

ஆனந்தமே யதினா னோரென்றுஞ் செய்யுள் துடங்கி
யிச்செயுள்ள காறு ஞானிகள் காறுஞானிகளதா சாரங்
கூறினாரெனக் கொள்க

சாந்தலிங்க சாமியார் திருவடிகளே சரணம்

குறிப்பு :

இது, கோவை மாவட்டம், பேரூரில் உள்ள மடத்தினைத் தோற்றுவித்த தவத் திரு சாந்தலிங்க அடிகளாரால் இயற்றப் பட்டதாகும்.

இது, எமது சுவடி எண் 1171/D-1715 போன்றது.

வரிசை எண் : 3838 சுவடி எண் : 1780

## திருச்சிற்றம்பலக் கோவையார்

ஏடுகள்: 88 கி. எண்ணிக்கை : 2000 அளவு : $14\frac{1}{2} \times 3$ செ மீ.
பக்கத்திற்கு: 9 வரிகள் ஆசிரியர் : மாணிக்கவாசகர் பொருள் : திருமுறை
நிலைமை : சிறிது பழுது முழுமை: முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

........ ...............
செய் கோதொடுக் கோபணியி ரணியிர் மலத்துஞ் சுரிகுழற்கே
கரையுற்ற வேலவன் குறையுற்றது — 63

அவன் குறிப்பறிதல்

அளிய மனனும்மொன் றுடைத்தண்ண லெண்ணரன் றில்லையன்னாள்
கிளியை மனனுங் கமையச் சொல்ல நிற்பிற் கின்டுத்த

முடிவு :

தாரணி கொன்றையன் றனக்கோர் தஞ்சங்க நிதிசே
ருருணி யுற்றவர்க் கூரன் மற்றியாவர்க் கூதியமே
இரும்பரிசி லேற்றவர்க் கருளி
விரும்பினர் மகிழ மேவுலத லுரைத்தது — 400

திருச்சிற்றம் பலக் கோவையார் முற்றிற்று
மாணிக்கவாசக மூர்த்தி பாதார விந்தமே கெதியாக

அருள்சேர் விழிகளாறாக யறிவுக் கடங்கா ஐம்புலன்க
ளிருள்தா னகலத் திருக்கோவை யியம்பக் கேட்ட வேதியாக
பொருள்தா னருள வேண்டுமெனப் பொருளே பொருளாம் புண்ணியனார்
பொருள் பொய்யென்று கைகாட்டிப் பொன்னம்பலத்தே போய்ப் புகுந்தார்

திருச்சிற்றம்பலம்

காலம் :

விழ வருஷம் ஆவணிமாதம் 18-ந் தேதி. நடராசன் திருவடி வாழ்க.

குறிப்பு :

1—15, ,9, 92, 94, 95, 96, 103, ,05 - 107, ஆகிய ஏடுகள் இல்லை. மாணிக்கவாசகர் தங்கியிருந்த திருமடத்திற்கு, சிவபெருமான் அந்தணர் வடிவில் வந்து ஓரிரவு "நீர் பாடிய பாடல்களையெல்லாம் சொல்லுக" என்று கேட்க, அவ்வாறே மாணிக்கவாசார் சொல்ல திருவாசகத்தை எழுதிய அந்தணர். 'பாவை பாடிய வாயால் கோவை பாடுக' எனக் கேட்டலும், உடனே அவர் பாடிய இத்திருக்கோவையாரை எழுதி, மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் கையெழுத்திட்டு சுவடியுடன் மறைத்ததாக வரலாறு. அத்தகு சிறப்புடையது இத் திருக்கோவையார்.

வரிசை எண் : 3839 சுவடி எண் : 1781.

# பொன்வண்ணத் தந்தாதி

ஏடுகள் : 17 கி. எண்ணிக்கை : 500 அளவு : 16½ × 4½ செ.மீ.
பக்கத்திற்கு : 12 வரிகள் ஆசிரியர் : சேரமான் பெருமாள் நாயனார் பொருள் : திருமுறை நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது.
எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்தி.........
மின் வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்று
தன் வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மால்விடை தன்னைக்கண்ட
வென் வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசனுக்கே — 1

முடிவு :

மாயன்ன மாமணிகண்டன வளர்சடையாற் கடிமை
யாயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காயசின வானை வளகுங் கனக மலை யருகே
போயின காக்கையு மன்றே படைத்தது பொன் வண்ணமே ! — 100

போனன வண்ணத் தந்தாதி முற்றுப் பெற்றது சிவகிருபை

வரலாறு இதனானுணர்க.

அன்று வெள்ளானையின் மீதிமையோர் சுற்றணுகுறச் செல்
வன் றொண்டர் பின் பரிமேற் கொண்டு வெள்ளிமலையான் முன்
செறெழிலாதி யுலா வரங்கேற்றிய சேரர் பிரான்
மன்றிடை யோது பொன்வண்ணத் தந்தாதி வழங்கிதுவே.

காலம் :

சாலிய வாகன சகாத்தம் 1757-ம் வருஷம் துன்முகி வருஷம் ஆவணிமாதம் 15-ந்தேதி முகிந்தது.

குறிப்பு :

இதன் விளக்கம் இந்நூலின் இறுதிவ்லாற்றுப் பாடலில் உள்ளது. ஏடுகள் தலை தடுமாற்றம்.

வரிசை எண் : 3840 சுவடி எண் : 1782

# அத்து விதானுபவம்

ஏடுகள் : 27 கி. எண்ணிக்கை : 600 அளவு : 20½ × 4 செ.மீ.

பக்கத்திற்கு : 10 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்

நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

அதிகாரி லட்சணம்

பத்தியுடனிற் பிறப்பில் முற்பிறப்பி லாகிலுமே பலன் வேண்டாமை
நித்திய நைமித்தியமா முதலான கருமங்கள் நிறையச் செய்தால்
ஒத்திருந்த சித்த சுத்தி யுண்டாம் பின்னுபா சினையா லொருமையுண்டா
முத்திதரும் விசாரனையாற்பின் சீவன் பிரமமாய் முடியுந் தானே —1

முடிவு :

சிரிட்டிக்கு முன்விரண்டி லாம லோன்றா யிருந்த சத்தே தினந்
தேகாதி யிருத்திக்குஞ் சாட்சியாகிய நீயென்றே
சாமவேதஞ் சொல்லு மருப்ப மிலா...........

குறிப்பு:

இதில், 101 வது ஏடு இல்லை. இதில், ஆவரண நீங்குதல், இகபரபலன், முத்தருக்குப் பிறப்பிலாமை, சீவன் முத்தர் லட்சணம், பரமத நிராகரிப்பு, அத்துவித நிலை நிறுத்தல், சமாதி லட்சணம், சாட்சி சொரூபம், ஆனந்த சொரூபம், விவேக சொரூபம் ஆகியவை உள்ளன. வேதாந்தத்தை விளக்குகிறது.

இது, எமது சுவடி எண் 1480/D-2049 போன்றது.

வரிசை எண் : 3841 சுவடி எண் : 1783-அ

# கொங்கணர் ஆறுசூட்ச தெரிசனம்

ஏடுகள் 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : 17 × 3 செ.மீ.

பக்கத்திற்கு 9 வரிகள் ஆசிரியர் : கொங்கணர் பொருள் : சைவ சாத்திரம்

நிலைமை ; நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சொல்லுகிறேன் சூட்சத்தின் மகிமை கேளு
 சுருதிவெள்க் கெட்டாத சூட்ச மப்பா
வெல்லுவையோ சொல்லுதற்கு பிள்ளாய் பிள்ளாய்
 வேதாந்தஞ் சித்தாந்தம் பறையி னுள்ளே

முடிவு !

துலைக்குளியால் நிலைக்க வந்து அமுர்த முண்ணுஞ்
 சோதியாம் பராபரத்தின் சியலென்
றலைத்துவிட்டு ஆதிஅந்த மல்லா திடத்தே
 அயர்ந்துபேர் கட்டிநின்ற யிடந்தான் காணே ! —6.

குருவே துணை

குறிப்பு !

வேதாந்தம் போல் காணப்படும் இது சூட்சுமத்தின் நிலைதனை விளக்குகிறது.

வரிசை எண் : 3842 சுவடி எண் : 1783-b

## சிவயோக தீபிகை

ஏடுகள் : 75 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 17×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : சதாசிவயோகீசுவரர் பொருள் : வேதாந்தம் நிலைமை : நல்லநிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஸ்ரீ சதாசிவயோகீசுபரராலே ரசிக்கப்பட்ட
சிவயோக தீபிகை யென்குற யோக
சாத்திரத்திலே அந்தர பூசாவதான
மாகுறதை நிருபிக்கிறார்.

முடிவு :

அஞ்சு படலங்க்ளாக ரசிக்கப்பட்ட தென்று
சொல்லி கிறந்தகர்த்தா அனுக்கிரகம் பண்ணினார் —59

இந்தப்படி சதாசிவ யோகீசுபரராலே
இராசயோக விடையமான அமண்டக விதானமான
அஞ்சாம்படலமுத்தும். ஆக படலம் 5-க்கு
சுலோபம் 287. குருபாதமே கெதி,

காலம் :

விளம்பி வருஷம் கார்த்திகை மாதம் 28-ந் தேதி

குறிப்பு :

இது, வடமொழி நூலான ''சிவயோகப்ரதீபிகை'' என்பதன் மொழி பெயர்ப்பாகும். இதனை மொழி பெயர்த்தவர் இன்னாரெனத் தெரியவில்லை. அச்சாகியுளது.

வரிசை எண் : 3843 சுவடி எண் : 1783-c

# பரமஞானம்

ஏடுகள் : 11 கி. எண்ணிக்கை : 200 அளவு : 17×3 செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

பரமஞானமாவது பரமாகிய மூலாதி
பாதத்திலே பரனென்றும் பரையென்றும்
பரை குடிலை யென்றும் பரனாத யென்றும்
பரவிந்து வென்றும் ஆராதாரமா யிருக்கும்

முடிவு :

இப்படிச் சத்தியுஞ் சிவமு மொன்று பட்டவிட
பேரொளிக் கொழுந்தே கடவுள் நாடியாய் நிற்கும்
கடவுள் நாடியாவது சுழிமுனை. அந்தச்
சுழிமுனை மீதிலே பேரொளிப் பிரபையுள்ளே
பிண்டாண் டங்களெல்லாந் தோன்றி யொடுங்கு—
மென்றவாறு.

தெஷ்சணாமூர்த்தி துணை.

குறிப்பு :

இது, பிரமமெனவும், பரம்பொருளெனவும் கூறப்படுகின்ற கடவுளின் தன்மையினை விளக்கித் தத்துவரூபமாகக் கூறுவது.

வரிசை எண் : 3844 சுவடி எண் : 1784

## நட்சத்திர சோதிடம்

ஏடுகள்: 27 கி. எண்ணிக்கை : 300 அளவு: 10 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : நல்ல நிலை முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

அசுபதி

அசுபதி உதயமாகில் திருவிளத்துனாலே
நீ கோரிச்ச படியே காரியமெல்லாம்
விசாரிச்சபடி செயமாகும்.

போக்கு வரத்துக்குமாக கேழ்க்குறாய்
கடல் ஓட்டவும் தனக்கு தெய்வசகாய முண்டாம்
யாபாரம் கூடுதலுண்டு

முடிவு :

ரேபதி

நீ நினைத்து வந்த காரியத்துக்கு சர்வ லோகத்துக்கும்
கர்த்தனாகிய பகவான் கிருபையினாலே

× × × × ×

கிராம தேவதைக்கும் பிரார்த்தினை செய்து கொள்ளு
சகல காரியமும் செயமாகும், இது மகா உத்தமம்

முற்றிற்று

குறிப்பு :

இதில், தலைப்பு இல்லை சுவடி பொருள்கண்டு தலைப்பு கொடுக்கப்பட்டது. இது, கயறுபோட்டுப் பார்க்கும் சுவடி போன்றது. குறிப்பிட்ட நட்சத்திரத்தைச் சொல்லச் சொல்லி அந்த நட்சத்திரத்துக்குரிய பலனைக் கூறுவது.

முதலேட்டில், சுரம் போக்க மந்திரமும், சக்கரங்களும் உள்ளன.

—★★—★

வரிசை எண்: 3845 சுவடி எண்: 1785-a

# வைராக்கிய சதகம் - உரையுடன்

ஏடுகள் : 116 கி எண்ணிக்கை : 2300 அளவு : 17 × 3½ செ.மீ.
பக்கத்திற்கு : 9 வரிகள் ஆசிரியர் : சாந்தலிங்க சுவாமிகள் பொருள் : வேதாந்தம்
நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக குருவாழ்க குருவே துணை
திருச்சிற்றம்பலம்

முக்கணிறைதரு கரிமுன்னடத்திப் பின்னதன்ருட்
பக்கண மறைந்தேகுணா வெம்பாத மிகனாசடுற
× + × ×
வாழி நெஞ்சமே சென்றிடே நின்றிதோர் வார்த்தை

யெற்குரை செய்வாய்

கீழியா மியற்றுயர் தவத் திவ்வுடற் கிடைத்த தன்றோ மற்றீ

முடிவு :

மனக்கோ தனைத்து மிறத்தோங்க றிவாகி யாங்கே
பினைக் காண்பவன் காட்சியு மற்றவ பேத வாழ்வே! — 100

திருச்சிற்றப்பலம்

நமசிவாயன் திருவடி வாழ்க
விநாயகன் திருவிளம்
வயிராக்கிய சதகம் எழுதி நிறைந்தது

முற்றும்
குருவே துணை

குறிப்பு :

இது, வேதாந்த நூல்களி லொன்று. அந்தாதியாகப் பாடப்பட்டுளது. விருத்தப் பாவான் அமைந்த 100 செய்யுட்கள் உரையுடன் உள்ளன. ஏடுகள் தலைதடுமாற்றம்.

இது எமது சுவடி எண் 538-b/D-684, எண் 1181/1596 போன்றது.

வரிசை எண் : 3846 சுவடி எண் : 1785-b

# நந்திதேவர் திருமூலதேவருக்கு அருளிச்செய்த தத்துவம்

ஏடுகள் : 68 கி. எண்ணிக்கை : 1700 அளவு : 17 × 3½ செ.மீ.

பக்கத்திற்கு : 11 வரிகள் ஆசிரியர் : திருநந்திதேவர் பொருள் : சைவ தத்துவம்

நிலைமை : சிறிது பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம் நன்றாக தருவாழ்க குருவே துணை

சிவமகிமை தம்முடைய ஆயி கூத்துச்
செப்புதற்கு யெளிதாமோ சித்தா கேளு
தவமகிமை தமக்குவந்து மூண்டு தானால்
தார் மகிமை அவனுடைய மகிமை யாகும்.

முடிவு :

உத்தம யோகிகட்கு மூரும் பேரு
தவத்துள்ளோற்கு வித்தக மறையோர்க்கும்
விரும்பிய பூசை செய்து
சுத்தமாம் வேள்விதன்னைச் சொல்ல நமதடத்தி
னோற்குள

முத்தியை யடைவாரென்று மொழிந்தனர்
முனிவரய்யா. குருவே துணை

சரசுபதியே நம :

குறிப்பு :

இது, விருத்தப் பாக்களாலானது. செய்யுள் எண்கள் இல்லை. எளிய நடையில் தத்துவக் கருத்தைக் கூறுவது.

ஏடுகள் தலைதடுமாற்றம்.

வரிசை எண் : 3847 சுவடி எண் : 1786-a

# கருவையந்தாதி

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 200 அளவு : 31×3செ மீ. பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அதிவீரராமபாண்டியர் பொருள் : சைவத் தோத்திரம்—அந்தாதி நிலைமை : ஓரங்கள் எலிகடித்துள்ளன. முழுமை முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

தீட்டும் பனுவற் கருவை யந்தாதி தெரியறந்தை
சூட்டும் படிக்குத் துணைசெய்தவர் சுடர்சூழ் பிறங்க
× × × × × ×
சீரணி கொன்றைச் சடைக்காட்டு முக்கணுங்
காரணி கண்டமு நான்கு திண்டோளுங் கருவைப்பிரான்

முடிவு :

படியெழுந் தேடியுங்காணா முழுமுதற் பானிறவெண்
பொடியேறு மேனியன்றென் கருவாபுரிப் புண்ணியனே ! —25

குறிப்பு :

இதில், 25 பாடல்களே உள்ளன. திருக்கருவையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது பாடப்பட்ட தாகுமிது.

வரிசை எண் : 3848 சுவடி எண் : 1786-b

# திருக்கருவை பதிற்றுப்பத் தந்தாதி

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 500 அளவு : 31×3 செ.மீ. பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அதிவீரராம பாண்டியர் பொருள் : பதிற்றுப்பத்தந்தாதி நிலைமை : எலிகடித்த ஓரங்கள் முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சீரார் கமலச் சேவடியைச்
சிந்தை யிருத்தி யுனதுதிருப்
பேரா யிரமு மெடுத்தோதிப்
பெம்மான் கருவை யெம்மானென்

முடிவு :

உள்ள மொன்றி யுன்னடி வழுத்திட
வுதவி செய்தவா போற்றி நாவலர்
தெள்ளுஞ் செந்தமிழ்க் கருவை வாழ்வுறுஞ்
செல்வ போற்றி நின்சீர்கள் போற்றியே ! —100

ஹரி: ஓம்

கருவை பயிற்றுப்பத் தந்தாதி உத்தமசோழபுரம்
ஆபதுத்தாரண னெட்டெழுத்து
எழுதி முகிந்தது முற்றும்.

குறிப்பு:

இது, திருக்கருவை மாநகரில் எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது பாடிய பத்திற்றுப்பத்து. நூறு பாடலாகும். சிறந்த சொல்-பொருள் நயமிக்கது,

வரிசை எண் : 3849 சுவடி எண் : 1786-c

# ஞானக் கலித்துறை

ஏடுகள் : 12 கி. எண்ணிக்கை : 250 அளவு : 31×3 செ.மீ
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : வேதாந்தம்
நிலைமை: மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

சங்கற்ப மற்று விகற்பத்தை விட்டுத் தனியிருந்தா
லிங்கப் பழமொன்று மில்லைகண்டா யிது நானறிய
யெங்குத் திருனை யங்குற்றிருந்து யிருந்தபடி
யங்குற் றிடுமனமே சிலநாளி லமருவையே — 1

முடிவு :

ஞானம் கலித்துறை வேணப்பா பரம
ஞானமெனும் உள்ளமிலாத மறைநூல் பல கலைக்
குயர்ந்த பொருளான நன்மதியால்க்
குருமொழி கோட்டு நவின்ற ... ...... யால சென மறுத்து
சிவமாகி நானு தெளிந்து தின்றே — 62

சிவமயம் குருவே துணையாக வேணும்

குறிப்பு :

இது, ஞானம்பற்றிப் போதிக்கின்றது.

வரிசை எண் : 3850 சுவடி எண் : 1786-d

# பராபரக்கண்ணி

ஏடுகள் : 3 கி எண்ணிக்கை : 60 அளவு : 31×3 செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர்: தாயுமானார் பொருள் : தோத்திரம்
நிலைமை: பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

வஞ்சற் மனவாதினைக்கு மவன் பிறவி
வேதினைக்குப் அஞ்சியுனை அடைந்தேன்—பராபரமே!

முடிவு :

யெச்சிலென்று பூவையிகழ்ந் தார்க்குனைப் போத்த
பச்சிலையுங் கிள்ளப் படாதே—பராபரமே — 23

குறிப்பு :

நடுவில் ஒரு உதிரி ஏடுளது. தாயுமான சுவாமிகள் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள். சிறந்த கவிநயமும் சொல் நயமும் கருத்தும் செறிந்தவை.

வரிசை எண் : 3851 சுவடி எண் : 1787-a

# புண்ணிய பஞ்சாட்சர விளக்கம்

ஏடுகள் : 60 கி எண்ணிக்கை : 800 அளவு : 21×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : சைவத் தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

உந்திக் கமலத் தைங்கரனை
யுகந்த சத்தி வல்லபையைச்
சந்தித் தயன்மால் ருத்திரனைத்
தயங்கு மயேசுர சதாசிவத்தை

முடிவு :

வாழிமிக வாழ்வு பெற்று
வாழியின்னூல் வரைந்த படிகண்டு
தெளிந்தோர்க ளெல்லாம்
வாழி கயிலாச மலைச் சிவனார் பாத
மருவியுள்ள நாள்வரையும் வாழி தானே ! — 155

சிவமகிமை வளந்தேற வேணும்
குருபாதமே துணையாக வேணும்.
தருமதேவதை பரதமேதுணை
சிவகிறுபை

குறிப்பு :

இது, திருவைந்தாகிய பஞ்சாட்சரச் சிறப்பையும், மகிமையையும் கூறுவது.

வரிசை எண் : 3852 சுவடி எண் : 1787-b

# கந்தர் கலி வெண்பா

ஏடுகள் : 5 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21×2½ செ.மீ.
பக்கத்திறகு: வரிகள் ஆசிரியர் : குமரகுருபரர் பொருள் : சைவத்தோத்திரம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஹரி ஓம்

பூங்கமலச் சங்கரனார் புத்திரா திக்கரிய
பூங்கமலச் சங்கரனார் புத்திரா —பூங்கமல
வாய்ச்சங் கரிக்கி மருகனே னால்வேத
வாய்ச்சங் கரிக்கி மருகனே — வாய்ச்சங்கம்

முடிவு :

—கருத்திலுனை
கற்பாய் கயிலாயங் காட்டுவா யன்றுயெனை
கற்பாய் கயிலாயங் காட்டுவாய் — கற்பிலுனை
கந்தா கருணாகரா வேள்குமரா
கந்தா கருணாகரா

அருணாசலயீசுபரன் துணை.

யெண்முக முற்றும்

குறிப்பு :

திருவைகுத்ததிலே பிறந்து ஐந்தாண்டுகள் வரை வாய் பேசாதிருந்து, திருச்செந்தூரில் முருனருளால் வாய் பேசப் பெற்று முதலில் திருவய்மலர்ந்தருளிய பாடல் இது. அச்சாகியுளது.

வரிசை எண் : 3853 சுவடி எண் : 1787-c

# வேல் விருத்தம்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 105 அளவு : 21×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அருணகிரிநாதர் பொருள் : சைவத்தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து: தமிழ்.

தொடக்கம் :

சூதப் பெருங்கனிக் கரனாரை
வலம்வந்து சுந்தரச் சிந்துரமுகச்
சோதித் துதிக்கை கொண்டோதப்
படிப்பசுந் தோகைக் கலாப மயில்மேல்

பாதத் துகைந்திலகு படர் தூளி வாணியிற்
பன்னிரு கரத்தொரு கரம் பத்தியே
சதகோடி பருதி மண்டல மெனப் பவுரி
வந்திலகு வெளி கீதத்தெழுஞ்சுருதி

முடிவு :

மாலோகமுகம் பெறுவர் வாசுகி பதம் பெறுவர்
வானவர் தொழப் பெறுவர் மேல்
சாலோகமும் பெறுவர் சாமீபமும் பெறுவர்
சாரூப பாக்கியத்திலே சந்தித்து ஞானித்து
முந்திப் பதத்திலே சாயுச்சியமும் பெறுவரே. —11

வேல் விருத்தம் முற்றும்.
ஸ்ரீ ராமஜெயம் கந்தசுவாமி துணை.

குறிப்பு :

இது, முருகக் கடவுளின் பன்னிரு கரங்களில் ஒருகரத்திலுள்ள வேல்மீது பாடப் பட்டதாகும். வேல் நம்மைக்காக்கட்டும் என்று பாடப்பட்டுளது. அச்சாகியுளது.

வரிசை எண் : 3854

சுவடி எண் : 1787-d

# அணி முருகாற்று(ப்படை)

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 100 அளவு : $21 \times 2\frac{1}{2}$ செ.மீ.
பக்கத்திற்கு : 6 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

பொன்னிறை மேனியும் புட்பரா வடிவு
பன்னிரு முகமும் விழிபணி ரெண்டும்
நீறணி நெத்தியும் நீணகை வரவும்
கூறொணா வடிவுடைக் கூரிய மூக்கும்

முடிவு :

அமரர் சிறைமீட்ட ஆறிரண்டு தோளுந்
தமாக மிகுந்த தண்டையுந் தாளு

குமரன் திருக்கையில் வேலுஞ் சிந்தித்து
நெஞ்சே யிருக்கவே போமே யிடர்

அணிமுருகாற்று
முற்று

குறிப்பு :

இது, ஆற்றுப்படை என்ற தலைப்பிடப் படவில்லை. எமது சுவடி எண் 1282-h D-1578 அணிமுருகாற்றுப் படையின் வேறுபோல் காணப்படுகிறது.

வரிசை எண் : 3355 சுவடி எண் : 1787-

# மந்திர முருகாற்று(ப்படை)

ஏடுகள் : 3 கி. எண்ணிக்கை : 100 அளவு : 21 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை
நிலைமை : மிகப் பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் நமசிவாய நம செய செய
சுப்பிரமணிய பவாய நம
ஓய்யிரத்தியுங் கீழ்த்தியுங் கீர்த்தியுங்
கிலியும் ஐயும் சவ்வும் சிவாய நம

முடிவு :

சிறியு மிறியும் பவ்வுஞ் சவ்வுஞ்
சரவண பவ ஓம் சரவொளி பவஓம்
சங்காதி பவஓம திரிபுர பவஓம்
திகழொளி பவஓம் திருவண பவஓம்

மந்திர முருகாற்று முற்றும்
வேலாயுதக் கடவுள் துணை
ஸ்ரீ ராம செயம்

குறிப்பு :

மந்திர எழுத்துக்களை அமைத்துப் பாடப்பட்டதாகுமிது.

வரிசை எண் : 3856 சுவடி எண் : 1787-f

# ஒருமுருகாற்று (ப் படை)

ஏடுகள் : 2 கி. எண்ணிக்கை : 50 அளவு : $21 \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை

நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

**தொடக்கம்:**

பயிலிவின் பாகக் கயிலை யிறைவ
யாவி னங்குடியி லாயி னன்குடியும்
யிடுக்கி யிருஞ்சின நடுக்கம் பாடியு
மீனவர் கூனத் தானகைந் தலைவாழ்

**முடிவு :**

கிறேகங் களையும்
யெரியெரி வேலால் திரிதிரி வேலால்
கட்டு கட்டு மூட்டு முட்டு
வெட்டு வெட்டு குலைகுலைந்து நடுநடுங்கி
நாச மாகவே சுவாகா.

ஒருமுருகாற்று முற்றும்.
கந்தசுவாமி துணை.

**குறிப்பு :**

இதுவும் ஒருமுருகாற்று என்றுளது

இது, கந்தர் சஷ்டி கவசத்தினை நினைவூட்டுகிறது.

வரிசை எண் : 3857 சுவடி எண் : 1787-g

# வருமுருகாற்று (ப் படை)

ஏடுகள் : 3 கி எண்ணிக்கை: 100 அளவு : $21 \times 2\frac{1}{2}$ செ.மீ.

பக்கத்திற்கு: 7 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : ஆற்றுப்படை

நிலைமை : பழுது முழுமை முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

ஓம் செய செய வருக வருக முருக
வருகயான வாசி மாணிஷப் புண்டரீகமும்
யோகமுகங் களிற் குண்டலக் குழை பல
கண்டம தணிந்து வார

முடிவு :

நானினைத்த சத்துருவு மென்னை யெதிர்த்த
பேயும் பிசாசும் உன்னை எதிர்த்த
சூரனுடல் துணித்தாப் போலே
துணித்துப் போகச் சுவாகா.

வருமுருகாற்றுப்படை முற்றும்.

தெண்டாயுதபாணி துணை.
சண்முகன் துணை.

சத்துரு சங்காரன் துணை.

குறிப்பு :

இது, எமது சுவடி எண் 1282-i D-1583. வருமுருகாற்றுப் படையின் வேறயது போல் காணப்படுகிறது. இறுதியில் வருமுருகாற்றுப்படை முற்றும் என்றுளது. தொடக்கத்தில் இல்லை.

வரிசை எண் : 3858 சுவடி எண் : 1787-b

# சொக்கர் பதிற்றுப்பத்தந்தாதி

ஏடுகள்: 23 கி. எண்ணிக்கை : 1000 அளவு : 21 × 2½ செ.மீ
பக்கத்திற்கு: 9 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள் : அந்தா
நிலைமை : பழுது முழுமை: முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருச்சிற்றம்பலம்

ஹரி ஓம்

பைந்தொடிபாற் சொக்கர் பதிற்றுப்பத் தந்தாதி
செந்தமிழைப் பாடச் செயலளிக்குஞ் — சந்ததமுஞ்

சிந்தா வளமதுரைச் சித்தி விநாயகனார்
தந்தா வளமதுரை தந்து.

நூல்

............டுளங்களித்து வி ..... க்குந் தோகை மயிலாட
வெண்டாளம் பொழியும் மதுரைக் கயற்கண்ணாள்

முடிவு :

முனிவோர் துறவாத ஞான முமைமாது பாகர்
சொக்கேசர் முக்கண் முதல்வர்

நறவார கடம்பவன நாதர் நீதிஞாலம் புரக்கு மதனான்
மறவாது திங்கள் மும்மாரி மல்கின்ற மேகம் வருமே

திருச்சிற்றம்பலம்

சொக்கரந்தாதி முற்றும்

கணபதியே துணை ஸ்ரீராம செயம்.
சத்துருசங்காரவேல் துணை

குறிப்பு :

இது, மதுரைச் சொக்கநாதர் மீது பாடப்பட்டதாகும். இது அச்சிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

வரிசை எண் : 3859 சுவடி எண் : 1787-i

# தில்லை அகவல்

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 21 × 2½ சென்டி மீட்டர்
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : அறியக்கூடவில்லை பொருள்: சைவ தோத்திரம்
நிலைமை : பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்

தொடக்கம் :

சீரணி கமலத் தாரணி வாழ்க
ஆரணன் முதலாய் நாரணன் போற்ற
தில்லையுள் மீதே திருநடஞ் செய்தாய்
வல்லவ னாதர் வன்னியுள் வடிவே

முடிவு :

குடிகொண் டிருந்து சிந்தையில் நினைந்த
தெல்லா மளிப்பா யெந்தநா யகனே
யிறையவனே சரண மென்றுனைப் புகழ்ந்து
சாற்றுவேன் திருத்தாள் நந்தரு ளெமக்கே

திருச்சிற்றம்பலம்
சத்துருசங்காரவேல் துணை
ஸ்ரீராம செயம்

தில்லை அகவல் முற்றும் கணபதியே துணை
ராமசுவாமி துணை தெய்வயானை துணை

குறிப்பு :

இது, சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் இறைவி மீது பாடப்பட்ட அகவல்.

வரிசை எண் : 3860 சுவடி எண் : 1787-j

# சிவகவசம்

ஏடுகள் : 6 கி. எண்ணிக்கை : 150 அளவு : 21 × 2½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர் : வரதுங்கபாண்டியர் பொருள் : சைவ தோத்திரம் நிலைமை: பழுது முழுமை : முற்றுமுளது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

திருவுங்கல் வியுஞ் சீருந் தழைக்கவும்
× × + × × ×
யாழத்துப் பிள்ளையைப் போற்றுவாம்.

நூல்

பங்கையத் தவிசின் மேவி
யிருந்துடற் பற்று நீக்கி
யங்குனர் பூத சுத்தி
யடவுடன் செய்து பின்னர்

முடிவு :

நெடுவலி யளித்து நீ நீடு வாழ்கென
வடுவற வாழ்த்தியே வழிக்கொண் டானரோ. —24

திருச்சிற்றம்பலம்.
சிவகவசம்

சத்துரு சங்காரவேல் துணை.
ஸ்ரீராம செயம்

குறிப்பு :

இது, பிரமோத்தர காண்டத்திலுள்ள சிவ தோத்திரம். பத்திராயு என்னும் அரச குமாரனுக்கு இடப முனிவர் அருளிச் செய்ததென சூத முனிவர் நைமிசாரணிய முனிவருக்குக் கூறியது.

வரிசை எண் : 3861 சுவடி எண் : 1787-k

# மீனாட்சியம்மை கலிவெண்பா

ஏடுகள் : 7 கி. எண்ணிக்கை : 200 அளவு : 21×2½ செ.மீ.
பக்கத்திற்கு : 8 வரிகள் ஆசிரியர்: சிதம்பர சுவாமிகள் பொருள் : சைவ தோத்திரம் நிலைமை : பழுது முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

தொடக்கம் :

... ...... ... ... ... ... ...... யே ... மிக்கபுக
ழெண்ணிரண்டாங் கோட்டி லிருப்பவளே யெல்லவர்க்கும்
பண்ணிசைந்த பாட்டின் பழம்பொருளே — விண்ணுலகின்
மேற்பட்டங் கூடுருவி மேலாகி நின்றதொரு
நாற்பத்து முக்கோண நாயகியே

முடிவு :

ஆசு மதுரஞ் சித்திர வித்தார மென்றுலகில்
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கும் — நேசமுடன்

றந்தென்னை யாட்கொண்டு சற்குருவுமாய் மனதினில்
வந்திருந்து புத்திமகி யளித்துச் — சந்ததமும்
நீயே துணையாகி நின்று ரெட்சிக்குங் கருணைத்
தாயே நின்றாளே சரண்.

கணபதியே துணையாகவும். வெற்றிவே லுற்றதுணை.

குறிப்பு :

இது, மீனாட்சியம்மை அகவல் என்றும் பெயர் பெறும் முதல் ஏடு இல்லாததால் தலைப்பு இல்லை.

இது, எமது சுவடி எண் 831-b/D-1316 போன்றது.

## பின் சேர்க்கை

வரிசை எண் : 3803 சுவடி எண் : 1754

# நட்சத்திரப் பலன் அறிதல் (சோதிடம்)

ஏடுகள் : 25 கி. எண்ணிக்கை : 2000 அளவு : 7×3 செ.மீ.
பக்கத்திற்கு : 13 வரிகள் ஆசிரியர்: அறியக்கூடவில்லை பொருள் : சோதிடம்
நிலைமை : மிகச் சிதிலம் முழுமை : முற்றற்றது எழுத்து : தமிழ்.

குறிப்பு :

சுவடியின் ஏடுகள் மிகச் செல்லரித்து பயனற்ற நிலையில் உள்ளது.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அறிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்கு முன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும், அழியாப்புகழை, பெருமைசால் சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்
19—10—2002

மாவட்ட ஆட்சியர் மற்றும் இயக்குனர்
சரசுவதி மகால் நூலகம்